வெளியீடு 15-3-99 Issued 15-3-99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஏப்ரல் 16, 1998 – தொகுதி 44 – எண் 3

**Thursday the 16th April, 1998 – Volume 44 – No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**Legislative Assembly Secretariat, Fort St. George, Chennai-600 009**

[Price Rs. 3.00

D
V24,31'N98
N98.44.3
219087

16-4-1998

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 573-614 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (ஏழாம் பட்டியல்) | 614-647 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) சட்டம்-ஒழுங்கு பற்றி ஆராய மத்திய உயர்மட்டக் குழு வருகை | 647-656 |
| (ஆ) தொலைக்காட்சியில் தமிழ் மொழிபெயர்ப்பு நாடகங்கள் நிறுத்தப்பட்டு, இந்தி நாடகங்கள் ஒளிபரப்பப்படுதல் | 656-659 |
| **3. தகவல் கோரல்—** | |
| வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை பதிலுரைக்குப் பின் பத்திரிகைகட்கு அளித்த குறிப்பில் முன்னாள் முதலமைச்சர் பற்றிய கருத்துகள். | 659-663 |
| **4. கவன ஈர்ப்பு—** | |
| விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவன (IFAD) உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றிவரும் பட்ட, பட்ட மேற்படிப்புடன் கூடிய ஆசிரியர் பயிற்சி முடித்த பெண்களின் நிலை. | 663-667 |

| | பக்கங்கள் |
|---|---|
| 5. அரசினர் தீர்மானம்— | |
| தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு மீதான ஆய்வுக் குழு பேரவையில் அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையை நீட்டித்தல் | 667-668 |
| 6. அறிவிப்பு— | |
| அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் | 668 |
| 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 17 - கல்வி - தொடர்ச்சி | 668-742 |
| திரு. மு. அப்பாவு | 668-674 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 674-680 |
| * திரு. டி. மணி | 680-684 |
| திரு. பி. ஆர். சுந்தரம் | 685-689 |
| திரு. கு. மனோகரன் | 689-692 |
| * திரு. கே. சுப்பராயன் | 692-698 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 698-710 |
| திரு.ச. அழகிரி | 710-716 |
| மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 670-673, 675-679, 682,686, 697, 700-701, 705,707, 708-709, 712, 716-739 |
| 8. பேரவையில் வைக்கப்பட்ட ஏடுகள்— | 742-743 |


219087

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

**சித்திரை 3, வெகுதான்ய - திருவள்ளுவர் ஆண்டு 2029**

**1998 ஏப்ரல் 16, வியாழக்கிழமை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்."

தமக்கு இன்பம் தருகின்ற கல்வியறிவு உலகத்தாருக்கும் இன்பம் தருவதைக் கண்டு, அறிஞர்கள் மேலும், மேலும் பலவற்றைக் கற்றிட விரும்புவார்கள்.

## 1. வினாக்கள்-விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 201, திரு. செங்கை சிவம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**201—**

**காவல் துறைக்கு அதிநவீன வசதி வாகனங்கள்**

*2971—**திரு. செங்கை சிவம்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காவல் துறைக்கு அதிநவீன வசதிகளைக் கொண்ட வாகனங்களை இலவசமாக வழங்க நிறுவனம் ஏதேனும் முன் வந்துள்ளதா?

[1998 ஏப்ரல் 16

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பெங்களூரைச் சேர்ந்த திருவாளர்கள் எம் & என் வெளியீட்டார்கள் என்ற தனியார் நிறுவனம் ஐந்து அதிநவீன பெட்ரோல் வாகனங்களை சென்னை மாநகரக் காவல் துறைக்கு நன்கொடையாக அளிக்க முன் வந்தது. இந்த நன்கொடையைப் பெற்றுக்கொள்ள காவல் துறை ஆணையருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையை மேலும் நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் புதிய வாகனங்கள், தளவாடங்கள் வாங்க அரசு உத்தேசித்துள்ளதா? சமீபத்தில் மதத் தீவிரவாதத்தை மிகச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியது அரசு. காவல் துறையிலே - தனியாக ஒரு பிரிவு (Cell) மதத் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்த அமைக்க அரசிடம் உத்தேசம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த பெங்களூர்க்காரர்கள் தருவதாக வாக்கு அளித்த 5 நவீன வாகனங்களும் கிடைக்கப்பெற்றனவா என்ற துணைக் கேள்வி எழுப்புவார் என்று எதிர்பார்த்தேன். ஏனென்றால் அவை இன்னும் கிடைக்கவில்லை. 1996 ஆம் ஆண்டு அவர்கள் எழுதினார்கள். அதற்கு அரசு ஒப்புதல் அளித்து, பெற்றுக்கொள்வதாக அறிவித்தது. அதன்படி இதுவரையிலே பலமுறை பெங்களூரைச் சேர்ந்த M. & N. Publications Ltd.. என்ற நிறுவனத்துடன் பலமுறை தொடர்புகொண்டும் அவர்கள் எவ்விதமான பதிலும் அளிக்கவில்லை. எனவே, அந்த வாகனங்களே இன்னும் வந்து சேரவில்லை என்ற தகவலையும் இந்தக் கேள்வியின் மூலமாக அவைக்கு நான் அறிவிப்பதோடு, மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துக்காட்டியதைப் போல நவீன இயந்திரங்களை, வாகனங்களை வாங்கி, தீவிரவாதம், வன்முறை இவற்றை அடக்குவதற்கு அரசு எல்லாவிதமான முயற்சிகளையும் மேற்கொண்டுள்ளது. மேலும் மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.



1998 ஏப்ரல் 16]

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் காவல் நிலையங்களுக்கும் வாகனங்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவா? அப்படி வழங்கப்படாத காவல் நிலையங்கள் அனைத்திற்கும் வாகனங்களை வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலம் முழுவதும் ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள்—சரியாகச் சொல்ல வேண்டுமானால், 6,026 வாகனங்கள், மாநிலம் முழுவதும் உள்ள காவல் துறைக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. ஒன்றிரண்டு இடங்கள் விடுபட்டிருக்கலாம். அவைகளையும் கவனத்திற்கொண்டு வழங்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இப்போது ஆங்காங்கு கிளர்ந்து கொண்டிருக்கின்ற தீவிரவாதத்தை ஒடுக்குவதற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமீபத்தில் டெல்லி சென்றிருந்தபோது அங்கே மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து நம்முடைய தமிழகத்தில் காவல் துறையை இன்னும் நவீனப்படுத்துவதற்காகவும், விரைவாகச் செல்லக்கூடிய வாகனங்கள், ஏ.கே.47 போன்ற பெரிய பெரிய துப்பாக்கிகள் மற்றும் வெடிகுண்டுகளைக் கண்டுபிடிப்பதற்கான கருவிகள் எல்லாம் வாங்குவதற்காகவும் ஏதாவது கோரிக்கை வைத்து நிதி உதவியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டிருக்கிறார்களா? மத்திய அரசு அதனை எப்போது வழங்கவிருக்கிறது என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, மத்திய உள் துறை அமைச்சரைச் சந்தித்தபோது, ஆண்டுதோறும் போலீஸ் துறையை நவீனப்படுத்துவதற்காக 10 கோடி ரூபாய் வழங்க வேண்டுமென்று கேட்டிருக்கிறேன். அவரும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 202, திரு. த. பூவேந்தன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

[1998 ஏப்ரல் 16

**202—**

**சிப்காட் தொழிற்பேட்டை அமைத்தல்**

*7231—**திரு. த. பூவேந்தன்:**

மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், பழனியில் 'சிப்காட்' தொழிற்பேட்டை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

முற்பகல் 9-35

**திரு. த. பூவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழநி பகுதி, முழுக்க முழுக்க விவசாயிகள் நிறைந்த பகுதி. வளர்ந்து வருகின்ற நகரங்களிலே பழநியும் முக்கியமான நகரமாக இருக்கின்றது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்கள் பகுதியிலும் தொழிற்பேட்டை அமைத்துத் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொன்ன அத்தனையும் கவனத்திலே கொள்ளப்பட்ட சூழ்நிலையிலேகூட, பழநியிலே தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் எதுவும் இதுவரையிலே உருவாகவில்லை. ஆனால், திண்டுக்கல் மாவட்டத்தில் சில இடங்களிலே தொழிற்பேட்டை அமைக்கின்ற திட்டம் அறிவிக்கப்பட்டு, அதிலே ஓரளவு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.



1998 ஏப்ரல் 16]

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் மூலமாக ஏராளமான இடங்களில் தொழிற்பேட்டைகள் எல்லாம் அமைக்கப்பட்டு அவை சரியான முறையில் இயங்கி வருவதாகச் சொல்லப்படுகிறது. சென்னையைச் சுற்றியுள்ள சிப்காட் தொழிற்பேட்டைகள் வேண்டுமானால் மிகச் சிறப்பாக நடந்து கொண்டிருக்கின்றன என்று சொல்லலாம். ஆனால், தொலைதூரத்தில் இருக்கின்ற, உதாரணமாக, மானாமதுரையிலே இருக்கின்ற சிப்காட் வளாகத்திலே ஏராளமான இடங்கள் காலியாக இருக்கின்றன. அவற்றைச் சீர்படுத்தி, அந்த வளாகத்தில் தொழிற்பேட்டைகள் அமைத்து, புதிய புதிய தொழில்களைத் தொடங்கி வேலைவாய்ப்பினை உருவாக்குவதற்கு நம்முடைய அரசு என்ன முயற்சி செய்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிப்காட் மூலமாக, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதைப்போல, சென்னையைச் சுற்றியுள்ள இடங்களில் மாத்திரமல்ல, குறிப்பாக, இராணிப்பேட்டை, ஓசூர் போன்ற இடங்களில் சிப்காட் வளாகங்கள் அமைக்கப்பட்டு நல்லமுறையிலேதான் இயங்கி வருகின்றன. அவர்கள் குறிப்பிட்டதைப்போல மானாமதுரை போன்ற சில இடங்களில் சரியான வளர்ச்சியை அவை பெறவில்லை என்பதை நானும் உணர்கிறேன். அந்த வளர்ச்சியை அவை பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. கே. வீரப்பன்.

**திரு. கே. கே. வீரப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம் புதிதாகத் தொடங்கப்பட்ட மாவட்டம். அங்கே சிப்காட் தொழிற்பேட்டைகள் எதுவும் இல்லாமல் இருக்கின்றது. அதுமட்டுமல்ல, நாமக்கல் நகரம், மாநிலத்திலேயே லாரித் தொழிலில் மிகச் சிறந்து விளங்குகின்ற ஓர் இடமாகும். ஆகவே, அங்கே உதிரி பாகங்கள் செய்கின்ற வகையிலேயும், மற்ற வகையிலேயும், அங்கே ஒரு தொழிற்பேட்டை இருந்தால் சிறப்பாக இருக்கும். ஆகவே, சிப்காட் மூலமாக அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சிப்காட்' அல்லது 'சிட்கோ' அல்லது 'டாசிட்' போன்ற

[1998 ஏப்ரல் 16

அமைப்புகளில் ஏதாவது ஒன்றின் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் கூறிய அந்த யோசனையை நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டத்தில் 1989-90 ஆம் ஆண்டில், இதே மாண்புமிகு முதல்வர், இங்கே முதல்வராக இருந்தபோது, 413 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டு, அரசாங்கத்தால் தனியாருக்குப் பணமும் கொடுத்து வாங்கப்பட்டது தெரியுமா? ஆமென்றால், இதுவரை எந்தத் தொழிலும் அங்கே ஆரம்பிக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே முதல்வர்தான், இதே உறுப்பினருக்கு வாக்களித்து, நிலக்கோட்டையிலே அந்தத் தொழில் வளாகத்தை உருவாக்குவதற்கு நிலம் எல்லாம் வாங்கப்பட்டது. பிறகு, ஒருவேளை நிலக்கோட்டையிலே தொழில் வளாகம் வருகின்றது என்று அறிவித்ததன் காரணமாகவோ, என்னவோ, ஆட்சி கலைக்கப்பட்டுவிட்டது. அதனால், அதைத் தொடர முடியவில்லை. இன்றைக்கும், அதைத் தொடர்ந்தால் என்னவாகுமோ என்ற பயம் இருக்கிறது. (சிரிப்பு) அங்கே வாங்கப்பட்ட நிலத்தைப் பயன்படுத்திக்கொள்ள அந்தப் பகுதியைச் சேர்ந்த தொழில் முனைவோர்கள் யாரும் முன்வரவில்லை. இருப்பினும், அங்கே தோல் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கான முயற்சிகள்பற்றி யோசித்துக்கொண்டிருக்கிறோம். இதை மாத்திரம்தான் இப்போது என்னால் தெரிவிக்க இயலும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐரோப்பாவின் நோயாளி துருக்கி என்பார்கள். அதேபோல, தமிழகத்திலே எவ்விதத் தொழில் வசதியும் இல்லாது, தொழில் வளர்ச்சியில் மிகவும் பின்தங்கிய பகுதியாக என்னுடைய பெண்ணாகரம் தொகுதி இருக்கிறது. ஆகவே, அங்கே தொழிற்பேட்டை ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கடந்த ஆண்டு கேட்டபோது, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கருணை உள்ளத்தோடு ஆலோசித்துப் பரிசீலிக்கிறோம் என்று சொன்னார்கள். அதேநேரத்தில், தமிழ்நாட்டிலே, தருமபுரி மாவட்டத்திலே ஒரு தொழில் வளாகம் அமைக்கப்படும் என்று கடந்த ஆண்டு அறிவித்தார்கள். பெண்ணாகரம் தொகுதியை ஒட்டி தேசிய நெடுஞ்சாலை செல்கிறது.



1998 ஏப்ரல் 16]

இருப்புப் பாதை வசதி இருக்கிறது. எச்.டி. மின்சாரம் இருக்கிறது. ஆகவே, அனைத்து வசதிகளும் அங்கே இருக்கின்ற காரணத்தினால், நடப்பு ஆண்டிலாவது, தொழிற்பேட்டை ஒன்றை பெண்ணாகரத்திலே தொடங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, கருணை உள்ளத்தோடு, நிதி நிலையையும் உத்தேசித்து, உரிய நேரத்தில் அதுபற்றி யோசிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில், பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் சிப்காட் நிறுவனத்தால் தொழிற்கூடம் அமைக்க 2500 ஏக்கர் நிலம் கையகப்படுத்திருப்பதாக அறிகிறோம். அங்கே இரசாயனத் தொழிற்சாலை அமைக்கப் போவதாக அறிகிறோம். அந்தவகையிலே அந்தப் பகுதி மக்கள், இரசாயனத் தொழிற்சாலை அமைந்தால் மாசினால் தூய்மை பாதிக்கப்படும் என்று பயப்படுகிறார்கள். சிப்காட் தொழில் வளாகத்தில் இரசாயனத் தொழிற்சாலை வரக்கூடாது என்று கோரிக்கை விடுத்து, போராட்டம் நடத்தி வருகிறார்கள். எனவே, இரசாயனத் தொழிற்சாலையை அந்தப் பகுதியில் ஆரம்பிக்காமல், வேறு உதிரி பாகங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைகளை அல்லது மற்ற தொழிற்சாலைகளை ஆரம்பிக்கக்கூடிய வகையில் நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொழிற்சாலை வருவது என்பதுபற்றி இன்னும் முடிவாகாத சூழ்நிலையில், எந்தத் தொழிற்சாலை வரும் என்பதை என்னால் இப்போது அறிவிக்க இயலாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி. என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில், எனது உசிலம்பட்டி தொகுதி தொழில் ரீதியாக மிகவும் பிற்பட்ட தொகுதியாக இருக்கின்ற காரணத்தால், அங்கே தொழிற்பேட்டை அமைக்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்து வலியுறுத்தி வருகிறேன். அதற்குரிய நிலம்கூட, தாசில்தார்

[1998 ஏப்ரல் 16

அவர்களால் சுமார் 30 ஏக்கருக்குமேல் கையகப்படுத்தப்பட்ட நிலையில், பிற்பட்ட நிலையில் இருக்கும் எனது தொகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா உறுப்பினர்களும் அவரவர்களுடைய தொகுதிக்கு ஒரு தொழிற்பேட்டை தேவை என்று கேட்பது அவரவர்களுடைய உரிமை. அதைத் தருவதும், தராததும் அரசினுடைய நிதி நிலைமை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி.

**THIRU B. VENKATASAMY:** Hon. Speaker, Sir, there are already two SIPCOT Complexes functioning in Hosur. Now, there is no space available for the industrialists who have applied for industrial plots. May I know from the Hon. Chief Minister whether there is any proposal to open another complex so as to clear the pending applications?

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்றொரு வளாகம் அமைப்பதுபற்றி இப்போது யோசனை இல்லை. பிறகு பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செய்யாரிலே, சிப்காட் நிறுவனம் தொழிற்பேட்டை அமைக்க ஏறத்தாழ 600 ஏக்கர் நிலத்தைக் கையகப்படுத்தியிருக்கிறது. இந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்யாருக்கு வருகை தந்து அந்தப் பணியைத் தொடங்கி வைப்பார்களா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. சண்முகம்.

**திரு. சி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில், காஞ்சிபுரம் அருகில் ஹூண்டாய் தொழிற்சாலையும், சிங்கப்பெருமாள்கோயில் அருகில் போர்டு கம்பெனி தொழிற்சாலையும் வந்திருப்பதை முதல்வர் அவர்கள் அறிவார்கள். அதைச் சுற்றி, பக்கத்தில் சிப்காட் நிறுவனத்தின் மூலம் ஒரு தொழிற்பேட்டை அமைத்து இத் தொழிற்சாலைகளுக்குரிய உதிரி பாகங்களை அங்கே உற்பத்தி செய்வதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 16]

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் திருப்பெரும்புதூர் வட்டத்தில், இருங்காட்டுக்கோட்டையில் 1,829 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டு, இதுவரையில் 1,316 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. இதில் வரையறுக்கப்பட்ட 643 ஏக்கரில் சுமார் 488.87 ஏக்கர் நிலம் ஹூண்டாய் மோட்டார் லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அதன் கட்டுமானப் பணிகள் முடிவடைந்து, இயந்திரங்கள் நிறுவும் பணி நடந்து வருகின்றது. இதுவரை அங்கே 13 நிறுவனங்களுக்கு சுமார் 125 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதனுடைய திட்டச் செலவு சுமார் 126 கோடி ரூபாயாகும். அதையொட்டி, திருப்பெரும்புதூர் தொழிற்பூங்காவிலும் இதுபோன்ற இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. அங்கெல்லாம் உதிரி பாகங்கள் செய்வதற்கும், வேறு சில முக்கியமான தொழில்களைத் தொடங்குவதற்கும் வகை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்ட வினாவிற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒருசில இடங்களில் தொழிற்பேட்டை ஆகட்டும், சிப்காட் ஆகட்டும், வெற்றி பெறாத சூழ்நிலை இருக்கிறது, என்றும், அது சரி செய்யப்படும் என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்காக, இப்படி நிலம் கையகப்படுத்தப்பட்டு, வீண் செலவு செய்யப்படுவதற்குப் பதிலாக, குறிப்பிட்ட தொழில்களைச் செய்ய முன்வருபவர்களுக்கு குறிப்பிட்ட மானியங்களை அரசு நேரடியாக வழங்கி, அவரவர்கள் தேவைப்படுகின்ற இடங்களில் தொழில் தொடங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, குறிப்பிட்ட தொழில் செய்ய வருகின்றவர்கள்கூட அதற்கு ஆதாரமாக, அடிப்படையாக நிலம் தேவை என்று முதலிலே கேட்கிறார்கள். எனவேதான், நிலத்தை ஆங்காங்கே கையகப்படுத்தி வைத்துக்கொண்டு, தொழில் முனைவோரை அங்கே கவர்ந்து அழைக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது.

முற்பகல் 9-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண்.203, திரு. ப. கோவிந்தன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 16

**203—**

### மின் மாற்றியின் திறனை அதிகரித்தல்

*8247*—**திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியம், விசைத்தறியாளர்களுக்காக பாப்பம்பாடி மின்மாற்றியின் திறனை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலம் ஒன்றியத்திலே பாப்பம்பாடியில் விசைத்தறித் தொழில் செய்கின்றவர்கள் அங்கே தொழில் செய்ய முடியாத நிலையில் மின் அழுத்தம் மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதை மறுபரிசீலனை செய்து உரிய நடவடிக்கை எடுப்பாரா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாகவே மின் உற்பத்தி இன்றையதினம் குறைவாக இருக்கின்ற காரணத்தினாலே மின்சார வோல்டேஜ் தமிழகம் எங்கும் குறைவாக இருக்கிறது. அதிலே ஒரு பகுதியாக பாப்பம்பாடியும் இருக்கிறது. இப்போது, பாப்பம்பாடியிலே இருந்து சுமார் 11 கி.மீ. தூரத்தில் உள்ள இளம்பிள்ளை 110/22 கே.வி. மின்நிலையத்தில் இருந்து 22 கே.வி. மின்பாதை இணைப்பு, லிங்க் லைன், அமைத்துச் சீராக மின் விநியோகம் செய்ய வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த வேலைகள் முடிந்தவுடன் பாப்பம்பாடிக்கான மின்சாரம் சீராக விநியோகிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 204, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 16]

**204—**

### துணை மின் நிலையம் அமைத்தல்

*11162*—**திரு. கொ.வீ. நன்னன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கம் மற்றும் சுற்றுப்புறப் பகுதியில் அடிக்கடி மின்தடையும், குறைந்த மின் அழுத்தமும் (லோ வோல்டேஜ்) இருப்பதால் செங்கத்திலும் புதுப்பாளையம் பகுதியிலும் துணை மின் நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் சுற்றுப் பகுதிகளிலே அடிக்கடி மின் தடையும் குறைந்த மின் அழுத்தமும் இருப்பதால், செங்கத்திலும் மற்றும் புதுப்பாளையத்திலும், ஜவ்வாதுமலை, ஜமுனாமருதூர் பகுதிகளிலும் துணை மின் நிலையம் அமைத்து அந்தப் பகுதியிலுள்ள மின்சாரப் பற்றாக்குறையைப் போக்கி, மின்தடைகளை நீக்கி அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புவதோடு, தற்சமயம் செங்கம், திருவண்ணாமலை, போளூர். கலசப்பாக்கம் பகுதிகளில் விவசாயத்திற்குப் போதிய மின்சாரம் காலாகாலத்தில் கிடைக்காததால் விவசாயிகள் பெரிதும் அல்லல் படுகிறார்கள். எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் போதிய மின்சாரம் அங்கு வழங்க தக்க நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கத்திலும், புதுப்பாளையத்திலும் ஏற்கெனவே துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஆனால், அந்தத் துணை மின் நிலையங்களுக்குத் தேவையான மின்சாரத்தை முழுமையாக அனுப்ப இயலாத ஒரு சூழ்நிலை தமிழகத்தில் இருந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, விவசாயிகளுக்குத் தேவையான மின்சாரத்தை இரவு நேரத்தில் 8 மணி நேரமும், பகல் நேரத்தில் 4 மணி நேரமும் கொடுக்க வேண்டும் என்று

[1998 ஏப்ரல் 16

உத்தரவு இருந்தாலும், தமிழகத்தில் ஏற்படுகின்ற மின் பற்றாக்குறையின் காரணமாக சில இடங்களிலே இன்றையதினம் பிரச்சினைகள் இருந்து கொண்டு இருக்கின்றன. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களும் நானும் தினந்தோறும் இந்தப் பிரச்சினையிலே முழுக் கவனம் செலுத்தி மத்திய அரசிடம் தொடர்பு கொண்டு தேவையான அளவிற்கு பஞ்சாப் போன்ற இடங்களில் இருந்து மின்சாரத்தைப் பெற்று விநியோகம் செய்து கொண்டு இருக்கின்றோம். இன்னமும் பிரச்சினைகள் தொடருமானால் அவை குறித்து இந்த அரசு என்ன செய்யலாம் என்று பரிசீலிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 205, திரு. எஸ். வி. கிருஷ்ணன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.*

**205—**

**இலவச வீட்டுமனைப் பட்டா வழங்குதல்**

**8047*—**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

*மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) நாங்குனேரி தொகுதி, நாங்குனேரி துப்புரவுத் தொழிலாளர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நாங்குனேரியில் துப்புரவுத் தொழிலாளர்களாகப் பணியாற்றுபவர்களுக்கு மட்டும், நாங்குனேரி பஞ்சாயத்து மூலம் 10 வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. விவசாயக் கூலி வேலை பார்க்கும் 13 பேர்கள் ஓலைக் குடிசைகள் போட்டுக் குடியிருக்கின்றனர். இவர்களில் வீடற்ற தகுதியான நபர்களுக்கு நாங்குனேரி கிராமம் புல எண் 181. நத்தம் புறம்போக்கு நிலத்தில் வீட்டுமனைப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களுக்கு நன்றி, நாங்குனேரி தொகுதியில் ஏர்வாடி,



1998 ஏப்ரல் 16]

களக்காடு, வள்ளியூர், மூலக்கருப்பப்பட்டியில் வாழ்கின்ற துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதுபோன்ற கேள்விக்கு நான் பதில் அளித்து இருக்கிறேன். அதைத் திருப்பித் திருப்பிச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. துப்புரவுத் தொழிலாளர்களுக்கும் விவசாயக் கூலி வேலை பார்க்கும் தகுதி படைத்தவர்களுக்கும், நிலத்தில் குடிசை போட்டுக் குடியிருக்கும் வீடற்ற தகுதியான நபர்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் வீடற்ற தகுதியானவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கவும் தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதைச் சொல்லுமாறு நம்முடைய முதல்வர் அவர்கள் நியாய உணர்வோடு என்னைப் பணித்து இருக்கிறார்; நானும் சொல்லிவிட்டேன். (சிரிப்பு)

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா எண் 206, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

**206—**

**காவேரி நகருக்குக் குடிநீர் வசதி**

**4718*—**திரு. எம். ஆண்டி அம்பலம்:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திண்டுக்கல் ஒன்றியம், அடியனூத்து கிராமம், காவேரி நகரில் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இது புதிய குடியிருப்புப் பகுதியாகும். இக்கிராமம் 1991-ல் மறுஅளவை விவரப்படி வகைப்படுத்தப்படவில்லை. கடந்த

[1998 ஏப்ரல் 16

ஓராண்டு காலத்திற்குள்தான் இக்குடியிருப்பில் வீடுகள் கட்டும் பணி நடந்து வருகிறது. தற்போதைய, அதாவது 1996 ஆம் ஆண்டு மறு அளவை விவரத்தில், இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. வரும் நிதியாண்டில் முன்னுரிமை அடிப்படையில் தேவையான குடிநீர் வசதி செய்திட, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. எம். ஆண்டி அம்பலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய குடியிருப்பாக இருந்தாலும் பழைய குடியிருப்பாக இருந்தாலும், தண்ணீர்ப் பிரச்சினை இருக்கிறது. மக்கள் ஒரு கிலோ மீட்டர் தூரம் நடந்து சென்று தண்ணீர் எடுத்துவர வேண்டியிருக்கிறது. அதை மனதில் வைத்துக்கொண்டு, கனம் அமைச்சர் அவர்கள் விரைவிலே குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஆவன செய்வாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரி நகர் கிராமத்தில் மக்கள் தொகையே 300 தான். தற்போது மறுஅளவை செய்ததில் இந்தக் கிராமத்தின் தற்போதைய நிலையில் சில வீடுகளின் கட்டுமானப் பணிகளும் நடந்து கொண்டிருக்கின்றன. முடிவு பெறவில்லை. தல்லாம்பட்டி, ஜீவா நகர் ஆகிய அருகில் உள்ள பகுதிகளுக்குச் செல்லவேண்டிய திட்டத்தின் குழாய்களிலிருந்து அந்தப் பகுதி மக்கள் குடிதண்ணீர்த் தேவைக்குத் தண்ணீர் எடுத்துக்கொள்கிறார்கள். தற்போதைய நிலவரப்படி இந்த ஆண்டு, அதாவது 1998-99 ஆம் நிதி ஆண்டில், காவேரி நகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டது. காவேரி நகரில் நிலத்தடி நீரை ஆய்வு செய்ததில் தண்ணீர் கிடைக்கவில்லை. எனவே பக்கத்தில் ஆய்வு செய்து. அங்கே நிலத்தடி நீர் சரியாக இருந்தால், இந்த ஆண்டு இந்தத் திட்டம் செயல்படுத்தப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 207, திரு. சி. கோபு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**207—**

### பூதூர் கிராமக் குடிநீர்த் திட்டம்

**1859*—**திரு. சி. கோபு:**

*மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*



1998 ஏப்ரல் 16]

*(அ) வேலூர் மாவட்டம், அணைக்கட்டு தொகுதி, பூதூர் கிராமக் குடிநீர்த் திட்டம் செயல்படாத நிலையினை அரசு அறியுமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பூதூர் குடிநீர்த் திட்டத்தின் நீராதாரமான ஆழ்துளைக் கிணறுகள் பொய்த்துவிட்டதால், 1996-97 ஆம் நிதியாண்டில் புனரமைப்புத் திட்டத்தின்கீழ் திறந்தவெளிக் கிணறு அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது.

**திரு. சி. கோபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூதூர் கிராமத்தில் சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கப்பட்டது. அங்கே ஆழ்துளைக் கிணறு பொய்த்துவிட்டதால். புலிமேடு கிராமத்தில் அமைந்திருக்கிற திறந்தவெளிக் கிணற்றிலிருந்து தண்ணீர் கொடுக்கிறார்கள். தற்போது புலிமேடு கிராமத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை இருக்கிறது. இந்த பூதூர் கிராமக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் தனியாக ஒரு கிணறு அமைக்க அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போதைய நிலையில் பூதூர் குடிநீர்த் திட்டத்தின் ஆழ்குழாய்க் கிணறு பொய்த்து விட்டது என்பதுதான் உண்மை. 1996-97 ஆம் நிதியாண்டு புனரமைப்புத் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட திறந்த வெளிக் கிணறு அமைக்கும் பணி கடும் மழையின் காரணமாகத் தடைப்பட்டுப் போனது. தற்போது அந்தப் பணி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. முடிந்துவிடும். இந்த ஆண்டு பத்தாவது மாதத்தில் குடிநீர் வழங்கப்பட்டுவிடும். புனரமைப்புத் திட்டத்தின்கீழ் திறந்தவெளிக் கிணறு அமைக்கும் பணியும் முடிந்து வருகிறது. திட்டம் விரைவில் செயலாக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்வேறு கிராமங்களில் இருக்கிற மேல்நிலைத் தொட்டிகள் சரிந்து விழுகிற நிலையிலே மிகவும் பழுதுபட்ட நிலையில் இருக்கிற

[1998 ஏப்ரல் 16

காரணத்தால், அவற்றையெல்லாம் சீர் செய்வதற்கு அரசிடம் தனியாகத் திட்டமேதும் இருக்கிறதா? அதைச் செயல்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடிநீர் வடிகால் வாரியம் ஆரம்பித்து இந்த 27 ஆண்டு காலத்தில் இதுவரை இருந்த அரசுகளால் அமைக்கப்பட்ட குடிநீர்த் தொட்டிகள் - அது மேல்நிலைத் தொட்டியானாலும், குழாய்கள் ஆனாலும் - பழுது ஏற்படுகிற நிலை வந்தால், அதைப் புனரமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு எதுவும் செய்யாமல் இருந்தார்கள். ஆனால் இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இதிலே ஓர் ஆய்வுக் கூட்டத்தை நடத்தினார்கள். இதுவரையில் நடைபெற்றிருக்கிற திட்டங்களை மறு ஆய்வோ அல்லது புனர் அமைப்போ செய்யாத காரணத்தால், பல குடிநீர்த் திட்டங்கள் பாழ்பட்டுக் கிடக்கின்றன என்று அப்போது அறிவித்தோம். அதை ஏற்று, அன்றைக்கே மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்ற ஆண்டு 52 கோடி ரூபாய் புனரமைப்புத் திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து தந்தார்கள். அதனடிப்படையில், இன்றைக்கு பெரும்பாலான திட்டங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு பயனுள்ளதாகக் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இன்னும் அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கலந்துபேசி முடிவெடுத்து மானியக் கோரிக்கையில் அறிவிக்கலாமா என்று இருக்கிறோம்.

*முற்பகல் 9-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 208, திரு. ஏ. ராசேந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**208—**

### வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்துதல்

*6286—**திரு. ஏ. ராசேந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், கன்னிகாபுரத்தில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?



1998 ஏப்ரல் 16]

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**திரு. ஏ. ராசேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டு கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் இப்பகுதியில் வேளாண்மைக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு வேண்டிய முயற்சிகள் நடைபெற்றன. விவசாயிகள் இந்த நாட்டின் முதுகெலும்பு என்று சொல்கிறோம். அவர்கள் விவசாயத்திலுள்ள நுண்ணறிவைப் பெறுவதற்காக வேளாண்மைக் கல்லூரியின் ஒரு பகுதியையாவது அல்லது விதைப்பண்ணையையாவது இப்பகுதியில் ஏற்படுத்த அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்களால்தான் 1971-ஆம் ஆண்டு கோவையில் வேளாண்மைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. அதன்பின்னர் இப்போது 4 வேளாண்மைக் கல்லூரிகளும், 2 வேளாண்மைப் பொறியியல் கல்லூரிகளும், ஒரு தோட்டக்கலைக் கல்லூரியும், ஒரு வன இயல் கல்லூரியும் ஒரு மனையியல் கல்லூரியும் செயல்படுகின்றன. ஒவ்வோராண்டும் இப்பல்கலைக்கழகத்தில் 531 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். இதில் வேளாண்மைப் பட்டப்படிப்பில் மட்டும் ஒவ்வோராண்டும் சேர்க்கப்படும் மாணவர்கள் மொத்தம் 376 பேர். வேளாண்மைப் பட்டப்படிப்பு முடித்து அரசுத் துறைகள், அரசு நிறுவனங்கள், வங்கிகள் மற்றும் தனியார் நிறுவனங்களில் வேலைக்குச் சேர்ந்தவர்கள் போக தற்போது சுமார் 2,500 மாணவர்கள் படித்துவிட்டு வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இந்நிலையில் புதிதாகக் கல்லூரி தொடங்கும் எண்ணம் அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு.ர.கோ. தனபாலன்.

**திரு. குர.கோ. தனபாலன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர், அவர்களே, வேளாண்மையை மேம்படுத்தவும், வேளாண்மைத் துறையைப் பற்றி

நன்கு அறிந்துகொள்ளவும் பள்ளிகளில் வேளாண்மைப் பாடத் திட்டம் கொண்டு வரப்படும் என்று அரசு ஏற்கெனவே முடிவெடுத்துள்ளது. அந்தத் திட்டத்தை இந்தக் கல்வியாண்டில் கொண்டுவர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்.

**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சேலம் மாவட்டத்தில், கருமந்துறைப் பகுதியில் சுமார் *1200* ஏக்கர் அரசுக்குச் சொந்தமான நிலம் இருக்கிறது. அதிலே *800* ஏக்கர் அளவிலே மா, கொய்யா, பலா போன்ற பலவகையான செடிகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே ஒரு தோட்டக்கலைக் கல்லூரி ஆரம்பிக்கப்படுமானால் அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, மலைவாழ் மக்களுக்கெல்லாம் மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆகவே, இந்த ஆண்டு கருமந்துறையிலே இருக்கக்கூடிய அந்தப் பண்ணையிலே, *1200* ஏக்கரிலே, தோட்டக்கலைக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன். ஏனென்று சொன்னால், இந்தத் தோட்டக்கலைக் கல்லூரி அங்கே ஆரம்பிப்பதற்கு நிலத்தின் வகையிலே பிரச்சினையில்லை. அதைப்போல, அரசுக்குச் செலவினங்களும் அதிகமாக வர வாய்ப்பில்லை. ஆகவே, இந்த ஆண்டே தோட்டக்கலைக் கல்லூரி கருமந்துறையில் ஆரம்பிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலம் இருந்தால் மட்டும் போதாது, பணமும் வேண்டும். அதுவும் *20* கோடி ரூபாய் வேண்டும். இப்போதுள்ள சூழ்நிலையில் அது இயலாது என்று கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *209*, டாக்டர் மு. தேவராஜன். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.





**209—**

**கல்லாற்றில் அணைக்கட்டு கட்டுதல்**

**3357*—**டாக்டர் மு. தேவராஜன் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெரம்பலூர் தொகுதி, மலையாளப்பட்டியில் கல்லாற்றில் புதிய அணைக்கட்டு கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள திட்டத்தைச் செயல்படுத்த ரூ. *310* இலட்சம் மதிப்பீட்டில் பகுதி-2-திட்டத்தின்கீழ் ஆணையிடப்பட்டுள்ளது.

**டாக்டர் மு. தேவராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. இந்த கல்லாற்றில் வருடம் முழுவதும் அதிகமான நீர் வரத்திருக்கிறது. இப்போது ஒதுக்கியுள்ள ரூ. *310* இலட்சத்தில் சிறிய நீர்த்தேக்கம்தான் அமையும். அது பெரிய நீர்த்தேக்கமாக அமைந்தால், வேப்பம்பட்டுப் பகுதியிலுள்ள *67* கிராமங்களும் குடிநீர் வசதி பெறுவதோடு, குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கவும் ஏதுவாக இருக்கும். ஆகவே, பெரிய நீர்த்தேக்கமாக அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 310 இலட்ச ரூபாய் செலவிலே ஒரு சிறிய ஏரியை அமைப்பதற்கே எதிரிப்பாக அந்த ஏரிக்குக் கீழே இருக்கிற அரும்பாவூர் கிராமத்து மக்கள், எங்களுடைய ஏரி பாதிக்கும், ஆகையினாலே இந்த ஏரியைக் கட்டக் கூடாது என்று மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மனுக்களைக் கொடுத்தார்கள். மாவட்ட ஆட்சித் தலைவர் இரண்டு ஊர் மக்களையும் —மலையாளப்பட்டிக்காரர்களையும், அரும்பாவூர்க்காரர்களையும்— கூப்பிட்டுப் பேசினார். அவர் எதிரிலேயே கலவரம் வருகிற சூழ்நிலை வந்த

[1998 ஏப்ரல் 16

காரணத்தால், இந்த ஏரியைக் கட்டுவதன் மூலம் சட்டம் - ஒழுங்கு கெட்டுப் போய்விடும், எனவே, இந்த ஏரியைக் கட்டத் தேவையில்லை என்று மாவட்ட ஆட்சித் தலைவர் சிபாரிசு செய்து, நிலவள ஆணையாளருக்கு அனுப்பி விட்டார்கள். ஆணையாளர் அவர்களும், 'ஆமாம்', கலெக்டர் சிபாரிசை ஏற்றுக் கொள்கிறோம் என்று சொல்லி, பொதுப்பணித்துறைக்கு, "இந்த ஏரியைக் கட்டும் திட்டத்தைக் கைவிடலாம்" என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அத்தகைய கூற்றுக்கும் பொதுப்பணித் துறை பதில் எழுதி, மீண்டும் ஏரியைக் கட்டுவதற்கு அரசுக்கு அனுப்பியிருக்கிறது. அது அரசினுடைய ஆய்வில் இருக்கிறது. ஆகவே, இந்தச் சிறிய ஏரியைக் கட்டுவதற்கே இவ்வளவு தகராறு என்றால் மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப்போல இன்னும் பெரிய ஏரி, 'டேம்'-ஆகக் கட்டினால் எவ்வளவு பெரிய தகராறு வரும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யோசிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 210, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**210—**

### வைகை ஆற்றுப் பாலம்

*7325—**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டை ஒன்றியத்தில் வைகை ஆற்றில் எப்போது பாலம் கட்டப்பட்டது?

(ஆ) அந்தப் பாலம் இன்று எந்த நிலையில் உள்ளது என்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை பற்றிய விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) வைகை ஆற்றின் குறுக்கே உள்ள பேரணையில் அமைக்கப்பட்டுள்ள 'ரெகுலேட்டர்' 1892-ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 16]

(ஆ) மற்றும் (இ) இதன் மீதுள்ள பாதையின் மொத்த அகலம் 2.70 மீட்டர் மட்டுமே உள்ளதால் சிறிய வாகனங்கள் மட்டும் செல்லலாம். கனரக வாகனங்கள் செல்ல முடியாது. மேற்படி ரெகுலேட்டர் விவசாய உபயோகத்திற்கான பாசன நீரை ஒழுங்குபடுத்தும் பொருட்டு அமைக்கப்பட்டதேயன்றி, வாகனப் போக்குவரத்து நடைபெறக்கூடிய பாலம் அல்ல. பாசனத்திற்கு பாதிப்பில்லாததால் இப்பாலத்தைத் திரும்பக் கட்டும் பணியை பொதுப்பணித் துறை மூலம் மேற்கொள்ளும் உத்தேசம் இல்லை. அரசின் நிதி நெருக்கடி காரணமாக அண்மையில் இப்பணியினை எடுத்துக்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தப் பாலத்தின்மீது நடந்து செல்வதற்குத்தான் முடிகிறது. ஆனால் நிலக்கோட்டைத் தொகுதி மக்கள் அந்தப் பகுதியிலே வசித்துக் கொண்டு இருக்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல-நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவருக்கே நன்றாகத் தெரியும்-அங்கே ஒரு சக்தி வாய்ந்த அனுமாரப்பன் கோயில் இருக்கிறது. அந்தக் கோயிலுக்கு நீண்ட காலமாக, பம்பாயிலிருந்து கூட மக்கள் வந்தவண்ணமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே படித்து வருகிற குழந்தைகள் எல்லாம் பள்ளிக்கூடம் செல்வதற்குக்கூட வசதியில்லாமல் இருக்கிறார்கள். 1985, 1986-ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன். இந்தப் பாலம் வேண்டுமென்று கேட்டபோது, அன்றைய அரசு, அங்கே சம்பந்தப்பட்ட எம்.பி.க்களையெல்லாம் அனுப்பி, ஒரு மதிப்பீடு தயார் செய்து இங்கே அரசுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொற்பொழிவு ஆற்றாமல் வினாவிற்குச் சீக்கிரம் வாருங்கள். இல்லையென்றால் உட்கார வைத்து விடுவேன்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** வந்துவிட்டேன், வந்துவிட்டேன். அந்தப் பாலம் அந்த மதிப்பீட்டின் அடிப்படையிலே கட்டப்படுவதற்கு மீண்டும் நடவடிக்கை எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்ற ஆண்டு பல்வேறு திட்டங்களின் அடிப்படையில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய முயற்சியின் காரணமாக 106 பாலங்களை நம்முடைய தமிழகத்தில் கட்டுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, கிட்டத்தட்ட 358.34

[1998 ஏப்ரல் 16

கோடிக்குத் திட்டங்கள் தயாராக இருக்கின்றன. வேலைகள் எடுத்துச் செய்யப்பட உள்ளன. ஆனால் எப்படியோ மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுக்குத் தேவையான இந்தப் பாலத்தைப் பற்றி வலியுறுத்திக் கூறாமல் விட்டுவிட்டார் என்பது பற்றி எனக்குத் தெரியவில்லை: அந்தப் பாலம் இடம் பெறவில்லை. என்றாலும்கூட, பேரணையிலிருந்து ஏறத்தாழ 16, 18 கிலோ மீட்டர் தூரம் கிழக்கே வந்தால்தான் வடக்குப் பகுதிக்குப் போக முடியும். சோழவந்தான் பாலத்தின் வழியாக, இடையிலே 16, 18 கிலோ மீட்டர் தூரத்திற்குப் பாலம் இல்லை என்பதை நான் அறிவேன்; இருந்தாலும் நிதி நெருக்கடி இருக்கிறது. காலப்போக்கில் இந்தப் பாலத்தினுடைய முக்கியத்துவத்தை அறிந்து அரசிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யவும், இந்தப் பாலத் திட்டத்தை மேற்கொள்ளவும் முயற்சிகள் மேற்கொள்ளலாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே இதுபற்றிக் கலந்து பேசுகிறேன் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மதுரையிலே உள்ள வைகை ஆற்றினைக் கடப்பதற்கு, மதுரையிலே இரண்டு, மூன்று பாலங்கள் இருந்தாலும்கூட, இன்னும் போக்குவரத்து நெரிசலைக் குறைக்க முடியவில்லை. அதைக் கருத்திற்கொண்டு, இப்போது கல்பாலம் என்பதை ஓரடுக்குப் பாலமாகக் கட்டுவதாக இருக்கிறது. அதனை இரண்டு அடுக்குப் பாலமாகவோ அல்லது - இன்னொரு தரைப்பாலமாகவோ இல்லாமல் - பெரிய பாலமாவோ கட்டுவதற்கு அரசு முயற்சி செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்பாலம் என்பது இரண்டு அடுக்குப் பாலம்தான், கேள்வியே தவறு. திரு. பி.என். வல்லரசு.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணையின் குறுக்கே, வைகை ஆற்றில் கட்டப்படுகின்ற அணை உசிலம்பட்டித் தொகுதியையும், நிலக்கோட்டை தொகுதியையும் இணைக்கின்ற ஒரு இணைப்புப் பாலமாக அமைந்துள்ளது. ராஜபாளையம், சிவகாசி போன்ற பகுதிகளிலிருந்து வருகின்ற போக்குவரத்துச் சாதனங்கள், லாரிகள் போன்ற அத்தனையும், திண்டுக்கல் வழியாகத்தான் பெங்களூருக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை இருக்கிற



1998 ஏப்ரல் 16]

காரணத்தால், இது அவசியமான ஒரு பாலமாக இருக்கிற காரணத்தால், இந்த இரண்டு தொகுதி மக்களையும் இணைக்கின்ற பேரணைப் பாலத்தை, மிக விரைவில் அரசு முடித்துத் தர முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரணைப் பாலம் என்பது பொதுப் பணித் துறையின் கீழே இருக்கக்கூடிய பாலம். இப்போது பேரணையே தேவையில்லாத அளவிற்கு அது திறந்துவிடப்பட்டிருக்கிறது. ஆகவே, பொதுப்பணித் துறையினர் இந்தப் பாலத்தை மீண்டும் கட்டுகின்ற உத்தேசம் இல்லை. எனவே, நெடுஞ்சாலைத் துறையின் மூலமாகத்தான் இந்த இரண்டு பகுதிகளையும் இணைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்; அதற்கான பாலமும் அமைக்கப்படவேண்டும், என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுகின்ற கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். நிதி நெருக்கடியின் காரணமாக உடனடியாக எடுத்துக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் *211*, திரு. பெ. ஆசையன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**211—**

### வைகை ஆற்றில் பாலம் அமைத்தல்

**9952*—**திரு பெ. ஆசையன்:**

*மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தொகுதியில் கடமலைக்குண்டு-மயிலாடும்பாறை ஒன்றியத்தில் வருசநாட்டிலிருந்து சிங்கராசபுரம் வழியாக மேலபூனூத்து, வரையிலான சாலையை இணைக்கும் வகையில் வைகை ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கப்படுமா?*

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப்பணி, அரசினால் ஒப்புதல் அளிக்கப்பட்ட எந்தத் திட்டத்திலும் இடம் பெறவில்லை. பாலம்

[1998 ஏப்ரல் 16

அமைக்கப்பட வேண்டிய இடம் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பகுதியாகும். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியச் சாலைப் பணிகளை நெடுஞ்சாலைத் துறை, பகுதி-2 திட்டங்களில் மேற்கொள்ள வழிவகை செய்யப்படாததால், இப்பாலம் கட்டும் பணியை நெடுஞ்சாலைத் துறையின் மூலம் மேற்கொள்ள இயலாது.

**திரு. பெ. ஆசையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம் வருசநாட்டைக் கடந்து பசுமலைத்தேரி, அதேபோல், கீழபூசனூத்து, மேலபூசனூத்து, திருப்பூர், முத்தூத்து, மஞ்சனூத்து, அரண்மனைப்புதூர், போன்ற 15, 20 கிராமங்களைச் சார்ந்து இருக்கிற பகுதி. இந்த இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிற பாதை வேறு வகையில் இல்லாத காரணத்தால் வைகை ஆற்றின் குறுக்கே தண்ணீர் வருகின்றபோது, 2, 3 மாத காலத்திற்கு, இந்த இரண்டாயிரம் குடும்பத்தினரும் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டதுபோல் இருக்கிறார்கள். ஆகவே, இதுபோன்று இருக்கிற சூழ்நிலையை மாற்றுகிற அளவிற்கு, இந்த அரசு காலப்போக்கில் இந்தப் பாலத்தைக் கட்டி முடித்து, பொது மக்களுக்கு உகந்த வகையில் பணி செய்து தருமா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டமனூர் விலக்கிலேயிருந்து வருசநாடு செல்லுகின்ற சாலை நம்முடைய நெடுஞ்சாலைத் துறையிலே இருக்கக்கூடிய சாலை. அந்தச் சாலையில் அண்ணா நகர் என்ற இடத்திற்கு அருகில் துரைசாமிபுரத்திற்குச் செல்லவும், துரைசாமி புரத்திலிருந்து கம்பம் மற்றும் உத்தமபாளையம் பகுதிகளை இணைக்கக்கூடிய வகையிலும் ஏறத்தாழ 2.2 கோடிக்கு ஹட்கோ திட்டத்தின் கீழ் ஒரு பாலம் கட்டுவதற்கு--நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல--நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிற 106 பாலங்களில் இதுவும் ஒரு பாலமாக--அனுமதிக்கப்பட்டு இருக்கிறது. வருசநாட்டுக்கு அப்பால்தான் இந்தப் பாலம் கேட்கப்படுகிறது. வருச நாட்டிலிருந்து ஏறத்தாழ 4 கிலோ மீட்டர் தொலைவில் இந்தப் பாலம் அமைக்கபட வேண்டும் என்று கேட்டிருகிறார்கள். வருசநாட்டிலிருந்து அந்தப் பகுதிக்குப் போகக்கூடிய அந்தச் சாலை ஊராட்சி ஒன்றியச் சாலையாக இருக்கிறது. ஆகவே, நெடுஞ்சாலைத் துறையில் இதை எடுத்துக் கொள்ள இயலாத நிலை



1998 ஏப்ரல் 16]

இருக்கிறது. என்றாலும், நபார்டு திட்டத்தின் கீழ் இந்தப் பாலத்தைக் கட்ட பரிந்துரை செய்யலாமா என்று அரசு யோசித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனிக்கு குறுக்கு மலைவழிச் சாலையாகச் செல்ல மதுரை மாவட்டம் வருசநாட்டிலிருந்து காமராஜர் மாவட்டத்தை இணைக்கின்ற அளவில் வருசநாட்டிலிருந்து வத்திராயிருப்புக்கு மலைவழிச் சாலை அமைப்பதற்கு நிதி ஒதுக்கீடு எல்லாம் செய்யப்பட்டு, மதுரை மாவட்ட எல்லையோடு நின்றுவிட்டது. ஆகவே, புதிய அமைச்சர், சுறுசுறுப்பாக புதிய மலைவழிச் சாலையை அமைப்பதற்கு உடனே ஆவன செய்வார்களா? நிதி ஒதுக்கீடு எல்லாம் செய்யப்பட்டது. மதுரை மாவட்ட எல்லையோடு நின்றுவிட்டது. ஆகவே, மலைவழிச் சாலையைத் தீவிரப்படுத்துவதற்கு முழு முயற்சி எடுத்துக் கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துத் தனிக்கேள்வி போட்டால் விளக்கமான பதிலைத் தரமுடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. அப்பாவு.

முற்பகல் 10-10

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியச் சாலையையும், நெடுஞ்சாலைத் துறைச் சாலையையும் கிராமச் சாலைகள் என்ற அமைப்பின்கீழ் 'ஆர்.ஆர்.' என்று அழைப்பார்கள். அந்த அடிப்படையில் ஆண்டுக்கு ஓர் ஒன்றியச் சாலை என்றால், ஒரு கிலோமீட்டர் தூரம் என்று அதிகமாக இருந்தால் அதிலே சாலையும் போடலாம், பாலமும் கட்டலாம் என்று இருக்கிறது. அது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது என்பதை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தங்கள் மூலம் தெரிவித்துக் கொண்டு, அந்த அடிப்படையில் கிராம ஒன்றியச் சாலைகளில் சாலையும் பாலமும் கட்டித்தரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். நபார்ட் திட்டத்தில் இரண்டு விதமாக நிதி ஒதுக்கீடு பெறப்படுகிறது. ஒன்று, நெடுஞ்சாலைத் துறையின்கீழ் ஏற்கெனவே பராமரிக்கப்பட்டு வருகின்ற

[1998 ஏப்ரல் 16

சாலைகளை மேம்பாடு செய்வதற்கான நிதி பெறப்படுகிறது. இரண்டாவது, ஊராட்சி ஒன்றியங்கள் பொறுப்பிலே இருக்கக்கூடிய சாலைகளை மேம்படுத்துவதற்கு கிராமப்புற சாலைத் திட்டத்தின்கீழ் தனியாக நிதி பெறப்படுகிறது. எனவே இந்தக் கேள்வியிலே வந்திருக்கக் கூடிய இந்தப் பாலம் கட்டக்கூடிய சாலை இருக்கிறதே, அது ஊராட்சி ஒன்றியச் சாலை. ஆகையினாலேதான் நெடுஞ்சாலைத் துறை நேரடியாக எடுத்துக்கொள்ள முடியவில்லை. நபார்ட் திட்டத்தின்கீழ் இதை எடுத்துக் கொள்ளலாமா என்று அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்ற விவரத்தைச் சொன்னேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 212, டாக்டர் பத்மா, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**212—**

## ஆகமம் படித்தவர்கள் பூஜை செய்தல்

***1178—டாக்டர் பத்மா:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து [illegible]ப அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு [illegible]டையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் ஆகமம் படித்தவர்கள் எந்த இனப் பிரிவாக [illegible]ருந்தாலும் கோவிலில் பூஜை செய்ய இயலுமா?

(ஆ) தடை இருப்பின், அதனை நீக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 213, திரு. குத்தாலம் பி. கல்யாணம், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 16]

**213—**

## ஆழ்குழாய்க் கிணறுகள் அமைத்தல்

***3791—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நபார்ட் வங்கி நிதி உதவித் திட்டத்தின் கீழ்; காவிரி கழிமுகப் பகுதிகளில் மீண்டும் ஆழ்க்குழாய்க் கிணறுகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி சென்னை கடிதம் எண் என்.பி. (டி.என்) திட்டம் 11037/எல்.ஏ.என்(1)/92-93 நாள் 8-2-1993-ன்படி தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மாவட்டங்களில் உள்ள காவிரி கழிமுகப் பகுதிகளில் நில நீர் பயன்படுத்தியதற்கேற்ப கறுப்பு, சாம்பல், வெண்மை மற்றும் உப்புநீர் வட்டாரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. நில நீர்ப் பயன்பாடு 80 விழுக்காடுகளுக்கு மேல் உள்ள பகுதிகளைக் கறுப்பு பகுதிகள் எனவும், 60 முதல் 80 விழுக்காடு வரை உள்ள பகுதிகளைச் சாம்பல் பகுதிகள் எனவும், 60 விழுக்காடுகளுக்குக் கீழ் உள்ள பகுதிகளை வெண்மைப் பகுதிகள் எனவும், கடலோர வட்டாரங்களில் உப்புநீர் பகுதிகளாக உள்ளமையால் உப்புநீர்ப் பகுதிகள் எனவும் பிரிக்கப்பட்டுள்ளன. இவற்றில் வெண்மைப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் நபார்டு திட்டத்தின்கீழ் இடைவெளிதூர விதிகளுக்கு உட்பட்டுக் குழாய்க்கிணறு அமைக்க கடன் வழங்கப்பட்டு வருகின்றது. சாம்பல் நிற வட்டாரங்களுக்கு தேவைக்கேற்ப திட்டமிடப்பட்டு நபார்டு ஒப்புதல் பெற்று இடைவெளிதூர விதிகளுக்கு உட்பட்டுக் குழாய்க் கிணறு அமைக்க கடன் வழங்கப்பட்டு வருகின்றது. இதனைத் தவிர கறுப்பு மற்றும் உப்புநீர்ப் பகுதிகளாக அறிவிக்கப்பட்டுள்ள வட்டாரங்களில் எவ்வித சிறுபாசனக் கிணறுகள் அமைப்பதற்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

[1998 ஏப்ரல் 16

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நீர்ப் பிரச்சினை தீராத காரணத்தினால் டெல்டா பகுதிகளுக்குப் போதிய பாசனம் கிடைக்காத நிலை உள்ளது. மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன கருத்தின் அடிப்படையில் தகுதியான இடத்தில் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க முன்வருபவர்களுக்கு நீண்டகாலக் கூட்டுறவுக் கடனை 50 சதவீத மானிய உதவியுடன் வழங்கி, அந்தத் திட்டத்தை மேலும் தீவிரப்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் 80 சதவீதத்திற்கு மேல் நிலத்தடி நீரைப் பயன்படுத்திய வட்டங்கள் என்று ஆய்வு செய்யப்பட்ட இடங்கள்-பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள், திருவையாறு. வெண்மைப் பகுதிகளாக இருக்கின்ற பகுதிகளிலே கடன் வழங்குவதற்கு உகந்த இடமாக இருக்கின்ற இடங்கள் அம்மாபேட்டை, பூதலூர், மதுக்கூர், ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, பேராவூரணி, சேதுபாவாசத்திரம், தஞ்சாவூர், திருவோணம், இந்தப் பகுதிகளில் விவசாயிகளுக்குத் தேவைப்பட்டால் அதற்குரிய கடனை வழங்குவதற்கு இந்தக் கூட்டுறவு நிறுவனம் தயாராக இருக்கும். அதேபோல நாகப்பட்டினம் மாவட்டத்தில் 80 சதவீதத்திற்கும் மேல் நிலத்தடி நீரைப் பயன்படுத்திய வட்டங்கள் கொள்ளிடம், கொரடாச்சேரி, குத்தாலம், மயிலாடுதுறை, செம்பனார்கோயில், சீர்காழி. கடன் வழங்குவதற்கு ஏதுவாக உள்ள இடங்கள் நாகப்பட்டினம், கீவலூர், கீழ்வேலூர், தலைஞாயிறு, திருமருகல். திருவாரூர் மாவட்டத்தில் கடன் வழங்குவதற்கு உகந்ததாக இல்லாத இடங்கள் நன்னிலம், நீடாமங்கலம். கடன் வழங்குவதற்கு ஏதுவான இடங்கள் மன்னார்குடி, கோட்டூர், கொடவாசல், திருவாரூர், வலங்கைமான் போன்ற பகுதிகள். உப்புநீர் வட்டங்கள் என்று திருவாரூர் மாவட்டத்தில் ஒதுக்கப்பட்டிருக்கின்ற பகுதிகள் முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி, வேதாரண்யம். இதிலே கடன் வழங்குவதற்கு உரிய பகுதிகளாகப் பிரிக்கப்பட்ட இடங்களிலே விவசாயிகள் கடன் தேவை என்று மனு செய்வார்களேயானால் உரிய முறையிலே சட்டத்திற்கு உட்பட்டு கடன் வழங்குவதற்குத் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 214, திரு. இ.ஏ.பி. சிவாஜி, மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 16]

**214—**

**பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்**

*6815—**திரு. இ.ஏ.பி. சிவாஜி:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி வட்டத்தில் ஆவின் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருத்தணி வட்டத்தில் தற்போது நாளொன்றுக்கு சுமார் 4,000 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இப்பால் திருத்தணியிலிருந்து சுமார் 45 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள காக்களூர் பால் பண்ணையில் பதப்படுத்தப்பட்டு, கையாளப்பட்டு வருகிறது. காக்களூர் பால் பண்ணையின் கொள்திறன் நாளொன்றுக்கு 50,000 லிட்டராக இருந்தபோதிலும் தற்சமயம் திருத்தணி வட்டத்தில் இருந்து பெறப்படும் பால் உள்பட நாளொன்றுக்கு சுமார் 30,000 லிட்டர் பால் மட்டுமே இங்கு கையாளப்பட்டு வருகிறது. எனவே, காக்களூர் பால்பண்ணையில் பதப்படுத்தும் திறனுக்கு குறைவாக பால் கையாளப்படுவதால் தற்சமயம் திருத்தணியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணியைச் சார்ந்துள்ள கிராமங்கள் முழுமையாக வேளாண் தொழிலை மையமாகக் கொண்டிருப்பதாலும், அங்கிருக்கிற மக்கள் தொழில் துறையிலும், விவசாயத் துறையிலும் பின்னடைவு கொண்டிருப்பதாலும் நடப்பு ஆண்டிலாவது அங்கே பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காக்களூர் பால் குளிரூட்டும் நிலையம் முழுமையாகக் கையாளப்பட்டு, திருத்தணிப் பகுதியில் நாளொன்றுக்கு 10,000 லிட்டருக்கு மேல் பால் உற்பத்தி ஏற்பட்டால், புதிய பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும்.

219087

[1998 ஏப்ரல் 16

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. முத்து.

**திரு. வி. முத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரிடத்திலே பால் குளிரூட்டும் நிலையம் சங்ககிரிக்குத் தேவை என்ற ஒரு விவரத்தைக் கொடுத்திருக்கிறேன். 36,000 லிட்டர் பால் அங்கே உற்பத்தி ஆகிறது. அந்தப் பாலை சேலத்திற்கும், பரமத்தி வேலூருக்கும் கொண்டு போகக்கூடிய ஒரு நிலை இருக்கிறது. ஆகவே அங்கு ஒரு பால் குளிரூட்டும் நிலையம் ஏற்படுத்த அமைச்சர் அனுமதி கொடுப்பாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூன்று லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்கின்ற ஒரு பால் பண்ணை இருக்கிற காரணத்தினால் அங்கே சாத்தியக் கூறுகள் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மொத்தம் எத்தனை பால் குளிரூட்டும் நிலையங்கள் எங்கெங்கு அமைக்கப்படும்? அதில் எங்கள் தாராபுரம் தொகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது 42 பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்கப்பட இருக்கின்றன. வரும் மானியக் கோரிக்கையில் அவை எங்கெங்கு அமைக்கப்படும் என்பதைத் தெளிவுபடுத்துவோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 215, திரு. மா. இராமச்சந்திரன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

**215—**

## கைத்தறித் தொழிலுக்கு வங்கிக் கடன் உதவி

*11659—**திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மாரியம்மன் கோவில் பகுதியில் சௌராஷ்டிரா மக்கள் சொந்தமாகத் தறி வேலை செய்ய வங்கி மூலம் கடன் வசதி செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



1998 ஏப்ரல் 16]

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடன் பெற விரும்பும் அங்கத்தினர்களுக்குத் தறி சொந்தமாக இருந்தால், தமிழ்நாடு கைத்தறி வளர்ச்சிக் கழகத்தின் மூலம், கழகத்தின் விதிமுறைகளுக்குட்பட்டும், கைத்தறி எண்ணிக்கையைப் பொறுத்தும், கடன் பெறமுடியும்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி நெசவாளர்களில் உறுப்பினர்களுக்கு கடன் கொடுக்கிற முறை எப்படி என்பதையும், அதை எந்த முறையில் அரசு நடைமுறைப் படுத்துகிறது என்பதையும் விரிவாகச் சொன்னால், அந்தக் கைத்தறி நெசவாளர்கள் கடன் பெறுவதற்கு உகந்ததாக இருக்கும் என்பதால், தங்கள் மூலம் அந்த நடைமுறை எப்படிப் பின்பற்றப்பட வேண்டும் என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Handloom Development Finance Corporation என்று சொல்லப்படுகின்ற இந்த நிறுவனம் பட்டுத்துணி உற்பத்தி செய்கின்ற நெசவாளர்களுக்கு அதிகபட்சம் 2,450 ரூபாய் கடன் அளிக்கிறது. பருத்தி ஆடை உற்பத்தி செய்பவர்களுக்கு 1,400 ரூபாய் கடன் அளிக்கிறது. ஊழியர்கள், அரசு ஊழியர்கள் ஜாமீன் கொடுப்பவர்களாக இருந்தால் 10,000 ரூபாய் வரை அளிப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. சொத்து ஜாமீன் கொடுக்கப்பட்டால் 10,000-க்கும் மேற்பட்டும் அளிக்க வாய்ப்பிருக்கிறது. தஞ்சை மாவட்டத்திலே 1996-97 ஆம் ஆண்டிலே 171 கடன் மனுக்களைப் பெற்று 32,76,000 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 157 மனுக்களைப் பெற்று 32,17,000 ரூபாய் அளிக்கப்பட்டுள்ளது. இது நெசவாளர் சங்கத்திலே இருக்கின்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, நெசவுத் துறையிலே இருக்கின்ற, நெசவுத் தொழிலிலே இருக்கின்ற அனைத்து நெசவாளர்களுக்கும் பொருந்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.என். சுப்பிரமணி.

**திரு. பி.என். சுப்பிரமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள அனைத்து வகுப்பினருக்கும் விசைத்தறிக்கு வங்கியில் கடன் கொடுக்கிறார்கள். இன்று கைத்தறி நெசவாளர்கள் நலிந்த நிலையில் உள்ளதால் அவர்களுக்கும் சொந்தமாகக் கைத்தறிக்கு வேண்டிய உபகரணங்கள் வாங்குவதற்கு நிதி உதவியையும், கைத்தறி அமைக்க ஏழை நெசவாளர்களுக்கு இலவச வீட்டு மனைப்பட்டாவையும் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லாவிட்டாலும் மத்திய, மாநில அரசினுடைய, நெசவாளர்களுக்கான மானியத் திட்டத்தின்கீழ் நெசவாளர்களுக்கு வீடு இலவசமாக மானியத் தொகையுடன்; அதேபோல் விளக்குகள், கைப்பம்புகள் இப்படிப் பல துறைகளிலே பல சௌகரியங்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வருகின்றன. விரிவாக இதைப்பற்றித் தெரிய வேண்டும் என்றால் தனிக் கேள்வி போட்டால் முழுமையான விவரத்தை அறிவிக்க இயலும்.

*முற்பகல் 10-20*

**திரு. தி.ப. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே வயதான நெசவாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவது பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அது கூட்டுறவுத் துறையில் இருக்கிற நெசவாளர்களுக்கும் பொருந்துமா, தனியார் துறையில் இருக்கின்ற நெசவாளர்களுக்கும் பொருந்துமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த பென்ஷன், கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர்களுக்கு மட்டும் பொருந்தும். ஏனென்றால் கூட்டுறவுத் துறையிலே இருக்கின்ற நெசவாளர்கள்தான் தங்களுடைய ஊதியத்திலே 8 பைசாவை இதற்கு ஒதுக்குகிறார்கள். அதையொட்டி மத்திய அரசு 4 பைசா, மாநில அரசு 4 பைசா, அப்படி ஒதுக்கப்படுகின்ற தொகையினுடைய ஒட்டுமொத்த தொகையினுடைய வட்டியை வைத்துக்கொண்டுதான் அந்த 150 ரூபாய் அவர்களுக்கு பென்ஷனாக வழங்கப்படுகிறது. ஆகவே தனியாக இருக்கின்ற நெசவாளர்களுக்கு வழங்குவதற்கு இதிலே வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 216, திரு. பெ.சு. திருவேங்கடம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**216—**

**மண்டல் கமிஷன் பரிந்துரையை அமல்படுத்துதல்**

*13420—**திரு. பெ.சு. திருவேங்கடம்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 16]

(அ) மண்டல் கமிஷன் பரிந்துரையை முழுவதுமாக அமல்படுத்தக் கோரி மத்திய அரசை தமிழ்நாடு அரசு கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மண்டல் குழு பரிந்துரைகளை விரைவில் அமல்படுத்த வேண்டுமென்று இவ்வரசு 1989 ஆம் ஆண்டு மே திங்களிலேயே மத்திய அரசைக் கேட்டுள்ளது.

(ஆ) "இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 340 ஆம் விதியில் கூறப்பட்டுள்ளவாறு, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 15(4), 16(4) பிரிவுகளின்கீழ் செய்யப்பட்டுள்ள இட ஒதுக்கீட்டினையும், சிறப்பு சாதிகளையும் சமூக நிலையிலும், கல்வியிலும் பின்தங்கியுள்ள பிரிவினர் முன்னேற்றத்திற்காகச் செயல்படுத்துவதில் மத்திய அரசு பெரும்பங்கு வகிக்க வேண்டுமெனவும், காலஞ்சென்ற திரு. B.P. மண்டல் அவர்களைத் தலைவராகக்கொண்டு மத்திய அரசால் அமைக்கப்பட்ட 1980 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நலக்குழுவின் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளுக்கு உரிய முக்கியத்துவம் அளித்து சமூக நீதியை ஏற்படுத்த மத்திய அரசு ஆக்கப்பூர்வமாக, விரைந்து செயல்பட வேண்டுமெனவும் இந்தச் சட்டப்பேரவை மத்திய அரசைக் கேட்டுக்கொள்கிறது," என்ற தீர்மானம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12-5-1989-ல் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்கு 28-5-1989-ல் அனுப்பிவைக்கப்பட்டு, இதில் தலையிட்டு மண்டல் குழு பரிந்துரைகள் விரைவில் அமல்படுத்தப்படுவதை உறுதிசெய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு அரசு மத்திய அரசைக் கேட்ட அந்த விளக்கத்தை இங்கே அறிவித்தார்கள். அதற்கு மத்திய அரசிலேயிருந்து பதில் வந்துள்ளதா? அதன் மீது தொடர்ந்து நம்முடைய தமிழக அரசு எடுக்க இருக்கின்ற நடவடிக்கை என்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண்டல் குழு பரிந்துரைகளை ஏற்று மத்திய

அரசின் பணிகளிலும் மற்றும் மத்திய அரசு பொதுத் துறை நிறுவனங்களிலும், பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு இட ஒதுக்கீடு செய்து 7-8-1990-ல் நாடாளுமன்றத்தில் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள் அறிவித்தார்கள். அதற்குப் பின்னர் மத்திய அரசுப் பணியிடங்களில் மட்டும் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 விழுக்காடு ஒதுக்கீடு வழங்கப்படுகிறது. ஆனால் மத்திய அரசுக்கு உட்பட்ட கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீட்டுக்காக வழிவகை செய்யப்படவில்லை. எனவே மத்திய அரசின் கல்வி நிறுவனங்களிலும் 27 சதவீதம் இட ஒதுக்கீட்டை அமல் செய்யக் கோரி நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அந்தக் கருத்துரு மத்திய அரசின் பரிசீலனையில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கண்ட தீர்மானம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்களால் மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்களுக்கு 28-5-1989-ல் அனுப்பப்பட்டு இதில் தலையிட்டு விரைவில் மண்டல் குழுவின் பரிந்துரைகளை அமல் செய்வதை உறுதி செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

முற்பகல் 10-25

மீண்டும் 1990 ஆம் ஆண்டு இதில் ஆணை பிறப்பித்த மத்திய அரசு, மத்திய அரசின் கீழ் வருகின்ற பணியிடங்களில் மட்டும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு 27 சதவீதம் இட ஒதுக்கீடு செய்ய ஆணை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் மேற்கண்ட இட ஒதுக்கீடு மத்திய அரசு நடத்தும் கல்வி நிறுவனங்களின் சேர்க்கைக்கும் நீட்டித்து ஆணை பிறப்பிக்கவில்லை. எனவே, அகில இந்திய பிற்படுத்தப்பட்ட வகுப்பு பணியாளர் நலச் சங்கங்களின் கூட்டமைப்பு 19-1-1997-ல் சென்னையில் நடத்திய மாநாட்டில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுத் துறை நியமனங்களில் உள்ள இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான 27 சதவீத இட ஒதுக்கீட்டினைக் கல்வி நிறுவனங்களுக்கும் நீட்டிக்க வேண்டுமென்று பாரதப் பிரதமர் திரு. தேவ கவுடா அவர்களைக் கேட்டுக் கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து, இதே கோரிக்கையினை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு அனுப்பிய 15-3-1997 நாளிட்ட தமது நேர்முகக் கடிதத்தில் வலியுறுத்தியிருக்கிறார்கள். மீண்டும் இதுகுறித்து தமிழக முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் 1-8-1997 அன்று மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. ஐ.கே. குஜ்ரால் அவர்களுக்கு நினைவூட்டுக் கடிதம் அனுப்பியிருக்கிறார்கள். இதனைத்



தொடர்ந்து மத்திய அரசு நல அமைச்சர் திரு. பி.எஸ். ராம்வாலியா அவர்கள் தனது பதிலில் மத்திய அரசின் கட்டுப்பாட்டில் இருக்கின்ற கல்வி நிறுவனங்களில் இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு வழங்குவது குறித்து மத்திய அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 217, திரு. அ. அசோகன் மற்றும் திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர். (குறுக்கீடு)

**THIRU C. GNANASEKARAN:** Hon. Speaker Sir....

**HON. SPEAKER:** I am not allowing you. Please sit down. (Interruption) You can have no demand.

**THIRU C. GNANASEKARAN:** I want to know the present stage.

**HON. SPEAKER:** I have gone to the next question. Sit down.

**217—**

**மாவட்டத் தலைநகரங்களில் பொருட்காட்சி**

*7394—**திரு. அ. அசோகன்:**

**திரு. ஜே.எம். ஆரூண் ரஷீத்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டத் தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாவட்டத் தலைநகரங்களில் அரசுப் பொருட்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் இல்லை. ஆனால் மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலத்தில் ஆண்டுதோறும், திருநெல்வேலி மற்றும் வேலூரில் இரண்டாண்டுகளுக்கொருமுறையும் அரசுப் பொருட்காட்சிகள் நடத்தப்படுகின்றன.

[1998 ஏப்ரல் 16

**திரு. அ. அசோகன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அரசுப் பொருட்காட்சிகள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மற்றும் சேலம் போன்ற மாவட்டப் பகுதிகளில் மட்டுமே நடைபெற்று வருகின்றன. பொழுதுபோக்கு இடங்கள் அதிகம் இல்லாத திருவாரூர், நாகப்பட்டினம் போன்ற மாவட்டத் தலைநகரங்களில் ஆண்டுதோறும் அரசுப் பொருட்காட்சிகளைத் தொடர்ந்து நடத்தினால் பொதுமக்களுக்குப் பயனுள்ளதாகவும், அரசுக்கு வருவாய் தருவதாகவும் இருக்கும். எனவே, இந்தத் திட்டத்தைச் செயற்படுத்துவது குறித்து அரசு மறுபரிசீலனை செய்யுமா? அரசு நடத்தும் பொருட்காட்சிகளால் கடந்த கால அரசு அதிக லாபம் ஈட்டியுள்ளதா? தற்போதுள்ள அரசு அதிக லாபம் ஈட்டியுள்ளதா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பாகப் பொருட்காட்சிகள் எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும் நடத்தினால் பெரும் அளவு இழப்பு ஏற்படுகிறது. அதேநேரத்தில் ஆண்டுதோறும் கோவை, மதுரை, சேலம் போன்ற இடங்களில் நடத்தவும், திருநெல்வேலி, வேலூரில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தவேண்டும் என்றும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை வழங்கியதன் அடிப்படையில் பல்வேறு சீர்திருத்தங்களை உள்ளடக்கி இந்தப் பொருட்காட்சிகள் நடைபெற்று வருகின்றன. இவைகள் எல்லாம் வெற்றிகரமாக நடைபெறுகிற காலக்கட்டங்களில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் 1991-ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு வரையிலான கடந்த காலங்களில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 27 பொருட்காட்சிகள் நடந்துள்ளன. அவற்றில் 9 பொருட்காட்சிகளில் மட்டும் 51 லட்சத்து 72 ஆயிரம் ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. 1989-1991-ல் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் 9 பொருட்காட்சிகள் நடைபெற்று அதிலே 80 லட்சத்து 18 ஆயிரம் ரூபாய் லாபம் பெறப்பட்டுள்ளது. மீண்டும் 1996 ஆம் ஆண்டில் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால் நடைபெற்ற 5 பொருட்காட்சிகளில் 116 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் லாபம் வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.



1998 ஏப்ரல் 16]

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பொருட்காட்சிகளில், மாலை நேரங்களில் நடைபெறும் கலை நிகழ்ச்சிகளில் கிராமப்புறக் கலைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை என்று அறிகிறேன். வர இருக்கின்ற காலங்களிலே கிராமப்புறக் கலைஞர்களை ஊக்குவிக்கும் வகையிலே நாட்டுப்புறப் பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளும் இந்தப் பொருட்காட்சியிலே இடம்பெற அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் பொருட்காட்சிகளில் ஆடம்பரம் இல்லாமல், அதேநேரத்தில் அரசு நலத் திட்டங்களையும், சமூகச் சிந்தனைகளையும் தூண்டுகிற வகையில் சீர்திருத்த நாடகங்கள் இடம் பெற்று வருகின்றன. அதேபோல, நாட்டுப்புறப் பாடல்கள் இப்பொழுது நடைபெறுகின்ற எல்லாப் பொருட்காட்சிகளிலும் இடம்பெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.லெ. சுப்பிரமணியன்.

**திரு. அ.லெ. சுப்பிரமணியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவரவர்களே, இத்தகைய பொருட்காட்சிகளை முன்பு நகராட்சிகள் நடத்தின; திருநெல்வேலியில் நகராட்சிதான் நடத்தியது. இப்பொழுது அரசு நடத்துகிறது. நகராட்சி நடத்தி, நல்ல வருமானத்தைப் பெற்று அதை அவர்கள் நகராட்சியிலே மருத்துவமனை கட்டுவதற்கும், விரிவாக்கம் செய்வதற்கும் பயன்படுத்தினார்கள். இப்பொழுது அரசு நடத்துகிறபொழுது, இலாபத்தின் ஒரு பகுதியை நகராட்சிக்குத் தருவதாகச் சொன்னார்கள்; சென்றமுறை அமைச்சர் வந்தபோது திருநெல்வேலியில் அதைக்கூட அறிவித்தார்கள். இன்னும் அந்தப் பணம் நகராட்சிக்கு வந்து சேரவில்லை. அதற்கான தகுந்த நடவடிக்கையை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கடந்த காலங்களில் நெல்லை நகராட்சியில் நடைபெற்ற எல்லாப் பொருட்காட்சிகளும் நஷ்டத்திலேதான் நடைபெற்று

இருக்கின்றன. ஆனால் அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் முதன்முதலாக 1 இலட்சத்து 51 ரூபாய் இலாபம் ஈட்டி உள்ளது. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நெல்லையில் நடத்துவது என்ற அரசின் முடிவுக்கு ஏற்ப அடுத்த ஆண்டு நடைபெறுகிறபோது இலாபத்தில் பங்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை அண்ணாமலையார் ஆலயத்திற்கு, தீபத் திருவிழாவின்போது கட்டுக்கடங்காத கூட்டமாக இலட்சக்கணக்கான மக்கள் வருகை தருகின்றார்கள். எனவே, அங்கே அரசுப் பொருட்காட்சி நடத்தினால் வருமானமும் கூடுதலாக இருக்கும்; பக்தர்களும், சுற்றுலாப் பயணிகளும் பொருட்காட்சியைக் காண்பதற்கு வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்து, அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய வி நம்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசின் கொள்கைப்படி 3 இடங்களில் ஆண்டுதோறும், 2 இடங்களில் 2 ஆண்டுகளுக்கு ஒருமுறையும் பொருட்காட்சி நடைபெறுகிறது. மாவட்டத் தலைநகரங்களில் நகராட்சிகள் நடத்த விரும்பினால் நகராட்சித் துறை மூலமாக அதற்கான அனுமதி வழங்கப்பட வேண்டுமென்று கேட்டால் அனுமதி வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 218, திரு. இ.ஜி. சுகவனம், மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**218—**

### கால்நடை மருத்துவமனை அமைத்தல்

*9624—**திரு. இ.ஜி. சுகவனம்:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பர்கூர் தொகுதி, சாமல்பட்டியைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு கால்நடை மருத்துவமனையை அமைக்க அரசு முன்வருமா?



(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பர்கூர் தொகுதி, சாமல்பட்டியில் கால்நடைக் கிளை நிலையம் ஒன்று உள்ளது. இதனை, கால்நடை மருத்துவமனையாக நிலை உயர்த்த இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூர் தொகுதியிலே சாமல்பட்டி பகுதி, விவசாயப் பெருமக்கள் அதிகமாக வாழ்கின்ற பகுதி. அங்கே விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள் அதிகமாக இருக்கிறார்கள். அந்த சாமல்பட்டி பகுதியின் சுற்று வட்டாரத்திலே கிட்டத்தட்ட 25 கிராமங்கள் இருக்கின்றன. அவர்கள் கால்நடைகளை அழைத்துக் கொண்டு பக்கத்திலே 10 கிலோமீட்டர், 15 கிலோமீட்டர் தூரத்திற்குச் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அந்தப் பகுதியிலே கடந்த ஆட்சிக் காலத்திலே ஒரேயிடத்திலே 500 கல்வெட்டுக்களை - அடிக்கல்லை - நாட்டி, அறிக்கைகளை விட்டு கடந்த ஆட்சியாளர்கள் அங்கே ஒரு மருத்துவமனையை உருவாக்குவோம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகவே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்கள் இன்றைக்கு ஆவலோடு நம்முடைய ஆட்சியிலேயாவது இந்த மருத்துவமனை கிடைக்குமா? கருணை உள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, தாய் உள்ளம் கொண்ட தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியிலே, -- ஏசுபிரான்கூடச் சொல்லியிருக்கிறார், கேளுங்கள் கொடுக்கப்படும், தட்டுங்கள் திறக்கப்படும் என்று, ஆனால் கேட்காமலேயே, தட்டாமலேயே இன்றைக்கு விவசாயப் பெருங்குடி மக்களுக்கெல்லாம் வரிச் சலுகையை அளித்திருக்கிறார்கள் -- பல்வேறு திட்டங்களை விவசாயப் பெருங்குடி மக்களுக்கு அளித்திருக்கின்ற தலைவர் கலைஞர் அவர்கள் அருள்கூர்ந்து அந்த.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் வினாவிற்கு வாருங்கள்.

**திரு. இ.ஜி. சுகவனம்:** தலைவரோடு கலந்து பேசி எங்களுடைய தொகுதி மக்களுடைய அந்த ஆவலை உடனடியாகப் பூர்த்தி செய்ய அமைச்சர் அவர்கள் அங்கே ஒரு கால்நடை மருத்துவமனையை உருவாக்கித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 16

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பர்கூர் தொகுதி, மாத்தூர் ஒன்றியத்திலுள்ள கால்நடை மருந்தகக் கட்டுப்பாட்டின்கீழ் சாமல்பட்டி, கல்லாடி என்ற இடங்களில் 2 கால்நடைக் கிளை நிலையங்கள் இயங்கி வருகின்றன. சாமல்பட்டி கிளை நிலையத்தை மருத்துவமனையாக உயர்த்த வேண்டுமானால் முதலில் அது மருந்தகமாக நிலை உயர்த்தப்பட வேண்டும். மருந்தகமாக நிலை உயர்த்தப்பட தினசரி 40-க்கும் மேற்பட்ட கால்நடைகள் சிகிச்சைக்கு வர வேண்டும்; வாடகை இல்லாக் கட்டடம் இருக்க வேண்டும்; கால்நடை மருந்தகத்தைச் சுற்றி போதிய இட வசதிகள் வேண்டும்; தண்ணீர் வசதி வேண்டும். இந்த வசதிகள் இருக்குமானால் ஒவ்வோர் ஆண்டும் பகுதி-2 திட்டத்தின் கீழ் பரிசீலனைக்குச் சேர்க்கப்படும். இந்நிலையில் மருந்தகமாக இயங்கி, பின் மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும். தற்போது சாமல்பட்டி கால்நடைக் கிளை நிலையத்திற்கு மாதத்திற்கு செயற்கை முறைக் கருவூட்டல் மற்றும் சிகிச்சைக்காக வரும் கால்நடைகளின் எண்ணிக்கை 30 என்ற அளவிலேதான் உள்ளது. எனவே, இக்கால்நடைக் கிளை நிலையத்தை, கால்நடை மருத்துவமனையாக நிலை உயர்த்த இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 219, டாக்டர் காஞ்சனா கமலநாதன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**219—**

**கூடுதலாகத் தையல் இயந்திரங்கள் இலவசமாக வழங்குதல்**

***7984—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டு ஒன்றிற்கு அரசு இலவசமாக வழங்கும் தையல் இயந்திரங்கள் 2000 என்னும் எண்ணிக்கையினை அதிகப்படுத்தி, மாவட்ட வாரியாக இவ்வளவு எனக் கணக்கிட்டு வழங்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திருமதி எஸ்பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



1998 ஏப்ரல் 16]

1997-98 ஆம் ஆண்டு முதல் தையல் இயந்திரங்களின் எண்ணிக்கை 3000 ஆக அதிகரிக்கப்பட்டு, மாவட்ட அளவில் தேவைகளைக் கருத்தில் கொண்டு மாவட்ட வாரியாக ஒதுக்கீடு செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் காஞ்சனா கமலநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச தையல் இயந்திரம் பெற ஒரு தையலருக்கு வேண்டிய தகுதிகள் என்னென்ன, வழங்கும் வழிமுறைகள் என்னென்ன, என்று அரசு நிர்ணயித்துள்ளது என்பதையும், ஆண்டுக்கு 3 ஆயிரம் என்று எண்ணிக்கை உயர்த்தப்பட்டும்கூட, வட்டார அளவில் ஒதுக்கீடு செய்யும்போது அது போதாததாக இருக்கிறது. எனவே, வருங்காலத்தில் அந்த எண்ணிக்கையை அதிகப்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா என்பதையும் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலவச தையல் இயந்திரங்களைப் பெற விரும்புகிற நலிந்த குடும்பத்தைச் சார்ந்த பெண்கள் வருமானச் சான்றிதழ், பிறந்த தேதிச் சான்றிதழ், -- வயது வரம்பு 20-லிருந்து 40-க்குள் இருக்க வேண்டும் -- ஊனமுற்றவராயின் ஆணாக இருந்தாலும், பெண்ணாக இருந்தாலும், மருத்துவச் சான்றிதழ், விதவைக்குரிய விதவைச் சான்றிதழ், ஜாதிச் சான்றிதழ், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் என்பதற்கான சான்றிதழ், தையல் தெரியும் என்பதற்கானச் சான்றிதழ் இவைகளுடன் அவர்களுடைய புகைப்படத்தையும் சேர்த்து மாவட்ட சமூக நலத் துறை அலுவலருக்கு அனுப்பினால், தையல் தைப்பதற்கான தேர்வுக்கு அவர்களை அழைத்து, தேர்வு நடத்தி அதில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இலவசமாகத் தையல் எந்திரம் வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கை கடந்த ஆண்டு 1996-ல் 2 ஆயிரமாக வழங்கப்பட்டது. 1997-ஆம் ஆண்டில் ஆயிரம் கூடுதலாக அதாவது 3 ஆயிரம் என வழங்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே கலந்துபேசி இன்னும் அதிகமான தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கு ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 220, திரு. டி. அமரமூர்த்தி, மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 16

220—

**தாழ்த்தப்பட்ட மக்களுக்கு விட்டுமனைப் பட்டா**

***2405—திரு. டி. அமரமூர்த்தி:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் தொகுதியில் இலுப்பையூர் பஞ்சாயத்து பொய்யாதநல்லூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

**மாண்புமிகு திரு. சமயநல்லூர் எஸ். செல்வராசு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொய்யாதநல்லூர் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்
## (ஏழாம் பட்டியல்)

1—

**மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டிடம்**

**வினா 9225—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதியில் உள்ள பாபநாசம், அய்யம்பேட்டை, சுவாமிமலை, சோழபுரம் ஆகிய மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் தொகுதியில் உள்ள அய்யம்பேட்டை அரசு மேல்நிலைப் பள்ளிக்கு ரூ.4/- இலட்சம் செலவில் 2 வகுப்பறைகள்

குறிப்பு : உடுக்குறியிடாத வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.



1998 ஏப்ரல் 16]

கொண்ட கட்டடம் கட்டிக் கொடுக்க அரசாணை நிலை எண்.291, பள்ளிக் கல்வி, நாள்: 9-7-97-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது. பாபநாசம் தொகுதியிலுள்ள பாபநாசம், சுவாமிமலை மற்றும் சோழபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட ரூ.4/- இலட்சம் வீதம் நிதி ஒதுக்கி அரசாணை நிலை எண்.506, பள்ளிக் கல்வி, நாள்: 15-12-97-ல் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2—

**உயர்நிலைப் பள்ளிக்குக் கட்டிடம்**

**வினா 10298—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், மல்லிகுந்தம் உயர்நிலைப் பள்ளிக்கு மேலும் ஒரு கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், மல்லிகுந்தம் உயர்நிலைப் பள்ளிக்கு 2 வகுப்பறைகள் கொண்ட கூடுதல் கட்டடம் கட்ட ரூ.4/- இலட்சம் (ரூபாய் நான்கு இலட்சம்) நிதி ஒதுக்கி அரசாணை நிலை எண்.506 பள்ளிக் கல்வித் துறை, நாள்: 15-12-97-ல் அரசு ஆணை வழங்கியுள்ளது.

3—

**மேல்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம்**

**வினா 10367—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியப் பகுதி, முத்துநாயக்கன்பட்டி மேல்நிலைப் பள்ளிக்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

[1998 ஏப்ரல் 16

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் ஒன்றியப் பகுதி, முத்துநாயக்கன்பட்டி மேல்நிலைப் பள்ளிக்குக் கூடுதலாக இரு வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்டத் தேவையான ரூ.4/- இலட்சம் நிதி அரசாணை நிலை எண்.506, பள்ளிக்கல்வி, நாள்: 15-12-97-ல் ஒதுக்கப்பட்டுள்ளது.

4—

**ஆண்டிமடத்தில் தொழில் நுட்பக் கல்லூரி**

**வினா 13521—திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆண்டிமடம் தொகுதி, ஆண்டிமடத்தில் தொழில்நுட்பக் கல்லூரி திறக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

ஆண்டிமடத்தில் தொழில் நுட்பக் கல்லூரி தொடங்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

5—

**உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்டுதல்**

**வினா 13648—திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, பத்மநேரி உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, பத்மநேரி உயர்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச்சுவர் இல்லாததால் அரசாணை



1998 ஏப்ரல் 16]

எண்.581, கல்வி, நாள்: 14-7-94-ன்படி வனத்துறை அலுவலருடன் தொடர்பு கொண்டு பசுமை வேலி அமைத்துக் கொள்ள கல்வித் துறை அலுவலர்களுக்கு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுரை வழங்கியுள்ளார்.

6—

**அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்துதல்**

**வினா 13288—டாக்டர் காஞ்சனா கமலநாதன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்டந்தோறும் தலைநகரில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

மாவட்டந்தோறும் தலைநகரில் அரசு செவிலியர் பயிற்சிக் கல்லூரிகள் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

7—

**'டெங்கு' காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களின் விவரம்**

**வினா 13920—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் 'டெங்கு' காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்கள், இறந்தவர்கள் மொத்தம் எத்தனை பேர்?

விடை—

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மக்கள் நல்வாழ்வு மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாட்டில் 1997-98 ஆம் ஆண்டில் 'டெங்கு' காய்ச்சலினால் 264 பேர் பாதிக்கப்பட்டார்கள். அதில் 21 பேர் இறந்து விட்டனர்.

[1998 ஏப்ரல் 16

8—

**சாலை செப்பனிடல்**

**வினா 3141—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரக்கோணம் தொகுதி, நெமிலிபன்னூர் வழியாக கணபதிபுரம்-தக்கோலம் வரையான பழுதடைந்துள்ள சாலையைப் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அரக்கோணம் தொகுதி, நெமிலிபன்னூர் வழியாக கணபதிபுரம்-தக்கோலம் வரையான பழுதடைந்துள்ள சாலையைச் செப்பனிட நபார்டு திட்டத்தின் கீழ் எடுத்துக்கொள்ளப்பட்டு ரூ.30.44 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டு சென்னை கண்காணிப்புப் பொறியாளர் அவர்களின் ஒப்புதல் பெறப்பட்டு பின் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு வேலை துவங்கப்படும்.

9—

**சாலை அமைக்க நடவடிக்கை**

**வினா 4881—திரு. சி. ஞானசேகரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி ஊராட்சி ஒன்றியம், கொங்கராம்பட்டு ஊராட்சி மதுராகணக்கன் தோப்பு கிராமத்திற்கு சாலை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், மேற்கு ஆரணி ஊராட்சி ஒன்றியம் கொங்கராம்பட்டு ஊராட்சியைச் சார்ந்த மதுராகணக்கன் தோப்பிற்கு சாலை அமைக்க வேண்டி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, போதிய அளவு இட வசதி இல்லாததால் கட்டாய நில ஆர்ஜிதம் செய்ய வேண்டியிருப்பதால் நில ஆர்ஜிதம் செய்யப்பட்ட பின்னர் சாலை அமைக்கும் பணிகள் மேற்கொள்ள இயலும்.



1998 ஏப்ரல் 16]

10—

**தார்ச்சாலை அமைக்கும் திட்டம்**

**வினா 6450—திரு. மு.பெ. சாமிநாதன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், வெள்ளக்கோவில் தொகுதியில் அக்கரப்பாளையத்திலிருந்து அத்திமரத்துபுதூர் வரை செல்லும் சாலையையும் முத்தூரில் இருந்து மூலனூர் வரை செல்லும் சாலையையும் இணைக்க புளியம்பட்டியில் இருந்து தார்ச்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இந்தச் சாலை மொத்தம் 5.40 கி.மீ. உள்ளது. இதில் 2.80 கி.மீ. தூரம் தாராபுரம் ஒன்றியத்திலும், 2.60 கி.மீ. தூரம் மூலனூர் ஒன்றியத்திலும் உள்ளது. மேலும் இத்திட்டத்திற்கு ரூ.27.00 இலட்சம் தேவைப்படுவதால் இப்பணியை மேற்கொள்ளும் வாய்ப்புகள் இல்லை.

(ஆ) எழாது.

11—

**தார்ச்சாலை அமைத்தல்**

**வினா 6662—திரு எஸ்.என். பாலசுப்பிரமணியன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பவானி வட்டம் அம்மாபேட்டை ஒன்றியம், குறிச்சி-சித்தார் சாலையில் சின்னக்

[1998 ஏப்ரல் 16

குரும்பபாளையத்திலிருந்து மேட்டூர் பெரிய குரும்பபாளையம், கந்தாம்பாளையம் வரை தார்ச்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

அம்மாபேட்டை ஒன்றியம், குறிச்சி-சித்தார் சாலையில் சின்னக்குரும்ப பாளையத்திலிருந்து மேட்டூர் பெரியகுரும்பபாளையம், கந்தாம்பாளையம் வரை தார்ச்சாலை அமைக்கும் பணி 1997-98-ஆம் ஆண்டு வேலை உறுதியளிப்புத் திட்டம் மூலம் தேர்வு செய்யப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. இவ்வேலை 2 கி.மீ. தூரத்திற்கு கப்பி சாலையமைத்து முடிக்கப்பட்டுள்ளது. தார்போடும் பணி நடைபெற்று வருகிறது.

**12—**

**மின்சாரம் வழங்க நடவடிக்கை**

**வினா 6988—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடி நகரம், 7-வது வார்டு க.புதூர் மேற்குப் பகுதியிலுள்ள கரட்டுக்காடு பகுதிக்கு மின்சார கம்பங்கள், மின்சார இணைப்பு கிடையாது என்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பகுதிக்குத் தேவையான மின்கம்பங்கள் அமைத்து மின்சாரம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) ஆம்.

(ஆ) எடப்பாடி நகரில் ஏழாவது வார்டில் குறிப்பிட்டுள்ள பகுதிக்கு ஐந்து தெரு விளக்குகள் அமைக்கும் பணி 1998-99-ஆம் ஆண்டு திட்டத்தில் மேற்கொள்ளப்படும் என நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.



1998 ஏப்ரல் 16]

**13—**

**கிராமங்களுக்குச் சாலை வசதி**

**வினா 10310—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, கீழ்வலசை, மேல்வலசை, அக்கறைப்பட்டி ஆகிய கிராமங்களுக்குச் சாலை வசதியே இல்லாமல் இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டராம்பட்டு தொகுதி, கீழ்வலசை, மேல்வலசை, அக்கறைப்பட்டி ஆகிய கிராமங்களுக்குச் சாலை அமைக்கும் இடம் வனத் துறைக்குச் சொந்தமானது. (Reserve Forest) ஒதுக்கப்பட்ட காடுகளைச் சேர்ந்ததாக உள்ளதால் வனத் துறையினரின் அனுமதியுடன்தான் மலைப்பாதை அமைக்க இயலும்.

**14—**

**மாட்டுச் சந்தையை மீண்டும் நடத்துதல்**

**வினா 11459—திரு.எஸ்.எஸ். மணி நாடார்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, ஆழ்வார் திருநகரி ஒன்றியத்தில் செயல்பட்டு வந்த மாட்டுச் சந்தையை மீண்டும் நடத்த அரசு ஆவன செய்யுமா?

[1998 ஏப்ரல் 16

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

1985-86ஆம் ஆண்டு ஆழ்வார் திருநகரி ஊராட்சி ஒன்றியம். ஆதிநாதபுரத்தில் மாட்டுச் சந்தை ஏலமெடுத்தவர் ஏலமெடுத்த தொகையை கட்டாததால் அவர் மீது வள்ளியூர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது. அதன் பிறகு ஏலம் கேட்க யாருமில்லாததால் ஊராட்சி ஒன்றியமே மாட்டுச் சந்தையை நடத்தியது. அதன்பிறகு கால்நடைகள் வரத்து மிகவும் குறைந்து விட்டபடியாலும், யாரும் ஏலம் கேட்க முன் வராததாலும் செலவுத் தொகையை விட வருமானம் மிகவும் குறைவாக கிடைத்த காரணத்தாலும் மாட்டுச் சந்தை ஏலம் நடத்தப்படவில்லை. முன்போலவே கால்நடை வரத்து அதிகரித்து ஏலம் கேட்க யாரேனும் முன் வந்தால் ஏலம் நடத்தி மாட்டுச் சந்தையை மீண்டும் நடத்துவது குறித்து பரிசீலனை செய்யப்படும்.

**15—**

### சமுதாயக் கூடம் அமைத்தல்

**வினா 11661. திரு. மா. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மருங்குளம் கிராமம், அரிசனத் தெருவில் சமுதாயக்கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

**16—**

### வறுமை ஒழிப்புத் திட்டம்

**வினா 12772—திரு. கே. ரவி அருணன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 16]

பிரதமரின் ஒருங்கிணைந்த நகர்ப்புற வறுமை ஒழிப்புத் திட்டத்தின் கீழ் தென்காசி நகராட்சியில் ஆண்டுவாரியாக நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் எத்தனை?

விடை—

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

எதுவுமில்லை.

**17—**

### நறுமணப் பயிர்கள் ஏற்றுமதி விவரம்

**வினா 12755—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1997-98ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் நறுமணப் பயிர்கள் எவ்வளவு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது?

(ஆ) நறுமணப் பயிர்கள் ஏற்றுமதியை ஊக்குவிக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் உள்ள இரண்டு துறைமுகங்கள் மூலமாக நறுமணப் பயிர்கள் கீழே கண்டவாறு 1996-97ஆம் ஆண்டு சென்னை துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது:

| வரிசை எண். | நறுமணப் பயிர்களின் பெயர் | ஏற்றுமதியின் அளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1. | மிளகு (Pepper) | 13 |
| 2. | இலவங்கம் (Cloves) | 9 |
| 3. | ஜாதிபத்திரி (Nutmeg) | 135 |

[1998 ஏப்ரல் 16

1997-98-ஆம் ஆண்டு தூத்துக்குடி துறைமுகம் மூலம் ஏற்றுமதி செய்யப்பட்டது:

| வரிசை என். | நறுமணப் பயிர்களின் பெயர் | ஏற்றுமதியின் அளவு (மெட்ரிக் டன்) |
|---|---|---|
| 1. | மிளகாய் (Chillies) | 17,333 |
| 2. | கொத்தமல்லி (Coriander) | 1,694 |
| 3. | இஞ்சி (Dry Ginger) | 115 |
| 4. | மஞ்சள் (turmeric) | 1,952 |
| 5. | ஏலக்காய் (Cardamom) | 6 |
| 6. | மிளகு (Pepper) | 212 |
| 7. | விதை சம்பரப்பயிர்கள் (Seed spices) | 1,676 |

(ஆ) நறுமணப் பயிர்களின் பரப்பினை அதிகரித்து உற்பத்தியைப் பெருக்கி அதன் மூலம் ஏற்றுமதி அளவினை அதிகரித்திட தோட்டக்கலைத் துறையின் மூலம் ஒருங்கிணைந்தத் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நறுமணப் பயிர்கள் அபிவிருத்தித் திட்டம் ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன. ஒருங்கிணைந்தத் தோட்டக்கலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒரு விவசாயிக்கு ஒரு எக்டேருக்கு 50 சத மான்யத்தில் நடவுப்பொருள்கள் வழங்கப்படுகிறது. நறுமணப்பயிர்கள் பயிரிடுவதற்காக 0.5 எக்டேர் பயிரிடுவதற்குத் தேவையான விதைகள் 50 சத மான்யத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது. ஒருங்கிணைந்த நறுமணப்பயிர்கள் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் மிளகு, இஞ்சி, மஞ்சள் போன்ற நறுமணப்பயிர்களின் அபிவிருத்திக்கு உதவி செய்யப்படுகின்றது. செயல்விளக்கப் பாத்திகள் அமைத்தல், வரப்பு அதிகரித்தல், பயிர் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், நலிவடைந்த பயிர்கள் உள்ள தோட்டங்களைப் புதுப்பித்தல், சிறுதளைகள் வழங்குதல் போன்ற இனங்கள், விவசாயிகளுக்கு உதவித் தொகைகள் வழங்குவதன் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. மேற்கண்ட திட்டங்கள் ரூ.136 இலட்சம் செலவில் 1997-98ஆம் ஆண்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



1998 ஏப்ரல் 16]

**18—**

**காய்கறிகள் குறைந்த விலையில் விற்க நடவடிக்கை**

**வினா 14186—டாக்டர் மு. தேவராஜன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காய்கறிகள் அதிகமாக விளையும்பொழுது அதனைப் பதப்படுத்தி குறைந்த விலையில் விற்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

காய்கறி மற்றும் பழவகைகளைக் கொள்முதல் செய்து, பதப்படுத்தி, சேமித்து, தேவைப்படும் இடங்களில் சில்லறை விற்பனைக் கூடங்களின் மூலம் விநியோகிக்க ஒருங்கிணைந்தத் திட்டம் ரூ.40.52 கோடி மதிப்பீட்டில் தீட்டப்பட்டுள்ளது. இதற்கான நிதியுதவி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திடமிருந்து பெறப்பட்டு, "டான்ஹோப்" மூலம் செயல்படுத்தப்படும்.

இதன் முதல் கட்டமாக ரூ.10.23 கோடி செலவில் 14 கொள்முதல் கூடங்கள், 4 குளிர்பதன வண்டிகள், மாவட்டக் குளிர்பதனக் கிட்டங்கிகள் மற்றும் சில்லறை விற்பனைக் கூடங்கள் துவக்கப்படும்.

இத்திட்டம் முழுமையாகச் செயல்படுத்துகையில், 36 கொள்முதல் கூடங்கள், 20 குளிர்பதன வண்டிகள், 12 மாவட்டக் கிட்டங்கிகள், 163 சில்லறை விற்பனைக் கூடங்கள், 9 மாவட்ட குளிர்பதனக் கிட்டங்கிகள், 4 விமான நிலைய குளிர்பதனக் கிட்டங்கிகள், 10 பதப்படுத்தும் நிலையங்கள் துவக்கப்படும். இவற்றின் மொத்த மதிப்பீடு ரூ.40.52 கோடியாகும்.

இத்திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**19—**

**வாய்க்காலின் இருபுறமும் கான்கீரிட் அமைத்தல்**

**வினா 7622—திரு. பி. இராசமாணிக்கம்:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மூவாநல்லூர் வாய்க்காலின் இருபுறமும் கான்கிரீட் கரை அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், அந்தப் பணி எப்போது தொடங்கப்படும்?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) திருவாரூர் மாவட்டம், ஒரத்தநாடு தொகுதி, நீடாமங்கலம் ஒன்றியம், மூவாநல்லூர் வாய்க்கால் வடவாறு நீட்டிப்பு வாய்க்காலின் இடதுகரை தொலைக்கல் 11/4255ல் பிரிகிறது. இதனுடைய பாசன பரப்பு 2888 ஏக்கராகும். நீளம் 1897 மீட்டராகும். இக்கால்வாயின் இருபுறமும் கான்கிரீட் கரை அமைக்க தோராயமாக ரூ.10.00 இலட்சம் தேவைப்படும். ஆனால், மேற்படி மூவாநல்லூர் வாய்க்காலின் இருபுறமும் கான்கிரீட் கரை அமைக்கும் கருத்துருவோ, திட்டமோ தற்போது ஏதும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**20—**

### கரையினை உயர்த்திக் கட்டுதல்

**வினா 10032—திரு. சீ.வெ. கிருஷ்ணன் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, ராமகிரி மலையிலுள்ள நீர்த்தேக்கத்தில் கட்டப்பட்டு வரும் கரையினை உயரமாகவும், சக்தி வாய்ந்ததாகவும் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், இதன் தற்போதைய நிலை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) வேடசந்தூர் வட்டம், ஆர். கோம்பையின் அருகே ராமகிரி ஓடையின் குறுக்கே ஏரியை ஆழமாக்கும் பணிக்கு சிறு பாசனத்



திட்டத்தின் கீழ் 194.32 ஏக்கர் நிலப்பரப்பு பாசன வசதி பெறும் பொருட்டு ரூ.119.00 இலட்சத்தில் கட்டி முடிக்கப்பட்டு, முதன்முறையாக நீர் தேக்கக் கூடிய நிலையில் உள்ளது.

மேலும் பெரியதாக விரிவாக்கிச் செய்ய சாத்தியக்கூறுகள் ஏதும் இல்லை.

**21—**

### குளங்களை மராமத்து செய்தல்

**வினா 12997—திரு. எஸ்.வி. கிருஷ்ணன் :**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், நாங்குனேரி தொகுதி, சங்கனான்குளம் ஊராட்சி, எறாந்தை குளம், இராஜகோபாலபுரம் குளம் ஆகிய குளங்களை மராமத்துச் செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப்பணித் துறை அமைச்சர்:**

இவ்வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள குளங்களை மராமத்துச் செய்யும் பணிகள் நிதி நிலைமைக்கேற்ப செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**22—**

### நகரப் பேருந்தை மீண்டும் இயக்க நடவடிக்கை

**வினா 1354—திரு. ந. கருப்பண்ண உடையார்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பாபநாசம் தொகுதி, வலையப்பேட்டை வழியாக கும்பகோணத்திலிருந்து சுவாமிமலை வரை இயங்கிக் கொண்டிருந்த வழித்தடம் என் 49 நகரப் பேருந்தை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[1998 ஏப்ரல் 16

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கும்பகோணம்-சுவாமிமலை (வழி) வலையப்பேட்டை தடத்தில் தடம் எண் 49-ன் மூலம் 1987-ல் 4 நடைகள் இயக்கப்பட்டது. பின்னர் சாலை சரி இல்லாததால் இத்தடத்தில் பேருந்தை இயக்க இயலாமல் நிறுத்தப்பட்டது. தற்போது மார்ச் 1997 முதல் தடம் எண்.12-ல் கும்பகோணம்-திருவைகாவூர் (வழி) வலையப்பேட்டை, மாங்குடி, சுவாமிமலை, அண்டக்குடி—திருமண்டங்குடி சர்க்கரை ஆலை, திருவைகாவூர் தடத்தில் 4 நடைகள் இயக்கப்பட்டு வருகிறது.

**23—**

**கோட்டா இருக்கைகள் வழங்குதல்**

**வினா 11877—செல்வி க. ராணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆத்தூர்-சென்னை வழித்தடத்தில், தலைவாசலுக்கு விரைவுப் பேருந்துகளில் கோட்டா இருக்கைகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அரசு விரைவுப் பேருந்துக் கழகத்தால் ஆத்தூர்—சென்னைத் தடத்தில் இயக்கி வரும் பேருந்தில் தலைவாசல் பயணிகளுக்காக 5 இருக்கைகள் பரீட்சார்தமாக ஒதுக்கீடு செய்து உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

**24—**

**பேருந்துகள் செல்ல நடவடிக்கை**

**வினா 11893—திரு. டி. மணி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், காளைப்பட்டி ஊராட்சியில் வீட்டுவசதி சங்கத்தின் மூலம் புதிய குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ள பகுதி வரையிலும் பேருந்துகள் சென்றுவர அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?



1998 ஏப்ரல் 16]

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோயம்புத்தூர் மாவட்டம், காளைப்பட்டி ஊராட்சிப் பகுதி, நேரு நகர் வீரியம்பாளையம் செல்லும் சாலையில் சுமார் 1 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள வீட்டுவசதி சங்க புதிய குடியிருப்புப் பகுதிக்கு தமிழ்நாடு அரசு போக்குவரத்து (கோவை-கோட்டம்.1) கழகத்தின் மூன்று நகரப்பேருந்துகள் தினசரி 31 நடைகள் தற்சமயம் இயங்குவதன் வாயிலாக போதியப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

**25—**

**பேருந்துகள் நின்று செல்ல நடவடிக்கை**

**வினா 12518—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சி வெள்ளப்பம்பட்டி, உப்பாரப்பட்டி, கம்மடம்பட்டி, சென்றாரெட்டியர் மற்றும் காளிகவுண்டனூர் ஆகிய ஊர்களில் பேருந்து நிற்குமிடங்களில் அனைத்துப் போக்குவரத்துப் பேருந்துகளும் நின்று செல்ல அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள ஊர்களில் வெள்ளப்பம்பட்டி, உப்பாரப்பட்டி நீங்கலாக மற்ற ஊர்களில் புறநகர் பேருந்துகள் நின்று செல்கின்றன. ஆய்வு செய்து கோரிக்கையினை ஏற்று, வினாவில் கேட்கப்பட்டுள்ள வெள்ளப்பம்பட்டியில் குறுந்தொலைவு புறநகர் பேருந்துகள் நின்று செல்ல வகை செய்யப்பட்டுள்ளது. உப்பாரப்பட்டி என்ற ஊர் தற்போது பேருந்து நிறுத்தமாக உள்ள அரசு போக்குவரத்துக்கழகம், தொப்பூர் மோட்டலிருந்து 1 கி.மீ. தொலைவிலேயே இருப்பதால் அங்கு பேருந்து நிறுத்த தேவை நிலவவில்லை.

26—

## பேருந்துகளை இயக்குதல்

**வினா 13260—திரு. ஆர்.ஆர். சேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் நகரிலிருந்து தொப்பூருக்கு குருவரெட்டியூர், கொட்டாலூர் புதூர், குப்பிநாயக்கனூர் வழியாகப் பேருந்துகள் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கையில் கேட்கப்பட்டுள்ள தடத்தில் (கொட்டாலூர் புதூர் நீங்கலாக) ஓமலூர் - தொப்பூர் (வழி) குருவரெட்டியூர், குப்பிநாயக்கனூர், கொட்டாலூர் புதூர் பிரிவு சாலை தடத்தில் 3 நகரப் பேருந்துகள் மூலம் தினசரி 18 நடைகள் பேருந்து இயக்கப்பட்டு வருகிறது. மேலும் ஓமலூரில் இருந்து குப்பிநாயக்கனூர், குருவரெட்டியூர் வழியாக கொட்டாலூர் புதூர் வரை ஒரு நகரப் பேருந்தின் மூலம் தினசரி 6 நடைகள் பேருந்து வசதி அளிக்கப்பட்டு வருகிறது.

கொட்டாலூர் புதூர் பிரிவு சாலையிலிருந்து கொட்டாலூர் புதூர் 2.5 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது. கொட்டாலூர் புதூர் சென்று வர வேண்டும் என்றால் சென்ற தடத்திலேயே பேருந்து மீண்டும் திரும்பி வரவேண்டும். எனவே 5 கி.மீ. தூரம் அதிகமாவதால் கூடுதல் பயண நேரம், கூடுதல் பயணக் கட்டணம் முதலான அசௌகரியங்களுக்கு நேர்வழி பயணிகள் ஆளாக நேரிடும். மேலும் கொட்டாலூர் புதூர் மக்கள் பிரிவு சாலைக்கு வந்துவிட்டால் குப்பிநாயக்கனூர் செல்லவும் தொப்பூர் செல்லவும் போதிய பேருந்து வசதியுள்ளது.

27—

## இரு சக்கர வாகன ஓட்டுநர்களின் விபத்து விவரம்

**வினா 13526—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) 1996-97-ல் 1997 அக்டோபர் வரை தமிழ்நாட்டில் இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் விபத்தில் எத்தனைப் பேர் இறந்திருக்கிறார்கள்? எத்தனைப் பேர் காயமுற்று உள்ளனர்?

(ஆ) அவர்களுக்கு அரசு அளித்த உதவி என்ன?

(இ) விபத்து நடக்காமல் இருக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் இரு சக்கர வாகன ஓட்டுநர்கள் விபத்தில் இறந்தவர்கள்/காயமுற்றவர்கள் பின்வருமாறு:-

| | | இறந்தவர்கள் | காயமுற்றவர்கள் |
|---|---|---|---|
| 1. | 1996 | 876 | 3890 |
| 2. | 1997 (அக்டோபர் வரை) | 862 | 4489 |

(ஆ) 31-1-92 தேதியிட்ட 165 ஆம் எண்ணுள்ள அரசு நிலை ஆணையின்படி, விபத்தில் இறந்த/காயமுற்றவர்களுக்கு முதல் அமைச்சர் விபத்து நிவாரணத் திட்டத்தின் கீழ் பின்வருமாறு நிதி உதவி அளிக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம். | நிதி உதவித் தொகை. |
|---|---|---|
| 1. | இறப்பு | ரூ. 3,000 |
| 2. | நிரந்தரச் செயலிழப்பு | ரூ. 1,500 |
| 3. | ஒரு கண் (அல்லது) ஒரு கை இழப்பு | ரூ. 1,000 |
| 4. | இதர வகை | ரூ. 100 |

(இ) 1. மாநிலம் மற்றும் மாவட்ட அளவில் சாலைப் பாதுகாப்புக் குழுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

[1998 ஏப்ரல் 16

2. நெரிசல் மிகுந்த சாலைகளில் தானியங்கி சமிக்ஞைகள், சாலைத் தடுப்புகள் (Road Medians) ஆகியவை போடப்பட்டுள்ளன.

3. முக்கியமான சாலைகளில் சுரங்கப்பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

4. கண்ணைக் கூசுகின்ற முகப்பு விளக்குகளின் வெளிச்சத்தைத் தடுக்கும் வகையில் ரோட்டரி கிளப்புகள் மற்றும் கல்லூரி உதவியுடன் வாகனங்களின் முகப்பு விளக்குகளில் "புல்ஸ் வட்டம்" ஒட்டப்படுகின்றன. (Blackening exercise)

5. விபத்துக்களை உண்டாக்கிய வாகனங்கள் நீதிமன்றங்கள் மூலம் தண்டனைக்குள்ளாக்கப்படுகின்றன.

6. "நில்" "வாகனங்களை நிறுத்தக்கூடாது" "சாலை சந்திப்பு" "பள்ளிக்கூடப் பகுதி" போன்ற எச்சரிக்கை போர்டுகள் பல்வேறு பகுதிகளில் நிறுவப்பட்டுள்ளன.

7. போக்குவரத்தைக் கட்டுப்படுத்த உதவும் வாசகங்கள் அடங்கிய துண்டுப் பிரசுரங்கள் பொது வாகன ஓட்டுநர்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

8. ஓட்டுநர் மது அருந்தியுள்ளதைக் கண்டுபிடிக்கவும், வேகமாக செல்கின்ற வாகனங்களை கண்டுபிடிக்கவும், கருவிகள் சென்னை நகருக்கு வழங்கப்பட்டுள்ளன.

9. போக்குவரத்தைப் பாதிக்கின்ற வகையில் சாலைகளில் நிறுவப்பட்டுள்ள வாகனங்களை அப்புறப்படுத்த வாகனங்களைத் தூக்கி அப்புறப்படுத்தும் கருவி ஒன்று சென்னை நகரப் போக்குவரத்துப் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

10. போக்குவரத்தை சுமூகமாக்கும் பொருட்டு, சென்னை மற்றும் மாவட்டங்களில் முக்கியப் பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் மற்றும் விபத்துகளைத் தடுக்க 4 வழிப்பாதை மற்றும் ஒரு வழிப்பாதை அமுல்படுத்தப்பட்டு வருகிறது.

11. போக்குவரத்து விதிகள் பற்றிய பாடத் திட்டம் பள்ளி மாணவர்களுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

12. உள்துறைச் செயலர் தலைமையில் அமைக்கப்பட்ட ஓர் அலுவலர் குழு, தற்போது விபத்துக்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிந்து வருகிறது.



1998 ஏப்ரல் 16]

13. ஆண்டுதோறும், மத்திய அரசின் அறிவுரைப்படி, சாலைப் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. இவ்விழாவில் சாலைப் பாதுகாப்புப் பணியின் அவசியம் பற்றி ஓட்டுநர்கள் உள்பட, சம்மந்தப்பட்ட அனைவருக்கும் மத்திய அரசால் வெளியிடப்படும் கட்டளைகள் உணர்த்தப்படுகின்றன.

**28—**

## நகரப் பேருந்து இயக்குதல்

**வினா 1357—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்தில் உள்ள பொன்னங்குப்பத்திலிருந்து அனந்தபுரம் வழியாக காரை, ஓட்டம்பட்டு பாதையில் செஞ்சிக்குச் செல்லும் வழித்தடத்தை நாள் ஒன்றுக்கு நான்கு முறை இயக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்தில் உள்ள பொன்னங்குப்பத்திற்கு செஞ்சியிலிருந்து ஓட்டம்பட்டு, காரை, அனந்தபுரம், துத்திப்பட்டு வழியாக தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம், (விழுப்புரம், கோட்டம் 1..து) செஞ்சி பணிமனையிலிருந்து தடம் எண் டி.4 நகரப் பேருந்து மூலம் நாளொன்றுக்கு 4 நடைகளை இயக்கி வருகிறது. செஞ்சியிலிருந்து ஓட்டம்பட்டு வரை 11.4 கி.மீ. தூரம் விழுப்புரம்-செஞ்சி பிரதான சாலையில் அமைந்துள்ளதால் பேருந்து வசதிகள் தேவையான அளவிற்கு உள்ளது. ஓட்டம்பட்டியிலிருந்து பொன்னங்குப்பம் வரையிலான 11.1 கி.மீ. இடைவெளியில் காரை, வரிக்கல், அணையேரி, அனந்தபுரம், சித்தரசூர், துத்திப்பட்டு கிராமங்கள் உள்ளன. மேலும் இத்தடத்தில் இயங்கும் பேருந்தே செஞ்சியிலிருந்து அத்தியூர், வரிக்கல், அணையேரி, அனந்தபுரம், சித்தரசூர், துத்திப்பட்டு வழியாக பொன்னங்குப்பத்திற்கு நாளொன்றுக்கு 8 நடைகள் மற்றும் செஞ்சியிலிருந்து வரிக்கல், அனந்தபுரம் வழியாக புதுக்கருவாட்சிக்கு நாளொன்றுக்கு 2 நடைகளும் பல்வழித்தடத்தின் கீழ் இயக்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 16

29—

## பொன்னங்குப்பத்திற்கு பேருந்து இயக்குதல்

**வினா 13572—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, செஞ்சி ஒன்றியத்தில் உள்ள பொன்னங்குப்பம் டி-4 என் கொண்ட வழித்தடம் முறையாக இயங்குவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

1997-ஆம் ஆண்டில் நவம்பர், டிசம்பர் மாதத்தில் பெய்த தொடர் மழை காரணமாக நகர வழித்தடம் டி-4 செஞ்சி - பொன்னங்குப்பம் வழித்தடத்தில் பேருந்து இயக்குவதில் தடைகள் ஏற்பட்டன. தற்பொழுது இப்பேருந்து முறையாக இயக்கப்பட்டு வருகிறது.

30—

## கூடுதல் பேருந்து இயக்குதல்

**வினா 14049—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டில் உள்ள மேல்பாச்சால், மோத்தக்கல் ஆகிய கிராமங்களுக்கு கூடுதல் பேருந்து விட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஏற்கெனவே திருவண்ணாமலை-மேல்பாச்சால் (வழி) தண்டராம்பட்டு, தானிப்பாடி, மோத்தக்கல் என 4 நடைகள் இயக்கப்பட்டு வந்தது. அதன் பிறகு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு இரு புதிய வழித்தடங்கள் என்ற அரசின் கொள்கைப்படி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தன் 27-7-97 நாளிட்ட கடிதத்தில் பரிந்துரை



1998 ஏப்ரல் 16]

செய்ததையொட்டி, கூடுதலாக திருவண்ணாமலை-மேல்பாச்சால் என 4 நடைகள் 28-12-97 முதல் இயக்கப்பட்டு வருகிறது.

(ஆ) இவ்வினா எழ வாய்ப்பில்லை.

31—

## தனியார் பேருந்துகளை இயக்குதல்

**வினா 14058—திரு. ச. அழகிரி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நெரிசல் அதிகம் உள்ள போக்குவரத்துத் தடங்களில் மக்களின் பயண வசதியைக் கருதி தனியார் பேருந்துகளை அனுமதிக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

அனைத்து மாவட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட திட்டம் அமுலில் (ஏரியா ஸ்கீம்) உள்ளதால், நெரிசல் அதிகம் உள்ள போக்குவரத்துத் தடங்களில் மக்களின் பயண வசதியைக் கருதி தனியாருக்கு அனுமதி வழங்க இயலாது.

32—

## திருமண மண்டபம் அமைத்தல்

**வினா 11394—திரு. துரை. சந்திரசேகரன்:**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருள்மிகு அக்னீஸ்வர சுவாமி ஆலயத்தில் திருமண மண்டபம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

***மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:**

[1998 ஏப்ரல் 16

(அ) மற்றும் (ஆ) : தஞ்சாவூர் மாவட்டம், திருவையாறு வட்டம், திருக்காட்டுப்பள்ளி அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்குப் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால், இத்திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்டும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**33—**

**மத்தியக் கூட்டுறவு வங்கிக்குச் சொந்தக் கட்டிடம்**

**வினா 13625—திரு. குத்தாலம் பி. கல்யாணம்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் மாவட்டத்திற்கென அமையவுள்ள மத்தியக் கூட்டுறவு வங்கி போதிய வசதிகளுடன் மயிலாடுதுறையில் உள்ள சொந்தக் கட்டிடத்தில் அமைக்கப்படுமா?

விடை—

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

இல்லை.

மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, புதிதாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்த தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (NABARD) இந்திய தலைமை வங்கியின் அனுமதிப்பெற்று தனித்தனியே மத்தியக் கூட்டுறவு வங்கிகள் ஏற்படுத்தப்பட்டாலும் வங்கியின் நிர்வாக வசதியினை முன்னிட்டும், இதர துறையினருடனும், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோருடன் தொடர்பு கொள்ளவும் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம், மாவட்டத்தின் தலைமையிடத்தில் இருப்பதுதான் சரியாக இருக்கும். எனவே, நாகப்பட்டினத்திற்கென, தனியாக மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்துவதற்கும் தற்போது வாய்ப்புகள் இல்லை. இருப்பினும், நாகப்பட்டினத்திற்கென தனியே மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி ஏற்படுத்தப்படுமானால், அதன் தலைமை அலுவலகம் நாகப்பட்டினத்தில்தான் அமையும். மயிலாடுதுறையில் தலைமை இடம் அமைய வாய்ப்புகள் இல்லை.



1998 ஏப்ரல் 16]

**34—**

**வீட்டு மனைப்பட்டா வழங்கும் திட்டம்**

**வினா 4467—திரு. மீ.அ. வைத்தியலிங்கம்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரம் தொகுதி 154-வது வட்டத்திலுள்ள மகாத்மா காந்தி நகர், கலைஞர் நகர், அண்ணா நகர், பேராசிரியர் அன்பழகன் நகர், எம்.ஜி.ஆர். நகர், கானகம் (வழி) பெரியார் நகர், [illegible] தரமணி இந்திரா நகர், ரெங்கநாதபுரம் பகுதிகளைக் குடிசை மாற்று வாரியம் கையகப்படுத்தி வீட்டுமனைப் பட்டா வழங்கும் திட்டம் அரசிடமுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) தற்போதைக்கு இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**35—**

**பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை**

**வினா 13035—திரு. இரா. மணிமாறன்:**

மாண்புமிகு பால்வளத்து றை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் பால்வள ஒன்றியத்தில் ஏற்பட்ட வருவாய் இழப்பு சரி செய்யப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:**

(அ) திண்டுக்கல் ஒன்றியத்தில் ஏற்பட்ட வருவாய் இழப்பு நடப்பு நிதி ஆண்டில் சரி செய்யப்பட்டு வருகின்றது. 1997-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் வருவாய் இழப்பு இன்றி ரூ.11,000/- இலாபம் ஈட்டப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 16

(ஆ) நிர்வாகச் செலவுகளைக் குறைத்து மேற்கொண்ட நடவடிக்கைகள் அடிப்படையிலும், பால் விற்பனை சீராக, நாள் ஒன்றுக்கு 20,000 லிட்டர் என செயல்படுத்துவதாலும் வருவாய் இழப்பு இன்றி செயல்படத் துவங்கியுள்ளது. மேலும் பால் உற்பத்தியை அதிகரிக்கவும், விற்பனையைத் தொடர்ந்து அதிகரிக்கவும், அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**36—**

**தமிழில் பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை**

**வினா 11938—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரசு வேலைவாய்ப்புகளில் தமிழில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் உரிய முன்னுரிமை வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பல்வேறு பிரிவுகளைச் சார்ந்த முன்னுரிமை உள்ளோருக்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்கு அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிலிருந்து தெரிவிக்கப்படும் பணிக் காலியிடங்கள் (Vacancies) குறைவே என்பதால், தமிழில் பயின்று பட்டம் பெற்றவர்களுக்கு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளிப்பது பயனுள்ளதாக அமையாது என அரசால் கருதப்படுகிறது.

**37—**

**வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்துள்ளவர்கள் பற்றிய விவரம்**

**வினா 1245—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பணிக்காகப் பதிவு செய்துள்ளவர்கள் மொத்த எண்ணிக்கை எவ்வளவு?



1998 ஏப்ரல் 16]

(ஆ) பட்டதாரிகளின் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு எடுத்து வரும் நடவடிக்கை என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. அ. இரகுமான்கான், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) 31-12-1997 தேதிய நிலவரப்படி, தமிழ்நாட்டில் வேலைவாய்ப்பு அலுவலக உயிர் பதிவேட்டில் மொத்தம் 39,23,818 மனுதாரர்கள் வேலை வாய்ப்பிற்காகப் பதிவு செய்து காத்திருக்கின்றனர்.

(ஆ) இதில் பட்டதாரிகள் எண்ணிக்கை மட்டும் 4,10,138 ஆகும்.

(இ) வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்துள்ள பட்டதாரி இளைஞர்களுக்கு மட்டுமன்றி இதர அனைத்துப் பிரிவுகளுக்கும் தொழில்முறை வழிகாட்டிப்பணி (Vocational Guidance) வேலைவாய்ப்பு அலுவலகங்களால் மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டத்தில் வேலை தேடுவோருக்குத் தொழில்முறை வழிகாட்டி அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

**38—**

**சனிக்கிழமைகளில் சிறைக்கைதிகளைப் பார்க்க அனுமதி**

**வினா 12678—திரு. ஐ. கணேசன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் உள்ள சிறைச்சாலைகளில் சனிக்கிழமை மனுப் போட்டு சிறைக்கைதிகளைப் பார்க்கத் தடை உள்ளதாகக் கூறப்படும் தடையை நீக்கி மீண்டும் சனிக்கிழமை சிறைக் கைதிகளை மனு போட்டுப் பார்க்க அனுமதி வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சிறைச்சாலைகளில் சனிக்கிழமைகளிலும் மனுப் போட்டு சிறைவாசிகளை நேர்காண அனுமதிக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

[1998 ஏப்ரல் 16

39—

**சிறைக்கைதிகளுக்கு மின் விசிறி வசதி செய்து கொடுத்தல்**

**வினா 13715—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பிற மாநிலங்களில் சிறைக்கைதிகளுக்கு மின்விசிறி வசதி செய்துள்ளது போல் நம்முடைய மாநிலத்திலுள்ள மத்திய சிறைகளிலுள்ள சிறைக் கைதிகளுக்கும் மின்விசிறி வசதி செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. ஆலடி அருணா, சட்டத் துறை அமைச்சர்:**

சிறைவாசிகளுக்கு மின் விசிறி வசதி செய்வது சிறைவாசிகளின் பாதுகாப்பிற்கு உகந்தது அல்ல. ஆகையால், மின் விசிறி வசதி செய்யும் எண்ணம் அரசுக்கு இல்லை.

40—

**விடுதிக்குக் கட்டிடம் கட்டுதல்**

**வினா 3476—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி தொகுதி, ஜருகு, கோணங்கி நாயகனஅள்ளி, தொப்பூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

தருமபுரி தொகுதி, ஜருகு, கோணங்கி நாயகனஅள்ளி, தொப்பூரில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவ/மாணவியர் விடுதிகளுக்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவது குறித்த செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



1998 ஏப்ரல் 16]

41—

**பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைத்தல்**

**வினா 14051—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம். ஆர். கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): தண்டராம்பட்டு தொகுதி, சாத்தனூரில் பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி அமைப்பது குறித்து செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

42—

**மலைச்சாலைகள் ஏற்படுத்துதல்**

**வினா 5225—திரு. சீ.வெ. கிருஷ்ணன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, ஆர்.கோம்பை முதல் மெத்தைப்பட்டி வரை அய்யலூர் முதல் பஞ்சந்தாங்கி வரை மற்றும் வளவிசெட்டிப்பட்டி முதல் மலைப்பட்டி வரை மலைச்சாலைகள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ): (1) அய்யலூர்-பஞ்சந்தாங்கி சாலையில் காப்புக் காட்டிலுள்ள பகுதியில் ஏற்கெனவே சாலை உள்ளது. அதைப் பராமரிக்கும் பணிகளுக்காக ரூ. 3.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

[1998 ஏப்ரல் 16

(2) ஆர்.கோம்பை முதல் மெத்தைப்பட்டி வரை மற்றும் வளவிசெட்டிப்பட்டி முதல் மலைப்பட்டி வரை சாலை அமைப்பது தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், மேற்படி இரு சாலைகளும் காப்புக்காட்டிற்கு வெளியே அமைந்துள்ளதால வனத்துறையால் இப்பணிகளை மேற்கொள்ள இயலாது. "மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை" மூலம் சாலை அமைத்தல் மற்றும் சாலைப் பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளலாம்.

**43—**

**தார்ச் சாலை அமைத்தல்**

**வினா 7441—திரு. கொ. வீ. நன்னன்:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதியில் களதாம்பாடியிலிருந்து அரியாகுஞ்சூர் செல்லும் சாலை வனத் துறைக்கு உட்பட்டு இருப்பதால் வனத் துறையிடம் அனுமதி பெற்று அங்கு தார்ச் சாலை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) இப்பொருள் தொடர்பான செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**44—**

**மழையூருக்குப் புதிய பாதை**

**வினா 10245—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 16]

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி கொல்லம்பட்டி அடுத்துள்ள மழையூருக்குச் செல்ல பாதை வசதி இல்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், வனத் துறை மூலம் புதிய பாதை அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

(அ) தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதி, பிக்கிலி கொல்லப்பட்டி அடுத்துள்ள மழையூருக்கு, பாப்பாரப்பட்டி [illegible] நில வனப்பகுதி வழியாகச் சென்று வர பழைய பாதை உள்ளது. காப்புக் காட்டினூடே அமைந்துள்ள 0.70 கி.மீ. தூரம் கொண்ட பாதைப் பகுதியைப் பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ள 4 மீட்டர் அகலத்திற்கு உரிமம் வழங்க வன நிர்ணய அலுவலர் முடிவு செய்துள்ளார்.

(ஆ) வனத் துறை மூலம் புதிய பாதை அமைத்துத்தர செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**45—**

**மின்விளக்குகள் அமைத்தல்**

**வினா 11803—திரு. ஜி. கே. மணி:**

மாண்புமிகு வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரி மாவட்டம், தருமபுரி-சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையில் தொப்பூர் கணவாய் என்று அழைக்கப்படும் வனப்பகுதிச் சாலையில் வெள்ளைக்கல்பட்டியிலிருந்து தொப்பூர் சுங்கச்சாவடி வரை மின்விளக்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, வனம் மற்றும் அச்சுத் துறை அமைச்சர்:**

தருமபுரி மாவட்டம், தருமபுரி-சேலம் செல்லும் தேசிய நெடுஞ்சாலையின் ஒரு பகுதி பரிகம் மற்றும் தொப்பூர் காப்பு வனத்திற்குள் அமைந்துள்ளது. மேற்படி, தேசிய நெடுஞ்சாலையில்

வெள்ளைக்கல்பட்டி முதல் தொப்பூர் சுங்கச்சாவடி வரை நெடுஞ்சாலை நிலத்தில் மின்விளக்கு அமைக்க வேண்டி இருப்பின் சாலைப் பகுதியின் விளிம்பில் மின்கம்பங்கள் அமைத்து மின் விளக்கு வசதிப் பணிகளை, மின் வாரியத்தினர் மேற்கொள்ளலாம். எனவே இதற்கென வனத்துறையின் அனுமதி பெற வேண்டிய அவசியம் இல்லை. மேற்படி சாலையில் காப்பு வனத்திற்குள் வரும் பகுதியில் மின்விளக்குகள் அமைப்பது தொடர்பான எவ்விதச் செயற்குறிப்பும் மின்வாரியத்தினரிடமிருந்து வனத்துறையால் பெறப்படவில்லை. மேற்காணும் பகுதிக்கு மின் இணைப்புப் பணிகள் மேற்கொள்ள மின்வாரியத்தினரிடமிருந்து செயற்குறிப்பு பெறப்படின் மத்திய அரசின் வனப் பாதுகாப்புச் சட்டம் 1980-ல் உள்ள விதிமுறைகளின்படி அனுமதி வழங்க தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**46—**

### ஊரக வீட்டுவசதித் திட்ட விவரம்

**வினா 7986 திரு. என். ஆர். அழகராஜா:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* 1996-97-ஆம் நிதியாண்டில் ஊரக வீட்டுவசதித் திட்டம் மூலம் எத்தனை வீடுகள் கட்டப்பட்டன?

*(ஆ)* ஹட்கோ மூலம் கடன் பெறும்பொழுது அதற்கு அளிக்கப்படும் மானியம் போல் இந்தத் திட்டத்திற்கும் மானியம் உள்ளதா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

*(அ)* 1996-97 ஆம் நிதியாண்டில் ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் பொருளாதாரத்தில் நலிவுற்றோருக்கு 30,399 வீடுகளும், குறைந்த மற்றும் நடுத்தர வருவாய்ப் பிரிவினருக்கு 2,847 வீடுகளும் ஆக மொத்தம் 33,246 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

*(ஆ)* ஆம். ''ஹட்கோ'' நிறுவனக் கடனுதவி மூலம் நிறைவேற்றப்படுகின்ற பொருளாதாரத்தில் நலவுற்றோருக்கான ஊரக வீட்டுவசதித் திட்டத்தின் கீழ் கட்டப்படுகின்ற வீடுகளுக்கு அரசு மானியம் ஒரு வீட்டிற்கு ரூ. 2,000 என வழங்கப்படுகிறது. இதர வருவாய்ப் பிரிவினருக்கு மானியம் வழங்கப்படுவதில்லை.



**47—**

### பங்காதாய்வு வழங்க நடவடிக்கை

**வினா 10850—திரு. இ. கணேசன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* எடப்பாடியில் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் (வரை) எண்எஸ்.எல்.பி.எல்.120 கடந்த 4 வருடமாக உறுப்பினர்கள் கட்டிய பங்குத் தொகைக்கு பங்காதாய்வு (டிவிடெண்ட்) தரவி[illegible]து அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், உடனடியாக உறுப்பினர்களுக்குப் பங்காதாய்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* எடப்பாடி கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கம் 1991-92-ஆம் ஆண்டு வரை இலாபத்தில் செயல்பட்டு வந்ததால், 1991-92-ஆம் ஆண்டு வரை உறுப்பினர்கள் செலுத்தியுள்ள பங்குத் தொகைக்குப் பங்காதாய்வு (டிவிடெண்ட்) வழங்கப்பட்டுள்ளது. 1992-93-ஆம் ஆண்டிலிருந்து சங்கம் தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்துள்ளதால், எடப்பாடி கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்தில் கடந்த நான்கு ஆண்டுகளாக உறுப்பினர்களுக்குப் பங்கு ஈவுத் தொகை வழங்க இயலவில்லை.

**48—**

### ஏழை மக்களுக்கு வீடு கட்டக் கடன் வழங்குதல்

**வினா 11466—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட சத்தியநாதபுரம் ஊராட்சியைச் சேர்ந்த நாயக்கனூர் ஏழை மக்களுக்கு வீடு கட்டக் கடன் வழங்க அரசு ஆவன செய்யுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

விடை— [1998 ஏப்ரல் 16

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், சத்தியநாதபுரம் நாயக்கனூர் கிராமத்தில் உள்ள (பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு) ஏழை மக்களுக்கு பென்னாகரம் வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தின் மூலம் நடப்பு நிதி ஆண்டிற்கு ஹட்கோ 15-வது திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள 275 அலகுகளில் சுமார் 15 அலகுகளில் (15 நபர்களுக்கு) வீடு கட்டக் கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது தவிர நாயக்கனூர் கிராம மக்களுக்கு (பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு) ஹட்கோ 13 மற்றும் 14 திட்டங்களின்கீழ் இதுவரை 5 நபர்களுக்கு மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்பட்டுள்ளது.

**49—**

**கூட்டுறவுச் சிறப்பங்காடி ஊழியர்களுக்கு மலிவு விலை வீடு**

**வினா 11647—திரு. கே. சுப்பராயன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் வளர்மதி கூட்டுறவுச் சிறப்பங்காடி ஊழியர்களுக்கு மலிவு விலை வீடு ஒதுக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**50—**

**சத்துணவுக் கூடங்களைப் புதுப்பித்தல்**

**வினா 12603—திரு. ப. கோவிந்தன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



1998 ஏப்ரல் 16]

தாரமங்கலம் தொகுதி, மேச்சேரி ஒன்றியம், வெள்ளார் ஊராட்சிக்குட்பட்ட பள்ளிக்கூடங்களின் சத்துணவுக் கூடங்களைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளார் ஊராட்சி, உப்பாரப்பட்டிப் பள்ளியின் சத்துணவு மையம் பழுதடைந்துள்ளது. இம்மையக் கட்டடத்தினைப் பழுது பார்க்க நடப்பாண்டில் தேவையான நிதி வசதியின்மையால் 1998-99 ஆம் ஆண்டு பழுதுபார்க்கும் பணி மேற்கொள்ளப்படும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்புகள்

### (அ) சட்டம் - ஒழுங்கு பற்றி ஆராய மத்திய உயர்மட்டக் குழு வருகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சிறப்புக் கவன ஈர்ப்பு. தமிழகத்தில் சட்டம் - ஒழுங்கு நிலைமை மற்றும் தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தி அமைதியான நிலைமை ஏற்பட்டுள்ளபோதும், மத்திய உயர்மட்டக் குழு தமிழகத்திற்கு வருகை தந்தது குறித்து, திரு. ஜி. பழனிசாமி, திரு. வை. சிவபுண்ணியம், திரு. நா. பெரியசாமி மற்றும் திரு. டி. மணி ஆகியோர் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக் கொள்ள அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் திரு. ஜி. பழனிசாமி அவர்களை முதலில் பேச அழைக்கிறேன்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பற்றி ஆராய மத்திய உயர்மட்டக் குழு இங்கே வருகை தந்துள்ளது. இதுபோன்ற சட்ட நிலைமைகள் குறித்து மாநில அரசு உள் துறைச் செயலகத்தோடு மத்திய அரசு தொடர்பு கொண்டு பேசியுள்ளதா? திடீரென்று தமிழகத்தில் சட்டம்

ஒழுங்குப் பிரச்சினை எழுந்தபோது, சட்டம் ஒழுங்கை, ஜாதிச் சண்டைகளைத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள்ளே கொண்டு வந்து, தமிழகத்திலே ஓர் அமைதியான நிலை இருக்கின்றபோது, மத்தியிலே இருக்கக்கூடிய அரசு யாருடைய நிர்ப்பந்தத்தின் காரணமாகவோ, என்னவோ தன்னுடைய ஆட்சிக்கு ஆபத்து வரும் என்று கருதி, இதுபோன்று. ஓர் மத்திய அரசினுடைய உயர்மட்டக் குழுவை இன்றையதினத்திலே அனுப்பியிருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களிடத்திலே ஒரு பதட்டமான சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளது. இந்தப் போக்கை எங்களுடைய இயக்கத்தின் சார்பாக நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். மத்திய அரசினுடைய அதிகாரங்களைப் பயன்படுத்திக்கொண்டு. ஜனநாயகத்தைக் கேலிக்கூத்தாக்கும் விதத்தில், மாநில அரசுகளை அச்சுறுத்தும் வகையில். இப்படிப்பட்ட உயர்மட்டக் குழு இன்றைய தினத்திலே வருகை தந்திருப்பது என்பது தமிழ்நாட்டு மக்களிடத்தில் வேதனையை அளித்திருக்கிறது. அமைதி ஏற்பட்டிருக்கின்ற மாநிலத்தில் இப்படிப்பட்ட ஒரு குழு வந்திருக்கிறது. ஜாதி மோதல்கள் வந்தபோதெல்லாம், தீவிரவாதத்தைக் கட்டுப்படுத்தி. முழுமையான. உண்மையான நடவடிக்கையை. உரிய நடவடிக்கையை மாநில அரசு எடுத்திருக்கிறது.

*முற்பகல் 10-40*

ஆனால் ஒன்றுமில்லாத வகையில், ஏற்கெனவே ஆட்சிப் பொறுப்பிலிருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சராகிய அந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இன்றைக்குத் தமிழகத்தினுடைய ஆட்சியைக் கலைக்க வேண்டும். கலைக்க வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கக்கிறார். இப்போது மத்தியிலே தன்னுடைய கட்சியைச் சார்ந்திருக்கிற நாடாளுமன்ற உறுப்பினர்கள். அதேபோல் தன்னுடைய மத்திய மந்திரி செய்திருக்கிற ஊழலின் காரணமாகப் பதவியிலிருந்து விலகியதன் காரணமாக. அதுவும் தனிநபர்களால் போடப்பட்ட வழக்கின் மூலமாக விலக்கிக் கொண்ட நிலையில், மத்திய அரசால்தான் இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதற்காக மத்திய அரசை அச்சுறுத்துவதற்கு தமிழகத்தினுடைய பெயரைப் பயன்படுத்திக்கொண்டு, தமிழக அரசைப் பலிகடா ஆக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு. இன்றைக்கு அந்த அம்மையார் ஜெயலலிதா அவர்கள் இதுபோன்று மத்திய அரசை நிர்ப்பந்தம் செய்கிறார்கள். ஆனால் இதைப் பயன்படுத்திக் கொண்டு மத்தியிலே இருக்கிற பாரதப்பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்களே



தமிழக அரசை நாங்கள் கலைக்கப்போவதில்லை; 356-வது பிரிவை நாங்கள் பயன்படுத்தப்போவதில்லை. ஆகவே, எந்தவோர் அரசையும் நாங்கள் கலைப்பதற்கான முயற்சியிலே ஈடுபடப்போவதில்லை என்று நாடாளுமன்றத்திலேயே வலியுறுத்திப் பேசிய பின்னர். எந்தவொரு மாநிலத்திலும் இப்படிப்பட்ட சட்டம் ஒழுங்குப் பிரச்சினை வந்தால் அது சம்பந்தமாக உரிய முறையில் ஆராய்ந்த பின்னால்தான் நடவடிக்கை எடுப்போம் என்ற மத்திய உள்துறை அமைச்சராக இருக்கக்கூடிய திரு. அத்வானி அவர்களே பேசிய பின்னாலும், இப்படியொரு மத்திய உயர்மட்டக் குழுவை அனுப்பியிருப்பது வேதனை அளிக்கிறது. இது தமிழகத்திலே ஒரு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கி மீண்டும் ஒரு கலகத்தை உருவாக்குவதற்கு மத்திய அரசே ஒரு காரணமாக இருக்கும் என்பதைக் கூறிக் கண்டித்து, தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இது சம்பந்தமான தகவல்கள் உள்துறை மூலமாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதனைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனநாயக பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மாநில அரசைக் கலைக்க வேண்டும் என்ற உள்நோக்கத்தோடு கடந்த சில வாரங்களாக மத்திய அரசில் பொறுப்பு வாய்ந்த சில மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதுபோன்று உள்துறை அமைச்சர் அவர்களும் - அவருடைய அறிக்கைகள் நம்முடைய பத்திரிகைகளில் நேற்றைய வரையிலும், இன்றையதினம் வரையிலும் இடம் பெற்றிருக்கின்றன - பேசி வருகின்றார்கள். அதற்கு என்ன காரணம் என்று அவர்கள் சொல்கின்றபோது, 'சட்டம் ஒழுங்கு' என்ற ஒரு வாதத்தைக் கிளப்பியிருக்கின்றார்கள். சமீபத்திலே ஏற்பட்ட அந்தச் சிக்கல்களையெல்லாம். நம்முடைய காவல் துறையை எந்த அளவிற்கு முடுக்கிவிடமுடியுமோ அந்த அளவிற்கு முடுக்கிவிட்டு இது தொடர்பான குற்றவாளிகளையெல்லாம் கண்டறிந்து அவர்களைக் கைது செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இன்றையதினம் ஓர் அமைதியான சூழ்நிலை தமிழ்நாட்டிலே நிலவிவருகின்ற ஒரு நேரம் இது. இந்த நேரத்தில்தான் மத்திய அரசினுடைய உயர்மட்டக் குழு இங்கே நம்முடைய மாநிலத்திற்கு வந்து யார் யாரையெல்லாம் சந்திக்கப்போகிறது என்பது எல்லாம் நமக்குத் தெரியவில்லை. இருந்தாலும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்தத் தகவல்கள் எல்லாம் வந்திருக்கக்கூடும். ஆனால் இதற்குப் பின்னால் இருக்கின்ற ஒரு ரகசியம் அல்லது பின்னால் இருக்கின்ற நிலை என்பது என்னவென்றால் இரண்டு மாதங்களுக்குள்ளாக ராஜ்ய சபாவினுடைய தேர்தல் இங்கே வருகின்றபோது, இன்னும் அதிகப்படியான உறுப்பினர்கள் இங்கே ஆளுகின்ற கட்சிக்குக் கிடைக்கின்ற வாய்ப்பு இருக்கிற காரணத்தால், மத்தியிலே தமிழகத்தினுடைய செல்வாக்கைக் குறைக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்தப் போக்கு என்று கருத வேண்டியிருக்கிறது. ஆகவே ஜனநாயக பூர்வமாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற இந்த அரசை, ஜனநாயக விரோத நடவடிக்கையின் மூலமாகக் கலைக்கின்ற வகையில் 356-வது பிரிவைப் பயன்படுத்தக்கூடாது என்றவொரு வாதம் நம்முடைய தேசம் பூராவிலும் இன்று ஓர் எழுச்சியாக நடந்து வருகிற இந்த நேரத்தில் இப்படிப்பட்ட ஒரு நடவடிக்கைக்கு மைய அரசு குழு வருவது என்பது கண்டிக்கத்தக்கது. அந்த வகையிலே இந்த மாமன்றம் நம்முடைய கடுமையான கண்டனத்தை மத்திய அரசுக்குச் சொல்ல வேண்டும் என்று கேட்டு, நான் சார்ந்திருக்கின்ற மார்க்சீய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே இந்த நடவடிக்கையை வன்மையாகக் கண்டித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-45

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்தியிலே இருந்து உயர்மட்டக் குழு ஒன்று தமிழகத்திற்கு வந்திருப்பதைப் பற்றி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய, சட்டமன்றத் தலைவர் திரு. ஜி. பழனிசாமி அவர்களும், இந்தியக் கம்யூனிஸ்ட் மார்க்சிஸ்ட் கட்சியினுடைய உறுப்பினர் திரு. டி. மணி அவர்களும் இரண்டு சிறப்புக் கவன ஈர்ப்புகளுக்கான அறிவிப்புகளை இங்கே தந்திருக்கிறார்கள். முதலில், இந்த் உயர்மட்டக் குழு வந்துள்ள இந்த நேரத்தில் அரசின் சார்பில் சில கருத்துகளை, அவர்களுடைய ஐயப்பாட்டைப் போக்குகின்ற வகையில், நான் எடுத்து வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மத்திய அரசின் உள் துறையிலிருந்து கூடுதல் செயலாளர் தலைமையில் இருவர் குழு ஒன்று இன்று சென்னைக்கு வந்து, தமிழக அரசின் உயர் அதிகாரிகளோடு, தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு நிலையைப் பற்றி





விவாதிக்க இருப்பதாக, மத்திய அரசின் உள் துறையிலிருந்து `Fax' மூலம் செய்தி வந்தது. மத்திய அரசின் உள் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் தமிழகத் தலைமைச் செயலாளர் மற்றும் உயர் அதிகாரிகளோடு இன்று, இப்பொழுது, பேச்சு வார்த்தை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள். தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு சிறப்பான முறையில் பேணிக் காக்கப்பட்டு வருகின்றது. தீவிர மதவாத சக்திகளுக்கோ, வகுப்புவாத, சக்திகளுக்கோ தமிழகத்தில் எந்தவித இடமும் இல்லை என நான் ஏற்கெனவே பலமுறை திட்டவட்டமாகக் கூறியிருக்கின்றேன். தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கும்படி, தமிழகக் காவல் துறைக்கு நான் ஆணையிட்டுள்ளேன். காவல் துறையும் சிறப்பாகப் பணிபுரிந்து சட்டம்-ஒழுங்கை நல்ல முறையில் பாதுகாத்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு இதுபோன்ற ஒரு குழுவை அனுப்பியதற்கான காரணம் என்னவென்று எனக்குத் தெரியவில்லை. இருப்பினும், தமிழக அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் ஒளிவுமறைவு அற்றவை. ஆதலால், வந்திருக்கின்ற மத்திய அரசின் குழுவிற்குத் தேவைப்படும் அனைத்து விவரங்களையும் அளிக்கும்படி நான் தலைமைச் செயலாளருக்கு உத்தரவிட்டுள்ளேன்.

நான் 7-4-1998 அன்று டெல்லிக்குச் சென்றிருந்தபோது மாண்புமிகு உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களிடம் தமிழகத்தின் சட்டம்-ஒழுங்கு பராமரிப்பை மேம்படுத்துவதற்காகச் சில கோரிக்கைகளை வைத்திருந்தேன்.

அதாவது, Rapid Action Force—அதி விரைவுப் படை, ஒரு Battalion கோவையில் நிறுத்தப்பட வேண்டும் என்பது ஒரு கோரிக்கை. மற்றொன்று, India Reserve Battalion — இரண்டு Battalions — தமிழகத்திற்குத் தேவை என்று கேட்டிருந்தேன். அதிலே பாதிச் செலவை மாநிலமும், பாதிச் செலவை மத்திய அரசும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவில் கேட்டிருக்கின்றேன். போலீஸ் துறையை நவீனப்படுத்த ஆண்டுதோறும் 10 கோடி ரூபாய் வேண்டுமென்றும் கேட்டிருந்தேன். இவைகளையெல்லாம் கவனிப்பதாக உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்கள் என்னிடத்தில் உறுதியளித்தார்கள். ஒருவேளை அந்தக் கோரிக்கைகளைப் பற்றி ஆய்வு செய்வதற்காக இந்தக் குழு மத்திய அரசால் அனுப்பப்பட்டு இருக்கலாம் என்று எனக்குத் தோன்றுகிறது.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 16

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பழனிசாமி அவர்களும், மணி அவர்களும் எடுத்துக்காட்டியபோது, மத்திய அமைச்சர்கள், தமிழகத்திலே திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க வேண்டும், 356-ஐப் பயன்படுத்த வேண்டுமென்று நாள்தோறும் அவர்கள் தமிழகத்திற்கு வரும்போதெல்லாம் பேசிக்கொண்டு இருப்பதைச் சுட்டிக்காட்டி, அந்த அடிப்படையிலே இந்தக் குழு வந்திருக்கக்கூடுமோ என்ற ஐயத்தை எழுப்பியிருக்கிறார்கள். நான் அ.தி.மு.க. மத்திய அமைச்சர்கள் பேசுவதைப் பற்றி அதிகமாகக் கவலைப்படுவதில்லை. அவர்கள் செயற்குழுவிலே தீர்மானம்கூட நிறைவேற்றியிருக்கிறார்கள். அதற்கு முன்பே அந்தக் கட்சியினுடைய தலைவர்கள், அமைச்சர்கள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க, 356-ஐப் பயன்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும்கூட, ஜெயலலிதா அவர்கள், 'கருணாநிதி ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுகின்றன' என்றுகூட மிக ஆவேசமாகச் சொல்லியிருக்கிறார். நான் என்னுடைய ஆயுளின் நாட்கள் எண்ணப்படுவதைப்பற்றியே கவலைப்படுவதில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, ஆட்சியின் நாட்கள் எண்ணப்படுவதைப்பற்றி நான் கவலைப்படுபவன் அல்ல. அதிகாரத்தில் இருந்தால்தான் ஒருவனுக்குப் பெருமை, அந்தஸ்து என்று இல்லை. அதிகாரத்தில் இல்லாமல் இருந்துகூட, மக்களுக்குப் பணியாற்றிய பல பேர் உலகத்திலே புகழை நாட்டிச் சென்றிருக்கிறார்கள். எனவே, நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை.

*பிற்பகல் 10-50*

இருந்தாலும், ஓர் அரசு ஜனநாயக ரீதியாக மக்களால் தேர்ந்து எடுக்கப்பட்டு, மிகப் பெரும்பான்மையை அவையிலே கொண்டு, அந்தப் பெரும்பான்மையினுடைய ஆதரவோடு, எதிர்க்கட்சி, தோழமைக் கட்சி இவைகளுடைய அரவணைப்போடு, நல்ல பல திட்டங்களைத் தமிழ்நாட்டு மக்களுக்காகத் தீட்ட வேண்டுமென்று எண்ணி, அவ்வாறு திட்டங்களைத் தீட்டி, அவற்றைச் செம்மையாக, அமைதியாகச் செயல்படுத்த வேண்டுமென்று எண்ணும்போது, இதுபோன்ற ஐயப்பாடுகளையும், மிரட்டல்களையும், அச்சுறுத்தல்களையும் எடுத்துக் கையாளுகின்ற காரணத்தினால், எனக்கு உள்ள கவலை, இந்தத் திட்டங்களெல்லாம் மக்களைப் போய்ச் சேரமுடியாமல் தடுக்கிறார்களே, நம்முடைய ஆட்சியின் நிம்மதியைக் குலைக்கிறார்களே என்பதே தவிர, ஆட்சியிலே நம்மை இல்லாமல் ஆக்கிவிடுவார்களோ என்ற கவலை எனக்கு என்றைக்கும் இருந்ததில்லை; இருக்கப் போவதும் இல்லை



1998 ஏப்ரல் 16] [கலைஞர் மு. கருணாநிதி]

என்பதை இந்த அவையிலே நான் திறந்த மனதோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வந்து பேசுகின்ற அமைச்சர்களில், நான் முதலில் குறிப்பிட்டதைப்போல, அ.தி.மு.க. அமைச்சர்கள் பேசுகிறார்கள் என்றால், அவர்களுக்குள்ள, அந்தக் கட்சியினுடைய, தலைமையின் ஆணையின்படி அவர்கள் பேச வேண்டியவைகளைப் பேசுகிறார்கள். நண்பர், மத்திய அமைச்சர் திரு. ரங்கராஜன் குமாரமங்கலம்கூட, இந்த அரசைப் பற்றி விமர்சிக்கின்ற நேரத்தில், யாரோ சொன்ன சில தவறான கருத்துகளை வைத்துக்கொண்டு பத்திரிகைகளுக்குச் செய்தி கொடுப்பதுதான் எனக்கு வியப்பாக இருக்கின்றது. இந்த நிகழ்ச்சிகளை—கோவையில் இரண்டு நிகழ்ச்சிகள்-இரண்டாகப் பகுத்துப் பார்க்க வேண்டும். நாம் பார்க்க வேண்டும் என்றில்லை. இரண்டாகவே நடைபெற்றிருக்கின்றன. கடந்த நவம்பர் திங்கள் 29-11-1997-ல் தொடங்கி, 4-12-1997 முடிய ஒரு நான்கு, ஐந்து நாட்கள், ஒரு வார காலத்திற்குள் நடைபெற்ற சம்பவங்கள், அந்த சம்பவத்திலே இறந்தவர்களில் — 8 பேர் இந்துக்கள். 18 பேர் முஸ்லீம்கள். மற்ற வகுப்பைச் சார்ந்தவர் ஒருவர். குறிப்பிட்ட சட்டப் பிரிவின்படி கைது செய்யப்பட்டவர்களில், இந்துக்கள் 230 பேர்; முஸ்லீம்கள் 56 பேர். 18 முஸ்லீம்கள் இறந்த அந்த நிகழ்ச்சியில் இந்துக்கள் 230 பேர் கைது செய்யப்பட்டார்கள். முஸ்லீம்கள் 56 பேர் கைது செய்யப்பட்டார்கள். முன்கூட்டியே தடுப்புக் காவல் சட்டப்படி-- - தடுப்புக் காவல் சட்டப்படி கைதானால் அவர்கள் ஜாமீனிலும் அல்லது சில நிகழ்ச்சிகள் முடிந்த பிறகும் விடுவிக்கப்படுவார்கள். அந்த வகையிலே -- கைது செய்யப்பட்டவர்களில் இந்துக்கள் 388 பேர்; முஸ்லீம்கள் 41 பேர். அந்த முதல் நிகழ்ச்சியையொட்டி, நவம்பர் இறுதி வாரத்தில் தொடங்கி டிசம்பர் முதல் வாரத்தில் முடிந்த அந்தக் கலவரத்தையொட்டி, தேசிய பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டோர், இந்துக்கள் 17 பேர்; முஸ்லீம்கள் 15 பேர். இதில் ஏதோ பி.ஜே.பி.-ஐச் சார்ந்தவர்களைத்தான் அதிகமாகத் தேசியப் பாதுகாப்புச் சட்டத்திலே போட்டிருப்பதாக திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் சொல்லியிருக்கிறார். அதற்காகத்தான் நான் இந்தக் கணக்கைச் சொல்கிறேன்.

அந்த முதல் நிகழ்ச்சியை, கோவையிலே நடைபெற்ற முதல் கலவர நிகழ்ச்சியையொட்டி, தேசியப் பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்பட்டோர், இந்துக்கள் 17 பேர். முஸ்லீம்கள் 15 பேர். அதன் பிறகு, பிப்ரவரி 14 ஆம் தேதி வெடிகுண்டுச் சம்பவம் நடந்த பிறகு,

அதிலே இறந்தவர்களில், இந்துக்கள் 48 பேர், முஸ்லீம்கள் 16 பேர். இதிலே, குறிப்பிட்ட குற்றச்சாட்டுக்காக கைது செய்யப்பட்டோர், முஸ்லீம்கள் 53 பேர். இந்துக்கள் யாரும் இல்லை. தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் இந்த இரண்டாவது நிகழ்ச்சியின் பிறகு கைது செய்யப்பட்டோர் மொத்தம் 13 பேர். அந்தப் 13 பேரும் முஸ்லீம்கள். மாவட்டம் முழுவதும் தற்போது முன்கூட்டி கைது செய்யப்பட்டோரில், இந்துக்கள் 374 பேர், முஸ்லீம்கள் 202 பேர். திரு. ரங்கராஜன் குமாரமங்கலம் கூறியதைப்போல் 700 பேர் அல்ல என்பதற்காகத்தான் இந்த விளக்கங்களை நான் தெரிவிக்க வேண்டியவனானேன். இந்த விவரங்கள் பிரதமர் வாஜ்பாய் அவர்களுக்கும் தரப்பட்டிருக்கின்றன, எழுத்து மூலமாக. இந்த விவரங்கள் உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்களிடத்திலும் தரப்பட்டிருக்கின்றது. எழுத்துப்பூர்வமாகத் தரப்பட்டிருக்கின்றன. அதுமாதிரி, இங்கு ஏதோ அமைதி கெட்டுவிட்டது என்றெல்லாம் பேசுகின்றார்கள்.

அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே எவ்வளவு அமைதியாகத் தமிழகத்தை வைத்திருந்தார்கள் என்பது எல்லோருக்கும் மிக நன்றாகத் தெரியும். அவர்களுக்கேகூடத் தெரியும். அவரவர்களுடைய மனசாட்சிக்கு மிக நன்றாகத் தெரியும். அவர்கள் அமைதியாக ஆட்சி நடத்திய காலத்திலேதான் ஆர்.எஸ்.எஸ். அலுவலகத்தில் குண்டு வெடித்து, ஒரே நேரத்தில் 11 பேர் இறந்தார்கள். அவர்கள் அமைதியாக ஆட்சி நடத்திய அந்தக் காலகட்டத்திலேதான் இந்து முன்னணி அலுவலகத்திலே குண்டு வெடித்து ஒருவர் உடனடியாக அங்கே இறந்த சம்பவமெல்லாம் நடைபெற்றது. அதுமாத்திரமல்ல, அவர்களுடைய அமைதியான ஆட்சிக் காலத்திலேதான் நூற்றுக்கணக்கான குண்டு வெடிப்புச் சம்பவங்கள் நடைபெற்று, ஏறத்தாழ 135-க்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் அந்த நிகழ்ச்சிகளிலே என்பதையும் யாரும் மறந்து விடுவதற்கில்லை.

*முற்பகல் 10-55*

அது மாத்திரம் அல்ல, இந்த மாதம் 5-4-1998-ல் 'இந்து' பத்திரிகையில் By our Special Correspondent `New Delhi' `April 4th' என்று ஒரு சிறிய கட்டுரையின் முதல் பகுதியை மட்டும் படித்துக் காட்ட விரும்புகிறேன். "New Delhi, April 4: A Bharathiya Janata Party Parliamentary delegation to Tamil Nadu in 1995 had the following to say:"



1995ஆம் ஆண்டு பாரதிய ஜனதாக் கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட குழு தமிழகத்திற்கு வந்தது. அதைக் குறிப்பிடுகிறது 'இந்து'.

"The Al-Umma gang of Coimbatore has been operating, attacking the members of Hindu Organisations without let or hindrance. Their activities are known to the Government and the Police." —Their activities are known to the Government and the Police. எந்த Government என்று உங்களுக்கே தெரியும் - AIADMK Government. They enjoyed the support of various political parties including some ruling AIADMK leaders."

இது, பாரதிய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் வந்து, அந்தக் குழுவின் சார்பாகச் சொல்லப்பட்ட கருத்து. இது 1995-ஆம் ஆண்டு, அப்போது நடைபெற்ற ஆட்சி, எந்த ஆட்சி என்று எல்லோருக்கும் தெரியும். அதைப் பற்றிய கருத்து. இன்றைக்கு வந்திருக்கிற உள் துறைக்கூடுதல் செயலாளர் அவர்கள்கூட நேற்றையதினம் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பில், இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் மணி அவர்களும், பழனிசாமி அவர்களும் சந்தேகப்பட்டதைப் போல, எதையும் சொல்லவில்லை என்பதையும் நாம் நினைவுகூர்ந்திட வேண்டும். உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்கள் சட்டம் - ஒழுங்கு பற்றி திருப்தியில்லை என்று சொன்னதாக ஒரே ஒரு பத்திரிகையிலே செய்தி வந்திருக்கிறதே அல்லாமல் Press Conference போன்ற செய்தியாளர்கள் கூட்டத்தில் அதைச் சொன்னதாக எதுவும் வரவில்லை. இந்தியப் பிரதமர் திரு. வாஜ்பாய் அவர்கள் மாநிலங்களவையில் உறுதிபடவே கூறியிருக்கிறார். 356-ஐப் பயன்படுத்தி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைக் கலைக்க மாட்டோம் என்று உறுதிபடக் கூறியிருக்கிறார். அதற்குப் பிறகு, சுற்றுப்பயணம் சென்ற உள் துறை அமைச்சர் திரு. அத்வானி அவர்கள்கூட இதே கருத்தை - 356-ஐப் பயன்படுத்தி தி.மு.க. ஆட்சியைக் கலைக்க மாட்டோம் என்று குறிப்பிட்டிருக்கிறார். கலைக்க வேண்டும், கலைக்க வேண்டும் என்று சில பேர் இங்கே சொல்லிச் சொல்லிக் களைத்தே போய்விட்டார்கள். அந்த அளவுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் இன்றைக்கு இங்கே வந்திருக்கிற உள் துறைக்கூடுதல் செயலாளர் இன்றைக்கு காலையில் - நேற்று இரவு சொன்னதல்ல, இன்று காலையில் - இந்த கூட்டத்திற்கு வருவதற்கு முன்புத் தலைமைச் செயலகத்திலே நடைபெறுகிற தலைமைச் செயலாளர்கள் உள்ளிட்ட மற்ற போலீஸ் அதிகாரிகள் கொண்ட கூட்டத்திற்கு வருவதற்கு முன்பு. செய்தியாளர்களைப் பார்த்திருக்கிறார்.

[கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 16

அப்போது சொல்கிறார்: 'மாநிலம் அமைதியாக இருக்கிறது. இன்று காலையில் மெரினா கடற்கரையில் 'வாக்கிங்' சென்று பார்த்தேன். மக்கள் அச்சமில்லாமல் செல்வதைப் பார்த்தேன். நான் கோவைக்குப் போகவில்லை. கோவைபற்றி முன்பே டெல்லியிலே பேசிவிட்டோம்" என்று கூறியிருக்கிறார். மெரினாக் கடற்கரையில் அவர் வரும்போது மக்கள் அச்சமில்லாமல் சென்றதாக சொல்லி இருக்கிறார். இதைப் பார்த்துவிட்டு, நாளைக்கு வேண்டுமானால் யாராவது மக்களைப் பயமுறுத்திச் சட்டம் - ஒழுங்கு கெட்டுவிட்டது என்று சொல்லி ஒரு இலட்சம் தந்திகளை திரு. வாஜ்பாய்க்குத் தரலாம். திரு. வாஜ்பாயோ அல்லது திரு. அத்வானியோ, மற்றவர்களோ இந்தத் தந்திகளை எல்லாம் பார்த்து ஏமாந்து போகக்கூடியவர்கள் அல்ல. தந்திகள் கொடுப்பது என்றால், நாம்கூட இந்த ஆட்சி நீடிக்க வேண்டும் என்று 1 இலட்சம் என்ன, 1 கோடி, தந்திகளைத் தமிழக மக்களின் சார்பாகவும் கொடுக்கமுடியும். (மேசையைத் தட்டும் ஒலி) அமைதியாக இருக்கிற ஒரு நாட்டில், ஒரு மாநிலத்தில் அமைதியாக நடைபெறுகின்ற ஒரு ஆட்சியைச் சீர்குலைக்க வேண்டும் என்று ஒரு ஆவல், ஆதங்கம் என்ற வார்த்தைகளைத்தான் ஒரு ஆவல், ஆதங்கம். அதற்குமேல் வார்த்தைகளை நான் பயன்படுத்துகிறேன். எப்படியாவது இங்கே வந்து உட்கார்ந்துவிட வேண்டும் என்பதற்காக பயன்படுத்த விரும்பவில்லை. அவர்கள் இப்படிச் செய்ய முனைகிறார்கள். அப்படியே ஒருவேளை செய்து வெற்றிபெற்றாலும் மறுபடியும் இங்கே வந்து உட்காரப் போவது நாம் தான் என்பதை அவர்களுக்கு அறிவுறுத்தி, இந்த அளவோடு இந்த விளக்கத்தை நிறுத்திக்கொள்கிறேன். வணக்கம்.

## (ஆ) தொலைக்காட்சியில் தமிழ் மொழிபெயர்ப்பு நாடகங்கள் நிறுத்தப்பட்டு, இந்தி நாடகங்கள் ஒளிபரப்பப்படுதல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து (குறுக்கீடு) திரு. சுந்தரம், உட்காருங்கள், நான் கூப்பிடுகிறேன். சென்னைத் தொலைக்காட்சியில் தமிழ் மொழிபெயர்ப்பு நாடகங்கள் நிறுத்தப்பட்டு, இந்தி நாடகங்கள் மட்டுமே ஒளிபரப்பப்படுவது குறித்து திரு. ச. அழகிரி அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறார்கள். அரசின் கவனத்தை ஈர்க்கின்ற வகையில், திரு. அழகிரி அவர்கள் விரைவிலே பேசி முடிக்க வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைத் தொலைக்காட்சியில் இந்தியினுடைய தமிழாக்கத்



1998 ஏப்ரல் 16] [திரு. ச. அழகிரி]

தொடர்களான ஒளரத், யுக், காலம், ஃபர்ஸ் என்கிற 4 தொடர்கள் கடந்த காலங்களில் ஒளிபரப்பப்பட்டு வந்தன. ஆனால் புதிய மத்திய அரசாங்கம் ஏற்பட்ட பிறகு நாடகங்களுடைய தமிழாக்கத் தொடர்கள் நிறுத்தப்பட்டு இந்தியிலேயே அவைகள் இப்போது ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. இதனை மாநில அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர நான் விரும்புகிறேன்.

முற்பகல் 11-00

புதிய மத்திய அரசு இந்துத்துவாவில்தான் அக்கறை கொண்டிருக்கிறது என்று நாம் எண்ணியிருந்தோம். ஆனால் அவர்கள் இந்தித்துவாவிலும் அக்கறை கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பதை இந்தச் செய்திகள் மூலமாகப் பார்க்க முடிகிறது. பரவலான பொதுமக்களுடைய அபிமானத்தைப் பெற்றிருக்கிற இந்தத் தமிழாக்கத் தொடர்கள் இந்தியிலே ஒளிபரப்பப்படுவதற்குக் காரணம் என்ன என்பதை உங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மத்திய அரசினுடைய நேரடிக் கட்டுப்பாட்டிலே இருக்கிற தொலைக்காட்சி நிலையம், ஒரு பிராந்திய மொழியை உதாசினப்படுத்திவிட்டு மீண்டும் மீண்டும் இந்தி மொழியிலேயே நாடகங்களை நடத்துவது ஏற்றுக்கொள்ளக் கூடியதுதானா என்று அறிய விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட ஒரு நிகழ்ச்சியிலே இந்தித் திணிப்புக்குத்தான் நாங்கள் விரோதிகளே ஒழிய இந்தி இசைக்கு நாங்கள் விரோதிகள் இல்லை என்று தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த நிலைகளை உணர்ந்து, மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தோடு தொடர்பு கொண்டு மீண்டும் அந்த நாடகங்கள் தமிழிலேயே ஒளிபரப்பப்படுவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இன்னொரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். மத்தியிலே இருக்கின்றவர்களிலே ஒரு சிலர் நல்லவர்கள் என்று நாம் கருதுகிறோம். எரிகின்ற கொள்ளியிலே எது நல்ல கொள்ளி என்பது முக்கியம் அல்ல. எல்லாக் கொள்ளிகளும் ஒரே கொள்ளிகள்தான். எனவே அவற்றை நாம் உணர்ந்து மக்கள் சக்தியை ஒன்று திரட்டித்தான் இதற்கு எதிரான ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டுமே ஒழிய, யார் நல்லவர், யார் கெட்டவர் என்பது இந்த நேரத்திலே முக்கியம் அல்ல.

உதாரணமாக, தமிழிலே ஒன்றைச் சொல்லுவார்கள், வாழ்வதற்காக எதையும் செய்யக்கூடியவர்கள்—Survival of the Fittest—என்று

சொல்லுவார்கள். அதைப்போல தாங்கள் வாழ்வதற்காக எதையும் செய்வதற்கு ஒரு கூட்டம் தயாராக இருக்கிறது. எனவே, இதனை உணர்ந்து நாம் செயல்பட வேண்டும். கிராமப்புறங்களிலே ஒரு பழமொழி உண்டு. 'திருடன் கையிலே சாவியைக் கொடு' என்று சொல்லுவார்கள். அதுபோன்ற ஒரு சூழ்நிலைதான் இன்றைக்கு இந்திய அரசியலிலே ஏற்பட்டு இருக்கிறது. விசாரிக்கப்பட வேண்டியவர்களே விசாரிக்கின்றவர்களாக மாறுகின்ற ஒரு சூழ்நிலை இருப்பதை நாம் உணர்கிறோம். எனவே, இந்தச் சூழ்நிலையிலே நான் கேட்கவிரும்புவது எல்லாம், இத்தனை காலம் தமிழிலே சொல்லப்பட்ட, தமிழிலே கூறப்பட்ட, தமிழிலே வந்த நாடகங்கள் இந்தியிலே மீண்டும் ஒளிபரப்பப்படுவதற்கான காரணத்தை உணர்ந்து உடனடியாக அவற்றைத் தடை செய்ய மாநில அரசாங்கம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும். இல்லையென்றால் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக மக்களைத் திரட்டி தொலைக்காட்சி நிலையத்திற்கு முன்பாகப் போராடவேண்டிய ஒரு சூழ்நிலை வரும் என்பதை உணர்ந்து மாநில அரசாங்கம் இதனைச் செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகிரி அவர்கள் தொலைக்காட்சியைப் பற்றித் தொடங்கி, ஒரு தொலைநோக்குப் பேச்சையே இங்கே பேசிவிட்டு அமர்ந்திருக்கிறார்கள். இதுபற்றிய ஒரு பிரச்சினையை அவர் எழுப்பப் போகிறார் என்று தாங்கள் தங்கள் அறையில் தெரிவித்த உடனேயே, தொலைக்காட்சி நிலைய இயக்குநரைத் தொலைபேசி மூலமாகத் தொடர்பு கொண்டு, நிலை என்ன என்று கேட்டறியச் செய்தேன். அவர் தந்துள்ள கருத்துப்படி, ஜுனூன், பிடிவாதம் -- என்ற படம் உட்பட தமிழ் மொழிபெயர்ப்புத் தொடர்கள், சென்னைத் தொலைக்காட்சி அலைவரிசை-1-ல் தொடர்ந்து ஒளிபரப்பப்பட்டு வருகின்றன. நண்பகல் 12 மணி முதல் 2-00 மணிவரை மட்டுமே இந்தி நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன. அந்த நேரத்திலும்கூட தமிழ் நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

மேலும், நேற்று முதல், 15-4-1998 பகல் 2 ½ மணி முதல் மாலை 4-00 மணி வரை தமிழ் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பத் தொடங்கப்பட்டுவிட்டன என்றும் தெரிவித்திருக்கிறார்.



அன்பர் அழகிரி அவர்கள் இங்கே வைத்துள்ள இந்தப் பிரச்சினையின் காரணமாகத் தொலைக்காட்சி நிலையம் இத்தகைய ஒரு நல்ல முடிவை எடுத்திருக்கிறது என்பதை அறிந்து, நானும் மகிழ்ச்சி அடைகிறேன். மேலும், தமிழ் ஆர்வத்தோடு தொலைக்காட்சி நிலையம் செயல்பட வேண்டுமென்ற வேண்டுகோளையும் இந்த நேரத்திலே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

## 3. தகவல் கோரல்

**வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கை பதிலுரைக்குப் பின் பத்திரிகைகட்கு அளித்த குறிப்பில் முன்னாள் முதலமைச்சர் பற்றிய கருத்துக்கள்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.

*முற்பகல் 11-05*

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் தங்களுடைய மேலான கவனத்திற்கு ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். எதிர்க்கட்சி என்ற முறையில் நான் உங்களைச் சந்தித்த பிறகு ஒழுங்குப் பிரச்சினையிலோ அல்லது ஜீரோ அவரிலோ கேள்வி கேட்கின்றபோது ஆளுங்கட்சியில் இருந்து தேவையில்லாமல் 'உட்கார், உட்கார்' என்று சொல்லுவது எந்த விதத்தில் நியாயம்? எங்களுக்கும் பேசத் தெரியும். இனிமேல், இதுபோன்ற நிகழ்ச்சிகளை நீங்கள்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பிரச்சினைக்கு வாருங்கள். உங்களைக் கூப்பிட்டாகிவிட்டது. நீங்களும் பேசிக்கொண்டு இருக்கிறீர்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை, இல்லை. ஒரு மரியாதையே இல்லையா? ஆளுங்கட்சிக்கு மரியாதையே தெரியாதா? நான் எப்போது எழுந்திருந்தாலும், 'உட்கார், உட்கார்' என்று சொன்னால் என்ன அர்த்தம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சாதாரணமாக உங்களை 'உட்கார்' என்று சொல்வது தவறு, 'உட்காருங்கள்' என்று சொல்ல வேண்டும் என்று சொல்கிறீர்களா? சரி, நீங்கள் பேசுங்கள். இப்போது அனுமதி கொடுத்துவிட்டேன், நீங்கள் பேசுங்கள்.

[1998 ஏப்ரல் 16

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வெள்ளிக்கிழமை, அன்று நடந்த வேளாண்மைக் குறித்த மானியக் கோரிக்கையில் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், மானியக் கோரிக்கையிலே பேசி விட்டு புதிய அறிவிப்புகள் என்ற ஒரு புத்தகத்தைக் கொடுத்து இருக்கிறார்கள். அந்த அறிவிப்புகளில் ஆரம்பத்தில் விவசாயிகளுக்கு இந்த ஆண்டு செய்ய வேண்டிய சேவைகள், அரசு அளிக்கக்கூடிய சலுகைகள் இவற்றையெல்லாம் கூறிவிட்டு, இடைச்செருகல் என்று கூறுவார்களே, அதுபோல ஜெயலலிதாவின் 5 ஆண்டுகால வெடிகுண்டு என்ற தலைப்பிலே கிட்டத்தட்ட 5 பக்கங்கள் தேவையில்லாமல் அதிலே வருகின்றன. புதிய அறிவிப்புகள் என்ற முறையிலே இந்தப் பகுதிகள் எல்லாம் அதிலே வரவேண்டிய காரணம் என்ன? அதை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் தெரிந்து சேர்த்திருக்கிறார்களா அல்லது அதிலே சேர்க்க வேண்டுமென்று முதலமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன். எப்படியிருந்தாலும் வேளாண்மைத் துறை அறிவிப்புகளிலே இருக்கின்ற கருத்துகளில் இது தேவையில்லாமல் சேர்க்கப்பட்டிருக்கின்றது. மேலும், இதிலே மீனம்பாக்கம் வெடிகுண்டு, இன்னும் என்னென்னவோ உண்மைக்குப் புறம்பான செய்திகள் எல்லாம் நான்கு பக்கங்களிலே கூறப்பட்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் இந்தப் புத்தகங்களையெல்லாம் பறிமுதல் செய்து, அந்தப் பக்கங்களையெல்லாம் அதிலேயிருந்து எடுக்க வேண்டும். அதற்கு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இந்தப் பிரச்சினை குறித்து, அன்றையதினமே அ.தி.மு.க. தலைவர் தாமரைக்கனி அவர்கள் சட்டமன்ற நிகழ்ச்சி முடிவடைகின்ற நேரத்திலே கொண்டு வந்து காட்டினார்கள். அதை நான் பரிசீலனை செய்தேன். இங்கு முதலில் ஒன்றைத் தெளிவாக்க வேண்டும். கொள்கைக் குறிப்பு Policy Note- என்று சொல்வார்களே, அதிலே இந்த செருகப்பட்ட வாசகங்கள் இல்லை. இரண்டாவதாக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையிலே சொல்வதற்குச் சில குறிப்புகளைத் தயார் செய்தது இதிலே சேர்க்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. மாண்புமிகு உறுப்பினருக்கும் மற்ற அனைவருக்குமே தெரியும், எந்தப் பதிலுரை தயார் செய்து இருந்தாலும், அது அவைக் குறிப்பிலே ஏறாது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வது மட்டும்தான் அவைக் குறிப்பிலே ஏறும். அதைப் புரிந்து கொள்வீர்கள் என நம்புகிறேன். ஆகவே, இந்தப் பகுதி தயார்செய்த



1998 ஏப்ரல் 16] [பேரவைத் தலைவர்]

அந்தக் குறிப்பிலே சேர்க்கப்பட்டிருந்தாலும் நம்முடைய அவைக் குறிப்பிலே இடம் பெறவில்லை. அவர் அவையிலே பேசாததால். ஆனால், பொதுவான கருத்து, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், அவர்களுடைய பதிலுரையில் அரசியல் கருத்துக்களைப் பேசுவதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு. ஆனால், தெரிந்தோ, தெரியாமலோ பதிலுரையில் இதனைச் சேர்த்திருக்கத் தேவையில்லை என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லி, இந்தப் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டேன்.

* **திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையிலே பேச வேண்டியதை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்தன் பதில் உரையில் தயார் செய்து சேர்த்திருக்கின்றார். ஆனால் அரசாங்கச் செலவில், அரசாங்க P.R.O. மூலமாகப் பத்திரிகை நிருபர்களுக்கு கொடுத்தது நியாயமா? அரசாங்கத்தினுடைய பணத்தை இப்படி வீணடிக்கலாமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசாங்க P.R.O. மூலமாகக் கொடுத்திருந்தாலும், நான் தாமரைக்கனி அவர்களுக்குத் தெளிவாகச் சொல்லிவிட்டேன். இது அமைச்சர் பேசினால்தான் அவைக் குறிப்பிலே வரும். ஆகவே, இது அவைக் குறிப்பிலே சேராத ஒன்று.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலை..ர் அவர்களே, இல்லை..

* **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண்மை மானி..க் கோரிக்கை சம்பந்தமான கொள்கை விளக்கக் குறிப்பிலும், எதிலு.. அது இடம் பெறவில்லை. அ.தி.மு.க. - முன்னாள் முதலமைச்சர் பற்றியோ அல்லது அ.தி.மு.க.-வைப் பற்றியோ அதிலே இல்லை. முதலில் அதைப் படித்துப் பார்க்க வேண்டும். இது, நான் பதில் தருவதற்காக, வேளாண்மைத் துறையினுடைய சாதனை, கடந்த காலத்திலே எப்படி இருந்தது; வேளாண்மைத் துறையில் எப்படிப்பட்ட தவறுகள் எல்லாம் நடைபெற்றன; கடந்த ஆட்சியிலே இந்தத் துறை எப்படி இருந்தது என்பதற்கு, என்னுடைய உணர்வுகளை வெளிப்படுத்துவதற்காக, நான் நோட்ஸ் எடுத்து வைத்திருந்தேன். அது ஒன்றும் P.R.O. மூலமாக, அரசாங்கச் செலவிலே செய்யவில்லை. என்னுடைய சொந்தச் செலவிலே தயாரித்து வைத்திருந்தேன். அதையெல்லாம்கூட. பதிலுரை நேரத்திலே குறுகிய நேரமே இருந்த காரணத்தினால், பேசவில்லை. அதை என்னுடைய உதவியாளர் பத்திரிகைகளுக்குத் தரும்போது கொடுத்து

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1998 ஏப்ரல் 16

இருக்கிறார். அவ்வளவுதான். இதிலே ஒன்றும் அரசாங்கச் செலவு கிடையாது. பி.ஆர்.ஓ.வுக்குக் கொடுக்கவில்லை.

*முற்பகல் 11-10*

இன்னொன்றையும் சொல்ல வேண்டும். அரசாங்கத்தின் சார்பிலே அறிவிப்புகள்; அதற்குப் பிறகு பதிலுரை. இப்படி ஒவ்வொரு துறையிலும் வரும். வேளாண்மைத்துறையிலே நடைபெற்ற சாதனை விவரத்தை நான் வெளிப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட Notes- தவிர, கொள்கை விளக்கக் குறிப்பிலே இருப்பதாக அவர் அதைக் கருதிக்கொண்டு குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. முதலிலே, அவர் அதைப் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம், திரு. இரா. தாமரைக்கனி, நீங்கள் இரண்டு பேரும் எழுந்து நிற்கிறீர்கள். திரு. இரா. தாமரைக்கனி, பேசுங்கள்.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே, P.R.O. மூலமாகத்தான் கொடுக்கப்பட்டுள்ளது என்று நான் உறுதியாகச் சொல்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அவைக்குத் தவறான தகவலைச் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உண்மையைத்தான் இந்த அவைக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்திருக்கிறேன். இவர் எழுந்தவுடனேயே, 'நான் சொன்னது உண்மையில்லை, அவர் சொல்வதுதான் உண்மை' என்று சொல்லி எங்களை நம்பச் சொன்னால் நாங்கள் ஒன்றும் மடையர்கள் அல்ல.

**திரு. இரா. தாமரைக்கனி:** பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள், நான் சொல்கிறேன். இப்போது நான் தீர்ப்புக் கொடுக்கப் போகிறேன். தீர்ப்புச் சொன்னதற்குப் பிறகுதான் நீங்கள் பேசவேண்டும். (குறுக்கீடு) திரு. பி.ஆர். சுந்தரம், நான் உங்களைக் கூப்பிடவில்லை, நீங்கள் உட்காருங்கள். நான் ஏற்கெனவே இந்தப் பிரச்சினைக்குப் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர்தான் குழப்பிக் கொண்டிருக்கிறார். நாங்கள் ஒன்றும் குழப்பவில்லை.



1998 ஏப்ரல் 16]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள். திரு. தாமரைக்கனி அவர்களுக்கு இந்த அவையின் மரபு தெரியும். பி.ஆர்.ஓ. மூலமாகக் கொடுத்தார்கள் என்று நீங்கள் ஒரு குற்றச்சாட்டுச் சொல்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சர், ஒரு பொறுப்புள்ள சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே, பி.ஆர்.ஓ.விடம் கொடுக்கவில்லை, தன்னுடைய உதவியாளர் கொடுத்தார் என்று சொன்னார். அதை நீங்கள் கண்ணியமாக ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான் உங்கள் கடமை.

**திரு. இரா. தாமரைக்கனி:** பத்திரிகை நிருபர்கள் பி.ஆர்.ஓ. கொடுத்ததாகச் சொல்லுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பத்திரிகை நிருபர்கள் ஆயிரம் சொல்வார்கள். அவையெல்லாம் சாட்சியாகுமா? நான் ஒன்றைச் சொல்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் சொன்னதை நீங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையென்றால், உரிமைப் பிரச்சினை என்று வந்தால் பிரச்சினைகள் அதிகமாகும். நீங்கள் உட்காருங்கள், நான் பதில் சொல்லி விட்டேன்.

## 4. கவன ஈர்ப்பு

*விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி நிறுவன* **(IFAD)** *உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் பணியாற்றிவரும் பட்ட, பட்ட மேற்படிப்புடன்கூடிய ஆசிரியர் பயிற்சி முடித்த பெண்களின் நிலை.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்பு. திரு. ஜி.கே. மணி அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள் திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே ஒரு சில இடங்களிலே பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியுடன் செயல்படும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தில் 220 பெண்கள் பணியாற்றி வருகின்றார்கள். அவர்களுக்கெல்லாம் ரூ.1,500 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. ஆகவே, 1989 ஆம் ஆண்டு, இன்றைய முதலமைச்சர், அன்று முதலமைச்சராக இருந்த

[திரு. ஜி.கே. மணி] [1998 ஏப்ரல் 16

நேரத்திலே தேர்வு செய்யப்பட்ட அவர்கள் 9 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி வருகிறார்கள். இப்போது வரக்கூடிய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, உங்களுடைய கவன ஈர்ப்பு அறிவிப்பிலேயே அநேகமாக இதையெல்லாம் எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். அதற்குப் பிறகும் நீங்கள் பேசிக் கொண்டிருக்கக் கூடாது. நீங்கள் எழுதிக் கொடுத்ததை மாத்திரம் படிக்க வேண்டும். அதைப் படியுங்கள். அது உங்கள் கையில் இருக்கிறதல்லவா?

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் குறிப்பு என் கையில் இருக்கிறது. அந்த 220 பெண்களுடைய...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். நீங்கள் அந்தக் கவன ஈர்ப்பைப் படித்ததாக எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்குப் பிறகு ஒரு கேள்வி கேட்க உங்களை அனுமதிக்கிறேன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

* **மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின்முன் வைக்கப் பெற்றிருக்கிறது :

**அறிக்கை**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை ரோமிலுள்ள விவசாய வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி (IFAD) என்னும் நிதி நிறுவன உதவியுடன் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம், தர்மபுரி, சேலம், தென்னாற்காடு, மதுரை மற்றும் இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் 1989-90 ஆம் ஆண்டிலிருந்து செயல்படுத்தி வருகிறது. மேற்கண்ட திட்டம் டிசம்பர் 98-ல் முடிவடைகிறது.

2. இத்திட்டத்திற்கான மகளிர் மேற்பார்வையாளர்கள் பட்டதாரிகளாய் இருத்தல் வேண்டும். அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகங்கள் மூலமாகத் தெரிந்தெடுக்கப்பட்டு 6 மாத ஒப்பந்தத்தில் தொகுப்பூதியத்தின் அடிப்படையில் (Honorarium) நியமிக்கப்படுகின்றனர். 1989-90 முதல் நியமிக்கப்பட்டவர்களின் விவரம் பின்வருமாறு:—



1998 ஏப்ரல் 16] [திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்]

| | | |
|---|---|---|
| 1. | 1989-90 | 3 |
| 2. | 1990-91 | 13 |
| 3. | 1991-92 | 17 |
| 4. | 1992-93 | 20 |
| 5. | 1993-94 | 57 |
| 6. | 1994-95 | 136 |
| 7. | 1995-96 | 3 |
| 8. | 1996-97 | 15 |
| 9. | 1997-98 | 12 |
| | மொத்தம் | **276** |

அவர்களுக்குத் தொகுப்பூதியமாக ரூ.1,200-ம் பயணப்படியாக ரூ.150-ம் மற்றும் இதர செலவினமாக ரூ.150-ம் வழங்கப்படுகிறது. இவர்கள் தொடர்ச்சியாக 8-9 வருடங்களாகப் பணி புரியவில்லை. ஏனெனில் இவர்கள் வெவ்வேறு வருடங்களில் காலியிடங்களுக்கேற்ப பணியில் அமர்த்தப்பட்டவர்களாவார்கள். மேலும் ஆறு மாத ஒப்பந்த அடிப்படையில்தான் அவர்களுடைய பணி நீட்டிக்கப்படுகிறது.

3. இவர்களின் வேண்டுகோளின் அடிப்படையில்தான் அரசாணை நிலை எண் 234, ச.ந. மற்றும் ச.தி. நாள் 3.10.96-ல் தமிழ்நாடு தேர்வாணையத்தின் மூலம் நடத்தப்படும் தொகுதி 2 மற்றும் 4 தேர்வுகளை எழுத இவர்களுக்கு வயது குறித்த தகுதி இல்லாவிடினும் இவர்களை அனுமதிக்குமாறு அரசு ஆணை வழங்கியுள்ளது. மேலும் அவர்கள் தேர்வாணையத்தின் மூலம் இவ்வாறு தேர்வு செய்யப்பட்டால் அப்போது நியமனத்திற்கான வயது வரம்பைத் தளர்த்துவது பற்றிப் பரிசீலிக்கப்படும் என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. இதிலிருந்து இந்த மேற்பார்வையாளர்கள் தற்காலிக ஒப்பந்தத்தில் பணியில் அமர்த்தப்பட்டவர்கள் என்பதை அவர்களே ஏற்றுக்கொண்டிருப்பது தெளிவு. இது அவர்களுடைய ஒவ்வோர் ஆறு மாதப்பணி ஒப்பந்த நியமன ஆணையிலும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. அரசு எந்த நிலையிலும் அவர்களை நிரந்தரம் செய்வதாக அறிவிக்கவில்லை. தாங்கள் விரும்பும்போது மேற்பார்வையாளர் பதவியை விட்டுச் செல்லும் சுதந்திரம் அவர்களுக்கு எப்போதும் இருந்தது. எனவே, அவர்கள் புதிதாகப் பதற்றம் அடையக் காரணம் இல்லை என்பது தெளிவாகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, இப்போது நீங்கள் சொல்லுங்கள்.

முற்பகல் 11-15

***திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்தேன். இன்றைய முதலமைச்சர் 1989-லே முதலமைச்சராக இருந்த நேரத்திலே, பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியோடு, தமிழகத்தினுடைய பல மாவட்டங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்திற்கென 220 பெண்கள் மேற்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு, தொடர்ந்து அவர்கள் 9 ஆண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். அவர்களுடைய இந்தப் பணி இன்னும் சில மாதங்களில் முடிவடையப்போவதாகச் சொல்கிறார்கள். 220 பெண்களும் மகளிர் மேம்பாட்டுக்காக பல்வேறு காலகட்டங்களில் நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்களில், ஏறக்குறைய நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பட்டப்படிப்பு, பட்ட மேற்படிப்புடன் கூடிய ஆசிரியர் பயிற்சி பெற்றவர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் அவர்களுடைய வேலையைப் பற்றிச் சுருக்கமாகப் பேசி முடியுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 220 பெண்களும் வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலமாகத் தேர்வு செய்யப்பட்டவர்கள், இப்போது அவர்கள் வயது வரம்பைக் கடந்த நிலையில் இருக்கின்ற காரணத்தால், மீண்டும் அவர்கள் பணிக்குச் செல்லக்கூடிய வகையிலே இந்தத் துறையிலிருந்து வேறு துறைக்கோ, அல்லது ஊரக வளர்ச்சித் துறைக்கோ அல்லது ஒன்றியங்களுக்கோ, மகளிர் மேம்பாட்டுக்காகத் தேர்வு செய்யப்பட்டு, மீண்டும் அவர்களுடைய வாழ்க்கைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய வகையிலே வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த 220 பெண்களுடைய அவல நிலையைக் கருத்தில் கொண்டு, வயது வரம்பைக் கடந்த நிலையைக் கருத்தில் கொண்டு, மீண்டும் அவர்கள் தொடர்ந்து பணியாற்றுவதற்கு மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில், 'IFAD' பன்னாட்டு நிதி நிறுவனத்தின் உதவியோடு தேர்வு செய்யப்பட்ட பெண்கள். 1989 ஆண்டு முதல் 1997-98 வரை 276 பேர் பணிகளிலே சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அத்தனை பேர்களுடைய பணி வாய்ப்பும்





தற்காலிகமானது; ஆறு மாத அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் அவர்கள் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தொடர்ச்சியாக 8, 9 ஆண்டு காலம் பணியாற்றவில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்றுதான். அவர்களுடைய பணிக்காலம் இந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவு அடைய இருக்கிறது. 8 மாவட்டங்களில் அவர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய நிலை என்ன என்பது கேள்விக் குறியாக இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் மற்றும் மன்ற உறுப்பினர்கள் பலரும் என்னிடத்தில் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே தமிழக அரசின் சார்பாக 14 மாவட்டங்களில் மகளிர் மேம்பாட்டுத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. அந்த மாவட்டங்களிலே, இந்த 8 மாவட்டங்களும் இணைக்கப்படும் என்று தெரிய வருகிற காரணத்தால், இந்தப் பணி வாய்ப்புபெற அவர்களுக்கு அடிப்படை தகுதி இல்லையென்றாலும், வயது தகுதி இல்லையென்றாலும்கூட, தேர்வாணையத்தின் மூலமாக நடத்தப்படும் 2 தேர்வுகளிலே, வயது வரம்பைத் தளர்த்தி எழுதிடவும், தேர்வு செய்யப்பட்டால் பணி வாய்ப்பு வழங்கப்படும் என்றும் அரசு ஆணை வெளியிட்டிருக்கிறது. அதன் மூலமாகவும் அவர்கள் மற்றத் துறைகளிலே பணி வாய்ப்புகளைப் பெறுவதற்கு இடமுண்டு என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. அரசினர் தீர்மானம்

### தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு மீதான ஆய்வுக் குழு பேரவையில் அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையை நீட்டித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் தீர்மானம். ஆய்வுக் குழு தனது அறிக்கையை அளிப்பதற்கான காலவரையறையினை நீட்டிப்பதற்கான அரசினர் தீர்மானம். மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. கோ.சி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 156, உள் விதி (1)-ஐத் தளர்த்தி, 1997 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 42/1997) மீதான ஆய்வுக் குழு தனது அறிக்கையினைப் பேரவையில் அளிப்பதற்கான கால வரையறையினை மேலும் ஆறு மாதத்திற்கு

இப்பேரவை நீட்டிக்கிறது."

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

## 6. அறிவிப்பு

### அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. அலுவல் ஆய்வுக் குழு, 12-00 மணியளவிலே என்னுடைய அறையிலே கூடும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### கோரிக்கை எண் 17—கல்வி—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து கல்வி மானியக் கோரிக்கை மீதான விவாதம் தொடங்குகிறது. திரு. மு. அப்பாவு.

*முற்பகல் 11-20*

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றிகூறிக்கொண்டு, கடந்த காலங்களில், ஐந்தாண்டு கால ஆட்சியில் கல்வியை வியாபார நோக்கோடு, மிகப் பெரிய வியாபாரம் ஆக்கி, தமிழகத்தினுடைய கல்வியின் தரத்தை மிகப் படுமோசமாக ஆக்கி விட்டார்கள் என்பது இந்த நாடறிந்த உண்மை. இந்த அரசு





பொறுப்பேற்ற பின்பு, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இரவு பகலாக—அந்த கொள்ளையடிக்கப்பெற்ற தரம் குறைந்த தமிழகத்தினுடைய கல்வியை மேம்படுத்துவதற்காக— கடுமையாக முயற்சி செய்து, தற்போது ஆயிரக்கணக்கான பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன. ஒருவர் இருவர்கூட ஒரு ரூபாய்கூட லஞ்சம் பெறாமல், தகுதியின் அடிப்படையில் மிகத் தெளிவாக, மிக அருமையாக தமிழகத்திலே பணியிடங்கள் நிரப்பப்படுகின்றன. கல்வி இலாக்காவைப் பொறுத்தவரையில் அங்கே பொறுப்பிலே இருக்கின்ற இயக்குநர்கள் கடந்த கால ஆட்சியிலே ஒரு மாறுதல் என்றால் 20 ஆயிரம், 30 ஆயிரம் பெற்றுத்தான் ஆசிரியர்களுக்கு மாறுதல் தந்த நிலை மாறி, தற்போது மிகத் தெளிவாக, ஆசிரியர்கள் விரும்புகின்ற இடத்திற்குத் தகுதியின் அடிப்படையில் மாற்றப்படுகின்றார்கள் என்பது வரவேற்கத்தக்க விஷயம். இருந்தபோதிலும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவ மாணவிகளுக்கும் கட்டாயக் கல்வி கொடுப்பதற்காக இந்த அரசு மிக்க முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருப்பது பாராட்டுக்குரியது.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

ஆனால், ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். தமிழகத்திலே கடந்த கால ஆட்சியிலே அரசாணை எண் 340-ன்படி ஓர் ஆசிரியருக்கு 50 மாணவர்கள் என்றிருந்த நிலையை மாற்ற வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1995 ஆம் ஆண்டு ஒரு கோரிக்கையை கடந்த கால அரசிடம் வைத்தார்கள். அவர்கள் அதை நிறைவேற்றத் தவறினார்கள். நமது அரசு பொறுப்பேற்ற பின்பு, அதைப்பற்றி சுட்டிக்காட்டியபோது, அரசாணை எண் 340-ஐ மாற்றி, அரசாணை எண் 525-ன்படி ஓர் ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற விகிதத்தில் தற்போது மாற்றி அமைக்கப்பட்டு இருக்கின்றது.

ஒன்றை நான் உங்களிடம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தமிழகத்தில் கிட்டத்தட்ட 30,796 ஆரம்பப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆரம்பப் பள்ளிகள் ஓராசிரியர் பள்ளிகள். ஆயிரக்கணக்கான பள்ளிகளில் ஈராசிரியர்கள் இருக்கின்றார்கள். கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதி பள்ளிகளில் முழுமையாக, வகுப்பிற்கு ஒரு ஆசிரியர் இல்லை என்ற நிலை இருக்கிறது. ஆனாலும்கூட, இந்த ஆண்டு 300 தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க இருக்கின்றார்கள். வருகின்ற காலங்களில் 700 பள்ளிகள் ஆரம்பிக்க

இருக்கின்றார்கள். ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஆரம்பப் பள்ளிகளில் இந்த அரசாணை எண் 525-ன்படி குக்கிராமங்களில் உள்ள பள்ளியில் 100 மாணவர்கள் இருந்தால் அங்கே 2 ஆசிரியர்கள்கூட நியமிக்கப்பட முடியாத ஒரு நிலை வந்துவிடும். வருகின்ற 5 ஆண்டுகளில் கிராமப்புறங்களில், இருக்கின்ற ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் அதாவது 8 வரையில் உள்ள நடுநிலைப் பள்ளியில் 4 ஆசிரியர். 3 ஆசிரியர் என்ற நிலை ஏற்பட்டுவிட்டால், கிராமத்தினுடைய கல்வித்தரம் எந்த அளவிற்கு மோசமாகிவிடும் என்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஆகவே, கிராமங்களில் இருக்கின்ற ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்கு இந்த அரசாணை எண் 525-ன்படி வைத்தால், கிராமப்புற மாணவர்கள் 8 வரை படித்து இருந்தாலும், மிக்க முயற்சி செய்துதான் அந்த ஆசிரியர் அவர்களுக்கு எழுதப் படிக்க மட்டுமே சொல்லிக் கொடுக்க முடியுமே தவிர, தரமான கல்வியை நிச்சயமாக அவர்கள் போதிக்க முடியாது. ஆகவே, தயவுசெய்து உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். கடந்து காலத்தில் பெருந்தலைவர் காமராசர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் இருந்த அரசாணை எண் 525-ன்படி 20 மாணவ மாணவிகளுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலையை நீங்கள் ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளில் கிராமப்புறத்தில் இருப்பவைகளுக்காவது மறுபரிசீலனை செய்து தர வேண்டும் என்று உங்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

* **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு மிக முக்கியமான கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு தெரிவிக்கிற காரணத்தால், இந்த அவை உறுப்பினர்கள் அதுகுறித்துத் தெளிவான கருத்தைப் பெறுவதற்காக இந்த விளக்கத்தை நான் சொல்கிறேன். 50 பேருக்கு ஓர் ஆசிரியர் என்ற விகிதாச்சாரம் கடந்த 8, 9 ஆண்டுகளாக நடைமுறையிலே இருந்தும் அந்தக் கணக்கை வைத்துக் கொண்டு, அந்த அடிப்படையிலேகூட ஓய்வுபெற்ற ஆசிரியர்களினுடைய இடம் நிரப்பப்படாமல், ஐந்தாண்டுக் காலத்தில் வெறும் 8 ஆயிரம் ஆசிரியர் பணியிடங்களை மட்டுந்தான் நிரப்பினார்கள். அதனுடைய விளைவு, நாம் முதலாண்டு ஏறத்தாழ 12 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்தோம். அதற்கு அடுத்த ஆண்டு 10 ஆயிரம் ஆசிரியர்களை நியமித்தோம். இந்த ஆண்டு 8 ஆயிரம் ஆசிரியர்களை நியமிக்கிறோம். 50 மாணவர் விகிதாச்சாரம் வைத்து 100 பேர் படித்தாலும்கூட, 2 ஆசிரியர் அளவுக்குத்தான் நியமிக்கும்



நிலைமை இருந்த காரணத்தால், 40 என்ற விகிதத்தில் இப்போது 3 ஆசிரியர்களாக உயர்த்தப்படுகிறது. எதையும் நல்ல நோக்கத்தோடு படிப்படியாகச் செய்து வந்தால்தான் என்றைக்காவது ஒரு நாளைக்கு ஒரு வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலை வரும். தவிர, 300 மக்கள் இருக்கிற இடத்தில் ஒரு பள்ளிக்கூடம் தொடங்குகின்றபோது, 20 பிள்ளைகளுக்கு மேல், 25 பிள்ளைகளுக்கு மேல் அங்கு இல்லை. ஆக, தொடங்குகிறபோது ஒரு வகுப்புதான். அடுத்த ஆண்டுதான் இரண்டாவது வகுப்பு. தவிர, இரண்டு வகுப்புகள்கூடத் தொடங்க நேரிடலாம். ஆகவே இப்படிப்பட்ட இடத்தில், வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்ற முறையை ஏற்றுக்கொண்டு, ஆசிரியர்கள் நியமிக்கப்படுவதாக இருந்தால், அரசினுடைய நிதிநிலை அதற்கு இடம் தராது. ஆண்டுக்கு இவ்வளவு என்று அதிகப்படுத்தி, மாணவர்களுக்குத் தகுந்த கல்வி கிடைக்க, பரவலாகவும், அதே நேரத்தில் பள்ளிக்கூடம் வாரியாகவும் கூடுமானவரையில் ஒரு வகுப்புக்கு ஓர் ஆசிரியர் என்பதை 6ஆவது, 7ஆவது, 8ஆவது வகுப்புகளுக்காவது நடைமுறைப்படுத்த முடியும். அதைச் செயல்படுத்துகின்ற முறையிலேதான் இந்த அரசு தொடர்ந்து முயற்சித்து வருகிறது.

*முற்பகல் 11-25*

**திரு. மு. அப்பாவு:** ஆசிரியர்கள் மீதும், மாணவர்கள் மீதும், கல்வித் தரத்தின் மீதும் இந்த அரசு மிகுந்த அக்கறை கொண்டு இருக்கிறது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். ஏற்கெனவே 1 முதல் 5 வது வகுப்பு வரையில், 5 ஆசிரியர்கள் பணியாற்றியிருந்தால், கிட்டத்தட்ட 100 மாணவர்கள் இருந்தால், மேற்கொண்டு அதே பள்ளியில் ஓர் ஆசிரியர் ஓய்வு பெற்றால், அந்த இடத்தை நிரப்புவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். ஏற்கெனவே 5 ஆசிரியர்களோ 8 ஆசிரியர்களோ இருந்தால், அந்தப் பணியிடங்களை மீண்டும் குறைக்க வேண்டாம் என்பது என்னுடைய பணிவான கருத்து.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** குறைப்பதா, அல்லவா என்பது பிரச்சினையல்ல. 40 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற கணக்கை வைத்துக் கொண்டு, 60-க்கு மேற்பட்ட மாணவர்கள் இருந்தால் இரண்டு ஆசிரியர்கள் என்ற கணக்கை வைத்துக் கொண்டு, ஏறத்தாழ 100 பேர் இருக்கிற பள்ளிக்கூடங்களில் மூன்று ஆசிரியர்கள் என்று வருகின்ற அளவுக்கு. வகுப்புகளுக்குப் பயன்படக்கூடிய முறையிலேயும், எண்ணிக்கை மிகுதியாக இருக்கின்ற இடங்களில் கட்டாயமாக ஓர் ஆசிரியர் ஒரு வகுப்பைக் கவனிக்கக்கூடிய சூழ்நிலையையும். இப்படி

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 ஏப்ரல் 16

இரண்டையும் ஏற்படுத்தித்தான் இடைக்காலத்தில் நாம் முயற்சிக்க முடியும். அந்த அடிப்படையில் இப்போதும்கூட அதிக ஆசிரியர்களை நியமிக்க வேண்டிய நிலைதான் ஏற்பட்டிருக்கிறது. ஓய்வு பெறுகிற ஆசிரியர்களைவிட, அதிக ஆசிரியர்களை ஆண்டுதோறும் நியமிக்க அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. மேலும் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டத்தின் மூலமாக, ஓராசிரியர் பள்ளிகள் எல்லாம் ஈராசிரியர் பள்ளிகளாகப் பல மாவட்டங்களில் மாற்றப்பட்டுவிட்டன. இன்னும் குறை இருக்கிற மாவட்டங்களில் தொடர்ந்து அந்த முயற்சிகள் நடைபெறும்.

**திரு. மு. அப்பாவு :** நன்றி. கேட்கக் கேட்கக் கொடுப்பவர்களிடம்தான் திரும்பத் திரும்பக் கேட்பார்கள். கடந்த ஆட்சியில் சிறுபான்மையினர் கடுமையாக நசுக்கப்பட்டார்கள். நாம் பொறுப்பேற்றபின்பு, அவர்களுக்கு நாம் சலுகைகளைச் செய்து கொண்டிருக்கிறோம். இருந்தாலும், கடந்த ஐந்தாண்டுகளில் இந்தக் கல்வித் தரத்தைப் பல வழிகளிலும் சீரழித்துவிட்டார்கள். 6, 7, 8 வகுப்புகளின் பாடத் திட்டங்களைப் பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரியும். தரம் அதிகமாக இருக்கிறது. அதிலே பி.எட். பட்டதாரிகளை ஆசிரியர்களாக நியமிக்கலாம் என்று இருந்ததை 1989-ல் நாம் ஆட்சியில் இருந்தபோதுகூட இருந்ததை - கடந்த கால ஆட்சியில் இருந்தவர்கள் மாற்றி, பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது உங்களுக்கு நன்றாகத் தெரியும். ஆகவே கல்வியின் தரத்தை முன்வைத்து பட்டதாரி ஆசிரியர்களுக்காக கிட்டத்தட்ட 700 பணியிடங்கள்தான் இதுவரை கொடுக்கப்பட்டிருப்பது உங்களுக்குத் தெரியும். ஆகவே கடந்த கால ஆட்சியில் ஏற்படுத்தப்பட்ட அந்த அரசாணையை ரத்து செய்து, 6, 7, 8 வகுப்புகளில் பட்டதாரி ஆசிரியர்களையும் நியமிக்கலாம் -- இடைநிலை ஆசிரியர்கள் இல்லாத பட்சத்தில் -- என்று தாங்கள் ஓர் உத்தரவைப் பிறப்பிக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், நம்முடைய கொள்கைக் குறிப்பேட்டை முழுவதுமாகக் கவனிக்கவில்லை என்று நான் கருதுகிறேன். பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்பது ஏற்க்கப்பட்டு -- இந்த ஆண்டு நடுநிலைப் பள்ளிகளுக்காக 50 பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்பது ஏற்கப்பட்டு இந்த ஆண்டு நடுநிலைப் பள்ளிகளுக்கு பட்டதாரி ஆசிரியர்கள் வழங்கப்பட தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் ஏற்கெனவே ஒரு பட்டதாரி ஆசிரியரோ, தமிழ்ப்புலவரோ கட்டாயம் நடுநிலைப் பள்ளியிலே இருக்க



1998 ஏப்ரல் 16] [பேராசிரியர் க. அன்பழகன்]

வேண்டுமென்பதும் ஏற்கப்பட்டிருக்கிறது. நிதிநிலை இடம் தருவதற்கேற்ப, தொடர்ந்து மேல் வகுப்புகள் அல்லது 6, 7, 8 வகுப்புகளில், அறிவியல் பாடம், கணிதவியல் பாடம் நடத்துவதற்கு வாய்ப்பாக இது பயன்படுத்தப்படுகிறது.

**திரு. மு. அப்பாவு:** அடுத்து, கடந்த காலத்தில் 6, 7, 8 வகுப்புகளில், தனியார் மற்றும் சிறுபான்மையினர் நடத்துகிற பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கலாம் என்று இருந்தது. அதைத்தான் நான் விரும்புகிறேன். நீங்கள் நன்றாகச் சொன்னீர்கள். நன்றி. அடுத்து, ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்கள் நடுநிலைப் பள்ளிகளிலே இருக்கிறார்கள். ஊராட்சி ஒன்றியங்களுக்கும், ஆரம்ப, நடுநிலைப் பள்ளிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாத இந்த நேரத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி, ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி என்று பெயர் இருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களுக்கும் அந்தப் பள்ளிகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லாமல், அந்தப் பெயர் தேவைதானா, அரசுப் பள்ளி என்று மாற்றிவிடலாமா என்று நாங்கள் நினைக்கிறோம்.

முற்பகல் 11-30

அடுத்து, நாம் பொறுப்பேற்ற பின்பு 1996-97, 1997-98 மற்றும் 1998-99 ஆம் ஆண்டுகளில் ஆரம்பப் பள்ளி, நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகளைத் தரம் உயர்த்தியிருக்கிறோம். கிட்டத்தட்ட 200-க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தி நாம் அறிவித்திருக்கின்றோம். அனைத்தும் அரசுப் பள்ளிகளே தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன. ஆனால், தனியார் மற்றும் சிறுபான்மையினர் நடத்துகின்ற பள்ளிகளைத் தரம் உயர்த்துவதற்கு இந்த 3 ஆண்டுகளில் நாம் எந்தவிதமான திட்டத்தையும் செயல்படுத்தவில்லை. மேல்நிலைப் பள்ளிகளை எடுத்துக் கொண்டால் கிட்டத்தட்ட 40 சதவீதம் பள்ளிகள் சிறுபான்மையினர் மற்றும் தனியார்களால் நடத்தப்படுகின்றன. ஆகவே, நீங்கள் தரம் உயர்த்தும்போது, 100 அரசு பள்ளிகளைத் தரம் உயர்த்தினால், அதில் 40 பள்ளிகள் தனியார் பள்ளிகள் என்று நீங்கள் ஒரு எண்ணிக்கையை நிர்ணயம் செய்து, அந்த அடிப்படையில் அவர்களுடைய பள்ளிகளையும் தரம் உயர்த்துவதற்கு ஒரு வாய்ப்புக் கொடுக்க வேண்டும். நாம் பொறுப்பேற்ற பின்புதான் 1991 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட அனைத்துத் தனியார் பள்ளிகளுக்கும் நாம் நிதியுதவியுடன் கூடிய அங்கீகாரத்தைக் கொடுத்திருக்கின்றோம். (மணியடிக்கப்பெற்றது). அதற்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து, வருங்காலங்களில் நீங்கள் தரம். . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இன்னும் பேசி முடிக்கவில்லை......

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் க. கிருஷ்ணசாமி.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் பேசிட அனுமதி கொடுத்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்தக் கல்வி மானியத்தின் மீது புதிய தமிழகத்தினுடைய கருத்துகளை நான் முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

16 வயதிற்குட்பட்டவர்களுக்குக் கட்டாயக் கல்வி என்பது சட்டத்திலே இருந்தாலும்கூட இன்னும் அது முழுமையாக அமலாக்கப்படாதது வேதனைக்குரிய விஷயமாக இருந்துகொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர்கள் எல்லோரும் தங்கள், தங்கள் இடத்தில் சென்று உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனவே ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் எல்லோருக்கும் கட்டாயக் கல்வி கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். 5ஆம் வகுப்பு முடித்து, பின்பு 6ஆம் வகுப்பு அல்லது அதற்கு மேலும் தன்னுடைய கல்வியைத் தொடர முடியாத குழந்தைகள், குறிப்பாக ஏழை எளிய தாழ்த்தப்பட்ட குடும்பங்களிலிருந்தே வரக்கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதை உணர்ந்து அந்த மாணவ மாணவிகள் குறைந்தபட்சம் 10ஆம் வகுப்புவரை படிக்கின்ற வகையில் அவர்களுடைய கல்வியைத் தொடருவதற்குண்டான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுகின்றேன்.

பொறியியல் கல்லூரிகளுக்கு விண்ணப்பித்த அனைத்து மாணவர்களுக்கும், கடந்த ஆண்டில் இடம் கொடுக்கப்பட்டு இருப்பது பாராட்டுக்குரிய விஷயம். ஆனால் ஒட்டுமொத்தமாக, கல்வித் துறை அவ்வளவு சிறப்பாக இல்லையென்றுதான் நான் கருதுகின்றேன். ஏழை எளிய மலைவாழ் மக்கள் படிக்கின்ற எண்ணற்ற பள்ளிகளில் குறிப்பாக மலைவாழ் மக்கள் பயில்கின்ற திருமுருட்டி மலை, வால்பாறை, பரம்பிக்குளம், தாளவாடி பகுதிகளில் இருக்கக்கூடிய பள்ளிகளில் சாதாரணமாக, குடிக்கக்கூட தண்ணீர் இல்லாத நிலைமையை எல்லாம் நான் கண்கூடாகக் காண்கின்றேன். எனவே அவற்றையெல்லாம் சரி செய்வதற்கு நடவடிக்கை ஏ்டுக்க வேண்டும்.



கல்வி என்பது வெறும் ஏட்டுக் கல்வியாக இல்லாமல் வேலைவாய்ப்பை ஒட்டிய கல்வியாகவே இருக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. ஆசிரியர் நியமனங்களில் போதிய அளவிற்குத் தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் இல்லாத குறையைப் போக்குவதற்காக இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்படலாம் என்று இந்த அரசு முடிவெடுத்து அறிவித்தது. ஆனால் அதிலேயும் ஒரு குளறுபடி நடந்திருக்கிறது. முதலிலே பட்டதாரி ஆசிரியர்கள் எல்லோரும் அதற்கு விண்ணப்பித்து, பிறகு உடனடியாக only Science, B.Sc.(Maths), B.Sc.(Botany) இதுபோன்றவர்களுக்கு மட்டும்தான் வாய்ப்பு, கலை படித்தவர்களுக்கு வாய்ப்பு.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் சில அடிப்படையான நியாயங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். Secondary Grade ஆசிரியர்களாக உள்ளவர்கள்தான் நியமிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட ஒரு தீர்ப்பு இருக்கிறது. இடைநிலை ஆசிரியர்கள் இடத்தில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கக்கூடாது என்னும், அந்தத் தீர்ப்பை மீறி பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கிறபோது ஒரு நியாயமான காரணமும் காட்டி, தாழ்த்தப்பட்டவர்களுடைய இட ஒதுக்கீட்டை நிறைவு செய்வதற்காகக் கடந்த ஆண்டு ஏறத்தாழ 1200-க்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு ஒரு மாத காலம் பயிற்சி கொடுத்து, அறிவிய,ல் கணிதம், தமிழ் இந்த மூன்றுக்கும் அந்த இடைநிலை வகுப்புகளில், 8-வது வரை உள்ள வகுப்புகளில், Secondary Grade ஆசிரியர்களைவிட இவர்கள் சற்று தரமாகப் பாடம் படிப்பிப்பார்கள் என்று காரணம் காட்டி, அவர்களை இடம் பெறச் செய்கிறோம். தாழ்த்தப்பட்டவர்களுக்கும் இடம் கிடைக்கிறது, அவர்கள் Secondary Grade பயிற்சி நேரடியாகப் பெறாத காரணத்தால், 1 மாத காலம் குழந்தைகளுக்குப் பாடம் நடத்துவதற்கான ஒரு கண்ணோட்டத்தில், ஒரு பயிற்சியும் வழங்கப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டனர். அந்த ஆசிரியர்கள் பணி தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கிடைக்கிறது, உறுதி செய்யப்படுகிறது என்பதிலேதான் மகிழ்ச்சி அடைய வேண்டும்.

முற்பகல் 11-35

இந்த ஆண்டு இடையிலே, வரலாறோ, வேறு பாடங்களோ படித்தவர்கள், நேரடியாகப் பாடம் நடத்துவதில் அதிகம் பயன்பெற முடியாதவர்கள் நீதிமன்றத்தில் வழக்குப் போட்டிருப்பதன் காரணமாக, ஏறத்தாழ 1200 பேர் இடம் பெறுவது தடைபட்டு நிற்கிறது. அவர்கள்

தெரிவு செய்யப்பட்டு நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறார்கள். நீதிமன்ற வழக்கு குறுக்கீடாக இருக்கிறது. தாழ்த்தப்பட்ட சமூகத்திற்குக் கிடைக்கிறதா, அல்லவா என்பதுதான் முக்கியம். ஏனென்றால் அவர்கள் Secondary Grade ஆசிரியர் பயிற்சி பெறாதவர்கள் ஏனென்றால் Secondary Grade-ல், தாழ்த்தப்பட்டவர்கள் பயிற்சி பெறுவதற்குத் தனியாக 17 DIET - களில் மாவட்ட ஆசிரியர் பயிற்சி மையங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் ஒரு வகுப்பு தனியாகத் தொடங்கப்பட்டு -- மற்றவர்களுக்கு எல்லாம் ஒரு வகுப்பு, தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் ஒரு வகுப்பு—17 பயிற்சிப் பள்ளிகளில் தொடங்கப்பட்டு ஏறத்தாழ 850 மாணவர்கள் இந்த ஆண்டு பயிற்சியில் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** என்னுடைய வாதம் எல்லாம், தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் அதிகமாக பி.எஸ்.சி. கெமிஸ்டிரியோ, பி.எஸ்.சி. பாட்டனியோ, பி.எஸ்.சி கணிதமோ படித்தவர்கள் இல்லாதபோது, பி.ஏ. பட்டதாரிகளை அந்த இடத்திலே.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இடம் பெற்றுள்ள அனைவரும் தாழ்த்தப்பட்ட மக்கள்தான். ஆனால் எதைப் படித்தார்கள் என்பது அவர்களுடைய பிரச்சினை, எனக்குத் தேவை அறிவியல், கணிதம், தமிழ் அப்படி எடுக்கப்படுகிற அத்தனைபேரும் தாழ்த்தப்பட்டவர்கள் தான். வேறு வகுப்பிலேயிருந்து ஒருவர்கூட எடுக்கப்பட முடியாது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** சயன்ஸ் பட்டதாரிகள் அதிகம் இல்லாத காரணத்தால் போதிய அளவு அந்த இடத்தை நிரப்ப முடியாமல் போய்விடுகிறது. அதனால் கலைப்பட்டம் படித்தவர்களுக்கு அந்த வாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வாதம்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவரவர்களே, அப்படிப் படித்தவர்கள் இருக்கிற காரணத்தால்தான் எடுக்கிறோம், அந்த இடமே தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும்தான். வேறு வகுப்பாருக்கு, அதாவது, O.C.. B.C.. M.B.C..—யைச் சார்ந்த யாருக்கும் இந்த S.C., S.T.. இடங்களை அளிக்க முடியாது. இந்த இடங்களை நிரப்புவதற்கு ஆட்கள் இல்லை என்றால் தாழ்த்தப்பட்டவர்களைக் கொண்டு நிரப்பாத இடத்தை நிரப்புவதற்காக மறுபடியும் தனியாகத் தேர்வு நடத்தி அவர்களை இந்த முறையில் நாங்கள் நிரப்புகிறோம். தாழ்த்தப்பட்டவர்களைத் தவிர வேறு வகுப்பினர் யாராவது இந்தப் பட்டியலில் எடுக்கப்பட்டால் திரு. கிருஷ்ணசாமி அவர்கள் குறைப்படலாம்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இதை விட்டுவிட்டு அடுத்த சப்ஜெக்ட்டுக்கு போங்கள், நேரம் ஆகிவிட்டது.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கேட்டுக்கொள்ள விரும்புவது, பி.எஸ்.சி. கெமிஸ்டிரி, பி.எஸ்.சி. கணிதம், என சயின்ஸ் படித்தவர்களுக்குக் கொடுங்கள். அதேபோல 'ஆர்ட்ஸ்'க்கும் கொஞ்சம் கொடுத்தால், இவர்களுக்கும், அவர்களுக்கும் பாலன்ஸாகப் போகும். சயின்ஸ் மட்டும் என்று இருப்பதால்....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** இந்த நோக்கமே தாழ்த்தப்பட்டவர்களில் யார் இருக்கிறார்களோ, அவர்களுக்கு வேலை தருவதே தவிர, என்னென்ன படித்தவர்களுக்கு வேலை கொடுப்பது என்பது இதனுடைய நோக்கம் அல்ல. எந்த வகையில் அந்த ஆசிரியர்களை பயன்படுத்த முடியும் என்பதற்காகச் செய்யப்பட்ட காரியம். தாழ்த்தப்பட்டவர்களில் சயின்ஸ் படித்தவர்கள் இல்லையென்றால், அதற்குப் பின்னால் வரலாற்றைப் படித்தவர்களைக்கூட எடுக்க நான் தயார்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்தபடியாக, தனியார்க் கல்லூரிகளில், தனியார்ப் பள்ளிகளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கான இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதே கிடையாது; புறக்கணிக்கப்படுகிறார்கள். அதேபோல இந்த இடைநிலை ஆசிரியர்கள் இல்லாத இடங்களில் தனியார்ப் பள்ளிகளில் அவர்கள் பட்டதாரி ஆசிரியர்களைப் புறக்கணிக்கிறார்கள். என்பதை அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** துணைத் தலைவரவர்களே, இது விதி அல்ல. பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்கக் கூடாது என்பது நீதிமன்றத் தடை. நீதிமன்றத் தடையை மீற செய்ய வேண்டுமானால், இடைநிலை ஆசிரியர்களுக்கான இடத்தில், அவர்களை நியமிப்பதற்குத் தகுந்த காரணம் காட்டி வாதாட வேண்டும். அப்படி ஏதாவது வேறு வழி இருக்குமானால், தனிப்பட்ட முறையில் அவற்றை ஆய்வு செய்யலாம். தாழ்த்தப்பட்டவர்களைத் தனியார்ப் பள்ளிக்கூடங்களில், உதவி பெறுகிற பள்ளிக்கூடங்களில் நியமிக்க வேண்டும் என்று அரசு கேட்டுக்கொண்டு இருக்கிறது. அதிலும் குறைபாடு இருக்குமானால், தெரிவிக்கப்பட்டால், அதுபற்றித் தனியாக ஆய்வு செய்யலாம்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கடந்த மூன்று ஆண்டு காலமாக, சட்டமன்றத்திலே

வெள்ளை அறிக்கை கேட்டுக்கொண்டு இருக்கின்றேன். அதேபோலக் கல்வி நிறுவனங்களில் மற்றும் பல துறைகளில் இட ஒதுக்கீட்டை முறையாக அமல்படுத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, 1997ஆம் ஆண்டு மார்ச் மாத அறிக்கையில், தமிழக முதலமைச்சர் அவர்கள், கடந்த ஜூன் மாதத்தினுடைய இறுதிக்குள் Back-log vacancies நிரப்பப்படும் என்று சொல்லியிருந்தார்கள். மார்ச் மாதம் அறிவித்து, ஜூன் மாதத்திற்குள் Back-log vacancies fill-up செய்யப்படும் என்று அறிவித்த பிறகும்கூட, ஒரு மூத்த அமைச்சராக இருக்கக்கூடியவர், தமிழகத்தின் முதலமைச்சருடைய அந்தக் கருத்துக்கு மாறாக-- தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கல்லூரிகளில் 5 ஆயிரம் பதவிகள் இருக்கின்றன. அதிலே 19 சதவீதம் என்று பார்க்கின்றபோது 950 பதவிகள் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வந்திருக்கவேண்டும், ஆனால் இன்றைக்கு 400 பேர்கள் தான் இருக்கிறார்கள். 550 பேர்கள் கிடையாது. அப்படியானால் 550 பதவிகள் Back-log vacancies வருகின்றன. இவற்றை பில்-அப் பண்ணவேண்டும் என்று சொல்லி, தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்த பிறகும் — கல்வி அமைச்சர் அவர்கள் எந்தக் காரணத்திற்காக அவர்களுக்குண்டான இடத்தைக் கொடுக்காமல் பொதுவாக 500 பேர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் கேள்வி. தமிழக முதலமைச்சருக்குக் கட்டுப்படாமல் அவர்கள் சொன்னதையே மீறுகிறாரா கல்வி அமைச்சர் என்பதுதான் என்னுடைய கேள்வி.

முற்பகல் 11-40

**மாண்புமிகு பேராசியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு இடைநிலை ஆசிரியர்களை, Employment Exchange-லிருந்து நேரடியாக எடுக்கிறபோது, இந்த விகிதாச்சார முறை கட்டாயமாகப் பின்பற்றப்பட்டு, அந்த முறைப்படிதான் எடுக்கப்படுகிறார்கள். ஆசிரியர் தேர்வு வாரியத்தின் மூலமாக எடுக்கப்படுகிறபோது, ரோஸ்டர் முறையில் நியாயமான இட ஒதுக்கீட்டு முறையில் அந்தப் பங்கீடு தரப்பட்டு, எடுக்கப்படுகிறார்கள். கடந்த ஆண்டு, அதற்கு முதல் ஆண்டு எடுக்கப்படவேண்டிய ஆசிரியர்கள் எண்ணிக்கையில் 40 பேரோ அல்லது 45 பேரோ தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தகுந்த படிப்போடு அப்போது விண்ணப்ப தாரராக இல்லை; அல்லது வேலைவாய்ப்பு அலுவலகத்திலிருந்து வந்த பட்டியலில் தாழ்த்தப்பட்டவர்கள் வரவில்லை என்று அறிந்து மறுபடியும் தனியாக அவர்களை அழைத்து, தேர்வு செய்யப்பட்டு



நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த அரசு வந்ததிலேயிருந்து எந்த இடத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் இடம் பெறாமல் போய்விட்டார்களோ அந்த இடத்தைத் தனியாகவே விளம்பரம் செய்து, தனியாக அழைத்து அவர்கள் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடத்திலே பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீங்கள், கடந்த ஆண்டு ஜூலை மாதத்திற்குப் பிறகு ஜெனரலாக 400 பேர்களை Call for செய்து, கல்லூரி ஆசிரியர்களாக Posting கொடுத்திருக்கிறீர்கள். ஆனால் நான் கேட்பது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், Back-log vacancies ஜூன் மாதத்திற்குள் நிரப்பப்படும் என்று சொன்ன பிறகு, நீங்கள் அதை ஃபில்-அப் பண்ணிவிட்டுத்தான், இதற்குப் போய் இருக்கவேண்டுமே தவிர, இதை நீங்கள் ஃபில்-அப் பண்ணாமல்......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் நேர்முகமாக என்னைச் சந்தித்து விளக்கம் கேட்பார்களேயானால், இந்த அரசு என்னென்ன நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது என்று அந்த விளக்கத்தைச் சொல்வதற்கு நான் தயாராக இருக்கிறேன். [illegible]நக்கும் இப்போது பேச நேரம் இல்லை. எனக்கும் இந்த நேரத்தில் இடையிட்டு பதில் சொல்லிக் கொண்டிருப்பதற்கு நேரம் இல்லை. ஏனென்றால் இந்த விவாதம் 1½ மணி அளவிலே முடியவேண்டும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் நேர்முகமாக வந்து என்ன விளக்கம் கேட்டாலும் இந்தத் துறை அதைத்தரத் தயாராக இருக்கிறது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. ஏற்கெனவே ஆளும் கட்சி சார்பிலே பேசுவதற்கு 3 பேர் பெயர் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்குப் பேச வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது, எனவே, ஒரு நிமிடத்தில் பேசி முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியிலே, இட ஒதுக்கீடு இன்னும் அமலாக்கப்படாமல் இருப்பது குறித்து கொந்தளிப்பு இருக்கிறது. அதன்காரணமாகத்தான் ஆயிரக்கணக்கான பட்டதாரிகள் வேலையில்லாமல் இருக்கிறபோது, அவர்களுக்குண்டான

உரிமைகளாவது நிலைநாட்டப்படவேண்டும்: அதுவும் கடந்த 50 ஆண்டு காலமாகக் கொடுக்கப்படாதது நிறைவேற்றப்படவேண்டும் என்ற ஆதங்கத்தோடு நான் கேட்கிறேன். மூத்த அமைச்சர், கல்வி அமைச்சர் அவர்களே. அவருடைய துறையில் அவர்கள் நேரடியாகத் தலையிட்டுச் செய்ய வேண்டிய காரியங்களான இவை, அதாவது இட ஒதுக்கீட்டு அடிப்படையில் நிரப்பப்படாத காரணத்தால், பல்கலைக்கழகங்களிலும் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன. இட ஒதுக்கீட்டை அமல்படுத்துவதே கிடையாது. அதனால், அரசுத் துறையிலே இட ஒதுக்கீடு கொடுக்காததால், தனியார் கல்வி நிறுவனங்களும் இதனை அமலாக்காமல் இருக்கின்றன. எனவே, உடனடியாக எல்லா Back-log vacancies-ஐயும் நிரப்பிட இந்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின் மீது சில கருத்துகளை மட்டும் சொல்ல விரும்புகிறேன். பொதுவாகத் தனியார்மயம் என்று சொல்கின்ற ஒரு கொள்கை, இந்தக் கல்விப் பிரச்சினையில் அதிகமாகத் தலையிட்டு பெருவாரியாகத் தனியார்களை ஊக்குவிக்கின்ற நிலைமை தொடரப்படுகிறது. அது எந்த அளவிற்கு நம்முடைய மாநிலத்திலுள்ள மாணவர்களுடைய அல்லது ஆசிரியர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் என்பதையும் அரசு மறுபரிசீலனை செய்வது நல்லது. ஏன் என்றால், இந்தத் தனியார் துறைக்குச் செல்லுகின்றபோது, கல்லூரியானாலும் சரி, பள்ளியானாலும் சரி, அதிலே வேலைவாய்ப்புக் கிடைக்கவேண்டும் என்றாலும் சரி, மாணவர்களுக்கு அனுமதி பெறவேண்டிய நேரம் வருகின்றபோதும் சரி அதிகப்படியான பணத்தைக் கொடுக்கவேண்டிய ஒரு கட்டாயமான சூழ்நிலை நம்முடைய மாநிலம் பூராவும் இருக்கின்றது.

எனவே அந்தக் காரணத்தின் அடிப்படையிலே இப்போது தனியார் கல்லூரி, தனியார் பள்ளிகளுக்குக் கொடுக்கப்படுகின்ற அனுமதி என்பது சற்றுக் குறைக்கப்படவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

முற்பகல் 11-45

அடுத்தபடியாக இந்த விளையாட்டுத் துறையில் நாம் இன்னும் கொஞ்சம் கூடுதலான கவனம் செலுத்துவது சிறப்பாக இருக்குமென்று நான் கருதுகிறேன். ஏனென்றால் நம்முடைய நடுநிலைப்



பள்ளியிலேயிருந்து உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் வரையிலும் அதிகப்படியான, தேவையான விளையாட்டு வீரர்களை உருவாக்கிடும் பணி ஆரம்பித்திடல் வேண்டும். பொதுவாக இந்தக் கல்வி நிறுவனங்களிலே அதற்குத் தேவையான ஆடுகளங்கள் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்று இந்த விளையாட்டுத் துறையில் பணிபுரிந்து வந்திருக்கின்ற பணியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய சம்பளம் இன்னும் கொடுக்கப்படாமலேயே நிலுவையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது. நீதிமன்றத்திலே ஏதோ தடை இருப்பதாகச் சொல்லி, அது நிறைவேற்றப்படாமல் உள்ளது. அதையும் அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று நம்முடைய உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் சம்பந்தமாக ஒன்றைக் கூற விரும்புகிறேன். ஏற்கெனவே இருக்கின்ற மேல்நிலை தமிழாசிரியர் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறை நடத்தும் பள்ளிகளில் இடைநிலை ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றவர்களுக்கு 10 ஆண்டுகள் முடிவுற்றவுடன் தேர்வுநிலையும், நிலுவை ஊதியமும் வழங்க வேண்டியுள்ளது. அதுபோல உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் இடைநிலை ஆசிரியர்களுக்கும் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய பள்ளியிலே நடைபெற்ற ஒரு முக்கியமான நிகழ்ச்சி பற்றியது. பக்கத்திலே இருக்கக்கூடிய ஜெய்கோபால் கரோடியா அரசினர் பெண்கள் உயர்நிலைப் பள்ளியிலே நடந்த ஒரு நிகழ்ச்சி.

ஏற்கெனவே அதிலே மாணவர்கள் மத்தியில் பணம் வசூல் பண்ணியிருக்கிறார்கள். பணம் வசூல் செய்யக்கூடாது என்ற ஒரு விதிமுறை இருந்தாலும் ஏறத்தாழ ரூ. 3¾ இலட்சம் கடந்த ஆண்டு வசூலித்து இருக்கிறார்கள். அந்தப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை வருகின்றபோது, அவர்களுடைய கணக்கைப் பார்க்கின்றபோது ரூ. 71,000 இருப்பதாகத்தான் கணக்கைச் சொல்லியிருக்கின்றார்கள். அது என்னவென்று அரசு சரியான விசாரணை நடத்தவேண்டும். ஏனென்றால் இந்த நன்கொடை வசூலிப்பதிலே ஒரு ஆடிட்டிங் என்பதே இல்லாத ஒரு சூழ்நிலை இருந்து வருகின்றது. ஆடிட்டிங் வருகின்றபோதுதான் அதிலே ஏற்பட்ட முறைகேடுகளை அறிந்து, அவற்றைத் தீர்க்கமுடியும். அந்த வகையிலே இந்த ஜெயகோபால் கரோடியா அரசினர் பெண்கள் உயர்நிலைப்

[திரு. டி. மணி] [1998 ஏப்ரல் 16

பள்ளியிலே இருக்கின்ற பல்வேறு முறைகேடுகளைப் பற்றி விசாரித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து மத்திய அரசின் ஆசிரியர்களுக்குள்ள ஊதிய விகிதம் தமிழ்நாட்டு ஆசிரியர்களுக்கும் வழங்கப்படவேண்டுமென்பது ஒரு கோரிக்கை. ஏற்கெனவே மத்திய அரசு ஊழியர்களுக்கு எந்த வகையிலே சம்பளம் உயர்த்தப்பட்டிருக்கிறதோ, அந்த வகையிலே நம்முடைய மாநிலத்திலே இருக்கக்கூடிய அரசுப் பள்ளிகளிலே பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கும், ஊழியர்களுக்கும் சம்பளம் வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மணி அவர்கள் ஆசிரியர்கள் பொதுவாக வெளியிலே சொல்கின்ற அந்தக் குறைபாட்டைச் சொல்கிறார்கள், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் ஆசிரியர்களுக்கும் அவர்களை ஒத்த நிலை ஊதியம் பெறுகின்ற அவர்களுக்கு இணையாக வேறு பல துறைகளிலே உள்ளவர்களுக்கும் on parallel treatment ஒரே சம்பளம் ஏற்கெனவே தீர்மானிக்கப்பட்டிருந்தது. இப்போது மத்திய அரசினுடைய கமிஷன் மூலமாக ஆசிரியர்களுக்கு மட்டும் அதே நிலையினரான மற்றவர்களைவிட ரூ.500 அதிகமாக உயர்த்தி வழங்கி பல படிகள் உயர்த்தி விட்டார்கள். அந்த முறையை நாம் ஏற்றுக் கொண்டால், இங்கே இருக்கின்ற மற்ற அலுவலர்கள், ஆசிரியர்களைப் போலவே உள்ள அதே தகுதியில் ஏற்கெனவே ஊதியம் பெறுகின்றவர்கள், அவர்கள் அந்த ஊதியத்தைக் கேட்பார்களேயானால் - மத்திய அரசு அவர்களுக்குத் தரவில்லை, எனினும் - நாம் தர வேண்டிய ஓர் இக்கட்டான நிலைமை ஏற்படும். இந்த 2 இலட்சம், 3 இலட்சம் ஆசிரியர்களுக்கு நாம் ஊதியத்தை மத்திய அரசில் தனியாக தீர்மானித்ததைப் போல தர நேரிட்டால், ஏற்கெனவே சம வாய்ப்பு, சம ஊதியம் பெற்றவர்கள், பிற துறையைச் சேர்ந்தவர்கள் போராடுகிற ஒரு நிலைமை ஏற்படும். ஆகவே நிதிநிலை காரணமாகவும், ஒரே இணையாக இங்கே தமிழ்நாட்டில் ஏற்கெனவே கையாண்ட அதே முறையை, அதே சமச்சீர் நிலையைக் கையாள்வதற்காகவும் இந்த ஊதியம் அறிவிக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒரு நியதி இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினரவர்கள், தொழிற்சங்க இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்து அறநிலையத் துறைக்குச் சொந்தமான சில கல்லூரிகள் இருக்கின்றன. அதிலே குறிப்பாக குழித்துறையிலே இருக்கக்கூடிய ஒரு



1998 ஏப்ரல் 16] [திரு. டி. மணி]

கல்லூரியிலே மாணவர்கள் சேர்க்கை வருகின்றபோது, அதற்கு அதிகப்படியான பணத்தை வாங்குகின்ற முறைகேடான நடவடிக்கை அந்த நிறுவனத்திலே இருக்கின்றது. பல இயக்கங்கள் நடந்து இருந்தாலும்கூட, அதை அந்தத் துறை கவனிக்காத ஒரு நிலை இருக்கிறது. அந்தக் கல்லூரியிலே வேலை செய்துவந்த ஓர் ஆசிரியருடைய பிரச்சினை குறித்து, இரண்டு ஆண்டுகாலமாக நான் பல்வேறு துறைகளிலே முட்டிமோதியதற்குப் பிறகும்கூட, அவருக்கு இன்னும் சேர வேண்டிய அந்தச் சம்பளம் அவருடைய கையிலே போய்ச் சேரவில்லை. அந்த நிலை நீடிக்கின்றது. அதைத் தீர்க்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று இந்த ஓராசிரியர் பள்ளி. ஏற்கெனவே அது குறித்து இந்தக் கொள்கைக் குறிப்பிலே சில மாற்றங்களைச் செய்வதாக மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, அந்த ஓராசிரியர் என்று சொல்கின்ற அந்த எண்ணிக்கையைக்கூட்டி இரண்டு ஆசிரியர்களை நியமனம் செய்கின்ற பரவலான ஒரு நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோன்று இந்தப் பயிற்சி மாணவர்கள். கடந்த ஆட்சிக் காலத்தில் நடந்த ஒரு சிக்கலான பிரச்சினை இது. இந்தப் பயிற்சி மாணவர்களுடைய பிரச்சினைகளுக்கு எந்த அளவிற்கு ஒரு தீர்வை ஏற்படுத்த முடியும், எந்த அளவிற்கு நாம் அவர்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பதை அரசு மறுபரிசீலனை செய்து, அந்தப் பயிற்சி மாணவர்களைப் பாதுகாக்க ஒரு நல்ல முடிவை சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-50*

அதேபோன்று, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் நியமனம். அது வளர்ந்து, வளர்ந்து 30,40 என்ற இடத்திற்குப் போய்விட்டது. எனவே, 20 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைமை வருமேயானால்தான் கல்வியினுடைய தரமும், அதனுடைய ஏற்பாடுகளும் சரிவர இருக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த அடிப்படையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டுவருவது உதவிகரமாக இருக்கும் என்று எண்ணுகிறேன். எனவே, இந்தக் கல்வித் துறையைப் பொறுத்தமட்டில், தனியார் கல்லூரிகளுக்கு அதிக இடம் வழங்குகின்ற காரணத்தினாலே, குறிப்பாக நம்முடைய மருத்துவக் கல்லூரிகளிலே இடம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், எந்த அளவிற்கு அதிலே சங்கடங்கள் இருக்கின்றன. சாமானிய மக்கள் எல்லாம் 10 இலட்சம் ரூபாய், 20 இலட்சம் ரூபாய் என்று

[திரு. டி. மணி] [1998 ஏப்ரல் 16

பார்க்கவேண்டும். கொடுத்து இடம் பெறுவது என்பது அசாத்தியமாக இருக்கின்ற காரணத்தினாலே, அதைக் கொஞ்சம் தாராளமயமாக்க வேண்டும். குறிப்பாக நான் என்ன சொல்ல விரும்புகிறேன் சம்பந்தப்பட்ட துறை இன்னொரு துறையாக இருந்தாலும்கூட, ஒரு கோரிக்கையை வைத்திருக்கிறேன். கன்னியாகுமரி மாவட்டத்திலே எங்களுக்கு அரசின் சார்பிலே எந்தக் கல்வி நிறுவனமும் பொதுவாக இல்லை, எனவே. இந்தச் சந்தர்ப்பத்திலே நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதெல்லாம், கன்னியாகுமரி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஏற்கெனவே, ஆசாரிப்பள்ளம் என்ற இடத்தில் 110 ஏக்கரில் இருக்கின்ற ஒரு வளாகம் இருக்கிறது. அதிலே ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்தி அந்த மாவட்ட மக்களுடைய நீண்டகாலக் கோரிக்கை என்ற அடிப்படையிலும், அந்த மாவட்டத்திலே அரசுக்குச் சொந்தமான கல்லூரிகளே இல்லை என்ற காரணத்தினாலும், இதை நான் இந்த நேரத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கும் கொண்டு வந்து, இதற்கொரு நல்ல தீர்வை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, நம்முடைய ஆற்றூரிலே இருக்கக்கூடிய ஒரு சுயநிதிக் கல்லூரி, நம்முடைய கிரான்டைடப் பெறுகின்ற ஒரு ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி. ஆனால். நம்முடைய அரசாங்கத்திலே ஒரு வழிமுறை வைத்திருக்கிறார்கள். இத்தனை சீட் ஒதுக்கிக் கொடுக்க வேண்டுமென்று. அவர்களிடத்திலே பணம் வாங்குகின்றார்கள். வெளியிலே இருக்கும் எவ்வளவு பேர்களுக்கு அனுமதி கொடுக்கிறார்கள் என்பது பற்றி நமக்கு யாருக்கும் தகவல் தெரியாது. அப்படிப்பட்ட முறைகேடுகள் நடைபெறுகின்ற கல்லூரிகளிலே, நாம் ஒரு சரியான ஆய்வை நடத்தி, அரசு எவ்வளவு பங்கு வைத்திருக்கின்றது, எந்த அளவிற்கு ஆசிரியர்களுக்கு இடம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது, பயிற்சி மாணவர்கள் ஆசிரியர்களிடம் என்ன பயிற்சி பெற்றுவருகிறார்கள் என்பதைக் கண்டறிந்து ஒரு நடவடிக்கைக்கு உட்படுமேயானால், அந்தக் கல்லூரி இன்று நல்லமுறையிலே செயல்பட முடியும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவந்து முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம்.



1998 ஏப்ரல் 16]

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1996 ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் என்னை வெற்றிபெறச் செய்த ராசிபுரம் தொகுதி வாக்காளர்கள் அளித்த தீர்ப்பை மீண்டும் நேற்று உறுதி செய்த உயர் நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், தர்மம் வென்றது என்று கூறி, தர்மத்தின் வாழ்வு தன்னைச் சூது கவ்வும், தர்மம் மீண்டும் வெல்லும் என்பதை....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

* **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்னும் உச்ச நீதிமன்றம் என்ற ஒரு தர்மமும் இருக்கிறது என்பதை மறந்துவிட வேண்டாம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முதல்படியில் வெற்றி. மேலும், மேலும் வெற்றிதான் பெறுவோமேயொழிய, தோல்வி என்ற பேச்சுக்கே இடம் இல்லை என்று கூறிக்கொள்கிறேன். ராசிபுரம் தொகுதியில் சென்ற ஆண்டு அரசினர் கலைக் கல்லூரியில் கணிதப் பிரிவு பாடத்தை தொடங்குவதற்கு அனுமதித்த தமிழக அரசிற்கும், கல்வி அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். அதேவேளையில், அந்த அரசினர் கலைக் கல்லூரியில் முதுநிலைப் பட்டப் படிப்பும், பிகாம் பட்டப் படிப்பும் இந்த ஆண்டு ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், நாமகிரிப்பேட்டை ஒன்றியம், நாமகிரிப்பேட்டை அரசினர் உயர்நிலைப் பள்ளியில் கிட்டத்தட்ட 2,000 மாணவ, மாணவியர்கள் இருக்கின்ற காரணத்தினால், அதை இரண்டாகப் பிரித்து, பெண்களுக்கென்று தனியாக ஒரு மேல்நிலைப் பள்ளியை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கல்விக்காக இந்த ஆண்டு கிட்டத்தட்ட 3600 கோடி ரூபாயை இந்த அரசு ஒதுக்கியிருந்தாலும் மொத்தத் தொகையான 18,000 கோடி ரூபாயில் கிட்டத்தட்ட 20% தான் வருகிறது. மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு, சென்ற 5 ஆண்டுகளில் கிட்டத்தட்ட 23 சதவிகிதம் கல்வித் துறைக்காக ஒதுக்கப்பட்டது என்பதைக் கொண்டுவர விரும்புகிறேன். உதாரணத்திற்கு ஒன்றைச் சொல்ல வேண்டும் என்றால் 1995-96-ல் 9910 கோடியில் 2233 கோடி அதாவது 23% கல்விக்காக ஒதுக்கப்பட்டது என்பதைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த கல்விக்காகச் செலவழிக்கப்பட்ட 3,600 கோடி ரூபாயில் முன்பு பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் நண்பர் மணி அவர்கள் எடுத்துக் கூறியது

போல விளையாட்டுத் துறைக்கென ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிகமிகக் குறைவு என்று நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-55*

எங்களுடைய 7½ மாத ஆட்சிக் காலத்திலே நேரு விளையாட்டு அரங்கத்தை அமைத்து எழாவது தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளை மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினோம் என்பதை இந்த நேரத்திலே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட 13,000 ஆசிரியர்கள் பதிவு மூப்பு அடிப்படையிலே தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாலும் அந்த ஆசிரியர்கள் எந்தெந்த இடத்திற்குப் போடப்பட வேண்டும் என்ற இடத்திலே அதிகாரிகள் மூலமாகத் தவறுகள் நடைபெற்று 10,000, 20,000 ரூபாய் எல்லாம் பெறப்பட்டு, அந்த இடங்கள் எல்லாம் நிரப்பப்பட்டன என்பதை மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள் அதிலே ஈடுபட்டு ஏதோ காரியம் செய்ததைப் போலத் தெரிகிறது. எதிலே ஈடுபட்டார்; யாருக்கு வாங்கிக் கொடுத்தார் அல்லது யார் வாங்கியதாக அவருக்குச் செய்தி வந்தது; அதை என்னுடைய கவனத்திற்கு அவர் எப்போதாவது கொண்டு வந்தாரா; ஏதேனும் கடிதம் எழுதி இருக்கிறாரா என்று தெரிவிக்க வேண்டும்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தினமணியிலே கூட மிகச் சிறப்பாக அவர்கள் ஒரு தலையங்கமே எழுதியிருக்கிறார்கள். பதிவு மூப்பு அடிப்படையில் அவர்களுக்குப் போட்டது முறையாக நடந்திருக்கிறது. ஆனால் இடம் -- எந்தெந்த இடத்திற்கு அவர்கள் மாறுதல் செய்யப்பட வேண்டும் என்று கேட்ட இடத்தில்தான் தவறு நடந்திருக்கிறது என்று மிக....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தவறுகள் வேறு; கடந்தகால அரசிலே நடைபெற்றதைப்போல லஞ்சம் கொடுத்து வாங்குவது வேறு. தவறுகள் நடைபெறலாம். அது திருத்தப்படலாம். அவர் சொன்னதுபோல பணம் கொடுத்திருந்தால் அது ஒரு புகாராக அரசுக்குத் தெரிவிக்கப்பட்டால் கூடுமானவரையில் அரசு விசாரித்து குற்றம் நடைபெற்றிருந்தால் நடவடிக்கை எடுத்திருக்கும்.



**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகளில் கட்டடங்கள் சரியாக இல்லாத காரணத்தினால் இப்போது கல்விக்காக ஒதுக்கப்படும் பணத்தில் முதல் உரிமை அந்தக் கட்டடங்கள் கட்டுவதற்குத்தந்து பணம் ஒதுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்..

நல்லாசிரியர் விருதுகளைப் பொறுத்தவரையில் மேல்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள், உயர்நிலைப் பள்ளிகளின் தலைமை ஆசிரியர்கள் போன்றவர்களுக்கு நல்லாசிரியர் விருதுகள் கொடுக்கப்படுகின்றன. ஆரம்பப் பள்ளிகளில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு அந்த நல்லாசிரியர் விருதுகள் சரியான முறையிலே கொடுக்கப்படாத காரணத்தினால் அதிலே ஒரு தொய்வு ஏற்படுகிறது. ஆகவே தயவு செய்து அவர்களுக்கும் முறையாக நல்லாசிரியர் விருது கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

1998-99-ஆம் ஆண்டில் 50 மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக்காகக் கிட்டத்தட்ட 352 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருப்பதாகக் கூறியிருக்கிறீர்கள். வளர்ந்து வருகின்ற நாகரிக உலகத்திலே, இந்தக் காலத்திலே 50 மேல்நிலைப் பள்ளிகள் என்று கூறுவது மிகக் குறைவு. ஆகவே முதல் கட்டமாக, நீங்கள் இதைச் செயல்படுத்துவதால், குறைந்தது 100 பள்ளிகளிலாவது அந்த கம்ப்யூட்டர் சயின்ஸை அமைப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் ஒரு வகுப்பில் கிட்டத்தட்ட வாரம் ஒரு முறையாவது அல்லது 15 நாட்களுக்கு ஒரு முறையாவது 'Spoken English' என்று ஒரு பிரிவை ஏற்படுத்திக் கொடுத்தீர்களானால் நம்முடைய அரசாங்கப் பள்ளியில் படிக்கின்ற மாணவர்களும் சிறந்த முறையில் அந்த பிற பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு இணையாக ஆங்கிலம் பேசுவார்கள் என்று கூறிக்கொள்கிறேன். அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தது, புத்தறிவுப் பயிற்சி என்று அனைத்து ஆசிரியர்களுக்கும் 5 ஆண்டுகளில் கொடுக்கப்படும் என்று கூறியிருக்கிறீர்கள். 5 ஆண்டுகளில் புத்தறிவுப் பயிற்சி என்பதை '3 ஆண்டுகளில்' என்று மாற்றி, அனைத்து ஆசிரியர்களும் புத்தறிவுப் பயிற்சியை மிகக் குறுகிய காலத்தில் பெற ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இந்த அறிவொளி இயக்கம் மிகச் சிறப்பான திட்டம். யுனெஸ்கோ நிறுவனம்கூட அதைப் பாராட்டியிருக்கின்றது. ஆனால், இந்த அறிவொளி இயக்கத்திற்கு அரசு

செலவழிக்கின்ற தொகை மிகக் குறைவாக இருக்கின்றது. அந்த ஊழியர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளமும் மிகக் குறைவாக இருக்கின்றது. ஆகவே, அறிவொளி இயக்கத்திற்குச் செலவிடப்படும் தொகையை உயர்த்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

ராகிங் முறையைப் பொறுத்தவரையில் இந்த அரசு அதற்காகச் சட்டத்தை இயற்றி, அதைத் தடை செய்திருக்கின்றது. இருந்தாலும் ஒருசில கல்லூரிகளில் பழைய முறையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதில் தீவிர கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த 4 ஆண்டுகாலமாக `Guest Lecturers' என்று ஒரு போஸ்ட் உருவாக்கப்பட்டு கல்லூரிகளில் அவர்களுக்கு மணி ஒன்றுக்கு 80 ரூபாய் என்று கொடுக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதை பாண்டிச்சேரியிலே இருப்பதைப்போல - அந்த கெஸ்ட் லெக்சரர்களையும், பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்று அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, உண்ணாவிரதம்கூட இருந்திருக்கிறார்கள் பி.எட். பட்டதாரி ஆசிரியர்களை ஆறாம் வகுப்புகளிலேயிருந்து நியமிக்க வேண்டுமென்று கோரி. அவர்களுடைய கோரிக்கையையும் பரிசீலிக்க வேண்டும்.

3600 கோடி ரூபாயில் உயர் கல்வியைப் பொறுத்தவரையில் 464 கோடி ரூபாய் இந்த அரசால் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பொறுத்தவரையில் 3600 கோடி ரூபாயில் 464 கோடி ரூபாய் என்பது மிக மிகக் குறைவு. ஆகவே, உயர் கல்வியைப் பொறுத்தவரையில் அதற்கு இன்னும் அதிகப்படியாக தொகை ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த இருபது ஆண்டுகளில் கிட்டத்தட்ட ப்ளஸ் 2 வகுப்பு வரை அரசாங்கத்தால் - அது திராவிட முன்னேற்றக் கழக அரசாக இருந்தாலும் சரி, அ.தி.மு.க. அரசாக இருந்தாலும் சரி - இந்தியாவிலேயே ப்ளஸ் 2 வரையில் பாடத்திட்டங்களெல்லாம் மாற்றப்பட்டு, மிக நல்லமுறையிலே நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், உயர் கல்வியைப் பொறுத்தவரையில் கடந்த இருபது ஆண்டு காலமாக அந்தப் பழைய நடைமுறையிலேயே அது இருப்பதால் அந்த உயர் கல்வி முறையில், அதாவது கல்லூரிகளில் எல்லாம் பாடத்திட்டங்கள் மாற்றியமைக்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் நம்முடைய கல்வி சிறந்த முறையில்



உருவாக்கப்பட முடியும். ஏனென்றால் இந்த ஐ.ஏ.எஸ். படிப்புகளிலே அதிகமானவர்கள் தேர்ச்சி பெறாததற்கு இந்த உயர் கல்வியைச் சிறந்த முறையிலே நடைமுறைப்படுத்த முடியாததுதான் காரணம் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதேபோல், பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரையில், இங்கே இருக்கின்ற பல்கலைக்கழகங்கள் தேர்வு நடத்துகின்ற மையமாகத்தான் இருக்கின்றனவே ஒழிய அவை கல்லூரிகளை நடத்துகின்ற மையமாக இல்லை. ஆகவே, பல்கலைக்கழகங்கள் எல்லாமே - பல்கலைக்கழகங்கள் (குறுக்கீடு) பல் கலைக் கழகங்கள் (சிரிப்பு) (குறுக்கீடு) தெரியும், உட்காருங்கள். பல்கலைக் கழகம் .... உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உட்கார்ந்துகொண்டுதான் இருக்கிறார். (சிரிப்பு)

**திரு. கே. சுப்பராயன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திரு. சுந்தரம் அவர்கள் அநேகமாக வசமிழந்த நிலையிலே இருக்கிறார் என்று நான் கருதுகிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** நம்முடைய கல்வித் துறையைப் பொறுத்தவரையில் புதிய கண்டுபிடிப்புகள், புதிய ஆய்வுகள் நடத்தப்பட வேண்டும். அவ்வாறு புதிய கண்டுபிடிப்புகளும், ஆய்வுகளும் நடந்தப்பட்டால்தான் நாம் நினைத்தபடி அந்த ஐ.ஏ.எஸ். தேர்வில் அதிகப்படியானவர்களெல்லாம் தேர்ச்சி பெறுவதற்கு ஏற்பாடு செய்ய முடியுமென்று கூறிக்கொண்டு, நம்முடைய பல்கலைக்கழகங்கள் தேர்வு மையங்களைப்போல இல்லாமல், அந்தப் பல்கலைக்கழகங்கள கல்லூரிகளை நடத்த வேண்டும்; கல்லூரிகளை நடத்துவதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கூறிக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கு. மனோகரன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதியாண்டில் கல்வி மானியக் கோரிக்கையில் என்னையும் பேச அனுமதித்த மாண்புமிகு முதல்வரவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கும் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன்.

சொல்வதைச் செய்யும் கலைஞர் அரசு, சொல்லாததையும்கூட இந்தக் கல்விக்காக - கல்வி மானியக் கோரிக்கையிலே வாரி

வழங்கியிருப்பதற்காக இன்றைக்கு நாட்டிலுள்ள மக்களெல்லாம் சிறப்பான இந்த பட்ஜெட்டை வரவேற்கின்றனர் இந்தியாவின் எதிர்காலம் கிராமங்களில்தான் இருக்கிறது என்பதற்கேற்ப படிப்பறிவற்ற கிராம மக்களின் வாழ்வில் விளக்கேற்றிட இந்த பட்ஜெட்டிலே எண்ணற்ற பல திட்டங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

குறிப்பாக மொத்த பட்ஜெட் தொகையிலே ரூ. 3601 கோடியைக் கல்விக்காக ஒதுக்கிக் கடந்த ஆண்டைவிட 663 கோடியை அதிகமாக ஒதுக்கி, கிராமக் கல்வியை ஊக்குவிக்க மாண்புமிகு முதல்வரவர்களும், மாண்புமிகு கல்வியமைச்சரவர்களும் பாடுபட்டுள்ளதை நான் நன்றியோடு இந்த நேரத்திலே கூற விரும்புகிறேன். எண்ணற்ற திட்டங்கள்; கல்வியிலே புதியதாக 300 தொடக்கப் பள்ளிகள், 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக ஆக்கும் திட்டம், 80 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக ஆக்கும் திட்டம், 40 உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக ஆக்கும் திட்டம்; அதுபோல கிராமத்திலே இருக்கும் மாணவர்கள் சிறப்பான கல்வி நிலையை எய்திட மேல்நிலைப் படிப்பில் அவர்களுக்கு 15 சதவீத இட ஒதுக்கீடு என்று பல அரிய திட்டங்களையெல்லாம் நிதிநிலை அறிக்கையிலே கொடுத்து தேனான அறிவிப்புகளையெல்லாம் கல்வி மானியத்திலே வழங்கியுள்ளார்கள் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12-05

அதுமட்டுமல்ல, 200 பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்களும், 40 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்களும், 20 உயர் மேல்நிலைப் பள்ளிகளுக்கு தண்ணீருடன்கூடிய கழிப்பிட வசதியும், 50 மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி பாட முறையும், 1385 ஓராசிரியர் பள்ளிகளுக்குக் கூடுதல் ஆசிரியர் நியமனமும் அதுபோல, 500 பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பு அறை கட்டடம் கட்டும் திட்டமும், 550 அறிவியல் கூடங்கள், 250 ஆய்வகக் கூடங்கள், 50 அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணிப்பொறி சாதனம் என அடுக்கடுக்கான திட்டங்களைக் கொடுத்து, தமிழகத்தை இந்தியாவிலேயே கல்வியில், ஒரு முன்னேறிய மாநிலமாக ஆக்க வேண்டுமென்பது தலைவர் கலைஞர் அவர்களுடைய எண்ணம். அந்த எண்ணம் இந்த ஆண்டு சிறப்பான முறையில் ஈடேறி வருவதைக்கண்டு கிராமப் பகுதியிலே இருக்கின்ற என்போன்ற மக்கள் எல்லாம் இந்த அரசைப் பாராட்டிக்கொண்டு வரும் அதேவேளையில், கலைஞர் ஆட்சியில் அடிப்படைத் தேவைகள், கல்வி வளர்ச்சியிலே சிறப்பான வகையில் எய்தி வருவதை இன்று நாடே பாராட்டிக்கொண்டிருக்கும் வேளையில், இந்த ஆட்சியைக் கலைப்போம், கலைப்போம் என்றும், விரைவில் இந்த ஆட்சி இருக்காது என்றும்



நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக பத்திரிகை வாயிலாக 'நாங்களும் இருக்கின்றோம் என்று தெரிவிக்கும் வகையில் அறிக்கை கொடுத்து வரும் இந்த அரசியல்வாதிகள் எண்ணிப் பார்க்க வேண்டும். கடந்த காலங்களிலே இவ்வாறு அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டதா என்று எண்ணிப் பார்க்க வேண்டும். இன்று, கலைஞர் ஆட்சியிலே பல பள்ளிக்கூடங்கள் புதியதாக திறக்கப்படுகின்றன. அன்றைக்கு இதேபோல், பள்ளிக்கூடங்கள் திறக்கப்பட்டதா என்றால் இல்லை. அன்றைக்கு மகாபலிபுரம் சாலையிலே நூற்றுக்கணக்கான பளிங்கு மாளிகைகள் கட்டப்பட்டன. இன்றைக்கு பள்ளிக்கூடங்களாக தலைவர் ஆட்சியிலே திறக்கப்படுகின்றன. இன்றைக்குப் பள்ளிகளிலே பல இடங்களிலே கணிப்பொறி பயிற்சிகள் எல்லாம் இந்த ஆட்சியிலே நாம் ஏற்படுத்தி இருக்கின்றோம். அதை அன்றைக்கு அவர்கள் செய்தார்களா என்றால் இல்லை. ஆடம்பர பங்களாக்களும், சொந்தமாக, வெளியில் சென்றுவர சொகுசு பஸ்களையுமே அறிமுகப்படுத்தினார்கள். உயர்நிலைப் பள்ளிகளுக்கு தண்ணீருடன்கூடிய கழிப்பிட வசதி செய்யப்பட வேண்டுமென்று இன்றைக்கு பல திட்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அன்றைக்கு தோழியுடன் குளிக்க, மகாமகக் குளம் முதல் மகாபலிபுரம் நீச்சல் குளம் வரைதான் கட்டப்பட்டன. அறிவியல் கூடங்கள், கூடுதல் வகுப்பு அறைகள் என்று இன்றைக்கு எத்தனையோ திட்டங்களை இந்த அரசு செய்து வரும் வேளையில் அன்றைக்கு ஆயிரம் கார் பவனி, ஆயிரக்கணக்கில் பட்டுப் புடவைகள் என்று தனது சொந்த நலத்தை மட்டுமே எண்ணி இருந்தவர், இன்றைக்குக் கலைப்போம் கலைப்போம் என்று கூறிக்கொண்டு வருகிறார்கள். இந்த நேரத்திலே பராசக்தி படத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் எழுதிய வசனம்தான் ஞாபகத்திற்கு வருகிறது. 'சாலை ஓரத்தில் வேலையற்றதுகள், வேலையற்றவர்களின் நெஞ்சில் விபரீத எண்ணங்கள்'. அந்த வரிதான் இன்றைக்கு நினைவுக்கு வருகிறது' பொது மக்களிடம். அவை யாவும் அவர்கள் நினைக்கும் நினைப்பு. அது பகல் கனவாக ஆகும் என்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டிலே குறிப்பாக எங்களது தர்மபுரி நகரிலே சில பிரச்சினைகள் இருக்கின்றன. தர்மபுரி தொகுதி மிகவும் பிற்பட்ட தொகுதி என்பதை நீங்கள் எல்லாம் அறிவீர்கள். சென்ற ஆண்டு முதல் சுயநிதி அடிப்படையில் இயங்கி வந்த கலைக் கல்லூரியில், எம்.காம்., பி.பி.ஏ., வகுப்புகளில் இந்த ஆண்டு மாணவர்களைச் சேர்க்க வேண்டாம் என்று அரசு நிறுத்தி வைத்துள்ளது. மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களும், நிதிநிலை

எவ்வாறு இருப்பினும், தர்மபுரி கலைக் கல்லூரியில் எம்.காம்., பி.பி.ஏ., வகுப்புகளைத் தொடர்ந்து நடத்த ஆசிரியர்களை நியமித்து, அந்தக் கல்லூரியில் மாணவர்கள் பயில வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் பணிவாகக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-10*

அதேபோல, தர்மபுரி நகரில் ஔவையார் மேல்நிலைப் பள்ளி, சுமார் 5 ஆயிரம் மாணவிகளைக் கொண்டு இயங்கி வருகிறது. அந்த மாணவிகள் எல்லாம் படிக்க வசதி இல்லாமல் தர்மபுரி நகரின் மையப் பகுதியிலேயுள்ள அந்தப் பள்ளிக்கு மிகுந்த சிரமப்பட்டு வருகிறார்கள். அந்தப் பள்ளிக்கு அருகில் இருக்கும் நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான இடத்தையோ அல்லது பள்ளிக்குப் பக்கமாக இருக்கும் வன இலாக்காவிற்குச் சொந்தமான இடத்தையோ மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் பெற்று, அந்தப் பள்ளிக்குக் கட்டடம் கட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தர்மபுரி, மாவட்டத்தின் தலைநகராக இருக்கின்றது. அங்கு அரசின் சார்பாக எந்தவிதமான ஒரு பாலிடெக்னிக்கும் இல்லை, (மணியடிக்கப்பெற்றது) தயவுசெய்து மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள், அரசினர் பாலிடெக்னிக் ஒன்றை தர்மபுரியில் ஏற்படுத்த உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன், சென்ற வாரம் நாங்கள் அந்தமான் சென்றிருந்தோம், அந்தமானிலே படிக்கும் மாணவர்கள் எல்லாம் இங்கு தமிழகம் வந்து நுழைவுத் தேர்வு எழுதித்தான், எம்.பி.பி.எஸ்., அதேபோல் பல் மருத்துவம் போன்ற மேற்படிப்பிற்குப் படிக்க வருகிறார்களாம். அங்கிருந்து 20, 30 மாணவர்கள் வந்து இங்கு நுழைவுத் தேர்வு எழுதும்போது, ஒருவர், இருவருக்குத்தான் இடம் கிடைக்கின்றது. ஆகவே, பெரிய வேண்டுகோளாக, அங்கு இருக்கும் தமிழர்கள் வைத்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டிலே உள்ளதுபோல், அந்தமானிலேயே ஒரு நுழைவுத் தேர்வு மையத்தை வைத்து அங்கிருக்கும் தமிழர்களுக்கு நாம் வாழ்வளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே வேண்டுவதுடன், இந்தச் சிறப்பான வாய்ப்பைக் கொடுத்த பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு மீண்டும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

***திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் மீது ஒரு சில கருத்துக்களை நான் முன்வைக்க விரும்புகிறேன்.



இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே, 16 வகைப்பட்ட பல்வேறு விஷயங்கள் பற்றிய குறிப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் குறிப்புகளைப் பற்றி விரிவாகப் பரிசீலித்து, ஒவ்வொரு குறிப்பின்மீதும் கருத்துக்களைச் சொல்வதற்கு உரிய கால வாய்ப்பு இல்லை. இருந்தாலும், குறிப்பான சில விஷயங்களை நான் சுட்டிக்காட்டுவது அவசியம் என்று கருதுகிறேன்.

"இளம் தலைமுறையினரின் கல்வி மீதுதான் எதிர்கால மனித குலத்தினுடைய நலன்களே சார்ந்திருக்கின்றன" என்று உலகப் புகழ் பெற்ற மேதை கார்ல் மார்க்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். இதிலேயிருந்து என்ன புலப்படுகிறது என்றால், கல்விக்கு, தொடக்கக் கல்விக்கு நாம் மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது இதிலே உள்ளடக்கப்பட்டிருக்கிறது. ஆனால், நான் விரிவான பல விஷயங்களைச் சொல்ல வேண்டும் என்று நினைத்தாலும், அதற்குரிய காலம் இல்லையென்ற வருத்தத்தோடு குறிப்பான விஷயங்களை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன்.

1947-லேயிருந்து இன்றைக்கு வரையிலும், அதேபோல் 1952 ஆம் ஆண்டின் முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலேயிருந்து, இன்றைக்கு ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையிலும் கல்வித் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகை என்பது கல்வித் தேவைக்குப் பொருத்தமானதாக இல்லை. அதிலே குறிப்பாக, சுதந்திரம் பெற்றதற்குப் பின்னர் ஒவ்வொரு கட்டத்திலேயும் இந்தக் கல்வித் துறை குறித்து ஆராய்ந்த பெருமக்களும் மத்திய அரசும் குறிப்பிட்ட விஷயங்களைக் கவனத்தில் கொள்ளவில்லை என்பதை நம்மால் காண முடிகிறது.

குறிப்பாக 1964-66-லே போடப்பட்ட கோத்தாரி கமிஷன்கூட, தேசிய வருமானத்தில் 6 சதத்தைக் கல்விக்காக ஒதுக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால், இன்றைக்கு நாம் கல்விக்காக ஒதுக்கியிருப்பது என்ன என்று பார்த்தால், 1951-52-லே 1.2 சதவீதம், 1961-62-ல் 2.7 சதவீதம், 1971-72-ல் 3.3 சதவீதம், 1981-82-ல் 3 சதவீதம், 1991-92-ல் 3.4 சதவீதம், 1992-93-ல் 3.4 சதவீதம், 1996-97-ல் 3.8 சதவீதமாக இருக்கிறது. ஆனால் 6 சதவீதம் ஒதுக்க வேண்டும் என்று ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை கொடுத்ததற்குப் பின்னரும்கூட, நம்முடைய ஒதுக்கீடு என்பது பரிந்துரைகளின் அடிப்படையில், தேவைகளின் அடிப்படையில் இல்லையென்பதை நம்மால் காண முடிகிறது. ஆனால், அதே நேரத்தில் நம்முடைய ஒதுக்கீடுகள், எதற்குத் தேவையோ அதற்கு இல்லாமல், எதற்குத் தேவை இல்லையோ அதற்கு அதிகமாக ஒதுக்கப்பட்டுவிடுகிறது. ஒரு துரதிருஷ்டம் என்னவென்றால், இன்றுவரையிலும் தொடக்கக்

கல்விக்கு ஒதுக்குகிற ஒதுக்கீடு குறைந்துகொண்டே வருகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் 56 சதவீதம் கல்வித் துறையில் தொடக்கக் கல்விக்கு ஒதுக்கப்பட்டது. அதே ஒதுக்கீடு ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பார்த்தீர்களானால் 36 சதவீதமாகக் குறைந்துவிட்டது. தொடக்கக் கல்விக்கு இப்படி வெட்டுவது என்பதும் உண்மையிலேயே சமூகத்தின் அடித்தளத்தைத் தகர்க்கிற ஒரு வேலை இருந்து கொண்டிருக்கிறது என்பதை இங்கே நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். மத்திய அரசின் கொள்கையைப் பற்றித்தான் நான் இங்கே குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டிருக்கிறேன். என்பதும். குறைப்பது கொலையாகும். அப்படித்தான் நம்முடைய மத்திய அரசின் இந்த

*பிற்பகல் 12-15*

1992-லே 'யுனிசெஃப்' ஓர் அறிக்கையிலே குறிப்பிட்டது. அது இந்தியக் கல்வி முறையைப்பற்றிய ஒரு எக்ஸ்ரே காப்பி மாதிரி, இந்திய அரசைப் பற்றிய எக்ஸ்ரே காப்பி மாதிரி அமைந்திருக்கிறது. அந்த யுனிசெஃப்' சொல்கிறது. வேலை கொடுக்க முடியாத அளவுக்குப் பட்டதாரிகளையும், தொழில்நுட்ப நிபுணர்களையும் தயாரித்து, தொழில் வளம் பெற்ற நாடுகளுக்கு இந்தியா ஏற்றுமதி செய்து கொண்டிருக்கிறது. தொடக்கக் கல்விக்கு முன்னுரிமை கொடுக்காமல், உயர் கல்விக்கும். தொழில்நுட்பக் கல்விக்கும் முன்னுரிமை கொடுத்து, அந்த உயர் கல்வி பெற்றவர்களையும், தொழில்நுட்ப ஞானம் பெற்றவர்களையும் பயன்படுத்திக்கொள்கிற அளவுக்கு இந்தியாவின் சமூக நிலைமை இல்லாத காரணத்தால், இந்திய, பணத்தில் கல்வி பெற்றவர்கள் தங்கள் அறிவாற்றலை வெளிநாடுகளின், தொழில் வளர்ச்சி அடைந்த நாடுகளின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்திக் கொள்கிற. ஒரு சகித்துக்கொள்ள முடியாத விபரீதம் இந்தியாவில் நடந்து கொண்டிருப்பதை நான் வருத்தத்தோடு இந்தப் பேரவையில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இன்னொரு, மிக முக்கியமான விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன். நேரம் இல்லை என்பதற்காக முன்கூட்டியே தெரிந்துகொள்ள விரும்புகிறேன். கல்வி கொடுப்பது யாருடைய கடமை? கல்வி கொடுப்பது அரசின் கடமை. அது மாநில அரசோ, மத்திய அரசோ. ஆனால், சிறுகச் சிறுகக் கல்வி கொடுக்கின்ற கடமைப் பொறுப்பில் இருந்து அரசு தன்னை விடுவித்துக் கொண்டே இருப்பது, எதிர்காலச் சமுதாயத்தால் மன்னிக்கப்பட முடியாத ஒரு தவறாகும் என்பதை நான் எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஒரு பிரஜை இந்திய மண்ணில் பிறந்துவிடுகிறான் என்றால், அந்த பிரஜையின் கல்வி பெறுகின்ற உரிமையை அரசு பறிக்கக் கூடாது. கல்வி பெறுகின்ற வாய்ப்பை முழுக்க, முழுக்க வழங்கவேண்டும். அப்படி வழங்குகின்ற சமுதாயச் சூழல் இந்தியாவில் இல்லாததால், கோடிக்கணக்கான மக்கள், கோடிக்கணக்கான சிறுவர்கள், அறிவும், ஆற்றலும், திறமையும் தேங்கிக் கிடக்கின்ற அந்த உள்ளங்கள், தங்கள் ஆற்றலை வெளிப்படுத்த, சமூக வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்கின்ற வாய்ப்பு இல்லாமல் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கிடக்கிறார்கள். இதுவெல்லாம் அக்கறையோடு கவனிக்கப்பட வேண்டிய சமூக விஷயங்கள் என்று நான் இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுந்தரம் அவர்கள்கூடச் சொன்னார்கள். வேதனைப்பட்டேன். அ.இ.அ.தி.மு.க.வினுடைய பிரதிநிதியாகக் குறிப்பிட்டார்கள். நாடாளுமன்றத்தில் ஒரு குழு போடப்பட்டது. கடந்த ஐக்கிய முன்னணி ஆட்சியில் அந்தக் குழு போடப்பட்டது. தனியார் பள்ளி ஆசிரியர்களின் பணி நிலையைப் பற்றி ஆய்வு செய்வதற்காகப் போடப்பட்டது. அதற்கு எங்கள் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த குருதாஸ் தாஸ்குப்தா அவர்கள் தலைமையேற்று இங்கே வந்து, தமிழகத்தில் ஆய்வு செய்துவிட்டு, அறிக்கை ஒன்றை வெளியிட்டார்கள். இந்தியாவிலேயே தனியார்ப் பள்ளிகள் அதிகமாக இருக்கின்ற மாநிலம் தமிழ்நாடுதான் என்று குறிப்பிட்டார்கள். இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தனியார்ப் பள்ளிகளுக்கு உரிமம் அதிகமாக வழங்கப்பட்டதன் நோக்கம் என்ன? ஏதோ ஒன்றை எதிர்பார்த்து அந்தக் காரியங்கள் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் செய்யப்பட்டன. அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மிக அதிகமான அளவுக்கு தனியார் பள்ளிகளுக்கு உரிமம் கொடுத்ததன் மூலம் மாணவர்கள் அரசின் மூலம் கல்வி பெறுகின்ற உரிமையைப் பறித்திருக்கிறார்கள். ஏழைகள் கல்வி பெறமுடியாமல் தடுத்திருக்கிறார்கள். இன்னொன்று. அந்த மாணவர்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கின்ற ஆசிரியர்களின் நலன் முற்றிலும் பறிக்கப்பட்டுக் கிடக்கின்றன. இதற்கெல்லாம் காரணம், அ.இ.அ.தி.மு.க. ஆட்சிதான். அவர்கள் ஆண்ட காலத்தில்தான் கல்வி பெறுவதை வியாபாரமாக ஆக்கி, வியாபாரம் செய்வதற்கு உரிமம் வழங்குவதிலும் பல முறைகேடுகளில் ஈடுபட்டார்கள் என்பதை நான் வேதனையோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். அந்த வேதனையைச் சொல்லுகின்ற அதே நேரத்தில். ஒரு வகையில் சொன்னால், சமூக விரோதச் செயல் என்றுகூடக் குறிப்பிடலாம். தனியார்ப் பள்ளிகளை அதிகமாக நடத்திக் கொள்கின்ற உரிமத்தைக்

கொடுத்ததன் மூலம், ஆசிரியர்களும், மாணவர்களும் ஒருசேர பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். எப்படிப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றால். அதிகப் பணம் கட்டினால்தான் அவன் கல்வியைப் பெறமுடியும் என்ற நிர்ப்பந்தம் உள்ளது. நான் கேட்க விரும்புகிறேன். ஏழைகள் வீட்டில் பிறந்த குழந்தை, அந்தத் தனியார்ப் பள்ளியில் போய்க் கல்வி பெற முடியுமா? முடியாது. அதுபோன்று, தனியார்ப் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு அரசு வழங்குகின்ற அந்தச் சம்பளம் இன்றைக்கும் வழங்கப்படுவதில்லை. நான் அந்த விவரங்களைக் குறிப்பிட விரும்புகிறேன். இத்தகைய நிலைமைகளை இன்றைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி மாற்றி அமைக்க வேண்டும் என நம்முடைய மரியாதைக்குரிய பேராசிரியர் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுக்கும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

*பிற்பகல் 12.20*

சென்னையில் தனியார்ப் பள்ளிகள் எவ்வளவு முறைகேடாக நடந்து கொண்டிருக்கின்றன என்பதற்கு மிகத் தெளிவான உதாரணம், ஆதர்ஷ் மெட்ரிக்குலேஷன் பள்ளி. பஞ்சாபியர்களால் நடத்தப்படுகின்ற, அவர்களுடைய அசோசியேஷனால் நடத்தப்படுகின்ற இந்தப் பள்ளியில் ஏறத்தாழ 900 ஆசிரியர்கள் இருக்கிறார்கள். 13,000 மாணவர்கள் இருக்கிறார்கள். மாணவர்களிடம் வசூலிக்கின்ற கட்டணம் என்பது சாதாரணக் கட்டணம் அல்ல. அவர்கள் எந்த அளவிற்கு வசூலிக்கிறார்கள் என்பதை நான் இங்கே மாநில அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். ஒன்றாவது வகுப்பிலேயிருந்து ஐந்தாம் வகுப்பு வரை term ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் வாங்குகிறார்கள். ஆறாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை term ஒன்றிற்கு ஆயிரத்து நூறு ரூபாய் வாங்குகிறார்கள். அதேபோல, ப்ளஸ் 1, ப்ளஸ் 2-க்கு ஆயிரத்து அறுநூறு ரூபாய் term ஒன்றிற்கு வாங்குகிறார்கள். அவர்களுடைய வருட வருமானம் மட்டும் ஆறரைக் கோடி ரூபாய். ஆனால், ஆசிரியர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற சம்பளம் மற்றும் இதரச் செலவுகள் வகையில் இரண்டரைக் கோடி ரூபாய்தான் வருகிறது. கல்வி எவ்வளவு வளமான வணிகச் சரக்காக மாறியிருக்கிறது என்று பாருங்கள். நான், மாநில முதலமைச்சர் அவர்களுக்கும், பேராசிரியர் அவர்களுக்கும் தயவுசெய்து தெரிவித்துக் கொள்ளவிரும்புவது என்னவென்றால், இந்தப் பேரவையில் சட்டரீதியான உத்தரவாதத்தை ஏற்படுத்துங்கள். இன்னொரு விஷயம் தெரியுமா? மாநிலத்திலேயே மிக உயர்ந்த தகுதி பெற்ற மாணவர்களை உருவாக்கி இருப்பது இந்த



ஆதர்ஷ் மெட்ரிக்குலேஷன் பள்ளிதான். ஆனால், தகுதியும், திறமையும் வாய்ந்த, ஆற்றல் மிக்க மாணவர்களை உருவாக்கிய அந்த ஆசிரியர்களுக்கு, அரசு வழங்குகின்ற சம்பளத்தில் 50 விழுக்காடுகூட இல்லையென்றால், இதுதான் தகுதிக்கு வெகுமதியா? இந்த முறையை அனுமதிக்கலாமா? அந்த ஆசிரியர்கள் இப்பொழுது கிளர்ச்சியிலே இறங்கியிருக்கிறார்கள். பல கிளர்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்தக் கிளர்ச்சிகள் ஒரு முடிவிற்கு வரவேண்டுமானால், சட்டரீதியான முறையில் தீர்வு காண வேண்டும். அவர்கள் சொல்கிறார்கள் – அடுத்த ஆண்டு வேண்டுமானால் கொடுப்பார்களாம்; அதுவும் இப்போது கிளர்ச்சி செய்தவுடன். இன்றைய ஜூ.வி.-யிலேகூட வந்திருக்கிறது. அந்தப் பள்ளியினுடைய பொறுப்பாளி சொல்லியிருக்கிறார்; பஜாஜ் சொல்லியிருக்கிறார் – தேவையில்லாத அளவிற்கு ஆசிரியர்களை அதிகமாக எடுத்து விட்டதாம், முன்னால் இருந்த நிர்வாகம். இதிலிருந்து என்ன தெரிகிறது தெரியுமா? அரசுச் சம்பளத்தைத் தங்களுக்கு வழங்க வேண்டுமென்று அந்த ஆசிரியர்கள் போராடினார்களே, அவர்கள் கழுத்தை வெட்டுவதற்கும், பழி தீர்ப்பதற்கும், ஆசிரியர்கள் எண்ணிக்கை அதிகம் என்று சொல்லி, எதிர்காலத்தில் ஆசிரியர்கள் எண்ணிக்கையைக் குறைக்கின்ற உத்தியை அந்த நிர்வாகம் மேற்கொள்ளக்கூடும். ஆசிரியர்கள் அவ்வாறு பழி வாங்கப்படக் கூடாது. அவர்களுக்கு அரசுச் சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஒரேயொரு விஷயத்தைச் சொல்லி முடித்து விடுகிறேன். திருநெல்வேலியிலே ஒரு பிரச்சினை. திருநெல்வேலி, நாங்குனேரியில் கைலாசபதி இந்து நடுநிலைப் பள்ளியில் ஆதிதிராவிடர்களை அனுமதிப்பதில்லை.

**•மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதுபற்றி நீண்ட நேரம் பேச வேண்டிய அவசியம் இல்லை என்பதற்காகச் சொல்கிறேன். எல்லா மாணவர்களும் சேரலாம். ஒரு ஆதிதிராவிட மாணவர்கூட அங்கு படிக்கின்றார். சேர்க்கவில்லை, சேர்க்க மறுக்கிறார்கள் என்று அரசுக்குப் புகாராக அனுப்பினால், அரசு விசாரிக்கலாம்.

**• திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய அந்தரங்கத்தின் மீதும், இந்த மாநில அரசின் அந்தரங்கத்தின் மீதும் எனக்கு முழு நம்பிக்கை உண்டு. ஆனால், விஷயம் என்னவென்றால், அங்கே இருக்கக்கூடிய அந்தப் பள்ளி நிர்வாகிகள், 'யாரும் வந்து சேரவில்லை' என்று மற்றவர் கருதுகின்ற அளவிற்கு, சில காரியங்களைத் தங்களுடைய

புத்தி நுட்பத்தால் செய்துவிடுகிறார்கள். இந்த விஷயத்தினுடைய உள்நோக்கம் என்ன என்பது குறித்து ஊடுருவிக் கண்டறிய வேண்டும் என்பதை மட்டும் நான் மாநிலக் கல்வி அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்குரிய விவரங்கள் என்னிடம் இருக்கின்றன. அந்த விவரங்களை, காலங்கருதி இங்கே தெரிவிக்க விரும்பவில்லை. (மணியடிக்கப்பெற்றது) நிறைவாக ஒரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லி முடித்துக்கொள்கிறேன். நிறைய முக்கியமான சம்பவங்கள் இருந்தாலும்கூட, உங்களோடு ஒத்துழைக்க வேண்டும் என்பதற்காக முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நேரமில்லை, அமைச்சருடைய பதிலுரை இருக்கின்றது.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்பொழுது இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் இருக்கின்றார்கள். மத்திய அரசில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான சம்பளம் வழங்கப்படுகிறபோது, மத்திய அரசுப் பணியில் ஈடுபடுகின்ற ஆசிரியர்களுக்கு இணையான சம்பளம் தமிழ்நாட்டிலேயும் வழங்கப்பட வேண்டுமென்று இங்கு ஆசிரியர்கள் எதிர்பார்க்கிறார்கள். அந்தக் கோரிக்கை நியாயமானது. அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று பட்டதாரி ஆசிரியர்கள் மாநாட்டிலேகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, அந்த விஷயத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி, முடித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. எஸ். திருநாவுக்கரசு.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வேண்டுகோளாக வைக்க விரும்புவது – என்னுடைய அறந்தாங்கி தொகுதியில் ஏம்பல், மீமிசல், அமரடக்கி, நாகுடி ஆகிய இடங்களில் உள்ள உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும், மணமேல்குடியில் உள்ள பெண்கள் உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகவும் மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்; தரம் உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதுபோல, பெரியாலூர் கிழக்கு, வாடிக்கொல்லை ஆகிய ஊர்களிலுள்ள நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகத்தரம் உயர்த்தித்தர



வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கோங்குடி ஊராட்சியில் உள்ள அல்லம்பட்டி கிராமத்தில், அதாவது அந்தப் பகுதியில் தொடக்கப் பள்ளி இல்லை. எனவே, அல்லம்பட்டியில் தொடக்கப் பள்ளி ஒன்றினைத் தொடங்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

நேரம் மிகக் குறைவாக இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொல்ல வசதியாக, பொதுவான சில கருத்துக்களைப் பின்னாலே சொல்வதற்கு முன்பு, எதிர்க்கட்சி வரிசையிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில், பல்வேறு சங்கங்கள், அமைப்புகளின் சார்பில் சில பிரச்சினைகளை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற நோக்கத்தோடு கோரிக்கைகளாகத் தருகிறார்கள். அந்தக் கோரிக்கைகளை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வரவேண்டியது என்னுடைய கடமையாகும். அதனடிப்படையில் ஒன்றிரண்டை, விளக்கமாக இல்லாமல், பிரச்சினைகளை மட்டும் சொல்லி, அவற்றையெல்லாம் கல்வி அமைச்சர் அவர்களிடத்திலேயே தந்துவிடுகிறேன். முதலிலே மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, ஏற்கெனவே கடந்த ஆட்சியிலே அனுமதி தரப்பட்டு நடைபெற்று வந்த ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலே படித்த ஏறக்குறைய 25,000 மாணவர்கள் தேர்வு எழுதி முடித்த நிலையில் சான்றிதழ் கிடைக்காமலும், 2 ஆண்டுகள் பயிற்சி முடித்த நிலையில் தேர்வு எழுதாமலும், ஓராண்டு படித்து முடித்து 2-ஆவது ஆண்டிலே படிக்க முடியாமலும், இப்படிப் பல்வேறு நிலைகளிலே பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய பெற்றோர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இது அந்த மாணவர்களின் தவறல்ல. அவர்களைப் படிக்க வைத்த பெற்றோர்களின் தவறும் அல்ல. ஏற்கெனவே இருந்த ஆட்சியின் தவறு.

அந்த ஆட்சியில் இது ஒரு வியாபாரமாக அனுமதி அளிக்கப்பட்டுத் தவறான முறையிலே, முறையற்ற இடங்களில்கூடப் பள்ளிகள் தொடங்கப்பட்டுவிட்டன. ஆனால், அரசு அனுமதி தந்த காரணத்தினாலேயே அதை நம்பி 10,000 ரூபாய், 20,000 ரூபாய் என்று பலரும் தங்களுடைய உடைமைகளை விற்றுவிட்டு, அந்தப் பள்ளிகளிலே இடங்களைப் பெற்று, பயிற்சியை முடித்து இன்றைக்கு வயது வரம்பும்

| | பக்கங்கள் |
|---|---|
| **5. அரசினர் தீர்மானம்—** | |
| தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டமுன்வடிவு மீதான ஆய்வுக் குழு பேரவையில் அறிக்கை அளிப்பதற்கான காலவரையறையை நீட்டித்தல் | 667-668 |
| **6. அறிவிப்பு—** | |
| அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டம் | 668 |
| **7. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி | |
| கோரிக்கை எண் 17 - கல்வி - தொடர்ச்சி | 668-742 |
| திரு. மு. அப்பாவு | 668-674 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 674-680 |
| * திரு. டி. மணி | 680-684 |
| திரு. பி. ஆர். சுந்தரம் | 685-689 |
| திரு. கு. மனோகரன் | 689-692 |
| * திரு. கே. சுப்பராயன் | 692-698 |
| திரு. எஸ். திருநாவுக்கரசு | 698-710 |
| திரு. ச. அழகிரி | 710-716 |
| * மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 670-673, 675-679, 682,686, 697, 700-701, 705,707, 708-709, 712, 716-739 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** | 742-743 |


21908.7



அகில இந்திய அமைப்பு பொறுப்பாக இருக்கிற காரணத்தால் அவர்களும் அதை அனுமதிக்க வேண்டும். அப்படி எடுக்க ஆரம்பித்தாலும், 1998 ஆம் ஆண்டு எடுக்க ஆரம்பித்தால், ஒரு ஆண்டுக்கு 800 அல்லது 850 பேர்களைத் தனியாகத் தெரிவு செய்து இடம் தரமுடியும். அப்போது எத்தனை ஆண்டு காலம் ஆகும் என்பதையும் பார்க்க வேண்டும், அவர்கள் படிக்க வருவார்களா என்பதையும் பார்க்க வேண்டும். New Entrants என்ற முறையில், புதிதாகச் சேருகின்றவர்கள் என்ற முறையில் விண்ணப்பித்தால் அதைக் கருதிப் பார்க்கலாம். அப்படி இடம் தரமுடியுமா என்பது குறித்தும் அரசு ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. அத்தனை பேருக்கும் சேர்த்துப் பரிகாரம் காணமுடியாது. மேலும், செகண்டரி கிரேட் படித்தவர்கள் 35 ஆயிரம் பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். படித்துவிட்டு வேலை இல்லாமல் இருந்தால் என்ன, படிக்காமல் வேலை இல்லாமல் இருந்தால் என்ன என்பதைக் கருதிப் பார்த்து மாண்புமிகு உறுப்பினர் திருநாவுக்கரசு அவர்கள் விளக்க வேண்டும்.

பிற்பகல் 12-30

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வித் துறைக்குப் பொறுப்பேற்று இருக்கிற அமைச்சர் அவர்களும் மிகுந்த அறிவாற்றல், மதிநுட்பம் நிறைந்தவர்கள். நான் கேள்விப்பட்டேன், இந்தப் பிரச்சினையில், ஆந்திரம், கர்நாடகம் போன்ற மாநிலங்களில், இதுபோன்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது அவர்கள் அதை அலசிப் பார்த்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மறுபடியும் குறுக்கிடுவதற்கு மன்னிக்க வேண்டும். ஆந்திராவில் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. எப்போது என்றால், 1982-83 ஆம் ஆண்டிலே ஏற்பட்டது. இந்தப் பிரச்சினையாலே இலட்சம் பேர் பாதிக்கப்பட்டார்கள். ஆந்திர அரசு நாம் சொல்வதுபோல் அவர்களுக்கெல்லாம் மறு பயிற்சி வழங்குவதற்காக ஒரு திட்டத்தை வகுத்துச் செயல்படுத்தியது. அதற்காக ஒரு தேர்வு வைத்து அவர்களைப் பொறுக்கி எடுத்து — அவர்கள் அத்தனை பேரையும் அல்ல — சில ஆயிரம் பேரை எடுத்தது. அதற்கும் நீதிமன்றம் மறுபடியும் தடை விதித்து அத்தனையும் ரத்தாகிவிட்டது.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சரியாக நடத்தப்பட்டு வந்த சில பள்ளிகளில் பயின்றவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். புதுக்கோட்டை மாவட்டத்திலே உள்ள புனித அன்னையர் ஆசிரியர் பயிற்சிப்பள்ளி — கீரனூரிலே — கன்னியாஸ்திரிகளால் நடத்தப்படுவது மற்றும் ஆவுடையார்கோயிலில் பாதிரியார்களால் நடத்தப்படுகின்ற பள்ளி போன்ற பல பள்ளிகள் தமிழ்நாடு முழுவதும் இருக்கின்றன. 1984-ல் தொடங்கி நடத்தப்பட்டு வந்த பள்ளிகளில், 1990 வரை படித்தவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறார்கள். 1991-லே படித்தவர்களில் பாதிப் பேர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கியிருக்கிறார்கள். 1992-லே தேர்வு எழுதியவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கவில்லை. அரசு கேட்கின்ற எல்லா வசதிகளும் அந்தப் பள்ளிகளுக்கு இருக்கின்றன. உயர் நீதிமன்றத்தினுடைய டைரக்ஷன் இருக்கிறது. இப்படிப்பட்ட சில பள்ளிகளிலே படித்த மாணவர்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இதைத் தவிர்க்க, அந்த 25 ஆயிரம் பேர்களைச் சில கட்டங்களாகப் பிரித்து எடுத்துக்கொண்டு, இரண்டு ஆண்டுகள் படித்துத் தேர்வு எழுதி, சான்றிதழ்கள் பெறாமல் இருப்பவர்கள், இரண்டு ஆண்டுகள் படித்துவிட்டுத் தேர்வே எழுதாமல் இருப்பவர்கள், முதலாண்டு படித்துவிட்டு இரண்டாம் ஆண்டு படிக்காதவர்கள் என்று அவர்களை வித்தியாசப்படுத்திக் கொண்டு நீதிமன்றத் தடை ஆணை இருந்தாலும் — நேற்றையதினம் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகிறபோது, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள் — நீதிமன்றக் குற்றத்திற்கு ஆளாகாமல், மனிதாபிமான அடிப்படையில், கருணை அடிப்படையில் அவர்களுக்கு எப்படி உதவுவது என்பதை இந்த அரசு பரிசீலிக்க வேண்டுமென்று, அந்த பாதிக்கப்பட்ட மாணவர்களின் சார்பிலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தமிழ்நாடு அரசு பொது நூலகத் துறையை எடுத்துக்கொண்டால், அசோக் நகர் வட்டார நூலகம், நேரு பூங்கா வட்டார நூலகம், சென்னையிலே மிகப் பெரிய வட்டார நூலகமாக இருக்கிற அயன்புரம் நூலகம், ஆக ஏறத்தாழ 10 வட்டார நூலகங்களிலே முதல் நிலை நூலகர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் உள்ளன என்ற நிலையை அங்கே பணியாற்றுபவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இதுகுறித்து அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) அடுத்து, தமிழ்நாடு அரசுக் கல்லூரிகளிலே Guest Lecturers என்ற பெயரிலே ஏறத்தாழ 450 பேர் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இப்போது புதிதாக 498



விரிவுரையாளர்களை நியமிக்க அரசு முயற்சித்து வருகிறது. ஏற்கெனவே, 10(எ) (I) ஆகப் பணியாற்றிய 200 ஆசிரியர்கள், ஒப்பந்த அடிப்படையிலே பணியாற்றிய 367 ஆசிரியர்கள் பணி நிரந்தரம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களை எப்படி எடுத்தார்களோ, அதைப்போல எங்களையும் பணி நிரந்தரம் செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அவர்கள் அரசுக்குத் தந்திருக்கிறார்கள். ஏறக்குறைய மூன்று ஆண்டுகள், நான்கு ஆண்டுகள் பணியாற்றியவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை அரசு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

அதுபோல, தமிழ்நாடு பணியில்லா இலக்கியப் பட்டதாரிகள் சங்கம், தமிழ் இலக்கியத்துடன் பி.எட். படித்து, பயிற்சி முடித்து, பணியில்லாத இளங்கலை மற்றும் முதுகலைப் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பணி வேண்டுவது தொடர்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. அவர்களுடைய கோரிக்கைகளை அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, விவசாயத் தொழிலாளர் சங்கம் என்ற அமைப்பின் கீழே தமிழக அரசு கல்வித் துறையால் நடத்தப்பட்ட தொழில் ஆசிரியர் சான்றிதழ் பயிற்சியினைப் பெற்று, அதாவது விவசாயம், தையல், நெசவு, மரவேலை மற்றும் இசை போன்ற பல்வேறு பிரிவுகளில் முறையாகப் படித்துவிட்டு வேலைவாய்ப்பை எதிர்நோக்கி ஏறக்குறைய 10,000-க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுடைய கோரிக்கைகளையும் அரசு கனிவுடன் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல, தலைநகர் தமிழ்ச் சங்கம் மற்றும் தமிழ்ச் சங்கம் என்ற அமைப்புகளின் சார்பிலே சட்டப் பேரவை வளாகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப் போகிறோம் என்று எல்லாம் அறிவித்திருக்கிறார்கள். முதல்வர் அவர்களே தமிழ் அறிஞர். அவரை முற்றுகையிடத் தேவையில்லை. அதற்குப் பதிலாக இந்தத் தமிழ்ச் சங்கங்களை நடத்துகிற பெருமக்கள், முதலமைச்சர் அவர்களையும், கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் சந்தித்துப் பேச வேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்வேன். அதுபோல, தமிழக அரசு எந்த வகையில் எல்லாம் தமிழ் மொழியை ஆட்சி மொழியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றெல்லாம் அவர்கள் பேச வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கல்வித் துறை அமைச்சர்

அவர்களும், அந்தத் தமிழ்ச் சங்கங்களுடைய பிரதிநிதிகளையெல்லாம் அழைத்து, அவர்களுடைய மனக்குறைகள்தான் என்ன என்பதைக் கேட்டு அறிந்து, அவர்களுடைய குறைகளை நிவர்த்தி செய்ய, நீங்களும் முயற்சிக்க வேண்டுமென்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், கல்வித் துறை அமைச்சர் அவர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, தமிழ்நாடு ஆசிரியர்கள் கூட்டணி சார்பிலேயும், தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் கூட்டணி சார்பிலேயும் பல்வேறு விதமான கோரிக்கைகளைத் தந்து இருக்கிறார்கள். இங்கு நம்முடைய சுப்பராயன் அவர்கள் சுட்டிக்காட்டியதைப் போல, மத்திய அரசின் கல்வித் துறையிலே பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு நிகரான சம்பளங்கள் இவர்களுக்கும் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் உள்ளிட்ட மற்றவர்களுடைய கோரிக்கைகளையும், இந்த அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** தலைவர் அவர்களே, அவர்களிடம், திரு. சுப்பராயன் அவர்களும், திரு. திருநாவுக்கரசு அவர்களும் ஒரே ஒரு உறுதிமொழியை மாத்திரம் பெற்றுத் தந்தால் போதுமானது. மத்திய அரசு, ஆசிரியர்களை எப்படி நடத்துகிறதோ, அதேபோல மாநில அரசும் நடத்தலாமா என்பதை மாத்திரம் கேட்டுத் தந்தால் எல்லாக் கோரிக்கைகளையும் நிறைவேற்ற நான் தயாராக இருக்கிறேன்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** நான் எப்படிச் சரியென்று சொல்வது ? அதுதான் முதலமைச்சர் அவர்களே அழைத்துப் பேசிவிட்டார்களே. இருந்தாலும், முதலமைச்சர் அவர்களும், கல்வித் துறை அமைச்சர் அவர்களும் ஆசிரியர் சங்கங்களின் பிரதிநிதிகளை அழைத்துப் பேச வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், பொதுவாகக் கல்வித் துறையிலே ஒன்றிரண்டு கருத்துக்களை மிகச் சிறிய நேரத்தில் சொல்லிவிட விரும்புகிறேன். ஆறு கோடி மக்களில், இன்னமும், இரண்டு கோடி மக்கள் கல்வியறிவு இல்லாமல் இருக்கிறார்கள். இது மிகவும் வருத்தத்திற்குரியது. தேர்தல்களில் ஓட்டுப் போடுவதிலிருந்து, எல்லாவற்றிலும் பலவிதமான தவறுகளுக்கு, அதாவது ஜனத்தொகைப் பெருக்கம் போன்ற பல்வேறு நிலமைகளுக்குக் கல்வி அறிவில்லாததே காரணம். இதில் பெண்களில் சுமார் 64 சதவீதத்தினரும், ஆதிதிராவிடர்களில் சுமார் 67 சதவீதத்தினரும், மலைவாழ் மக்களில் 79 சதவீதத்தினரும் படிப்பறிவில்லாமல் இருக்கிறார்கள். எல்லாவற்றிலேயும்



சமத்துவத்தை -Equality- கொண்டு வருவதற்காக அரசாங்கம் முயற்சிக்கிறது. ஆனால், படிக்கப் போகிறபோதே, ஆரம்ப நிலையிலேயே மாணவர்கள் பெறுகிற கல்வியில் சமத்துவம், சமநிலை இல்லையென்பதை நாம் வருத்தத்தோடு கவனிக்க வேண்டும். பணக்காரர்களுடைய குழந்தைகள் பெறுகிற கல்வி வேறு; மத்தியதரக் குடும்பங்களிலுள்ள குழந்தைகள் பெறுகிற கல்வி என்பது வேறு; ஏழை எளியவர்களுடைய குழந்தைகள், விவசாயிகளுடைய குழந்தைகள் பெறுகிற கல்வி என்பது வேறு. எனவே, இன்றைக்கு எல்.கே.ஜி. மற்றும் யூ.கே.ஜி.-யிலிருந்து, அந்த ஆரம்பக் கல்வியிலேயே மூன்று வகையான கல்வி மாணவர்களுக்குத் தரப்படுகிறது. இதிலே சமத்துவம் இல்லை என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதற்கு என்ன செய்ய வேண்டும் என்கிறபோது.....
(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, அரசினுடைய நிதியைக் கொண்டு அரசு நடத்துகிற அல்லது நடத்த அனுமதிக்கிற அத்தனை கல்வி நிலையங்களிலேயும் ஒரே வகையான பாடத் திட்டம், ஒரே வகையான ஆசிரியர்கள் என்ற இந்த முறை கையாளப்படுகிறது. அரசுக் கல்வி நிலையங்களில், ஏழைகளுக்கு இலவசக் கல்வி என்பது பெரும் அளவிற்கு நிறைவேற்றப்படுகிறது. தனிப்பட்ட இடத்தில், தனிப்பட்டவர்கள் கல்வி நிலையம் நடத்துவதை அரசு அடியோடு தடுக்க உரிமை கிடையாது. வசதியுடையவர்கள் தங்களுடைய பணத்தைச் செலவிட்டு, எப்படிப்பட்ட கல்வியை அவர்கள் பெற்றாலும், அதை மத்திய அரசோ, மாநில அரசோ தடுக்க வழியே கிடையாது. அது அவர்களுடைய உரிமை. ஆகவே, சமூகத்தினுடைய மொத்த ஏற்றத்தாழ்வு நீங்குகின்ற சூழ்நிலை வருகின்ற வரையில் நாமே இவைகளைச் சரி செய்துவிட முடியாது. ஆனால், ஏழைகளுக்கு நல்வாய்ப்பாக இருக்கிற வகையில், அரசுக் கல்வி நிலையங்கள், பஞ்சாயத்து ஒன்றியக் கல்வி நிலையங்கள், உதவி பெறுகின்ற கல்வி நிலையங்கள் இவைகளிலே, கல்வியினுடைய தரத்தைப் படிப்படியாகத் தொடர்ந்து முயற்சித்து, உயர்த்தி, பயன்படச் செய்வது ஒன்றைத்தான் அரசு செய்ய முடியும். அதை இந்த அரசு குறிக்கோளாகக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

பிற்பகல் 12- 40

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுப் பள்ளிகளிலே மூன்று வகையான கல்வி தரப்படுவதாக நான் சொல்லவில்லை. நான் சொல்கிறபோதே, மாணவர்கள் பல்வேறு

நிலைகளிலேயும் மூன்று வகையான கல்வியைப் பெறுகின்றார்கள் என்றுதான் தொடக்கத்திலேயே சொன்னேன். எனவே, இந்த disparity, equality இல்லாத நிலைமை. சமத்துவம் இல்லாத நிலைமை ஆகியவற்றைச் சரிசெய்ய அரசு என்ன செய்ய வேண்டுமென்பதற்கு ஒன்றிரண்டைச் சொல்ல முன்வந்தேன். நிலைமை அப்படி இருக்கிறது என்பது உண்மை.

அரசுப் பள்ளிகளிலே, மற்ற பள்ளிகளிலே, அரசாங்கம் தருகின்ற சம்பளத்தைப் பெற்றுக்கொண்டு ஒரேமாதிரியான கல்விதான் அளிக்கப்படுகிறது. அதிலே ஒன்றும் கருத்து வேறுபாடு இல்லை. இதிலே, கார்ப்பரேஷன் பள்ளிகள், அரசுப் பள்ளிகள், பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், இவைகளுடைய தரம் உயர்த்தப்பட வேண்டும். அதுதான் என்னுடைய முதல் வேண்டுகோளாகும்.

தனியார்ப் பள்ளிகளை நீங்கள் தடை செய்ய முடியாது. அதை நான் ஒப்புக்கொள்கிறேன். அதே நேரத்தில், அரசு நடத்துகிற பள்ளிகள், நான் சொன்ன மாதிரி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிகள், அரசாங்கப் பள்ளிகள், கார்ப்பரேஷன் பள்ளிகள், முனிசிபாலிட்டி பள்ளிகள் ஆகியவற்றினுடைய தரத்தையும், ஆசிரியர்களுடைய தரத்தையும் உயர்த்த வேண்டும்; மாணவர்களுடைய தரத்தையும் உயர்த்த வேண்டும். அப்போதுதான் எல்லோருக்கும் சமமான கல்வி என்கிற நிலை வந்து சேரும் என்பதற்காக இவற்றை நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) ஒரு நிமிடத்தில் உரையை முடித்துவிடுகிறேன்.

ஏறக்குறைய அனைத்துப் பள்ளிகளிலும் இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப்படுவார்கள் என்ற கொள்கை அறிவிப்பை நீங்கள் வெளியிட்டு இருக்கிறீர்கள். அதை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். பல பள்ளிகளிலே ஓராசிரியர் என்று இருக்கிற காரணத்தினால், அவர் வரவில்லை என்றால், அன்றையதினம் பள்ளி நடைபெறாமல் போய்விடுகிறது. இந்தப் பள்ளிகளிலே ஆண்டுதோறும் 10 இலட்சம் மாணவர்கள் படிக்க வருகிறார்கள். இந்த ஆண்டு 300 புதிய தொடக்கப் பள்ளிகள் ஏற்படுத்தப் போவதாக அறிவித்திருக்கிறீர்கள். 200 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல், 80 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தல் என்று இப்படி கொள்கை விளக்கக் குறிப்பிலே புள்ளிவிவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதற்குள்ளே நாம் போக வேண்டியதில்லை. ஏற்கெனவே அந்த விஷயங்கள் எல்லாம் தெரிந்தவைதான். இதிலே என்னுடைய வேண்டுகோளாகச் சொல்ல விரும்புவது, பள்ளிகளிலே, தொடக்கப்



பள்ளிகள் 30,796 – ஏறக்குறைய 31 ஆயிரம் என்று வைத்துக்கொள்ளலாம். அரசினுடைய கொள்கைப்படி, மூன்று ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி என்று நீங்கள் அறிவித்திருக்கிறீர்கள். அப்படிக் கணக்குப் பார்த்தால், ஏறக்குறைய 10 ஆயிரம் நடுநிலைப் பள்ளிகள் தமிழ்நாட்டிலே இயங்க வேண்டும். மாறாக, இப்போது 5,473 நடுநிலைப் பள்ளிகள்தான் தமிழ்நாட்டிலே இயங்கி வருகின்றன. இந்த வித்தியாசத்தைச் சரிப்படுத்த, அரசினுடைய கொள்கையை நடைமுறைப்படுத்த, மூன்று ஆரம்பப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி என்ற நிலையைக் கொண்டுவர......

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு குறிக்கோள். நாளடைவில் மூன்று தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு நடுநிலைப் பள்ளி வரவேண்டும் என்பது குறிக்கோள். இப்போது 5,473 நடுநிலைப் பள்ளிகள் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளிகளிலே நடுநிலைப் பள்ளி வகுப்புகள் இருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகளிலே நடுநிலைப் பள்ளி வகுப்புகள் இருக்கின்றன. ஏறத்தாழ அதனுடைய மொத்த நிறைவு 7,000 என்ற அளவுக்கு இருக்கும். நாம் தொடர்ந்து முயற்சி செய்தால் 10 ஆண்டுக்காலத்தில் அந்த நோக்கத்தை எட்ட முடியும்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதைத்தான் நானும் வற்புறுத்துகிறேன். அரசினுடைய கொள்கையை நிறைவேற்ற நீங்கள் தீவிரமாக முயற்சிக்க வேண்டும்; வேகமாக முயற்சிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள்.

அதேபோன்று, உயர்நிலைப் பள்ளிகளுடைய எண்ணிக்கை 3,765 ஆக இருக்கிறது. மேல்நிலைப் பள்ளிகளுடைய எண்ணிக்கை 2,975 ஆக இருக்கிறது. ஆண்டுதோறும் 40 மேல்நிலைப் பள்ளிகள் என்கிறபோது, உங்களாலேயே இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களைத் திருப்திப்படுத்த முடியாது. நாங்களும் தொகுதி மக்களைத் திருப்திப்படுத்த முடியாது. நேற்றுக்கூட சட்டமன்ற உறுப்பினர் ஒருவர் பேசும்போது, 8 இடங்களுக்குக் கேட்டார். அதற்குக் கல்வி அமைச்சர் அவர்களும் பதில் சொன்னார்கள். இதிலே ஒரு ஆலோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். உயர்நிலைப் பள்ளிகள் ஏறக்குறைய 3,765 இருக்கின்றன. மேல்நிலைப் பள்ளிகள் 2,975 இருக்கின்றன. மீதம் இருப்பது ஏறக்குறைய 790 தான். இந்த 790-ஐயும் நீங்கள் அப்படியே மேல்நிலைப் பள்ளிகளாக,

எங்கெங்கெல்லாம் உயர்நிலைப் பள்ளிகள் இருக்கின்றனவோ, அவைகளை அப்படியே அப்கிரேடு செய்து, மேல்நிலைப் பள்ளிகளாக, ஓராண்டில் இல்லை என்றாலும், இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் செய்ய வேண்டும் சிஸ்டமேட்டிக்காக எடுத்துக்கொண்டு. குறைந்தது மூன்று ஆண்டுகளிலாவது அந்த 790-ஐயும் அப்படியே மேல்நிலைப் பள்ளிகளாக மாற்றலாம் என்கிற யோசனையையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அதிக நேரம் எடுத்துக்கொண்டீர்கள். சீக்கிரம் பேசி, உங்கள் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடத்தில் என் உரையை முடித்துவிடுகிறேன். படிப்பினைப் பாதியிலே விடுகின்ற நிலைமை என்பது மிகவும் வருந்துவதற்குரியதாகும். அதை நீங்கள் பார்த்தால், தொடக்கப் பள்ளியிலே பாதியிலே படிப்பை விடுபவர்கள் 15 சதவிகிதம்; நடுநிலைப் பள்ளியிலே, பாதியிலே படிப்புத் தடைபடுவது 30 சதவிகிதம்; உயர்நிலைப் பள்ளியிலே பாதியிலே படிப்பு தடைபடுவது 65 சதவிகிதம்; மேல்நிலைப் பள்ளியிலே பாதியிலே தடைபடுவது 79 சதவிகிதம்; விவரங்களுக்குள்ளே போக நான் விரும்பவில்லை. இந்த நிலைமையை மாற்ற அரசு எல்லா வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அது ஒரு தவறான கன்சப்ஷன். அதாவது ஒரு தவறான கண்ணோட்டத்தில் கல்வி இலாகாவில் தொடர்ந்து இது பேசப்பட்டு வருகிறது. எல்லோருமே 12 ஆம் வகுப்பு வரையில் படிப்பார்கள் என்று கணக்குப் போட்டுக்கொண்டு, இவ்வளவு பேர் இடையிலே விட்டுவிட்டார்கள் என்று கூறுவது தவறான முடிவு. இந்த நாட்டினுடைய நிலையில் 5 ஆம் வகுப்பு வரை அத்தனை பேரும் படித்தாலே, அது மிகப் பெரிய வெற்றி; 8-ஆவது வரையில் 75 சதவிகிதம் பேர் படித்தாலே பெரிய வெற்றி; 10-ஆவது வரை 60 சதவிகிதம் படித்தாலே பெரிய வெற்றி. ஆனால் எல்லோருமே 12 ஆம் வகுப்பு வரை படிக்க வேண்டுமென்று ஒரு கணக்குப் போட்டுக்கொண்டு, இவ்வளவு பேர் விட்டுவிட்டார்கள், இவ்வளவு பேர் விட்டுவிட்டார்கள் என்று சொல்வது தவறு. அது வளர்ந்த நாடுகளிலேகூட நடைபெறாது. ஆகவே, நடைமுறையில் கல்வியில் தொடர்ந்து வளர்ச்சிப் பணிகள்



நடைபெற வேண்டும் என்பதைத் தவிர, அந்தப் புள்ளிவிவரத்தால் வேறு பலன் கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. திருநாவுக்கரசு, சீக்கிரம் பேசி முடித்துவிடுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதேமாதிரி தேர்ச்சி விகிதத்தைப் பார்க்கிறபோது, சில மாவட்டங்கள் மிகவும் பின்தங்கியிருக்கின்றன. அந்த மாவட்டங்களுக்கு கல்வி வளர்ச்சியில் முன்னுரிமை தரவேண்டும். உதாரணமாக, நீலகிரி, புதுக்கோட்டை, தர்மபுரி, திருவண்ணாமலை, வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் — எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில், மொத்தத் தேர்ச்சி விழுக்காடு 68 சதவிகிதம் என்று சொன்னால் — இந்த மாவட்டங்களில் என்ன காரணத்தாலோ 52, 53, 54 சதவிகிதம் என்ற நிலை இருக்கிறது. அதுமாதிரி ப்ளஸ்-2 தேர்ச்சி விகிதத்தைப் பார்த்தால், சராசரியாக சென்னை, மதுரை போன்ற மாவட்டங்களில் 80, 90 சதவிகிதம் தேர்ச்சி பெற்றவர்கள் என்றால், குறிப்பிட்ட இந்த மாவட்டங்களில் 60, 62, 65 சதவிகிதம் என்று இருக்கிறது. இந்த மாவட்டங்களில் மாணவர்கள் அதிகமான அளவிலே தேர்ச்சி பெறுவதற்கு விசேஷக் கவனம் செலுத்தி முன்னுரிமை தரப்படவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். *(மணியடிக்கப்பெற்றது)* துணைத் தலைவர் அவர்களே, ஒரு நிமிடத்தில் பேசி முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் அதிகமான நேரம் எடுத்துக்கொண்டீர்கள். திரு. அழகிரி அவர்கள் பேசி முடித்த பின்பு, அமைச்சர் அவர்களின் பதிலுரை இருக்கிறது, உட்காருங்கள். அண்ணன் லத்தீப் அவர்களை நான் கேட்டுக்கொண்டபோது, பெருந்தன்மையோடு, நாளை பேசுகிறேன் என்று சொல்லிவிட்டார்கள். நீங்கள் அவருடைய நேரத்தையும் சேர்த்து எடுத்துக்கொள்ளாதீர்கள், சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. எஸ். திருநாவுக்கரசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேரம் இல்லாத காரணத்தால், கடைசியாக ஒன்றை மட்டும் குறிப்பிட விரும்புகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் நான் கேட்டுக்கொள்வது, ஆரம்பப் பள்ளிகளிலே படிக்கின்ற மாணவர்களுடைய படிப்புச் சுமையைக் குறைக்க அரசு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இதுகுறித்து யஷ்பால் குழு பரிந்துரை செய்திருக்கிறது. ஒரு புதுக் கவிஞன் சொன்னான் " ஏன் எல்லோரும் குனிந்தபடியே நிற்கிறார்கள்

இந்த நாட்டு முதியவர்கள் என்று சொன்னால், படிக்கிறபோதே, பள்ளிக்குப் போகிறபோதே, பாடப் புத்தகங்களைத் தூக்கித் தூக்கி முதுகு கூன் விழுந்துபோகிறது, அதுமாதிரிப் படிக்கிறபோது ஆரம்பப் பள்ளிகளிலே அளவற்ற புத்தகக் கட்டுகளைத் தூக்கிக்கொண்டு போகிற நிலையை மாற்றி அமைக்க வேண்டும். தேவையான கல்வி முறையைக் கொண்டுவந்து பாடத் திட்டத்தில் சீர்திருத்தம் செய்ய வேண்டும்.

அதேபோல, தொழிற்கல்விக்கு முன்னுரிமை தர வேண்டும். பி.ஏ., பி.எஸ்ஸி. படிப்பவர்கள் 1,25,000 பேர் இருக்கிறார்கள். இதுபோன்ற படிப்புகளால் எந்த நன்மையும் கிடையாது. தொழிற் கல்விக்கு அதிக முக்கியத்துவம் தந்து அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, நேரம் இல்லாத காரணத்தால், முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ச. அழகிரி, கண்டிப்பாக 10 நிமிடத்திற்குள் பேசி முடித்துவிட வேண்டும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது, தமிழ் மாநிலக் காங்கிரஸ் கட்சியின் சார்பாக என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாகத் தொடக்கக் கல்விக்கு மாநில அரசாங்கம் கொடுத்திருக்கிற முக்கியத்துவம் வரவேற்கக்கூடிய ஒன்று. 300 புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிப்பது என்பது ஏற்புடைய ஒன்றுதான். ஆனால், அதற்கு முன்பாகத் தொடக்கக் கல்விக்கூடங்களை செயல்படுத்துவதற்கான ஒரு செயல் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டும். தொடக்கக் கல்வியைப் பொறுத்தவரையில், கிராமப்புறங்களில் மிக மோசமான கல்விதான் இன்றுவரை கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே, கிராமப்புறங்களிலே ஆசிரியர்கள் ஒழுங்கான நேரத்திற்குச் சென்று, ஒழுங்கான நேரத்தில் அந்தக் கல்வியை மாணவர்களுக்குத் தந்து, நல்ல முறையில் அவர்களை உயர்த்துவதற்கு ஒரு புதிய செயல் திட்டத்தை அரசாங்கம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

அதேபோல, தனியார் பள்ளி கான்செப்ட் என்பது வரவேற்கக்கூடிய ஒன்றுதான். சுயநிதிக் கல்விக்கூடங்கள் வந்த பிறகுதான் மாநிலத்தினுடைய கல்வித் தேவை ஓரளவிற்குத் தீர்த்து வைக்கப்பட்டு இருக்கிறது. ஆனால்,



அதிலே அரசாங்கத்தினுடைய கவனம் இருக்க வேண்டும். சுயநிதிக் கல்விக் கூடங்களைத் தொடங்குகிறவர்கள் சரியான வசதிகளோடு தொடங்குகிறார்களா, முறையாக நடத்துகிறார்களா, இலாப நோக்கம் கருதித்தான் அந்தக் கல்விக்கூடங்கள் நடைபெறுகின்றனவா அல்லது சேவை மனப்பான்மை இருக்கிறதா என்பதனை அறிந்துகொள்ள, அவற்றை ஓரளவிற்கு அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டிலே நாம் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்திலே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விவாதத்தினுடைய உட்பகுதிக்குச் செல்வதற்கு முன்பாக, சில கோரிக்கைகளைக் கல்வி அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிதம்பரம் நகரிலே ஒரு மகளிர் கல்லூரி வேண்டும் என்று பல காலமாக நாங்கள் கேட்டு வருகிறோம். அந்த நகரம் மாண்புமிகு கல்வி அமைச்சருக்கு நெருக்கமான நகரம். அவருடைய தந்தையார் அவர்கள் அங்கே தங்கி இருந்திருக்கிறார்கள். அதேபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்த நகரத்தினுடைய மருமகப்பிள்ளை. இவ்வளவு இருந்தும்கூட, அங்கே ஒரு கலைக் கல்லூரி எங்களால் கொண்டுவர இயலவில்லை என்றால், அது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது. பேராசிரியரிடம் கேட்டால், சுயநிதிக் கல்லூரி ஆரம்பித்துக்கொள், என்று சொல்லுகிறார்கள். வருவோர், போவோரை எல்லாம் பார்த்து, சுயநிதிக் கல்லூரி ஆரம்பிக்கச் சொல்லி நானும் கேட்டுவிட்டேன். பொறியியல் கல்லூரியா? வருகிறோம்: மருந்துவக் கல்லூரியா? வருகிறோம்; ஆனால், அறிவியல் கல்லூரி என்றால் வரமாட்டோம் என்று பலரும் சொல்லுகிறார்கள். எனவே, அரசாங்கமே, அதிலே கவனத்தைச் செலுத்தி, ஒரு அரசு மகளிர் கலைக் கல்லூரியை அங்கே கொண்டுவர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, வேதாரண்யத்திலே கஸ்தூரிபாய் காந்தி கன்யா குருகுலம் என்று ஒன்று இருக்கிறது. சர்தார் வேதரத்தினம் பிள்ளை அவர்கள் 50 50 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கி வைத்த ஒரு கல்விக்கூடம்; 50 பேரோடு ஆரம்பிக்கப்பட்ட அந்தக் கல்விக்கூடத்திலே, இன்றைக்கு 2800 பேர் படிக்கிறார்கள். அங்கே சுயநிதிக் கல்லூரி ஆரம்பிப்பதற்கு அவர்கள் தயாராக இருக்கிறார்கள். ஆனால், கல்வி இலாக்காவுக்குச் சொந்தமான 25 ஏக்கர் நிலம் அவர்களுடைய கல்விக்கூடத்திற்கு அருகிலே இருக்கிறது. அதனை அரசாங்கம் அவர்களுக்குத் தந்தால், அங்கே ஒரு கல்விக்கூடத்தை ஆரம்பிக்க அவர்கள் தயாராக இருக்கிறார்கள்

என்பதனைச் சொல்லுகிறேன். அதைச் செய்துதர வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பல உறுப்பினர்கள் சொன்னதைப்போல, இந்த Guest Lecturers பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. மாநிலம் முழுவதும் அவர்கள் பரவிக் கிடக்கிறார்கள். விருந்தினர்களாகவே அவர்கள் எவ்வளவு காலம் இருப்பது? அவர்களை நிரந்தரப்படுத்துவது எப்போது என்பதனை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் முடிவு செய்ய வேண்டும்.

அதேபோல, தமிழ்நாடு பணி இல்லாத தமிழ் இலக்கியப் பட்டதாரிகள் வேலை வேண்டும் என்று வீதி ஓரம் வந்து இருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையையும் மாநில அரசாங்கம் கவனிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஆசிரியர் பயிற்சிப் பிரச்சினை; அது மனதை நெருடுகின்ற பிரச்சினை. கல்வி அமைச்சரோடு விவாதத்திலே ஈடுபட நாங்கள் விரும்பவில்லை. ஏனென்றால், இரண்டு ஆண்டு காலமாக நாங்களும் கேட்டு, நீங்களும் மறுத்து வருகின்ற ஒரு பெரிய பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. சட்டரீதியாக அதிலே செல்லமுடியவில்லை. எனறாலும்கூட, குறைந்தபட்சம் ஓர் அஞ்சல் வழிக் கல்வி மூலமாகவாவது அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்கலாம்; சட்டமுன்வடிகளைக் கொண்டு வரலாம்; சட்டப்பேரவையிலே சட்டத்தைத் திருத்தலாம்; மனம் இருந்தால் மார்க்கம் உண்டு என்பதைமட்டும் நான் பேராசிரியர் அவர்களுக்குச் சொல்லி, அந்தப் பிரச்சினையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மிகப் பெரிய வழக்கறிஞர். யாரையாவது கேட்டுத் தகுந்த விடையை அரசுக்குத் தெரிவிப்பார்களேயானால், அந்தச் செலவைக்கூட அரசு ஏற்றுக்கொள்ளும்.

**திரு. ச. அழகிரி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்ததாக, இப்போது பொதுக் கல்வி என்பது 12-ஆம் வகுப்பு வரை இருக்கிறது. ஒரு மாணவன் 12 ஆண்டுகாலம் பொதுக் கல்வியைப் படிக்க வேண்டிய ஒரு கட்டாயம் இருக்கிறது. அதனை 8 ஆம் வகுப்பு வரை முடித்துக் கொண்டு, அதன்பிறகு இருக்கிற



4 ஆண்டுகாலத்தில் தொழில் பயிற்சியை அவனுக்குக் கொடுத்தால், 12 ஆம் வகுப்பை முடித்துவிட்டு, அவன் வெளியே வருகிறபொழுது சொந்தக் காலிலே நிற்கக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். அந்த 4 ஆண்டுக் காலம் என்பது, 8 ஆம் வகுப்பு முடிந்த பிறகு – ஐ.டி.ஐ.-க்கு மேலாக, பாலிடெக்னிக்குக் கீழாக, 4 ஆண்டுக் காலம் தொழில் பயிற்சியை கொடுத்தால் ஏற்புடையதாக இருக்கும் என்ற ஒரு கருத்து நிலவுகிறது. அதனைக் கல்வித் துறையில் ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், இப்போது 4 வயதிலே திருக்குறளை சொல்லுகின்ற மாணவர்கள் இருக்கின்றார்கள்; 3 வயதிலே நீண்டதூரம் நீச்சல் அடிக்கக்கூடிய மாணவர்கள் இருக்கின்றார்கள். மாணவர்களுடைய அறிவுத்திறன் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், 12 ஆண்டு காலம் அவர்களைச் சிறையில் போடுவதைப்போல இல்லாமல், எட்டாண்டுக் காலத்தோடு முடித்துக் கொண்டு, மீதம் உள்ள 4 ஆண்டுக் காலத்திலே தொழில் கல்வியைக் கொடுத்தால், அவர்கள் வாழ்க்கையிலே முன்னேறுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

அதுபோல, ஓவிய ஆசிரியர்கள் பிரச்சினை. 1981-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிக்கூடங்களிலே ஓவிய ஆசிரியர்களை நியமிக்கவில்லை. நிறைய பேர் படித்து இருக்கிறார்கள். எனவே, ஓவிய ஆசிரியர்களை நியமிப்பதற்கு அரசாங்கம் முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

முடிவாக, பல்கலைக்கழகத்தின் வளர்ச்சியில் மாநில அரசாங்கத்தினுடைய பங்கு மிகவும் குறைவாக இருக்கிறது. உதாரணமாக, தமிழகத்திலே மையப் பல்கலைக்கழகம் என்ற ஒன்று இல்லாமல் இருக்கிறது. எனவே, மையப் பல்கலைக் கழகம் ஒன்றைத் தமிழகத்தில் கொண்டு வருவதற்கு நாம் முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தியாவின் பிற மாநிலங்களோடு ஒப்பிடும்போது, தமிழகத்திலே பல்கலைக்கழகத்தினுடைய வளர்ச்சி எவ்வளவு குறைவாக இருக்கிறது என்பதற்கு ஒரு புள்ளி விவரம்.

1996-97 ஆம் ஆண்டு வாரணாசி இந்துப் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.101 கோடி. அலிகார் முஸ்லீம் பல்கலைக் கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ.75 கோடி. புதுடில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 25 கோடி ரூபாய். ஐதராபாத்தில் இருக்கின்ற பல்கலைக்கழகத்திற்கு

ஒதுக்கப்பட்ட தொகை 13 கோடி ரூபாய். பாண்டிச்சேரியிலே இருக்கின்ற மையப் பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை 6 கோடி ரூபாய். ஆனால், அதே நேரத்தில், தமிழகத்திலே இருக்கிற 8 பல்கலைக்கழகங்களுக்கு — சென்னைப் பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து மனோன்மணீயம் பல்கலைக்கழகம் வரை இருக்கின்ற 8 பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை 8 கோடியே 40 இலட்சம் ரூபாய்தான். நாம் உணர்ந்து பார்க்க வேண்டும்.

வாரணாசியிலே இருக்கிற இந்து பல்கலைக்கழகம் மட்டுமே 101 கோடி ரூபாயைப் பெறுகிறபோது, தமிழகத்திலே இருக்கிற 8 பல்கலைக் கழகங்களும் சேர்ந்து பெற்றிருக்கிற தொகை 8 கோடியே 40 இலட்சம் ரூபாய்தான். இது மாநில அரசின் நிதி உதவி. இதேபோல, பிற மாநிலங்களில், மாநில அரசுகள் அந்தந்தப் பல்கலைக்கழகங்களுக்கு எவ்வளவு கொடுத்திருக்கிறார்கள் என்றால், பெங்களூரில் இருக்கிற பல்கலைக்கழகத்திற்கு 15 கோடி ரூபாய், ஆந்திராவில், ஐதராபாத்தில் இருக்கிற உஸ்மானியா பல்கலைக்கழகத்திற்கு 35 கோடி ரூபாய், வால்டேரில் இருக்கிற ஆந்திரப் பல்கலைக்கழகத்திற்கு ரூ.30 கோடி, திருப்பதியில் இருக்கிற வெங்கடேஸ்வரா பல்கலைக்கழகத்திற்கு 15 கோடி ரூபாய்; அந்தந்த மாநில அரசாங்கங்கள் ஒதுக்கியிருக்கின்றன. ஆனால், தமிழகத்திலே அந்த நிலைமை இல்லை என்பதைப் பார்க்கிறபோது, பல்கலைக்கழகங்களின் வளர்ச்சியில் மாநில அரசாங்கத்தினுடைய பங்கு மிகக் குறைவாக இருக்கிறது. அதை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பல்கலைக்கழக வளர்ச்சியில் தமிழகத்தின் தாழ் நிலைமையையும் இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன். உதாரணமாக, வாரணாசியில் இருக்கிற இந்து பல்கலைக்கழகத்தில் 250 பேராசிரியர்கள் இருக்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் உள்ள 8 பல்கலைக் கழகங்களிலும் சேர்த்து 399 பேராசிரியர்கள் இருக்கிறார்கள். வாராணாசியில் 515 உதவிப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்தின் 8 பல்கலைக்கழகங்களிலும் சேர்த்து 584 உதவிப் பேராசிரியர்கள் இருக்கிறார்கள். இதைப்போல ஏராளமான புள்ளி விவரங்கள் இருக்கின்றன.

1985-86-ல் உத்தரப்பிரதேசத்தில் 562 கல்லூரிகள் இருந்திருக்கின்றன. அதற்கு அடுத்த ஆண்டில், 1986-87-ல் 402 கல்லூரிகள் புதிதாகக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. ஆனால், தமிழகத்தின் நிலைமை என்ன என்பதை நாம் உணர்ந்து பார்க்க வேண்டும். பல்கலைக்கழகங்கள்



மற்றும் கல்லூரிகளுக்கு மாநில அரசாங்கம் மிகவும் குறைவான நிதியை ஒதுக்குகிற காரணத்தால்தான், கல்லூரிகள், பல்கலைக் கழகங்களின் பாடத்திட்டங்களில் நம்முடைய வெற்றி குறைவாக இருக்கின்றது.

நேற்று, நம்முடைய உறுப்பினர் திரு.வி.கே.எல் அவர்கள் பேசுகிறபோது, ஐ.ஏ.எஸ். தேர்வில் ஏன் நாம் அதிகம் தேர்ச்சி அடையமுடியவில்லை என்பதைப் பார்க்கிறபோது, பல்கலைக்கழகங்களில் நம்முடைய பங்கு குறைவாக இருப்பதுதான் அதற்குக் காரணம் என்று சொன்னார்கள். உதாரணமாக, புதுடில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்திலே, வாரணாசியில் இருக்கிற இந்துப் பல்கலைக்கழகத்திலே படிக்கிறவர்கள் அதிக அளவில் ஐ.ஏ.எஸ். தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கிறார்கள். வாரணாசி பல்கலைக்கழகத்திலிருந்து இந்தத் தேர்வில் பயிற்சிக்குப் போகிறவர்களே 7,000 பேர் இருக்கிறார்கள். ஆனால், தமிழகத்திலே அந்த நிலைமை இல்லை. எனவே, பல்கலைக் கழகங்களுக்கான நிதி ஒதுக்கீட்டை நாம் அதிகரிக்க வேண்டும். அதேபோல, பல்கலைக்கழக மானியக் குழுவும், தமிழ்நாட்டின் வளர்ச்சியை, அதன் தேவைகளைக் கருத்திலேகொள்ளவில்லை. அதற்கு மாநில அரசு ஒரு காரணம். உதாரணமாக, அது தமிழகத்திலிருந்து நாம் எந்த அளவுக்கு மைய அரசாங்கத்தினுடைய நிதியைப் பெறுகிறோம் என்பதைப் பொறுத்திருக்கிறது. உதாரணமாக, பல்கலைக்கழக மானியக் குழு டெல்லியில் இருக்கிறது. டெல்லியோடு தொடர்பு வைத்துக் கொண்டு, கல்வி அமைச்சர் அவர்கள் அடிக்கடி டில்லிக்குச் சென்று, பல்கலைக்கழக மானியக் குழுவுடன் போராடி, அதிக நிதியைப் பெற்று வருவார்களேயானால், இங்கும் ஒரு பலமான மையப் பல்கலைக் கழகத்தை நம்மால் நிறுவ முடியும். அதற்கான ஏற்பாட்டை கல்வி அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

கல்வியினுடைய முக்கியத்துவம் பற்றி நான் சொல்ல வேண்டியதில்லை. வளமான கல்விக்கூடம் இருந்தால்தான், திறமையான மாணவர்களை உருவாக்கினால்தான் போட்டியிடுவதற்கு, உலக நாடுகளோடு வளர்ச்சி அடையக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்படும். ஜப்பானிலே ஒரு பழமொழி உண்டு. ``If you cannot, Japan cannot. If Japan cannot, the world cannot" என்று சொல்லுவார்கள். 'உன்னால் முடியாது என்றால், ஜப்பானால் முடியாது, ஜப்பானால் முடியாது என்றால் உலகத்தால் முடியாது' என்பதுதான் அந்தப் பழமொழி. தமிழகத்தால் மட்டும் அது முடியாதா என்பதைக் கேட்டு, மாண்புமிகு

கல்வி அமைச்சர் அவர்கள் மேலும் கல்விக் கொள்கையை வலுப்படுத்த வேண்டுமென்று கேட்டு விடை பெறுகிறேன்.

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கைமீது இந்த அவையிலேயுள்ள 18 உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை எடுத்து வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் தாங்கள் நினைக்கின்ற அளவுக்குப் பல செய்திகளை எடுத்துச் சொல்லக்கூடிய அளவுக்கு நேரம் வாய்க்கவில்லை என்பதைப்போலத்தான், நான்கூடத் தெரிவிக்க வேண்டிய விடைகளையெல்லாம் தெரிவிக்க முடியாத அளவுக்கு நேரம் கிடைக்காத ஒரு சூழ்நிலையில் பதில் கூற வேண்டியவனாக இருக்கின்றேன். குறிப்பாக, கல்வியினுடைய அவசியத்தைப் பற்றி யாரும் விளக்கத் தேவையில்லை. ஆனால், அதிலே ஒரு நாடு தகுந்த அக்கறை செலுத்தாமல் போய்விடுமானால், அந்த நாடு பல வகைகளிலும் வீழ்ச்சி அடையும் என்பதை நாம் உணர்ந்து கொண்டிருக்கிறோம்.

திரு. ச. அழகிரி அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள், 'உன்னால் முடியாவிட்டால், ஜப்பானால் முடியாது, ஜப்பானால் முடியாவிட்டால் உலகத்தாலும் முடியாது' என்றார்கள். அதெல்லாம் ஒரு நம்பிக்கை. அந்த ஜப்பானிலேதான். இப்போது தற்கொலை முயற்சிகள் மிக அதிகமாக இருக்கின்றன என்ற அந்தச் செய்தியை நேற்றையதினம் தொலைக்காட்சியின்மூலம் நான் அறிந்தேன். அளவு கடந்த நம்பிக்கை. விவரம் தெரியாத வீழ்ச்சிக்கு நம்மை ஆளாக்கி விடக்கூடும்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில், நீண்டகாலமாகக் கல்வி ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு படிப்படியான வளர்ச்சியைப் பெற்று வந்திருக்கிறது. மத்திய அரசாங்கத்தினுடைய பல்கலைக்கழகங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்தில் ஏற்படுத்தப்பட்ட பல்கலைக்கழகங்கள். இந்து பல்கலைக்கழகம், அதைப்போல முஸ்லிம் பல்கலைக்கழகம். அவற்றிற்கு மத்திய அரசு, 2 பேரையும் திருப்திப்படுத்துவதற்காக எவ்வளவு கேட்டாலும் நிதி கொடுப்பார்கள். இன்னும்கூட, மத்திய அரசிலே அன்றைக்கிருந்த சூழ்நிலை இன்னும் தொடருகிற ஒரு சூழ்நிலை. Power Politics என்ற வகையில் இருக்கிறது. சமுதாய அடிப்படையில்



சில பல்கலைக்கழகங்கள் மிக அதிகமான நிதியைப் பெற்றிருக்கலாம். நேரு பல்கலைக்கழகத்தைவிட காசியில் உள்ள பல்கலைக்கழகம் அதிக நிதியைப் பெற்றிருக்கிறது. இங்கேகூட, புதுச்சேரியிலே இருக்கக்கூடிய மத்தியப் பல்கலைக்கழகம் அதிக நிதியைப் பெறுகிற வாய்ப்பைப் பெற்றதாகத்தான் இருக்கிறது. நம்முடைய பல்கலைக்கழகங்கள் ஒரு முறையான, சீரான வளர்ச்சி அடைந்து வருகிற அளவுக்கு மாநில அரசு தன்னுடைய பங்கைச் செலவு செய்திருக்கிறது. இப்போதுகூட அவர்கள் குறிப்பிட்ட அந்த Capital Grants, ஆண்டுதோறும் தருகிற அந்த நிதி குறைவாகக் கண்ணுக்குத் தெரிந்தாலும்கூட ஆண்டுதோறும் அவர்களுக்கு ஆகிற அகவிலைப்படிக்கும், வேறு சில படிகளுக்கும் ஆகின்ற அந்தத் தொகையை அரசு தனியாகத் தந்து கொண்டிருக்கிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

இது அதிகம் என்று நான் சொல்லவில்லை. அல்லது இது போதும் என்றும் நான் குறிப்பிடவில்லை. இன்னும் வளர்ச்சிக்கு இடம் இருக்கிறது. புதிய பல்கலைக்கழகங்கள் தோன்றுகிறபோது அதிலே சில நன்மைகளும் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால், ஏராளமான பேராசிரியர்கள் இருக்கிறார்கள் என்று சொல்லிவிட்டால் மட்டும் அது பெரிய வளர்ச்சி அல்ல. அவ்வளவு பேரும் சேர்ந்து என்ன செய்தார்கள் என்று விசாரித்துப் பார்த்தீர்களேயானால் ஏராளமான பேராசிரியர்கள் சேர்ந்து மொத்தமாக பல்கலைக்கழகத்தில் ஒரு நல்ல கிளப் நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய அளவுக்குச் சில இடங்கள் உண்டு. பெரிய வளர்ச்சிகள் ஒன்றும் •வந்து விடுவதில்லை. 2 பேரறிஞர்கள் இருப்பார்களேயானால் அவர்கள் ஏற்படுத்தக்கூடிய வளர்ச்சியை 10 பேர் சேர்ந்தும் ஏற்படுத்த முடியாது. ஒரு இராமானுஜமோ, ஒரு சர்.சி.வி. இராமனோ ஏற்படுத்திய வளர்ச்சியை 100 விஞ்ஞானிகள் ஏற்படுத்த முடியவில்லை. ஒரு அபுல் கலாம் ஏற்படுத்திய அந்தச் சாதனையை 500 பட்டதாரிகள் சேர்ந்து ஏற்படுத்த முடியாது. எனவே, நான் இதைக் குறிப்பிடுவது குறை சொல்வதற்காக அல்ல. இரண்டு பக்கமும் சில உண்மைகள் இருக்கின்றன. எனவே, அந்த வகையில் பல்கலைக்கழகக் கல்வியும் கவனிக்கப்படும் என்று சொன்னாலும்கூட, சில பொது நியாயங்களை, இந்தக் கல்வி மானியத்திலே நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கட்டாயக் கல்வி என்று சொல்லப்படுவதே அடிப்படை மனித உரிமையை உணர்வதற்காகத்தான். 14 வயது வரையிலே வழங்கப்படுகிற

கல்வியைத்தான் கட்டாயக் கல்வி என்று நாம் சொல்வதிலே அர்த்தம் உண்டு. ஆனால் அந்தக் கட்டாயக் கல்வியிலேகூட தொடக்கக் கல்வியில் 100-க்கு 95 விழுக்காடை தமிழ்நாடு ஏய்தி இருக்கிறது. வெறும் புள்ளிவிவரத்தைப் பார்க்கிறபோது, கடந்த காலத்தில் 103, 104 அளவுக்குக்கூட விழுக்காடுகள் தெரிவிக்கப்பட்டன. அதாவது, இந்த வயது உள்ள பிள்ளைகளுடைய எண்ணிக்கை என்பதைவிட அதிகமான எண்ணிக்கையில் மாணவர்கள் பள்ளிக்கூடங்களில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அதை ஒழுங்குப்படுத்திப் பார்க்கிறபோது, ஏறத்தாழ 95 விழுக்காடு மாணவர்கள் தொடக்கப் பள்ளியிலே இருக்கிறார்கள். ஆனால், ஒரு கோடி, பேர் பள்ளிக்கூடங்களிலே படிப்பவர்கள் என்று சொன்னால் - ஏறத்தாழ 5 விழுக்காடு என்று சொன்னால்கூட – 5 இலட்சம் பேர் இன்னும் பள்ளிக்கூடத்திலே சேராத பிள்ளைகள் கிராமங்களிலே, பிற்படுத்தப்பட்ட வட்டாரத்திலே இருக்கத்தான் செய்கிறார்கள்.

பிற்பகல் 1-05

பெண்களைப் பொறுத்தவரையில், தொடக்கப் பள்ளிகளிலே சேருகிற பெண்கள், 100-க்கு 93 விழுக்காடு சேருவதாகத்தான் புள்ளிவிவரம் இருக்கிறது. ஆனால், 90 விழுக்காடுதான் தொடக்கப் பள்ளியிலே சேருகிறார்கள். 4ஆவது, 5ஆவது வகுப்போடு பெண்கள் படிப்பை விட்டு விடுகிற நிலைமை பெரும்பாலும் இருக்கிறது. 8ஆவது வரையிலாவது படிக்க வைக்க ஊக்கப்படுத்த வேண்டும் என்ற முயற்சியிலேதான் நாம் செயல்படுகிறோம்.

அதுமட்டும் அல்ல, இங்கே சொல்கிறபோது, நடுநிலைப் பள்ளிகள் போதுமான அளவு இல்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். அந்தக் கருத்து முழு அளவுக்கு உண்மை அல்ல என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் நடுநிலைப் பள்ளிகள் 5,473 இருக்கின்றன. தொடக்கப் பள்ளிகள் 30,796. உயர்நிலைப் பள்ளிகளில் உள்ள நடுநிலைப் பள்ளி வகுப்புகளையும் சேர்த்துப் பார்த்தால் அவை 3,765. மேல்நிலைப் பள்ளியிலே சில நடுநிலை வகுப்புகள் இருக்கின்றன. 6ஆவது வகுப்பிலே தொடங்கி, மேல்நிலைப் பள்ளிகள் நடைபெறுகிற நிலை இருக்கிறது. அந்தப் பள்ளிகள் 2,975. முப்பதாயிரத்துக்குச் சொச்சம். அல்லது 31 ஆயிரம் தொடக்கப் பள்ளிகளுக்கு, 12,213 நடுநிலைப் பள்ளி வகுப்புகள் நாட்டிலே நடைமுறையில் இருக்கின்றன. எனவே, அதிலே எல்லாம் பெரிய குறைபாடுகள் இல்லை. ஆனால், தொடக்கக் கல்வியைத் தரம் உயர்த்த வேண்டுமென்று எண்ணுகிறபோது, அது அடிப்படைத்



தேவை என்பது 'யஷ்பால்' குழு அறிக்கை மூலமாக உணர்த்தப்பட்டது. அப்படி உணர்த்தப்பட்டு, அந்த அறிவுத்திறனை எய்துவதற்கு, பிள்ளைகள் படிக்கிறபோது, வெறும் பாடங்கள் தெரிந்ததாகச் சொல்கிற நிலைமை இல்லாமல் understanding capacity அதாவது எந்த அளவுக்கு அவர்களால் அறிவு நிலையைப் பயன்படுத்திக்கொள்ள முடியும் என்பதைப் பார்ப்பதற்குச் சில முறைகளை வைத்து, எவ்வளவு சொற்கள் தெரியும், எந்த அளவுக்கு அவர்களால் சிந்திக்க முடிகிறது என்பதைப் பார்த்து, திறனை அதிகப்படுத்த வேண்டுமென்று தெரிவித்து இருக்கிறார்கள். அந்த முயற்சியில் ஏறத்தாழ 4ஆவது, 5ஆவது வகுப்பு வரையில் அவர்களுக்குத் தரப்படுகிற பாடப் புத்தகங்கள்கூட இன்னும் சீர்செய்யப்பட்டு வழங்கப்பட வேண்டும் என்பதற்காக, இந்த ஆண்டு மாவட்டத் தொடக்க கல்வித் திட்டத்தில், நேரடியாகப் பிள்ளைகளுடைய கல்வி வளர்ச்சியிலே ஈடுபடுகிற ஆசிரியர்களைக் கொண்டு, 4ஆவது வகுப்புப் பாடங்கள் அத்தனையும், புதுப் பாடத்திட்டமாக வரையப்பட்டு, அச்சிடப்பட்டு இந்த ஆண்டு வெளிவருகிறது. இனி, அடுத்தடுத்த ஆண்டுகளில், 3ஆவது, 2ஆவது, முதலாவது வகுப்புகளுக்கு எல்லாம்கூட இந்த DPEP மூலமாக நேர்முகமாகப் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்தி, தகுந்த பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு எழுதப்பட்ட புத்தகங்களை நேரடியாக வழங்குதற்கான முயற்சியும் இருக்கிறது.

அதேபோல மற்றுமொன்று. மேல்நிலைப் பள்ளி வகுப்பு வரையில், சில பாடங்களில் சில குறைகள், சில தேவையற்ற பாடங்கள், சில சுமையான பாடங்கள், கணிதம் போன்றவற்றிலே, ஆசிரியர்களாலேயே நடத்த முடியாத பாடங்கள் இவையெல்லாம் இருந்தன. அவற்றையெல்லாம் களைவதற்கு முன்னாள் இயக்குநர் திரு. சிவஞானம் அவர்கள் தலைமையில் குழு ஒன்றை அமைத்து, கடந்த 6 மாதங்கள், 8 மாதங்களுக்கு முன்னாலே இருந்து, கடந்த 3 மாதங்களுக்கு முன்னால் வரையில், அவர்கள் தொடர்ந்து அதற்கான ஆய்வு நடத்தி, விசாரித்து, சில பாடங்களை எடுக்க வேண்டுமென்று தெரிவித்து, சில திருத்தங்களைச் செய்ய வேண்டுமென்று சொல்லி, அந்தத் திருத்தங்கள் எல்லாம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. வருகிற ஆண்டுகளில், சிவஞானம் குழு தந்த அந்தப் புதிய பாடத்திட்டங்கள், பெருமளவுக்குச் சீர்திருத்தம் செய்யப்பட்ட பாடத்திட்டங்கள் மாணவர்களுக்கு பாடநூல் கழகம் மூலமாக வழங்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல மற்றுமொன்று. எட்டாவது வகுப்பு வரை படிப்பது கட்டாயம் என்பதை நான் ஏற்றுக்கொள்கிறேன். செயல்படுத்துவதிலே

சில இடர்ப்பாடுகள் இருக்கலாம். அது மெல்ல, மெல்ல, படிப்படியாக நிச்சயமாக மாற்றப்படும். 9ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரையில் ஆர்வமுள்ள மாணவர்கள் அனைவருக்கும் படிப்பு வசதி வழங்கப்பட வேண்டும். சேர விரும்பினால் அவர்களுக்கு இடம் இருக்க வேண்டும். 9-லேயிருந்து 12 வரையில், உயர் கல்வி என்பது, அந்தக் கல்வியைப் பெற்று, பயன்படுத்திக்கொள்ளக்கூடிய திறமை உள்ளவர்களுக்குக் கிடைக்க வேண்டும். ஆனால், நான் சொல்கிற திறமை என்பது ஒரேயொரு சமூகத்திற்கு மட்டுமே உள்ள திறமையல்ல. அனைத்துச் சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கும் இட ஒதுக்கீட்டின்படி அவர்களுக்கு இடையில் யார் திறமையுள்ளவர்களோ, அவர்கள் கல்லூரியிலே இருக்கிற இடங்களைப் பெற்றுக்கொண்டு, அதன் மூலமாக முன்னேற வேண்டும்.

பிற்பகல் 1-10

இன்னொரு வகையிலே சொல்லப்போனால், தமிழ்நாட்டிலே ஏறத்தாழ மூன்று இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கல்லூரியிலே பயில்கிறார்கள். மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட அந்த மாணவர்களில் ஓர் ஆண்டுக்கு ஏறத்தாழ இலட்சம் பேர், அல்லது 80 ஆயிரம் பேர் பட்டம் பெறுகிறார்கள். இந்த 80 ஆயிரம் பேர் பட்டம் பெறுவதால்மட்டும் பெரிய வளர்ச்சியை நான் காணவில்லை. அவர்களுடைய மனதிற்கு ஒரு நிறைவு இருக்கலாம். பெற்றோர்களுக்கு நிறைவு இருக்கலாம். இந்தக் கல்வி நிலையிலே மாற்றம் தேவை என்ற ஒரு கருத்து, பொதுவாக அவ்வப்போது பல பல்கலைக்கழகங்களாலே எடுத்து வைக்கப்படுகின்றன. உயர் கல்வி ஆய்வு மன்றத்தின் மூலமாகவும் சில கருத்துக்கள் எடுத்து வைக்கப்படுகின்றன. அதிலே ஒன்று, 'வெறும் பட்டப் படிப்பு பயன் தராது என்ற காரணத்தால், தொழில் சார்ந்த இணைப்புள்ள பட்டப் படிப்பு. ஏதேனும் ஒரு வகையான தொழில் பயிற்சி வேண்டும்' என்பது அது இப்போது தமிழ்நாட்டிலே கடந்த ஆண்டிலே ஏறத்தாழ 10 கல்லூரிகளிலேயும் இப்போது மேலும் 10 கல்லூரிகளிலேயும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, தொழில் சார்ந்த என்றால் நேரடியாக ஃபிசிகல் லேபர் அல்ல. அது ஒரு மேனேஜ்மெண்ட் படிப்பாக இருக்கலாம் அல்லது ஒரு தொழிலைப் பற்றிய படிப்பாக இருக்கலாம். மாணவர் படிக்கிற எக்கனாமிக்சோடு மேனேஜ்மெண்ட் படிப்பு அல்லது சையின்சோடு தொழிற்சாலையிலே பயி லவேண்டிய படிப்பு, இப்படி ஏதேனும் சில வகை இணைப்புடையது. ஏறத்தாழ இப்போது 20 கல்லூரிகளுக்கு மேல், இந்தத் தொழில் சார்ந்த படிப்பு வழங்கப்படுகிறது. இதிலே ஒரு வகையிலே முன்னோடியாக மனோன்மணீயம் சுந்தரனார்





பல்கலைக்கழகம் இப்படிப்பட்ட சில பாடத்திட்டங்களை Mixed Courses என்று சொல்லப்படுகிற முறையில் ஏற்கெனவே உள்ள வாய்ப்பாடு அடிப்படையில் இன்னின்ன படிப்பு இணைப்புப் படிப்பு என்பதை மாற்றி அமைத்துக்கொள்ள அவர்கள் அனுமதி வழங்கி இருக்கிறார்கள். இதிலே, அவ்வப்போது சில பரிசோதனைகளைப்போல, புதிய புதிய முயற்சிகள் நடைபெறுகின்றன. இருந்தாலும்கூட, மத்திய அரசினுடைய ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளிலே நம்முடைய மாணவர்கள் அதிகம் பேர் இடம் பெறவில்லை என்பது பொதுவான கருத்து. நான் அதை மறுக்கவில்லை. அதற்கு 2 காரணங்கள் இருக்கலாம். நம்முடைய மாணவர்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளிலே படிப்பதன் மூலமாக நேரடியாக நல்ல வேலைவாய்ப்புப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை மிக அதிகமாக வளர்த்துக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாட்டிலே, இந்த இரண்டு கல்வியும் தரமான கல்வியாக வழங்கப்படுகிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். அதாவது, ''The cream of the students go to either engineering or technology or medical. The rest comes for all other jobs." நான் இதைக் குற்றமாகக் கூடச் சொல்லவில்லை. யார் யாருக்கு அதிகத் திறமை இருக்கிறதோ, அவர்கள் அங்கே போய்விடுகிறார்கள். அதுவும் ஆயிரக்கணக்கிலே தமிழ்நாட்டிலே கடந்த ஆண்டு பொறியியல் கல்லூரிகளிலே சேர்ந்த மாணவர்கள் 22 ஆயிரம் பேர். அதற்கு முன் ஆண்டுகளிலே 19 ஆயிரம், 20 ஆயிரம் பேர். அதற்கு முன்னாலே 17 ஆயிரம் பேர் இது ஒரு தொடர் கதை. கடந்த ஆண்டு பாலிடெக்னிக்குகளிலே 28 ஆயிரம் பேர் சேர்க்கப்பட்டார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், கல்வித் தரத்தை உயர்த்தவேண்டும் என்பதை மறுப்பதற்காக அல்ல. இன்னொன்று நம்முடைய உறுப்பினர் திரு. லட்சுமணன் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஐ.ஏ.எஸ். அதிகாரிகளினுடைய பெயர்களை எல்லாம் படித்துக் காட்டினார்கள். தமிழ்நாட்டைத் தவிர, மீதம் இருக்கிற, இந்தியாவிலே இருக்கிறவர்களின் எல்லாப் பெயர்களும் நமக்கு ஒன்றாகத்தான் தெரியும். அவர்கள் ஒரே மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல. மீதம் இருக்கிற 17 பெரிய மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் இங்கே இருப்பார்கள். தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களும் அந்த 17 மாநிலங்களிலே எங்கே வேண்டுமானாலும் இருப்பார்கள். குறிப்பாக, திரிபுராவிற்கும் அஸ்ஸாமிற்கும் மேகாலயாவிற்கும் நம் மாநிலத்தார் பல பேர் போகிறார்கள். அங்கே அனுப்பப்படுகிறார்கள். அதுவும் எனக்குத் தெரியும். ஆனால் ஐ.ஏ.எஸ் மற்றும் ஐ.பி.எஸ். தேர்விலேயும் அதிகம் வெற்றி பெறுவதற்காக பல்கலைக்கழகங்களுக்கு ஏற்கெனவே அரசு

வேண்டுகோள் விட்டு, அவர்களுக்காக, சில சிறப்பு வகுப்புகளை நடத்த வேண்டும் என்று நானும் கேட்டிருக்கிறேன். மாநிலக் கல்லூரியிலே ஏற்கெனவே நடைபெற்றது எனக்குத் தெரியும். இந்த ஆண்டு விவரத்தை நான் தெரிந்து கொள்ளவில்லை. ஏற்கெனவே நடைபெற்றது. அதேபோல், தாழ்த்தப்பட்ட சமூக மாணவர்களுக்கும், பின்தங்கிய சமூக மாணவர்களுக்கும், ஐ.ஏ.எஸ், மற்றும் ஐ.பி.எஸ். போன்ற தேர்வுகளுக்குச் செல்வதற்காக, தனியாகவே Coaching Centre. சென்னையிலே ஏற்படுத்தப்பட்டு தொடர்ந்து நடைபெறுகிறது. அதிலே இருந்த ஒரு பேராசிரியர் தகுந்த அளவுக்கு மாணவர்களை வெற்றிபெறச் செய்தார் என்று கடந்த ஆண்டு நான் செய்தி அறிந்தேன். இதை வேண்டுமானால், 2 மடங்காக, 3 மடங்காக, மாணவர்களின் எண்ணிக்கையை உயர்த்தி, அவர்களைப் படிக்கச் செய்வதற்கு நாம் முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.

அதேபோல், எந்தக் கல்லூரியாக இருந்தாலும். அந்தக் கல்லூரிகளிலே இப்படிப்பட்ட பயிற்சியை வழங்குவதாக இருந்தால்-விருதுநகர் செந்தில்குமார் நாடார் கல்லூரி போன்ற கல்லூரிகளிலே -- நான் பெயரைச் சொல்கிறேன். ஞாபகம் வந்ததாலே -- அவர்கள் அதைப் போன்ற கல்லூரிகளில் வழங்குவதாக இருந்தால், அதை ஊக்கப்படுத்தலாம். ஏன் என்றால், இது ஒரு ஆப்ஷன். அவர்களாக விரும்பி, தங்களை ஈடுபடுத்திக்கொள்வார்களேயானால், அப்போது மிகப் பெரிய அளவிற்குப் பயன் தரும். எல்லா முதல்தரக் கல்லூரிகளிலும் இந்தப் பயிற்சியை வழங்குவதற்கு ஓர் ஆலோசனை வழங்க அரசு நிச்சயமாக முன்வரும்.

*பிற்பகல் 1-15*

அடுத்து, நான் தெரிவிக்க விரும்புகிறேன். தமிழ்நாட்டில் எல்லோருக்கும் கல்வி கிடைப்பதற்காகத்தான் இப்பொழுது 300 தொடக்கப் பள்ளிகள் இந்த ஆண்டு தொடங்கப்படவிருக்கின்றன. எல்லோருக்கும் கல்வி கிடைப்பது என்பதற்கு என்ன பொருள் என்று கேட்டால், தாங்கள் இருக்கிற இடத்திலிருந்து சற்றுத் தொலைவாகப் பள்ளிக்கூடங்கள் இருக்கிற காரணத்தினாலே, தங்களுடைய பிள்ளைகளைப் படிக்க வைக்காமல் விட்டுவிடுகிற ஒரு மனப்போக்கு நம்முடைய பெற்றோர்களுக்கு இருக்கிற காரணத்தால், அவர்களுடைய வாசற்படிக்குப் பக்கத்திலே பள்ளிக்கூடம் வைக்கலாமா என்பது. நான் படிக்கின்றபோது ஐந்தாறு மைல்கள் போய்த்தான் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிக்க வேண்டுமென்ற ஒரு நிலைமை இருந்தபோது, ஐந்து



மைல்கள் தினமும் சைக்கிளில் போய்ப் படித்தேன். திருக்குவளையிலிருந்து திருவாரூர் போய்ப் படித்தவர்தான் தமிழக முதலமைச்சர் அவர்கள். ஆனால், ரொம்ப தூரம் போனால்தான் ஒழுங்காகப் படிக்கலாம்போல் இருக்கிறது (சிரிப்பு) ஆக இப்பொழுது ஆங்கிலத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள். நீர்த் தொட்டி இருக்கிற இடத்திற்குத்தான் குதிரையைக் கொண்டு போகமுடியுமே விர, குதிரையை நீர் பருக வைக்கமுடியாது என்று. அதே நிலையில் பள்ளிக்கூடத்தையும் கொண்டு போய் வைத்து, பெற்றோரையும் எப்படியாவது ஊக்கப்படுத்தி, பிள்ளைகளைக் கட்டாயம் சேர்க்க வைப்பதற்கான ஒரு நோக்கத்தோடுதான் இந்தத் தொடக்கப் பள்ளிகள் இன்று வழங்கப்படுகின்றன.

அடுத்து, தொடக்கப் பள்ளியினுடைய தரத்தை உயர்த்துவதற்காகவே, தான் மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம். உலக வங்கியினுடைய கடன் தொகையாக 85 விழுக்காடு. மத்திய அரசு மூலமாக நமக்குக் கிடைக்கிறது. நமக்கு அது ஒரு கிரான்டாகத்தான் கிடைக்கிறது. நம்முடைய அரசு 15 விழுக்காடு செலவிடுகிறது. ஒரு மாவட்டத்திற்கு ஏறத்தாழ ரூ.32 கோடி, ரூ.33 கோடி நான்கு ஆண்டுக் காலத்தில் செலவிடப்படுகிறது. இதிலே பல பள்ளிக்கூட வகுப்பறைகள் கட்டப்படுகின்றன. விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. அதற்குள்ளே நான் போய் முழு அளவிற்குச் சொல்லிக் கொண்டிருப்பதற்கு வாய்ப்பில்லை. அந்த வகையில், திரு. மணி அவர்கள் இங்கே பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். அந்தப் பகுதி, அதாவது கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, தருமபுரி ஆகிய நான்கு மாவட்டங்களில் இப்போது இரண்டாவது கட்டமும் முடிகிற அளவிற்குச் செயல்பட்டு, பல பள்ளிக்கூடங்கள் தரம் உயர்ந்திருக்கின்றன. தென்னாற்காடு மாவட்டத்திலேயும், வேறு சில மாவட்டங்களிலேயும் நான் சென்று பார்த்தேன். கடலூர் மாவட்டத்தில் ஒரு பள்ளிக் கூடத்தில் ஒரே ஒரு அறைதான் இருந்தது. 3 வகுப்புகள் அந்த அறையில் நடந்தன. அதில் இப்போது 3 அறைகள் கட்டப்பட்டு அல்லது இரண்டு அறைகள் சேர்த்துக் கட்டப்பட்டு, வகுப்புகள் தனித் தனியாக நடத்தக்கூடிய அளவிற்கு ஒரு வாய்ப்பு உருவாகியிருக்கிறது. அதேபோல், அந்தத் திட்டத்தின் மூலமாக ஒரே ஒரு ஆசிரியர் இருந்த பள்ளிக்கூடங்களுக்கு இன்று இரண்டாவது ஆசிரியர் தரப்பட்டிருக்கிறார். பெண்ணாகரம் தொகுதியிலேகூட கடந்த ஆண்டிலே 7 அல்லது 8 பள்ளிக்கூடங்களுக்கு இரண்டாவது ஆசிரியர் தரப்பட்டிருக்கிறார். வருகின்ற ஆண்டிலே மீதம் இருக்கின்ற 7, 8 பள்ளிக் கூடங்களுக்கு, இரண்டாவது ஆசிரியர் தொடக்கப் பள்ளிகளுக்கு வழங்கப்படுவார் என்பது அந்தத்

துறையினுடைய திட்டப்படி நடைபெறுகின்ற காரியம் என்பதை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று, இந்த 40 மாணவர் விகிதம்; அது 40 விழுக்காடு அல்ல; 40 பேருக்கு ஓர் ஆசிரியர் என்பது ஒரு ஸ்கேல். இதில் 30 பேர் இருந்தாலும் ஓர் ஆசிரியர் உண்டு; 25 பேர் இருந்தாலும் ஓர் ஆசிரியர் உண்டு; 60 பேர் இருந்தாலும் இரண்டாவது ஆசிரியர் உண்டு. 85-90 பேர் இருப்பார்களேயனால் மூன்றாவது ஆசிரியர் உண்டு. இது இப்பொழுதுதான் இம்ப்பிளிமெண்டேஷன் ஆகியிருக்கிறது. இப்போதுதான் நடைமுறைக்குக் கொண்டு வருகிறோம். 50 பேர் என்கிற கணக்கு வைத்து கல்வித் துறையையே மெல்லச் சாகடித்தது [illegible]ந்த கால ஆட்சி. அந்த ஆட்சிக் காலத்தில் கல்வித் துறையில், [illegible]வும் அடிமட்டத்தில் வாழ்கின்ற மக்களுக்குக் கிடைக்க வேண்டிய [illegible]வி அடியோடு சத்து இழந்து போய்விட்டது. நான் சொன்னதைத் தவறாக எண்ணக்கூடாது. அப்படி 5 ஆண்டுகாலம் இந்த நாட்டிலே நடைபெற்றது. எம்.எல்.ஏக்கள் சட்டமன்றத்திலே குறைகள் சொல்கின்ற உரிமையை இழந்து இருந்ததைப்போலவே, பள்ளிக் கூடங்கள் செயல் இழந்து இருந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) கல்வித் துறையினுடைய அதிகாரிகள் பள்ளிக் கூடங்களை மேற்பார்வையிடுகிற பழக்கத்தை மறந்துவிட்டார்கள். மாணவர்களுக்குப் பேருக்குக்கூடத் தேர்வு வைக்கிற பழக்கம் இல்லாமல் போய்விட்டது. இன்னும்மீதம் எல்லாம் சொல்லிக்கொண்டே வந்தால் அரசியல் ஆகிவிடும். ஆகவே நான் சொல்லவில்லை. இந்த அளவிற்கு ஒரு நிலை இருந்ததை, இப்போது இந்த இரண்டு ஆண்டுகளில் முழு அளவிற்கு இயக்குநர்களைத் தீவிரப்படுத்தி, அவர்களைச் செயல்படுத்துவதன் மூலமாக மாவட்டக் கல்வி அதிகாரிகள் ஓரளவிற்குச் செயல்பட்டு, குறைபாடுகள் சுட்டிக்காட்டப்படுகிறபோதெல்லாம் அவ்வப்போது நடவடிக்கை எடுக்கப்பட்டு, சில இடங்களில் ஆரம்பப் பள்ளிக்கூட ஆசிரியர்கள் பள்ளிக்கு வரவில்லை என்றால் அவர்களுடைய ஆண்டு ஊதிய உயர்வை நிறுத்தி, சில இடங்களில் மாறுதல் செய்து, எந்த அளவிற்கு. ஏற்கெனவே தவறான பாதையிலே போய்விட்டவர்களையும் திரும்பச் செயல்பட வைக்க முடியுமோ, அந்த அளவிற்குச் செயல்படுத்தி, கல்வியை வழங்குவதற்குத் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதை நான் உறுதியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-20*

அதேபோல, கல்வியினுடைய மொத்தக் கோரிக்கை 3,601 கோடி. அதில் உயர் கல்விக்கான 464 கோடி தவிர மீதி அனைத்தும் பள்ளிக்



கல்விக்காகத்தான். தொடக்கக் கல்வி, தொடக்கக் கல்விக்கு அடுத்த நிலையில் உள்ள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிக் கல்விக்கு திரு. சுப்பராயன் அவர்கள் பேசும்போது சொன்னதைப்போல மத்திய அரசு செலவிடுகிற தொகை குறைந்துவிட்டது என்பது ஓர் அடிப்படை வாதம். பல்கலைக் கழகத்திற்கு, அதாவது 10 கோடி தரக்கூடிய பல்கலைக்கழகத்திற்கு, ரூ. 20 கோடி, ரூ. 30 கோடி கொடுக்கக்கூடிய அளவிற்கு உள்ளது. மத்திய அரசினுடைய கொள்கைப்போக்கு. நம்முடைய போக்கு என்னவென்றால் தொடக்கக் கல்விக்கும், பள்ளிக்கூடக் கல்விக்கும்தான் அதிகமாக நாம் நிதியொதுக்கிச் செலவிடுகிறோம். கிடைக்கிற நிதியை அதிகமாக அவர்களுக்காகத்தான் செலவிடுகிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வேறு சில விடைகளைச் சொல்வதற்கு முன்னால், ஒன்றிரண்டு பிரச்சினைகள் குறித்து நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

ஒன்று திருமதி. பொன்னம்மாள் அவர்கள் திரும்பத் திரும்ப நிலக்கோட்டையிலே ஒரு மகளிர் கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். தருமபுரி மனோகரனும் கேட்டார்கள். இன்னும் பல உறுப்பினர்கள் தொடர்ந்து கேட்டார்கள். இன்றைக்கு பொன்னம்மாள் அவர்களுக்கு, தான் பேச முடியவில்லையே என்ற ஒரு ஆதங்கம்கூட இருக்கலாம். பேசினால், அதை மட்டும்தான் பேசுவார்கள். ஏன் அவர்களுக்கு அந்த வீணான வேலை என்று அவர்களை நான் பேசாமல் இருக்கும்படி கேட்டுக்கொண்டேன். அதற்கான பதில், அரசால் முடியாது என்பதுதான். அது ஒரு standing reply. அதைச் சொல்ல நான் ஒன்றும் வெட்கப்படவில்லை. இருக்கிற கல்லூரிகளிலே உள்ள குறைகளைப் போக்குவதற்கே நாங்கள் பெரிய முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். குறைகளைப் போக்குவதற்கு, நிதித் துறையில் ஒவ்வொரு பிரச்சினைக்கும் நிதி ஒதுக்க வேண்டியிருக்கிறது. மார்க்கர்களுக்கு நிலையான பணி தருவதற்கேகூட நிதித் துறை ஒப்புக்கொள்வதற்கு 2, 3 மாத காலம் ஆயிற்று. இன்னும் சொல்லப்போனால், நிலையான பணி தருவதற்கு வாய்ப்பு இல்லை என்று நிதித் துறை எழுதி, கல்வித் துறையும்கூட அதை ஏற்றுக் கொண்டு, மறுபடியும் முதலமைச்சரிடத்திலே போய் அதற்கான கோரிக்கை வைத்தபோது, அவர்கள் அதை வலியுறுத்தி, மார்க்கர்களுக்கு நிலையான பணி, அதாவது ஊதிய விகிதமுறை அடிப்படையில் வழங்குவதற்கு, அவர்கள் தீர்மானித்துத்தான் கிடைத்தது. வேடிக்கையாக நான் சொல்வதாக இருந்தால், நிதித் துறையினுடைய பெருமளவு ஒப்புதலோடுதான் பல காரியங்கள் கல்வித் துறையிலே செய்யப்பட வேண்டியிருக்கிறது. அதற்கு அடிப்படையான காரணம்

பெரும் செலவாகிற ஒரு துறையாக இருப்பதும், ஏராளமானோர் தொடர்புடைய ஒரு துறையாக இருப்பதும்தான். ஒவ்வொரு பிரச்சினையிலேயும் 50 இலட்சம், 1 கோடி, 3 கோடி, 5 கோடி ரூபாய் என்று ஒதுக்குகின்ற நிலைமை ஏற்படுகிறபோது, நிதித் துறை பெருமளவிற்கு ஈர்க்கப்படுகிறது. அவர்கள் முடிந்த அளவிற்குச் செய்கிறார்கள். குறிப்பாக, முதலமைச்சர் அவர்கள் கல்வியைப் பொறுத்து, அதிலுள்ள குறைபாடுகளைக் களையவேண்டும் என்ற அவர்களுக்குள்ள ஈடுபாட்டின் காரணமாக, அவர்களுக்கிருக்கிற பல்வேறு அலுவல்களுக்கிடையில் கல்வி பற்றிய பிரச்சினைகளுக்கு அவர்கள் அதிகமான நேரம் செலவிட்டு, அதையும் கவனித்து, இன்னும் சொல்லப்போனால், சில செய்திகள் எனக்குத் தெரியாவிடினும், எனக்குத் தெரியாத செய்திகளை அவர்கள் கேட்டுத் தெரிந்து கொண்டு என்னிடத்திலே சொல்கின்ற அளவிற்கு அதிலே ஈடுபாடு உடையவர்களாகப் பணியாற்றுகிறார்கள். திருமதி. பொன்னம்மாள் அவர்கள் கேட்ட கல்லூரியை வழங்க முடியாத ஒரு நிலையில், அவர்களே வந்துச் சொன்னார்கள். நான் 80 இலட்சம் ரூபாய் நிதி திரட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறேன்; "அந்த 80 இலட்சத்தை வைத்துக் கொண்டாவது, ஒரு கல்லூரி தரக் கூடாதா என்றார்கள். "அந்த 80 இலட்சத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்; இடமும் தருகிறோம், நீங்கள் கல்லூரி தொடங்குங்கள், ஏற்கெனவே, கட்டடம் இருக்கிறது" என்றார்கள். நான் பொதுவாக இந்த அவையிலே உள்ள உறுப்பினர்கள் கேட்டால் சொல்வது என்னவென்றால், 1 கோடி ரூபாய் நிதி வழங்கப்பட்டால்— ஏனென்றால், ஓர் ஆண்டிற்கு ஏறத்தாழ 60 இலட்சம் ரூபாய் ஆசிரியர்களுடைய சம்பளத்திற்கு வழங்க வேண்டும். அது வளருகிறபோது, 90 இலட்சம், 1 கோடி என்று வழங்க வேண்டும். 10 ஆசிரியர்கள் இருப்பார்களேயானால், அதற்கு ஆகிற செலவு எவ்வளவு என்பதைக் கணக்கிட்டுப் பார்த்துக்கொள்ளுங்கள். அதுவும் இப்போது ஊதியம் வேறு உயரப் போகிறது. அது உயருகிறபோது, ஆசிரியர்களுடைய சம்பளமும் மிகப் பெரிய செலவாக ஆகிற காரணத்தினால், நடைமுறைச் செலவு அதிகம் என்கிற காரணத்தினால், ஒரு கல்லூரியைத் தொடங்குவதற்குத் தயங்கியபோது 80 இலட்சம் ரூபாய் நிதி திரட்டித் தருவதாக அவர்கள் உறுதி சொன்னதன்பேரிலே, அதற்கு ஒரு குழு போட்டு, அந்தக் குழுவின் சார்பாக அந்த நிதியைத் திரட்டி, வங்கியிலே போட்டு, அந்த டிராஃப்டை அரசுக்கு அனுப்புங்கள் என்று நான் அவர்களுக்குச் சொன்னேன்,. முதலமைச்சர் அவர்களின் இசைவோடு. அப்படி 80 இலட்சம் தருகிறபோது அவர்களுடைய கோரிக்கையை — அதுவும் ஒரு பெண் உறுப்பினர் கேட்கிறார்; மகளிர் கல்லூரி கேட்கிறார்;



ஆகவே, அந்த அடிப்படையிலே அதை - ஏற்றுக்கொள்ளலாம் என்று அரசு கருதியிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நிதி தந்த பின்னரே நான் கைதட்டுவேன்.

பிற்பகல் 1-25

அதேபோல, நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவர்களுக்கென்று கிடைக்கிற ஒரு கோடி ரூபாயிலிருந்து இப்படிச் சில கல்வி நிலையங்களைத் தோற்றுவிக்க அவர்கள் நிதி கொடுக்கிறார்கள். அந்த முறையில் திரு. முரசொலி மாறன், நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள், அவர்களுக்குக் கிடைக்கிற நிதி ரூ. 1 கோடியிலிருந்து - மாநகராட்சிப் பகுதியில் புரசைவாக்கம் தொகுதியில் ஏறத்தாழ 12 ஏக்கர் நிலம், மாநகராட்சி நிலம் இருக்கிறது. அங்கே ஒரு பாலிடெக்னிக் - பல்தொழில் பயிலகம் ஏற்படுத்த வேண்டும். அதற்கு நான்- 75 இலட்சம் ரூபாய் நிதியை அரசுக்கு ஒப்படைக்கிறேன் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்கு அந்த ஆலோசனையைச் சொன்னவரே ஆற்காடு வீராசாமியும், திரு. ரங்கநாதனுமாகத்தான் இருக்க வேண்டும், அந்தத் தொகுதிக்குப் பயன் கிடைப்பதற்காக. ஆக, அப்படிச் சொன்ன அந்த ஆலோசனையை நான் ஏற்றுக்கொண்டு அந்த 75 இலட்சம் ரூபாய் நிதி கிடைத்தவுடன் அந்த இடத்தில் கட்டடம் கட்டி அந்த பாலிடெக்னிக் தொடங்குவதற்கு அரசு முயற்சிக்கும். ஆனால், இன்னும் அதற்கெல்லாம் ஆணை பிறப்பிக்கப்படவில்லை. ஏற்கப்பட்டதாகத் தெரிவிக்கவில்லை. அதேபோல, இங்கே டாக்டர் பத்மா அவர்கள் பேசுகின்றபோது, உயர்நிலைப் பள்ளி, மேல்நிலைப் பள்ளி தொடங்குவதற்கு அந்தப் பகுதியிலே உள்ள ஏழை மக்கள் அந்த நிதியை, குறைந்தபட்ச நிதியைச் செலுத்த முடியாத நிலைமை இருக்கிறபோது, சட்டமன்ற உறுப்பினருக்குத் தரப்படுகிற நிதியிலிருந்து 1 இலட்சம், 2 இலட்சம் ரூபாய் என்று குறிப்பிட்ட தொகையை நாங்கள் வழங்குவதாக இருந்தால் அரசு ஏற்றுக்கொள்ளுமா என்று கேட்டார்கள். நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கேட்டபோது, ஏற்றுக்கொள்ளலாம் என்று அவர்கள் தெரிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்த நிதியை அதாவது சட்டமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படுகிற நிதியை கல்வித் துறைக்கு அவர்கள் வழங்குவதை அரசு ஏற்றுக்கொள்கிறது. ஆனால் அது உயர்நிலைப் பள்ளியா, மேல்நிலைப் பள்ளியா என்று நான் இன்னும் உறுதி சொல்லவில்லை. அந்தப் பட்டியலிலே இருக்கிற 150 விண்ணப்பங்களிலே 40 பள்ளிக்கூடங்களைத் தேர்ந்தெடுக்கிறபோது மாவட்டத்திற்கு 2 அல்லது 1, இன்னும் சொல்லப்போனால், ஒரு வட்டாரம், அதாவது தஞ்சை

மாவட்டம் என்றால் 3 மாவட்டங்கள்; அந்த 3 மாவட்டங்களுக்கு ஒவ்வொன்று கிடைத்தால்கூட போதும். ஒரு உயர்நிலைப் பள்ளியோ, ஒரு மேல்நிலைப் பள்ளியோ கட்டாயம் கிடைக்கும்படி கவனிக்கப்படும். அதிலே வேண்டுமானால், முன்னுரிமை தரும்படி நான் அந்த உயர்மட்டக் குழுவுக்கு அல்லது அதை ஆய்வு செய்கிற குழுவினருக்குத் தெரிவிக்க முடியும். அந்த முறையில் அது ஏற்றுக் கொள்ளத்தக்கது என்பதை மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட அந்த நிதியைப் பெருமளவுக்கு, தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு, உயர்நிலைப் பள்ளிக்கூடங்களுக்குக் கட்டடம் கட்டுவதற்கு வழங்கியிருப்பதற்காக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் நான் நன்றி தெரிவிக்கவிரும்புகிறேன்.

கிராமப்புற வேலைவாய்ப்புத் திட்ட நிதி, ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்ட நிதி இவை எல்லாம்கூட பள்ளிக்கூட வளர்ச்சிக்கு, கட்டடங்கள் கட்டுவதற்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்று மாவட்ட ஆட்சியாளர்களைக் கேட்டுக்கொண்டு அந்த நிதி அவ்வளவும் செலவிடப்படுகிறது, பெருமளவிற்குச் செலவிடப்படுகிறது. அடுத்து, பள்ளிக்கூடங்களிலே கழிப்பறை கட்டுகிற திட்டத்திற்குச் செலவிடப்படுகிறது. எனவே, அந்த முறையில் உறுப்பினர்கள் அவரவர்களுடைய வட்டாரத்திலே உள்ள பள்ளிக்கூடக் கட்டடங்களைச் சீர் செய்வதற்குத் தங்களுடைய பங்குத் தொகையை, அவர்களுக்கு ஏற்றதென்று தோன்றுகிற எண்ணப்படி வழங்குவார்களானால், அதற்கு நான் என்றைக்கும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன்.

கடந்த ஓராண்டிலே, பொறியியல் கல்லூரி நுழைவு ஒழுங்குபடுத்தப்பட்டது. ஒற்றைச் சாளர முறை - Single Window System- ஏற்படுத்தப்பட்டது, இந்தியாவிலேயே தமிழ்நாட்டிலேதான். அந்த ஒரு முறையை முதல்வர் கலைஞர் அவர்கள், உயர் கல்வி ஆய்வு மன்றத் துணைத் தலைவர், உயர் கல்விச் செயலாளர் ஆகியோர் எல்லாம் ஆலோசனை நடத்தி, தொடர்ந்து அதைச் செயல்படுத்த வேண்டும் என்று தீர்மானித்து, அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் பொறுப்பு ஏற்று, அந்தப் பல்கலைக்கழகத்தினுடைய அலுவலர்கள், பேராசிரியர்கள் உள்ள மேற்பார்வைக் குழு ஒன்று அதைச் செயல்படுத்த நியமிக்கப்பட்டு, மிகச் சீரிய பணி ஆற்றப்பட்டு, பொதுமக்கள், பத்திரிகை ஆசிரியர்கள், பெற்றோர்கள் எல்லோரும் மனநிறைவு அடையக்கூடிய அளவுக்கு, பெற்றோர்கள் அடைந்த



தொல்லைகளைக் குறைத்து, வீண் செலவைக் குறைத்து, கல்லூரிகள் அதிக நிதி வாங்குகிற வாய்ப்பைக் குறைத்து, முறைப்படுத்தி வழங்கப்பட்டது. அந்த முறை, இந்த ஆண்டு, அந்த அளவுக்கு பாலிடெக்னிக்குகளுக்குத் தேவையில்லை என்று சொன்னாலும்கூட, பாலிடெக்னிக், கல்வித் துறையிலும் நடைமுறைப்படுத்தப்படும். பொறியியல் கல்லூரியைவிட பாலிடெக்னிக்குகள் அதிகம். 28,000 மாணவர்கள் கடந்த ஆண்டு சேர்ந்தவர்கள். கடந்த ஆண்டு அண்ணா பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர்களும் மற்றவர்களும், அந்தக் குழுவினரும் ஆற்றிய அந்தப் பணிக்கு இப்போது நான் நன்றி தெரிவிக்கவும், பாராட்டுத் தெரிவிக்கவும் கடமைப்பட்டிருக்கிறேன். பல்வேறு சூழ்நிலைகள் காரணமாக, தகுந்த பாராட்டை அவர்களுக்கு வழங்க வேண்டும் என்று எண்ணியும்கூட அந்த வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. அரசியலிலே பல்வேறு சூழ்நிலைகள், தேர்தல்கள். இருந்தாலும்கூட, இந்த அவையில் அந்த ஒற்றைச் சாளர முறையை வெற்றிகரமாக நிறைவேற்றித்தந்த அந்தப் பல்கலைக்கழக பேராசிரியர்கள், துணை வேந்தர், அலுவலர்கள் ஆகிய அனைவருக்கும் அரசு சார்பாக என்னுடைய பாராட்டை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

*பிற்பகல் 1-30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு எல்லாம் மிக நன்றாகத் தெரியும். கல்வித் துறையினுடைய வளர்ச்சியைக் கருதித் தான் உயர் கல்வி, பள்ளிக் கல்வி என்று 2 துறைகளாகப் பிரிக்கப்பட்டு, 2 செயலாளர்கள் இதனுடைய பெரும் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு அடுத்து, நிர்வாக அமைப்புகளில் இயக்குநர் வளாகத்திலேயும் பல முன்னேற்றமான பணிகள் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. அவை தொடர்ந்து செய்யப்படும்.

நான் கருதி இருக்கிற எல்லாவற்றையுமோ அல்லது நான் தெரிவிக்க வேண்டிய விடைகள் அத்தனையையுமோ இந்த நேரத்தில் தெரிவிக்க வாய்ப்பு இல்லை. ஏன் என்றால், எனக்கு இன்னும் 1½ மணி நேரம் கிடைத்தால்தான் என்னுடைய குறிப்புகள் முழுமையையும் நான் வழங்க

முடியும். அப்படி அரைகுறையாக வழங்குவதிலே எனக்கு மன நிறைவு இல்லை. ஆனாலும், சில செய்திகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

Guest Lecturers பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. திருநாவுக்கரசு அவர்களும் வேறு சில மாண்புமிகு உறுப்பினர்களும் இங்கே தெரிவித்தார்கள். Guest Lecturers என்றாலே, it is purely temporary என்பது கருத்தாகும். இன்னும் சொல்லப்போனால் மாதச் சம்பளம் உள்ள வேலைகூட அல்ல. ஏற்கெனவே மணிக்கு 50 ரூபாய் கொடுத்தார்கள். அதை ஒரு மாதத்திற்கு 2,400 ரூபாய் வரையில் தான் அவர்களுக்குத் தரலாம் என்று இருந்தது. அவர்களுடைய வேலையில் உள்ள சுமையை நான் கருதிப்பார்த்த காரணத்தால் அந்த 50 ரூபாய் என்பதை 80 ரூபாய் என்று உயர்த்தி மாதம், 3,200 ரூபாய் அளவுக்குப் பெறக்கூடிய அளவுக்கு அத்தனை மணி நேரம் வேலை தரலாம் என்று அனுமதித்து, சில இடங்களில் இன்னும் 2 ஆயிரம் ரூபாய்க்குத்தான் வேலை கிடைக்கும், அத்தனை மணிநேரம் தான் வேலை இருக்கும். அதை வேண்டுமானால் சற்று நிதித் துறையினுடைய சம்மதத்தோடு நாம் உயர்த்தித் தருவதற்கு முயற்சிக்க முடியுமே தவிர, நேரடியாக வேலை அளிக்க வழியில்லை. அவர்கள், ஆசிரியர்களைத் தேர்வு செய்கிற வாரியத்தின் மூலமாகத் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் அல்ல. வகுப்புவாரி இட ஒதுக்கீட்டு அடிப்படையில் தேர்ந்து எடுக்கப்பட்டவர்கள் அல்ல. யூ.ஜி.சி. விதித்து இருக்கிற அந்த நியதியின்படி அந்தத் தேர்வில் எல்லாம் வெற்றி பெற்றவர்கள்தான் அந்தப் பணியைச் செய்யவேண்டும் என்றும் விதி இல்லை. இருக்கலாம் சில பேர். ஆகவே அவர்களை நேரடியாக ஏற்க வழியில்லை. ஒரு காலத்திலே Contract Lecturers என்று இருந்த ஒரு முறையிலே, 7, 8 ஆண்டுகளுக்கு முன்பு அப்படி 300, 400 பேர் பணியாற்றி - கான்ட்ராக்ட் என்பது ஒரு ஆண்டு முழுவதிற்கும் கான்ட்ராக்ட் – அந்தக் கான்ட்ராக்ட் 4 ஆண்டுக் காலம், 5 ஆண்டுக் காலம், தொடர்ந்து 6ஆவது ஆண்டு வருகிறபோது, அவர்களை அரசாங்கப் பணியில் ஏற்றுக்கொள்வதற்காக, விதிமுறைகளை எல்லாம் தளர்த்தி, ஏற்றுக்கொண்டார்கள். அந்தக் Contract Lecturers அரசாங்கப் பணியில் சேருவதற்குச் சற்று உரிமை உடையவர்களாக ஆகிவிடுகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்களுக்குத் தெரியும் Contract Labour மாதிரி அந்த உரிமை வருகிறது என்பதற்காக இவர்களை விருந்தாளிகளாக ஆக்கி விட்டார்கள். Guest என்றாலே நாம் ஒத்துக்கொண்டு இருக்கிற



வரைக்கும் வீட்டிலே இருக்கலாம், நாம் ஒத்துக்கொள்ளாதபோது Guest வெளியேற வேண்டியது தான்.

அதற்குரிய விதிமுறைகளின்படித் தேர்வு வாரியத்தின் மூலமாகத்தான் தேர்ந்து எடுக்கப்பட்டு ஆசிரியர்களை நியமிக்க வேண்டும். யூ.ஜி.சி.யின் மூலம் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற லெக்சரர் தகுதிக்கான அந்தத் தேர்வு எழுதி வெற்றி பெற்று இருக்கவேண்டும். ஆனால் ஒன்றே ஒன்று. தேர்வு வாரியத்தின் நேர்முகத் தேர்வுக்கு இவர்கள் யாரேனும் முறைப்படி அழைக்கப்படுவார்களானால் அப்படி அழைக்கப்படுகின்றபோது, Guest Lecturer-ஆகப் பணியாற்றிய அந்தக் காலத்திற்கு ஒரு குறிப்பிடத்தக்க அளவுக்கு மதிப்பெண்கள் தருவதற்கான ஆலோசனையை நான் ஆசிரியர் வாரியத்திற்கு வழங்க முடியுமே தவிர, நேரடியாக நியமிக்கப்பட முடியாத நிலையே உள்ளது. வகுப்புவாரி முறைப்படியும் தேர்ந்து எடுக்கப்படாதவர்கள், மொத்தமாக அனுமதிக்கப்படுகிறபோது, ஒருவேளை தாழ்த்தப்பட்டவர்கள் யாருமே கூட இல்லாமல் இருக்கலாம்; பின்தங்கியவர்கள், மிக, மிகப் பின்தங்கியவர்கள் இல்லாமல் இருக்கலாம். ஆகவே, இந்த முறைகள் எல்லாம் மொத்தமாக அடிபட்டுப் போய்விடும் என்ற ஒரு சூழ்நிலையில் அவர்களும் தொடர்ந்து பணியாற்றியதாக உரிமைகோர முடியாத நிலைமையில், எடுக்கக்கூடிய வாய்ப்பு இல்லை. ஆனால் அவர்களுக்கு ஒரு முன்னுரிமை கிடைக்க முடியுமா, priority consideration கிடைக்க முடியுமா, என்பதை ஆசிரியர் தேர்வு வாரியத்திற்குத் தெரிவித்து அவர்கள் மூலமாக அதை ஓரளவுக்கு நிறைவு செய்யலாம் என்று நான் நம்புகிறேன்.

இங்கே திரு. கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகிறபோது குறிப்பிட்டார்கள். கடந்த 1996-97-ல் 1340 இடங்களில் பட்டதாரி ஆசிரியர்கள் தாழ்த்தப்பட்ட தோழர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். மேலும் நியமிப்பதற்கு, இந்த ஆண்டு நீதிமன்றத் தடை இருப்பதை விலக்க, அனுமதிபெற அரசு முயற்சித்துக் கொண்டிருக்கிறது.

*பிற்பகல் 1-35*

கடந்த 2 ஆண்டுகளில் மொத்தம் இடைநிலை ஆசிரியர்கள் 24,362 பேர் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இன்னும் 30,000 பேர் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அது வேறு.

அ.இ.அ.தி.மு.க. ஆட்சியிலே 5 ஆண்டு காலத்தில் மொத்தம் நியமிக்கப்பட்டவர்கள் 8450 பேர். வசூல் ஏறத்தாழ (சிரிப்பு) அது அவர்களாகக் கொடுத்த கொடை - ஆக அப்படி ஒரு நிலை. ஆகவே, இவ்வாறு அந்த ஆசிரியர்களெல்லாம் நியமிக்கப்பட்டபோது ஏற்பட்ட ஒரு பெரிய குறை, திருநெல்வேலி, இராமநாதபுரத்துக்காரவங்களெல்லாம் சென்னை கார்ப்பரேஷனிலே; காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்தவர்களெல்லாம் கோயம்புத்தூரிலே. அப்படிப் போட்டு அவர்களை இடம் மாற்ற முடியாது என்று ஒரு தடை வேறு இருந்தது. நம் அரசு வந்தவுடனே தான் அந்தத் தடைகளையெல்லாம் நீக்கி, அவரவர்களுடைய மாவட்டத்திற்கு அவர்களை அனுப்பி வைத்தோம். அப்படியும், நாகர்கோவில், நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதிகம் திரும்பப்போன காரணத்தினாலே அங்கே மற்றவர்களுக்குப் புதிய வேலை கிடைக்கிற வாய்ப்புக் குறைந்தது. நாகர்கோவில், திருநெல்வேலியிலே கடந்த ஆண்டு குறைந்தது. திரு. அப்பாவு அவர்கள் எங்களுக்கு மட்டும் எப்படியாவது வேலை கொடுங்கள் என்றார்கள். எம்.எல்.ஏ. வேலைதான் தர முடியுமே தவிர மற்ற வேலை தர முடியாது என்று தெரிவிக்க வேண்டிய நிலைமை அப்பொழுது ஏற்பட்டது. (சிரிப்பு)

அதே போல, இந்த ஆண்டு 5-வது வகுப்பு வரையில் இலவசப் பாட நூல்கள் அனைவருக்கும் வழங்கப்படுகின்றது. ஏற்கெனவே இலவச சத்துணவு சாப்பிடுகின்ற பிள்ளைகளுக்குத்தான் இலவசமாக வழங்கப்பட்டது. இந்த ஆண்டு அனைவருக்கும் வழங்கப்படுகிறது.

இன்னும் சொல்லப்போனால், சீருடை மட்டும் இடைநிலை வகுப்புகளிலே - தொடக்கப் பள்ளியிலே அல்ல - 2 இலட்சத்து 75 ஆயிரத்து 128 பேருக்கு வழங்கப்படுகிறது. சீருடை என்றால் சிறப்பான உடை. முன்பெல்லாம் சீருடை என்றால் சீறுகிற உடை. அது இப்பொழுது நம்முடைய மாநிலத்திலே முறைப்படி அந்தத் துணிகள் பெறப்பட்டு தைக்கப்பட்டு வழங்கப்படுகின்றன.

அதேபோல, தொடக்க நடுநிலைப் பள்ளிகளிலே மட்டும் 46 இலட்சத்து 94 ஆயிரத்து 60 பேருக்கு வழங்கப்படுகின்றன.

இதுவொரு பெரிய பணி. எல்லா மாநிலங்களிலேயும் இந்தப் பணிகள் எல்லாம் அவ்வளவு ஒழுங்காக நடைபெறவில்லை; நடைபெற முடியாது. இங்கே நமக்குக் குறைகள் கண்ணுக்குத் தெரியும் ஆனால் ஓர் அடிப்படை இருக்கிறது; அதனாலே பல பணிகள் நடைபெறுகின்றன.



அதே போல, இலவசமாக வழங்கப்படுவதற்கும், குறைந்த விலையிலே விற்பதற்கும் அடிக்கப்படுகிற புத்தகங்கள் மட்டும் 5 கோடிக்கும் மேலே. 5 கோடி புத்தகங்களை ஒவ்வொரு ஆண்டும் தயாரித்து - பல்வேறு வகுப்புகளுக்கு, வெவ்வேறு பாடங்கள் - வெவ்வேறு மாவட்டங்கள், வெவ்வேறு ஊர்கள், அப்புறம் தாழ்த்தப்பட்ட சமூகப் பிள்ளைகள், பின்தங்கிய பிள்ளைகள், இவர்களுக்கெல்லாம் பிரித்து வழங்கப்படுகின்றன.

அது ஒரு பெரிய பணி. மத்திய அரசுகூட நமக்கு ஓர் ஆலோசனை சொல்கிறபொழுது, இந்தப் புத்தகங்களையெல்லாம் எல்லோருக்கும் வழங்குவதற்கு முடியுமா என்று கேட்டார்கள். ஏற்கெனவே நாங்கள் ஏறத்தாழ 100-க்கு 80 பேர், 75 பேருக்கு வழங்குகிறோம்; மீதிப் பேருக்கும் வழங்குகிறோம். எங்களால் வழங்க முடியும் என்று தெரிவித்து, தமிழக அரசுதான் இன்றைக்கு இந்தியாவிலேயே இலவசப் பாடப் புத்தகங்களை முறையாக பிள்ளைகளுக்குக் கிடைக்கச் செய்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி).

பள்ளிச் சீரமைப்பு மாநாடு என்பது ஆறு மாவட்டங்களிலே நடைபெற்றிருக்கிறது. 'அது பள்ளி வளர்ச்சிக்கு மிக இன்றியமையாத ஒன்று. சட்டமன்ற உறுப்பினர்கள்கூட அதை அவரவர்களுடைய பகுதியிலே ஊக்கப்படுத்தி, கல்வித் துறை அலுவலர்கள் மூலமாக மாவட்ட ஆட்சியருடைய உதவியோடு நடத்தச் செய்யலாம்.

அப்படி 1997-98-லே நடைபெற்ற அந்த மாநாடுகளிலே 7 கோடியே 20 இலட்சம் ரூபாய் அளவிற்கு அசையும் சொத்துக்கள் - அந்த ஆறு மாவட்டங்களிலே நடைபெற்ற ஆறு மாநாடுகளில் - 32 கோடியே 48 இலட்சம் ரூபாய் அளவுக்கு அசையாச் சொத்துக்கள்; - பலயிடங்களிலே கட்டடங்கள் கட்டி இருக்கிறார்கள்; நிலம் நன்கொடை வழங்கியிருக்கிறார்கள்; சொந்தச் சொத்தை வழங்கியிருக்கிறார்கள். அப்படி வழங்கியதையெல்லாம் சேர்த்து 40 கோடி ரூபாய் அளவுக்குப் பள்ளிச் சீரமைப்பு மாநாடு மூலமாகக் கிடைத்திருக்கிறது. அது தொடர்ந்து மாநிலமெங்கும் நடைபெற வேண்டுமென்று நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன்.

பெற்றோர்-ஆசிரியர் கழகம் ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் கட்டாயம் தேவை என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிந்திருப்பார்கள். ஏறத்தாழ 100-க்கு 80, 85 விழுக்காடு பள்ளிக்கூடங்களில் பெற்றோர்-ஆசிரியர் கழகம் இருக்கிறது. சில இடங்களிலே அது சிறப்பாகச்

செயல்படவில்லை. ஆசிரியர்கள் கடமை உணர்ச்சியோடு செயலாற்றுவதற்குப் பெற்றோர்-ஆசிரியர் கழகத்தை மிகப் பெரிய அளவுக்கு எல்லாப் பள்ளிக்கூடங்களிலேயும் ஏற்படுத்த சட்டமன்ற உறுப்பினர்கள் அங்கேயுள்ள ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1-40*

இன்னும் ஒன்று, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்தவர்கள் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்படுகின்றபோது குறைந்தபட்சம் இவ்வளவு மதிப்பெண்கள் உள்ளவர்கள்தான் தேர்ந்தெடுக்கப்படலாம் என்று ஒரு விதி அங்கேயிருந்த காரணத்தினால், தாழ்த்தப்பட்டவர்கள் அந்த விதியை நிறைவேற்ற முடியாத காரணத்தினால், எடுக்கப்படுவது தடைபட்டது. அரசு அதைப் பரிசீலனை செய்து, தாழ்த்தப்பட்டவர்களுடைய மதிப்பெண்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அந்த மதிப்பெண்ணையே குறைவாக வைத்து—அவர்களிலே யார் திறமை உள்ளவர்களோ அவர்கள் பெறுவார்கள். ஆனால், அந்தக் குறைந்த எண் என்பதை, அதற்குள்ளே உள்ள மதிப்பெண்ணைப் பெற்றவர்கள் இடம்பெறவில்லையென்று சொன்னால், தாழ்த்தப்பட்டவர்கள் அதில் இடம்பெற முடியாமல் போகிறது. அதற்காக அந்த எண்ணையும் குறைத்து வைத்து தாழ்த்தப்பட்ட ஆசிரியர்கள் எடுக்கப்பட்டார்கள் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கருணை அடிப்படையில் வேலை என்பது, இந்தத் துறையிலே பணியாற்றுகிற ஆசிரியர்கள் மறைந்து போவார்களேயானால் அல்லது மற்ற அலுவலர்கள் மறைந்து போவார்களேயானால், அவர்களுடைய பிள்ளைக்கோ, பெண்ணுக்கோ ஒருவருக்கு வேலை தருவது என்பது பல ஆண்டுகளுக்கு முன்னால் ஏற்பட்ட ஒரு முறை என்றாலும், கடந்த கால ஆட்சியிலே ஒருவருக்குக்கூட கருணை அடிப்படையில் வேலை கிடைக்கவில்லை. இன்னோர் அடிப்படையிலே வேலை கொடுக்கப்பட்டது. இந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் கருணை அடிப்படையிலே வேலை கேட்டவர்களுடைய எண்ணிக்கை 1800. ஆனால், 400 பேருக்கு எந்தப் பணிகள் கிடைத்ததோ, அந்தப் பணி இடங்களில் இந்த மூன்று ஆண்டுகளிலே வழங்கப்பட்டன. (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, கணினிக் கல்வியைப் பற்றி, கம்ப்யூட்டர் கல்வியைப் பற்றி பல பேர் எடுத்துச் சொன்னார்கள். அந்தக் கணினிக் கல்வி



என்பது இந்தக் காலத்தினுடைய தேவை என்பதை உணர்ந்து, தனியார்ப் பள்ளிக்கூடங்களிலேயெல்லாம் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். சில சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் கணினி வாங்குவதற்காக சில பள்ளிக்கூடங்களுக்கு நிதியை வழங்கியிருக்கிறார்கள். அரசு பள்ளிக்கூடங்களில் பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளிக்கூடங்களில் - சில பேர், பஞ்சாயத்து ஒன்றியப் பள்ளிக்கூடங்கள் என்று ஏன் இருக்க வேண்டும், அரசு பள்ளிக்கூடங்கள் என்று சொல்லக் கூடாதா என்று கேட்டார்கள் - இருக்கின்ற இடம் தெரிய வேண்டுமல்லவா? அதற்காகத்தான். எந்த நகரசபையின் வட்டாரத்திலே இருக்கிறது அல்லது பஞ்சாயத்து ஒன்றியத்திலா, ரூரல் ஏரியாவிலா, அர்பன் ஏரியாவிலா, செமி அர்பன் ஏரியாவிலா என்பது பெயரிலேயே தெரியும் என்பதால்தான். ஆகவே, அந்த முறையில் பஞ்சாயத்து ஒன்றியத்தால் ஏற்கெனவே நிர்வகிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களில் கணினிப் பயிற்சி பிள்ளைகளுக்கும் கிடைக்க வேண்டும் என்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது.

அதே போல, தொலை உணர்வு கல்வி என்பது, TANITECH என்று உருவாக்கப்பட்டுள்ளது. - திரு. லட்சுமணன் அவர்கள் ஏன் ஒரு கம்பெனி சட்டத்தின்கீழ் வர வேண்டுமென்று கேட்டார். ஒரே ஒரு காரணம், டிரஸ்டாக அமைக்கப்பட்டாலோ அல்லது அசோசியேஷனாக இருந்தாலோ அதிலேயே மிகப் பெரிய கம்பெனிகளிடம் எல்லாம் நிதி திரட்ட வேண்டிய அவசியம் இருப்பதால் அதற்கு ஏற்றதாக இல்லை. பெரு நிதி போட வேண்டி இருக்கிறது. மேல் நாடுகளிலேயுள்ள Multi-millionaire கம்பெனிகளோடு தொடர்பு வைக்க வேண்டியிருக்கிறது. பெரிய கம்பெனிகள் வரவேண்டியிருக்கிறது. அந்த 25ஆவது செக்ஷன் - Section 25 of the Companies Act - என்பது இலாபத்திற்கு வருமான வரியில்லை என்ற ஒரு விதியாக உள்ளது. அது கல்வித் தொடர்பான பணிகளுக்குப் பயன்படுத்த அனுமதிக்கிறது. அதுபற்றி தலைமைச் செயலாளர் உட்பட தொடர்புடையவர்கள் எல்லாம் ஆய்வு நடத்தி ஒரு கம்பெனியாக இருந்தால்தான் அது செம்மையாக இயங்கும் என்று தெரிவித்து, அந்த அடிப்படையிலே உருவாகியிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல, Science City-என என்பது ஒரு வட்டாரத்தை அந்தக் கண்ணோட்டத்திலே பிரித்து அதிலேயே சில சிறப்புப் பயிற்சிகளை உருவாக்குவதற்கு வழி காணப்படுகிறது. அது ஏறத்தாழ அண்ணா பல்கலைக்கழகம், பொறியியல் கல்லூரி இவையெல்லாம் இருக்கின்ற அந்த வளாகத்தை எல்லாம் சேர்த்து, ஏறத்தாழ கவர்னர்

மாளிகையிலிருந்து அடையாறு, தரமணி, ஆய்வுக் கூடங்கள் எல்லாம் இருக்கின்ற அந்தப் பகுதிகளையெல்லாம் சேர்த்து இணைக்கும் முறையில் உருவாக இருக்கிறது. அதற்கும் தனிக் கவனம் அரசு செலுத்தி வருகிறது.

நூலகத் துறை பற்றிக் குறிப்பாகச் சொல்ல விரும்புகிறேன். இப்போது 1,568 கிளை நூலகங்கள் இருக்கின்றன. அதே போல, பகுதி நேர நூலகங்கள் 740 இருக்கின்றன. ஊர்ப்புற நூலகங்கள் 625. அண்மையிலே வேறு துறையிலே இருந்த அவர்களை அங்கிருந்து - வேலையிலிருந்து நீக்கப்படுகின்ற நிலையில் இங்கே நியமிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டவை ஊர்ப்புற நூலகங்கள். அதிலே, 471 நூலகங்கள் செயல்படுகின்றன. இதற்காக உள்ளாட்சித் துறையிலேயிருந்து கிடைக்க வேண்டிய நிதி, செஸ்சிலேயிருந்து கிடைக்க வேண்டிய நிதி, ஏறத்தாழ 34 கோடியில், 17 கோடி ரூபாய் கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்க நிதித் துறை முன்வந்து, அந்த நிதி கிடைத்திருக்கிறது. புதிய கட்டடங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகளும் இருக்கின்றன. இடங்கள் கிடைத்து புதிய கட்டடங்கள் கட்டுகிற பணியோடு ஏறத்தாழ 3, 3½ கோடி ரூபாய் அளவுக்குப் புத்தகங்கள் வாங்கி கிளை நூலகங்களுக்கு வழங்கப்பட்டன. அதேபோல, நூற்றாண்டு விழா கண்ட கன்னிமாரா நூலகத்திற்கு ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் அளவில் புதிய மண்டபம் எழுப்பப்படுகிறது. கன்னிமாரா நூலகத்தின் பழைய மண்டபம் மிகப்பெரிய கலைச் சிறப்பு வாய்ந்த மண்டபம் என்ற காரணத்தால் மத்திய அரசினுடைய Archieves துறையைச் சேர்ந்தவர்களும் வந்து பார்வையிட்டு, ஏறத்தாழ ஒரு கோடி ரூபாய் செலவில் - ஏற்கெனவே உள்ள 100 ஆண்டுகளுக்கு முன்னால் கட்டப்பட்ட கலைச் சிறப்பையெல்லாம் கொண்ட அந்த மண்டபம் - இப்போது புத்தகம் வைக்கப்பட்டிருக்கிற அந்த இடம், அதன் கலைச் சிறப்புக் குன்றாமல் சீர்படுத்தப்படுவதற்கும் தகுந்த முறையில் முயற்சிக்கப்படுகிறது. பல வளர்ச்சிக்கான பணிகள் நடைபெற்றிருக்கின்றன; நடைபெறவிருக்கின்றன. ஏற்கெனவே கன்னிமாரா நூலக நூற்றாண்டு விழாவையொட்டி Postal Cover - அஞ்சல் உறை வெளியிடப்பட்டது. மேலும், நாம் கேட்டுக்கொண்டதால், தபால் அஞ்சல் வில்லையும் வெளியிடுவதற்கு அவர்கள் முன்வந்திருக்கிறார்கள். அதுவும் விரைவிலே நடைபெறும் என்று நான் எதிர்பார்க்கின்றேன்.

*பிற்பகல் 1-45*

ஒவ்வொரு துறையிலேயும் கட்டடங்கள் கட்டுவதற்காக, கல்லூரி, பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரி, பாலிடெக்னிக் இவற்றிற்காகப்



பல திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன. கல்வியினுடைய தரத்தைப் பல்வேறு நிலைகளிலேயும் உயர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு கட்டடங்களைக் கட்டுவதற்கும், அதேபோல தொழில்நுட்பக் கருவிகள், பாலிடெக்னிக்குகள் பலவற்றிற்கு வழங்கப்படுவதற்கும், ஆசிரியர்களுக்குப் பயிற்சி கிடைப்பதற்கும் வெளிநாட்டுப் பயிற்சி கிடைப்பதற்கும் இப்படி உலக வங்கியினுடைய நிதி உதவியோடு பாலிடெக்னிக்கினுடைய தரத்தை உயர்த்த, அரசு பாலிடெக்னிக்குகள் பலவற்றிற்கும், தனியார் பாலிடெக்னிக்குகள் பலவற்றிற்கும் நிதியுதவி வழங்கப்பட்டு அவையும் செயல்படுத்தப்படுகின்றன.

அதே போல, சில புதிய வகையான தொழில்கள் பாலிடெக்னிக்குகளில் புகுத்தப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பற்றியெல்லாம் நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலே விவரமாகத் தரப்பட்டிருக்கின்றன. பாலிடெக்னிக்குகளில் கல்வித் தரம் உயர்த்தப்படுகின்றது. அதேபோல், புகுமுகத் தேர்வு எழுதுகிற மாணவர்கள், அவர்களுக்குத் தகுந்த பயிற்சி கிராமப்புறப் பள்ளிக்கூடங்களிலே, உயர்நிலைப்பள்ளிகளிலே, மேல்நிலைப்பள்ளிகளிலே கிடைப்பதற்கு, அதற்கு பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாகப் முயற்சி எடுத்துக்கொண்டு பலவிடங்களில் நடத்தப்படுகிறது. அந்தப் பட்டியல் தரப்பட்டிருக்கிறது. பலவிடங்களில் கிராமப்புற மாணவர்களுக்கு மறுபயிற்சி போன்று தேர்வு எழுதுவதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது. புகுமுகத் தேர்வு - Entrance examination எழுதுவதற்கான பயிற்சியும் வழங்கப்படுகிறது. பெற்றோர்-ஆசிரியர் கழகத்தின் மூலமாகப் பல குறிப்பேடுகள் வெளியிடப்பட்டு, மாணவர்கள், ஆசிரியர்களுக்கெல்லாம் அவை நல்லமுறையில் பயன்படுத்தப்படுகின்றன. இன்னும், குறிப்பாகச் சொல்லப்போனால் கல்வித் துறை மெல்ல உயர்ந்து வருகிறது; மேலும் உயரும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய ஆலோசனைகள் அத்தனையும் நிச்சயமாகக் கவனிக்கப்படும். நீங்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களுக்கெல்லாம் பதில் குறிப்புகள் இருக்கின்றன. சிலபேருடைய வெட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக்கொண்டிருக்கின்றன; சில பேருடைய வெட்டுத் தீர்மானங்களினுடைய கருத்துகள் நிறைவேற்றப்படுவதற்கு வாய்ப்பிருக்கிறது; சில பேருடைய வெட்டுத் தீர்மானங்களை வெட்டுவது தவிர வேறு வழியில்லை. ஏனென்றால் அதற்காக நான் விடை சொல்ல ஆரம்பித்தால், மாண்புமிகு உறுப்பினர்களுக்கெல்லாம் பசி நேரத்தில் அது வெட்டும். (சிரிப்பு)

எனவே, வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்தாது கைவிடுவதன் மூலமாக, மாண்புமிகு உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை நிறைவேற்றித் தரக் கேட்டுக்கொண்டு இந்த அரசும் இந்தத் துறையும் தொடர்ந்து உரிய பணியை ஆற்றும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்து என்னுடைய உரையை நான் நிறைவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன்.

*** திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களுடைய அற்புதமான பதிலுரைக்குப் பின்னாலே ஒரு சிறிய ஐயத்தைக் கேட்பதற்காகப் பொறுத்தருளுமாறு வேண்டுகிறேன்.

1997-98 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே, தகவல் தொழில் நுட்ப மையத்தைத் திறப்பதாகச் சொன்னபோது, அதை society act-லே பதிவு செய்வதாகவும், அதைப் பிற்காலத்திலே ஒரு சுயநிதிப் பல்கலைக்கழகமாக மாற்றுவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. அது இன்றைக்கு TANITECH-ஆக மாற்றப்பட்ட பின்னாலே, அது Corporate sector-ல் வருவதாகத் தோன்றுகிறது. Corporate sector-ல் ஒரு பல்கலைக் கழகத்தைத் தோற்றுவிப்பது சாத்தியமா, அல்லது அரசினுடைய பிற்காலத் திட்டம் என்ன என்பதைத் தாங்கள் விளக்க வேண்டுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*பிற்பகல் 1-50*

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த அமைப்பு உடனடித் தேவைக்கு உருவாக்கப்படும் ஒரு Emergency Institution. இரண்டாவது, அதிலே நடைபெறுகின்ற அத்தனை காரியங்களும் Emergency போன்று விரைவுபடுத்தப்பட வேண்டியவை. அதனாலே, நீண்டகாலத்திற்குப் பின்பு அது பல்கலைக்கழகமாக வரவேண்டுமென்பதெல்லாம், அதைப் பற்றிய அடிப்படைகள் தெரியாதபோது கருதப்பட்டது. அதற்காக ஒரு நிபுணர் வெளிநாடுகளிலிருந்து நியமிக்கப்பட்டு அவர் மேற்பார்வை செய்து வளர்க்க வேண்டியிருக்கிறது. அவர்கள் கருதியது போல, பி.டெக்., எம்.டெக். போன்ற வகுப்புகளைக்கூட உடனடியாகத் தொடங்க முடியவில்லை. ஆதலால், பி.ஈ. (மெகானிக்கல்), பி.ஈ. (சிவில்) படித்தவர்களைக் கொண்டுவந்து, கம்ப்யூட்டர் துறையில் ஓராண்டு



டிப்ளமா பயிற்சி வழங்கி, அவர்களையும் தகுதிபெறச்செய்து பயன்படுத்தலாம் என்று கருதப்படுகிறது. எல்லாவற்றையும்விட, உலகம் முழுவதும் தேவைப்படுகிற அற்புதமான, நுணுக்கமான கம்ப்யூட்டர் அறிவாற்றல் பெற்றவர்களை உற்பத்தி செய்வதுதான் அதன் நோக்கம். அதனுடைய நோக்கம் நிறைவேற வேண்டுமானால், பல்கலைக்கழகமாக ஆகவேண்டும் என்ற அவசியமில்லை. இதுபோன்ற நிறுவனங்கள்' - ITI போன்று செம்மையாக இயங்க முடியும். ஐந்தாண்டு அல்லது 10 ஆண்டுகளுக்குள் அந்த நோக்கம் நிறைவேற வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன், மணி 1-50 ஆகின்றது. இன்னும் என்ன கேள்வி கேட்டுக் கொண்டு இருக்கிறீர்கள்?

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகவும் முக்கியமானது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்பதெல்லாம் முக்கியமானதுதான், கேளுங்கள்.

*** திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள விரும்புவது, தமிழ்நாட்டில் மிகப் பெரிய அநீதியாக இருப்பது, தனியார் பள்ளிகளில், மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு அரசு வழங்குகின்ற அந்தச் சம்பளத்தை எள் முனையளவு எந்தவிதமான நியாயமான காரணமும் இல்லாமல், வழங்காமல் இருக்கிறார்கள். மாநில அரசிடம் கல்வி நிறுவனங்களை நடத்த உரிமம் பெறுகின்றபோதே இதை ஒப்புக்கொண்டுதான் உரிமம் பெறுகிறார்கள். மாநில அரசு வழங்குகின்ற அந்தச் சம்பளத்தை வழங்குவதாக ஒப்புக்கொண்டு, நடைமுறையில் வழங்காமல் இருப்பதால், வழங்க வைப்பதற்குப் பொருத்தமான நடவடிக்கையை, மேற்கொள்ள அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஆலோசிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 17—கல்வி. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. நா. பெரியசாமி, இருக்கையில் இல்லை. திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வி. கே. லட்சுமணன்.

**திரு. வி. கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

திரு. அ.வ. அப்துல் நாசர், இருக்கையில் இல்லை. திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. ஜி. நிஜாமுதீன்.

**திரு. ஜி. நிஜாமுதீன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. நிஜாமுதீன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

திரு. க. மணிவர்மா, இருக்கையில் இல்லை. திரு. க. மணிவர்மா அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது.

திரு. ப. கோவிந்தன், இருக்கையில் இல்லை. திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி. வெங்கடசாமி.

**திரு. பி. வெங்கடசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி. வெங்கடசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. கிருஷ்ணன்.

**திரு. எஸ்.வி. கிருஷ்ணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. கிருஷ்ணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது.

"கல்வி பற்றிய 17 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 3601,07,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-52 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

122. 1996-97 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

57. மானியக் கோரிக்கை எண் 17 - பள்ளிக் கல்வி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1998-99. (ஆங்கிலம்).



58. தமிழ்நாடு மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்டம் பற்றிய கையேடு. (தமிழ்).

59. தமிழ்நாட்டில் தேசிய மாணவர் படையின் செயற்பாடு பற்றிய கையேடு. (ஆங்கிலம்).

60. சென்னைப் பல்கலைக்கழகத்தின் 'மக்கள் உரிமை' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

61. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் 'மக்கள் உரிமை' என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்).

62. அழகப்பா பல்கலைக்கழகத்தின் 'மக்கள் உரிமை' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

63. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்தின் 'மக்களின் உரிமை' என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்).

64. பாரதியார் பல்கலைக் கழகத்தின் 'மக்கள் உரிமை' என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்).

65. பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 'மக்கள் உரிமை' என்ற புத்தகம், (தமிழ், ஆங்கிலம்).

66. அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர் கல்வி நிறுவனத்தின் தகவல் குறிப்பேடு, 1998-99. (தமிழ், ஆங்கிலம்).

67. கல்லூரிக் கல்வித் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998. (தமிழ், ஆங்கிலம்).

68. தொழில்நுட்பக் கல்வித் துறையின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம், 1998. (ஆங்கிலம்).

69. தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தின் 'மக்கள் சாசனம்' என்ற புத்தகம். (தமிழ், ஆங்கிலம்).

70. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல் (ஏழாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை).

219087

அரசு மைய அச்சகம், சென்னை-600 079.

**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 816, Anna Salai, Chennai-600 002.**

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.